
திருக்குறளில்

தொல்காப்பிய மெய்ப்பாடுகள்



பாவை

முனைவர் சொ.சேதுபதி

திருக்குறளில் தொல்காப்பிய மெய்ப்பாடுகள்

முனைவர் சொ. சேதுபதி
தமிழ்த் துணைப்பேராசிரியர்
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
புதுச்சேரி

பாவை பப்ளிகேஷன்ஸ்
142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014. ☎ : 28482441, 28482973
E-mail: pavai123@yahoo.com

THIRUKKURALIL THOLKAPPIYA MEIPPADUKAL

Dr. C. Sethupathi

திருக்குறளில் தொல்காப்பிய மெய்ப்பாடுகள்

சேதுபதி

முதற்பதிப்பு : டிசம்பர் 2009

பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

Code No. : P 0844

ISBN : 81 – 7735 – 841 - 3

அமைப்பு: கபிலன் கிராஃபிக்ஸ்
புதுச்சேரி
9442379558

அச்சிட்டோர் :

பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,
142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014. ☎ : 28482441, 28482973
E-mail: pavai123@yahoo.com

விலை ரூ: 100.00

Distributors

Chennai 044-2852 8351, 044-26359906, 044-24404873
Trichy 0431-2700885 Madurai 0452-2344106, 2350271
Tirunelveli 0462-2323990 Coimbatore 0422-2380554
Salem 0427-2450817 Vellore 0416-2234495
Tanjore 04362-231371 Pondicherry 0413-2357403
Dindigul 0451-2432172 Hosur 04344-245726
Ooty 0423-2441743.

பதிப்புரை

ஒல்காப் புகழ்த் தொல்காப்பியத்துடன் உலகப் பொது மறையாம் திருக்குறளைப் பொருந்தச் செய்து அதன் ஆழமும், அழகும், விரிவும், நுட்பமும் ஆராய்ந்து அகம் புறம் உணர்த்தி

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப (நூற்பா 1196,பொருள்)

என எண் வகை உணர்வுகள் தோன்ற மெய்ப்பாடுகளை விளங்கச் செய்கின்றது இந்நூல். இந்த எண்வகை மெய்ப்பாடுகளும், தத்தமக்குள் நன்நான்கு உட்பிரிவுகளைக் கொண்டு முப்பத்திரண்டு வகையாக வெளிப்படுமாற்றைப் பல்லாற்றானும் புலப்படுத்துகின்றது இந்நூல்.

உருவு கண்டு எள்ளாமை வேண்டும். (நகை) (குறள்; 667)

முக நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அக நக நட்பது நட்பு. (நகை) (குறள்; 786)

யான் நோக்குங்காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும். (நகை) (குறள்; 1094)

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (அழுகை) (குறள்; 339)


நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். (இளிவரல்) (குறள்; 373)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்டத்தாய். (உவகை) (குறள்; 69)

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின். (உவகை) (குறள்: 998)

இவ்வாறு நகை தொடங்கி உவகை ஈறாக எண்வகை மெய்ப்பாட்டையும் விளக்க அகத்தே எழும் உணர்வானது உடம்பின் வெளிப்பாடாக மெய்ப்பாடாக எவ்வாறு புறத்தே தோன்றுகின்றது என்பதை குறள் வழியாக விரிவாகவும் அவற்றின் தத்துவ சமூக பின்புலத்துடனும் கூட, மரபான உரையாசிரியர் களின் துணையோடும், புதிய உரையாளர்களுடன் பகிர்ந்தும், பேரா. சொ. சேதுபதி அவர்கள் சிறப்பாக ஆராய்ந்துள்ளார். அவரின் தமிழ் நடை இனிது. அவரின் பல நூல்களையும் ஏற்கெனவே வெளியிட்டுள்ளோம். நூல் தோறும் முன்னேற்றம் பெற்று வரும் அவரின் இந்த நூலையும் வெளியிட வாய்ப்பளித்தமைக்கு எமது நன்றிகள் உரித்தாகுக. திருக்குறள் ஆய்வில் இன்னொரு மைல் கல்லாக விளங்கும் இந்நூலை தமிழுலகம் விரும்பி வரவேற்கும் என நம்புகிறோம்.

– பதிப்பகத்தார்



உள்ளுறை

321, மூன்றாவது முதன்மைச்சாலை
மகாவீர் நகர், புதுச்சேரி-605008
பேச–94431 90440
2009



நலம்பொலிந்து என்றும் வாழியவே!

தொல்காப்பியச் செம்மல்
பேராசிரியர் ஆ. சிவலிங்கனார்
(மேனாள் முதல்வர், ஸ்ரீமத் சி.பா.சு.தமிழ்க்கல்லூரி, மயிலம்)

பாரி பறம்பின் பாங்காகப்
பகரும் கிருங்காக் கோட்டையூர்ச்
சாரும் சேது பதியாகும்
சான்றோர் நல்ல பண்பினரே!
யாரும் புகழ்பா ரதியாரின்
பகரும் நூற்ப யிற்சியினர்
சாரும் புலமை யாளரவர்
சான்றோர் போற்றும் சால்பினரே!

குன்றக் குடியின்அ டிகளவர்
கூறும் ஆன்மீ கப்பணியை
நன்று விளக்கி முனைவரென
நாடே வியக்கப் பெற்றாரே!
இன்று புதுவை நகர்ச்சார்ந்த
எழில்பா ரதிதா சன்மகளிர்
ஒன்றும் கல்லூ ரிப்பணியர்
உயர்ந்து வாழ வாழ்த்துவமே!

தொல்காப் பியத்தின் மெய்ப்பாட்டைக்
கூறும் அய்யன் திருக்குறளில்
ஒல்காப் புகழுடன் சேர்த்தேதான்
உலகத் தமிழின் செம்மொழிபோல்
பல்கால் பலரும் புகழ்ந்திடவே
பற்பல சான்றுடன் பெருநூலை
நல்கா நின்ற அன்னார்தம்
நலம்பொலிந் தென்றும் வாழியவே!



தொல்காப்பியக் கிண்ணத்தில் முப்பாலின் திரட்டுப்பால்!

‘தமிழாகரர்’ தெ.முருகசாமி
(மேனாள் முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி)

திருக்குறளில் தொல்காப்பிய மெய்ப்பாடுகள் என்ற இந்நூலைப் படித்ததும் எனக்குள் இப்படித்தான் எண்ணத் தோன்றியது.

பொதிகைத் தமிழ்மலையின் தொல்காப்பிய ஐந்தருவியில் திருக்குறள் குளியலாடிக் கரைசேர்ந்த பேராசிரியர் முனைவர் சொ.சேதுபதி அவர்கள் தம் குளியலைத் தீர்த்தமாக அனைவர் மீதும் தெளித்து மகிழ வேண்டி எழுதி வெளியிட்ட நூல் இது என்பதுதான் அந்த என் எண்ணம்.

‘கனவு மெய்ப்பட வேண்டும்’ என்ற பாரதியாம் துரோணாச் சாரியின் ஏகலைவச் சீடன் சேதுபதியின் ஆராய்ச்சி அம்பு, வல்வில் ஓரியின் அம்புக்கும் மேலாக ஒன்பான் இடங்களில் பாய்ந்து அறுசுவை விருந்து படைக்கிறது.

1968இல் நடந்த இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டில் முதல்வர் அண்ணா, ‘எல்லாத் தமிழர் வீடுகளிலும் தொல்காப்பியமும் திருக்குறளும் இருக்க வேண்டும்’ எனப் பிரகடனப்படுத்தியதைத் தனித்தனியாக இல்லாமல் ஒருங்கிணைந்த நூலாக்கி, முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் நடத்த உள்ள செம்மொழி மாநாட்டின் அறிவிப்பு வெளியானதும் இந்நூல் வெளியிடப்படுவது பாராட்டுக்குரிய தமிழ்த்தொண்டாகும்.

தாத்தா சொத்து பேரனுக்கு என்பது வாழ்வியலில் மட்டுமன்று. எழுத்தியலிலுந்தான் என்ற உண்மையை மெய்ப்பிக்கும் இந்நூலில் தொல்பழந்தமிழ்க் கருத்தைக் காக்கும் தொல்காப்பியத் தந்தையின் அறிவு, வள்ளுவ மகனிடம் பரிணமிக்கும் நிலையில், சேதுபதிப் பேரன் அதை அனைவருக்கும் இந்நூல் பரிமாறுகிறார்.

தொல்காப்பிய உண்கலத்தில் பரிமாறப்படும் விருந்தில், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் போன்ற பழையவரும் வ.சுப.மா., தமிழண்ணல், மு.இராமசாமி போன்ற புதியவரும் கூறும் மெய்ப்பாடு பற்றிய விளக்கங்கள் விருந்தை ஆர்வமாக உண்ணத்தூண்டும் வரவேற்பாக வாசகர்களை வரவேற்கும் சேதுபதி, அகம்புறம் உள்ளிட்ட இம்மெய்ப்பாடு மானுடகுல முழுமைக்கும் பொது என்ற பரிசுப்பொருள் கருத்தைத் தந்து ஆங்காங்கே அமரச் செய்கிறார்.

தொல்காப்பியத்தின் உரையாசிரியர்களின் உரைவிளக்கத் தொடுகறிகளுடன் வள்ளுவத்தில் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளச் சோறு, பாங்காகப் பரிமாறப்படும்போது, காமத்துப்பாலா? இன்பத்துப்பாலா?, ஊழா? முயற்சியா?, ஆண் மகவா? பெண் மகவா? போன்ற அறிவுச் செரிமானத்திற்கான ஊறுகாய்கள் தமிழ்ச் சுவையைக் கூட்டுகின்றன.

தொல்காப்பிய மரபும், திருவள்ளுவப்புரட்சியும் பிற பிற இலக்கியச்சான்றும் தின்பன, பருகுவனவாக விருந்தை விசாலப்படுத்துடன் மார்க்சியத் தத்துவச் சிந்தனைகள் வீறு தமிழ் வள்ளுவத்தை விலாசம் கொடுத்து அடுத்த பந்திக்கும் ஆட்களை அமரத் தயார் செய்கிறார் சேதுபதி.

தமிழுக்கு இருவர் என்பார்கள். ஆம்! இந்த மெய்ப்பாட்டை உணர இருநிலை வேண்டும். மெய்ப்பாட்டைத் தோற்றுவிக்கும் சூழல் ஒன்று; அதை அனுபவிக்கும் சூழல் மற்றொன்று. இதைத் தான் இளம்பூரணர் சுவையும் சுவைக்குறிப்பும் எனப்பொதுப்படக் கூறினார். இக்கருத்து, "நகல்வல்லார் அல்லார்க்கு (999) என்ற குறளுக்குப் பரிப்பொருளார், 'தான் அறியத் தனக்கு அறிவிப்பான் ஒருவன் தேவை' என எழுதிய உரையில், உள்ளதை நூலாசிரியர் சேதுபதி நுட்பமாகக் கூறியுள்ளார்.

நகை பற்றிய கட்டுரையில் வள்ளுவர் சிரித்தவைகள் குறுஞ் சிரிப்பாக இல்லாமல் குறும்படக் குறட்சிரிப்பாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, ஒருபொழுதும் வாழ்வதறியார் என்ற குறளில் ஒருபொழுதும் என்றதற்குப் பானை விற்ற வியாபாரி ஒருவர் கிடைத்த வருவாயால் வைத்திட்ட மாட்டுப்பண்ணையால் சராசரி சம்சாரியிலிருந்து மன்னனாகிடும் களிப்பில் எட்டி உதைப்பதான கனவால் பானைகளை உடைக்கும் கதை, அற்புதமாகக் கூறப்பட்டுள்ளது.

எந்தப் பறவையும் விலங்கும் ஏன் அற்பப் புழுக்கூடச் சலனப்படாதபோது, அறிவில் உயர்ந்த மனிதன் மட்டும் அழுவானேன்? என்ற வினாவிற்கு வறுமை, நிலையாமையால் வரும் பாதிப்புகள் காரணமோ என விளக்கும்போது, 'மானுடன் அழியலாம்; ஆனால், மானுடம் அழிந்துவிடக் கூடா'தென்ற ஆதங்கத்தால் எழுதும் சேதுபதியின் அழுகை கூட உவகை கலந்த அழுகையாகத் தோன்றுகிறது.

இளிவரலான வருத்தம் மனிதனை வறுத்தெடுப்பதற்கு ஊழ்வினையின் முனைப்புத்தான் காரணமானாலும், அதை முறையாக எதிர்த்து முறியடிக்க ஆள்வினை உடைமை, ஊக்க முடைமை போன்ற அதிகாரங்களைச் சேதுபதி நினைவுபடுத்தும் போது ஊழின் ஆட்டம் அடங்குவதுபோல் காட்டி முடிவில், 'ஊழிற்பெருவலி யாவுள?' என்பது எவ்வளவு நாளைக்குத்தான் எனத் தளரும்போது வாசிப்பாளருக்கும் தளர்ச்சி ஏற்படு மாறுள்ளது.

மருட்கை என்பதற்கு அறிய அறியப் புதிதாய்ப் பொலியும் வியப்பு என்ற சுருக்க விளக்கம் அருமை. மேலும், அறிவைத் தேங்கிக் கிடக்கும் குட்டையாக்காமல் ஓடும் நீரோடையாகச் செய்யத் தூண்டும் தவத்திரு குன்றக்குடி அடிகள் விளக்கத்தை இணைத்தது அருமையினும் அருமை.

இப்படிக் கூறிவரும் தொடர்ச்சியில் பெருமிதமாம் மெய்ப்பாட்டில் வீரச் சுவை மட்டும் விளக்கப்பட்டுள்ளது. ஏனைய கல்வி, இசைமை, கொடை மூன்றற்கும் விளக்கம் அமையாதது இந்நூலுக்கான, 'கண்ணேறு குறை' எனலாம்போல் உள்ளது.

அறிவின் கனிந்த அருளாளரான திருவள்ளுவருக்கா வெகுளி? என வள்ளுவர்மீதே கோபப்படும் சேதுபதிக்கு, 'செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்' என்ற குறளால் சாந்தப்பட்டு, 'பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்' என்றதில் உள்ள நியாயத்தால் வள்ளுவருக்கு வருவது ஆத்திரம் அன்று, அறச்சினம் என்றெழுதிய எழுத்துக்கு எத்தனை விருதும் தரலாம்.

சேதுபதி நடை தனி நடை. 'இழப்பதற்கு ஒன்றுமில்லை. பெறுவதற்குப் பொன்னுலகம் காத்திருக்கிறது என்ற புரட்சியை மொழிந்த கார்ல் மார்க்சின் தத்துவம் இவ்வுலகில் கருக்கொள்ளும் முன்பே தமிழகத்தில் தோன்றிய புரட்சியாளராகத் திருவள்ளுவர் பொலிகின்றார்' என்ற தொடரும், 'தனக்கு முன்னால் நீட்டிக்

கட்டப்பெற்ற காரட் கிழங்கைத் தின்ன வேகவேகமாக ஓடும் குதிரையின் விரைவுபோலத்தான் இந்த விதியுடன் நாம் நடத்தும் வாழ்க்கை' என்ற உவமையும், சேதுபதியை அடையாளம் காட்டும் எழுத்து நடைகள்போல் நூலுள் பல உள்ளன.

'நகை'யில் தொடங்கும் மெய்ப்பாடு 'உவகை'யில் முடிகிறது. நகையை விளக்கப் பல பக்கம் தேவைப்பட்டதைப்போல் உவகையையும் பல பக்கங்களில் விளக்குகிறார் சேதுபதி. வாழ்க்கையின் விளக்கம் (நகை) மகிழ்ச்சி (உவகை) என்பதாக இணைப்பதுபோல் உள்ளது இந்த எழுத்து உத்தி.

'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும்' என்ற குறளுக்கான சிந்தனை விரிய விரிய அது ஆணாதிக்கக் குறை என்பதாகக் கட்டுரையில் பளிச்சிடுகிறது என்றாலும்,


மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட்பேறு

என்ற குறளில் மக்கள் என்ற பொதுச் சொல்லில் அமைதி காணும் சேதுபதி, 'எப்படியோ பால் பேதம் தாண்டிப் பெருமையுடன் ஒளிரும் வள்ளுவத்தாயால் தமிழ்த்தாய் உவகைப் பொலிவுறுகிறாள்' எனக் கருதும் கணிப்பு, மாறிப்போகும் தேர்தல் கணிப்புப் போலன்றி உண்மை சார்ந்த கணிப்பு என்பதற்கு அவரே கூறும், 'அங்கும் அறிவுதான் தரிசனப்படுகிறது' என்பதே சான்று.

இன்னும் தொடரும் மெய்ப்பாட்டியலின் கருத்துக் களுக்கெல்லாம் தக்க உதாரணம் காட்டிச் செல்வதை ஒரு முடிப்பாகக் கூறினால் தொல்காப்பியக் கிண்ணத்தில் ஒன்பான் சுவையையும் ஒருங்கே திரட்டித் தந்த முப்பால் திரட்டுப்பால் என்பது என் கருத்து.

எனவே, இந்நூலின் வாசிப்பே வாசகர்களின் நேசிப்பாகுமா? ஆம்! அவரவர் அனுபவத்தால் எய்துவதே ஞானம்!

நேரத்தை நல்ல வாசிப்புக்குப் பயன்படுத்தச் செய்த பேராசிரியர் முனைவர் சேதுபதிக்கு நன்றி.



பொன்மலைச் சிகரமும் பொன்வண்ணத்தாளும்

காலப்பெருவெளியில்தமிழ்த்திருக்கோயிலாய் எழுந்தொளிரும் காவியச் செந்நூலான திருக்குறள், கடவுளை வாழ்த்துதலின் மூலமாக மனிதனைத் தெய்வமாகக் கொலுவீற்றிருக்கச் செய்திருக்கின்றது. குறித்த ஒரு நாட்டின், மொழியின், சமயத்தின் சார்பு கடந்த ஒருவனைப் பிரதிபலிக்கும் அந்நூலை எடுத்துப் படிக்கும் யாரும் தன்முகம் காண்பர். வரிக்கு வரி உள்புகும்போது தன் அகமும் காண்பர். அமரத்தன்மையை ஒவ்வொருவருக்கும் அளிக்கும் இந்தியத் தமிழ்நூல் திருக்குறள். 'எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை இந்தியா உலகிற்கு அளித்தது' இந்நூலின் வழியாக என்று உறுதியாய்ச் சொல்லலாம்.

உண்மையில் தமிழர்கள், இருப்பதாய் நம்பும் தலையெழுத்து (ஒன்று இருப்பின், அது) தமிழ் எழுத்தாக இருக்கும். அதுவே திருக்குறள் என்னும் பொது எழுத்தாக இருக்கும் என்று சொல்வது மிகையாக இருக்காது.

திருவள்ளுவர், கடவுளின் மறு அவதாரம், மானுடப் பிரம்மா என்ற புனைவுகளை எல்லாம் கடந்து திருக்குறளின் இயல்பை நன்குணர்ந்து நக்கீரர் என்னும் புலவர் எழுதிய புகழ்மொழி-

உண்மைபுகல் நன்மொழி, வள்ளுவப்பேருள்ளத்தை, கைம்மாறு வேண்டாக் கடப்பாடு உடைய மாரியை, வள்ளுவப்பெருமானின் கருணை உள்ளமாகக் காட்டுகின்றது, திருக்குறளின் வான் சிறப்பைப் போல!

தானே முழுதுணர்ந்து தண்தமிழின் வெண்குறளால்
ஆனா அறம்முதலா அந்நான்கும்- ஏனோருக்
கூழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழிஉல கென்ஆற்றும் மற்று

உண்மையில், "குறளை யாரும் மேம்படுத்தவோ அதன் அமைப்பு முறையை இன்னும் முழுமையாக்கவோ இயலாது. அது ஒரு மாலையாகத் திகழ்கிறது. இந்த மாலையின் ஒரு மணியின் வடிவத்தை அளவை அல்லது வண்ணத்தைச் சிறிது மாற்றினாலும் முழு மாலையின் அழகும் சீர்குலைந்து போகும். இத்தகைய தன்னேரில்லாத நூலை வையகத்திற்கு வழங்கிய ஒரு நாடு, நம்பிக்கையற்ற, பயனற்ற ஓர் இனமாக இருக்க முடியாது என்று எண்ணுங்கால் மனம் குதூகலமடைகிறது. அடிப்படையில் அறம் விளைந்த மண்ணில் அல்லாமல் அவர் போதித்த அறம் வளர்ந்திருக்க முடியாது" என்று அருள்திரு டாக்டர் ஜே.லாசரஸ் என்ற சமயப்பரப்புநர் கூறிய தொடர் தமிழின் இயல்பையும், தமிழர்களது வாழ்வியல் நுட்பத்தையும், வரலாற்றையும் ஆழப் புரிந்துகொண்ட அடையாளத்தைவெளிப்படுத்தி நிற்கின்றது.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்ற மகாகவி வாக்கு. வானளாவ வளர்வது இப்படித்தான். அந்த மரபில் வந்து இந்த நூலின் தனித்தன்மையைக் கவிதையில் சிற்பமாகப் பின்வரும் வண்ணம் செதுக்கித் தருபவர் கவிஞர் சிற்பி.

செந்தமிழ் நாட்டின் மொழியில் எழுந்தும்
மன்னவர் பெயர் இல்லை
தெய்வ வணக்கம் சொல்லியும் கடவுள்
திருப்பேர் தரவில்லை
மந்திரம் சடங்கு சமயங்கள் இல்லை
காரணம் ஏதென்றால்
மனித குலத்தின் மனச்சான்றாக
மலர்ந்தது வள்ளுவர் நூல்!

முழுமையுறு ஞானம், மூப்புறா இளமை, கனிவு ததும்பும் கவிதை எனத் தொட்ட இடந்தோறும் எளிமைத்தேன் இனிமையாய்ச் சொட்டும் திருக்குறள் குறித்து என்ன எழுதினாலும் அதன் முன்னால் பொன்மலைச் சிகரத்துக்குமுன் மின்னும் சின்னஞ்சிறு பொன்வண்ணத்தாளாய்ப் போய்விடும் என்பது கண் கூடு. அத்தாளின் வண்ணமும் வனப்பும்கூடத் தன்னிடம் இருந்து பெற்றது என்ற தாயுள்ளத்தோடு ஏற்றுக் கொள்ளும் திருவள்ளுவரின் மெய்ப்பாடு, குறள்தோறும் உவகையெனப் புலப் பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு மகிழ முடியும். பொய்ப்பாடுகள் எல்லாம் போயகல, மெய்யாய், மெய்ப்பாட்டைப் பிரதிபலிக்கும் வள்ளுவர்வாய் மொழியைத் தேனீக்குடிக் கீரனார்,

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் அல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே - முப்பாலின்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து

என்று பாடுகின்றார்.

வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை - ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்தமிழ் மேலாம் தரம்

என்ற பாடலில் வரிசைப்படுத்தப்பெறும் நூல்களுள் திருக்குறளுக்குக் காலத்தால் மூத்தது தொல்காப்பியம்.

இலக்கணம் என்ற நிலைகடந்து இலக்கியச்சுவை நல்கும் தொல்காப்பியத்து மெய்ப்பாட்டின்பால் எனக்கு எப்போதும் ஈர்ப்பு உண்டு. எண்கோணச் சட்டத்துள் மானுடமுகத்தை அழகுற அமைத்து, மெய்யுற அகம் காட்டும் அந்நூற்பாவின் நுட்பமும், செறிவும், அழகும் என்னுள் குறள்நூலையே கொண்டுவந்து நிறுத்தும். திருக்குறளில் தொல்காப்பிய மெய்ப்பாடுகள் துலங்குவதைத் தேடுவதைவிடவும் திருவள்ளுவரின் மெய்ப் பாடுகளை உணர்ந்து கொள்வதில் உற்சாகம் எனக்கு எப்போதும் உண்டு.

தொல்காப்பியம், தமிழர்களின் மொழி இலக்கண நூல் மட்டுமன்று. வாழ்விற்குப் பொருள் இலக்கணம் வகுத்த நூல். அதனை அடியாகக் கொண்டு எழுந்த கவிக்கோயில் திருக்குறள்.

அதனுள் இடம்பெறும் தொல்காப்பிய மெய்ப்பாடுகளுள் அகத்திற்கும் புறத்திற்கும் பொருத்தமான 64 மெய்ப்பாடுகளை, ஆய்வு செய்து புலப்படுத்தும் பணியில் தலைநிற்கிறது இந்நூல்.

தமிழில், திருக்குறளும் தொல்காப்பியமும் இணைத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்ற முன்னாய்வுகளை ஓரளவிற்கு அறிமுகப்படுத்தும் முதற்பகுதி. அதனைத் தொடர்ந்து உரையாளர்களின் துணையோடு மெய்ப்பாட்டின் மெய்த்திறத்தை விளக்க முனைகிறது இரண்டாம் கட்டுரை.

ஒட்டுமொத்த மெய்ப்பாடுகளையும் ஓரளவிற்கு உட்படுத்தி எட்டுவகையாக வழங்கும் தொல்காப்பியத்தின் நானான்கு கிளைகளைத் துணைக்கொண்டு திருக்குறளில் ஆழ்ந்திருக்கும் கவியுளந் தேடித் தொடரும் பயணத்தில், திருவள்ளுவரின் மெய்ப் பாடுகள் புலப்படுத்தும் இடங்களைக் காட்சிப்படுத்தும் கட்டுரைகள் எட்டும் அவ்வரிசையிலேயே அமைந்திருக்கின்றன. நிறைவில் அகத்திற்கும் புறத்திற்குமாகத் தொல்காப்பியரால் சொல்லப்பெற்ற 32 மெய்ப்பாடுகளையும் திருக்குறளில் தேடும் முயற்சிக் கட்டுரை அமைந்திருக்கின்றது.

தொல்காப்பிய உள்ளத்தை உணர்ந்து பேரளவிற்குக் காட்டும் பேராசிரியர் உரை பெரிதும் இந்நூலுள் பின்பற்றப்பெற்றுள்ளது. அவ்வாறே திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரையும். அதேசமயம், மணக்குடவர், பரிப்பெருமாள், காலிங்கர், பரிதியார் முதலியோர் உரைகளைத் தேவை கருதி எடுத்துக் கொள்ளும் இந்நூலுள், தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் கருத்துகள் தனியிடம் பெறுகின்றன.

தற்காலத்திற்குச் சற்றுமுன்னர் வரை திருவள்ளுவராகவே வாழ்ந்து, நடுநிலைமையோடு திருக்குறளை அணுகித் 'திருக்குறளே நமது மறை'யென உறுதியுற மொழிந்து அதற்கென உலகளாவிய நிலையில் இயக்கம் கண்டு எம்மையும் இயக்கிய குருமகாசந்நிதானம் அவர்.

மேடைப்பொழிவுகளும், எழுத்து வடிவங்களும், செயல் திட்டங்களும் அவருக்கு எல்லாமாகத் திருக்குறளே இருந்தது. அவ்வண்ணமே ஆக்கி தம்பணி தொடரும் தவத்திரு பொன்னம்பல அடிகளார்தம் தலைமையில் அமைந்த உலகத் திருக்குறள் பேரவையில் ஒருவன் எனும் வகையில் எனக்குத் திருவள்ளுவர் இன்னமும் உரிமை கலந்த உறவாகிப்போனார்.

மூச்சுக் காற்றென என்னுள் எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும் பாரதியார் எழுத்துத்தான் என்னைத் தமிழுக்குள் கொண்டு வந்து நிறைத்தது. அவர் காட்டித்தான் கம்பரையும், இளங்கோவையும், இன்னபிற கவிவாணர்களையும் கண்டேன்; கற்கிறேன். அவர்களுக்கு நடுவில் கம்பீரமாக வீற்றிருக்கும் வள்ளுவப் பேராசானிடத்தில் அன்பு கலந்த பெரும்பக்தி எப்போதும் உண்டு. குன்றக்குடித் திருமடத்தில் எப்போதும் திருவள்ளுவ தரிசனத்தைத் தந்து கொண்டிருக்கும் அடிகள் பெருமக்களின் அன்பும் அருளும் மிகச் சிறப்பானவை. சந்திப்பின்போதெல்லாம் சிந்திக்க ஊறும் தேனாய்த் திருக்குறள் தரும் தாயன்பு அத்திருமடத்துக் கவிஞர் மரு. பரமகுரு அவர்களுக்கு உண்டு.

தற்காலப் பாரதியாராகவே வலம்வரும் தோழர் ஜெயகாந்தன் அவர்கள், தோழர் ஜீவாமரபில் எனக்குக் காட்டிய திருவள்ளுவர் எமது உயிர்த்தோழர் என்றே சொல்லலாம். கவிஞர் சிற்பி அவர்களுடனான உரையாடல்களில் காவியநுட்பம் ததும்பும் கவிவாணராகத் திருவள்ளுவர் என்னுள் வலம் வருவார்.

காமத்துப்பாலை எடுத்துப் படிக்கும்தோறும் பாரதி கண்ட கண்ணம்மாவைப்போல் வள்ளுவர் எனக்குள் தோற்றம் கொள்ளும் இரகசியத்தை முதன்முதலில் இந்நூலில் பதிவு செய்கின்றேன்.


இப்படிப் பலவித மெய்யுருக்களோடு என்னுடன் பழகிவந்த தோழர் திருவள்ளுவர், இந்த ஆண்டு தீபாவளித்திருநாளின் நண்பகலில், காய்ச்சல் மிகுந்த களைப்போடு படுத்திருந்த எனக்குள் தொல்காப்பியராகத் தோற்றம் தந்தார். அவரது குறுநகை எனக்குள் பெருவியப்பைத் தோற்றுவித்தது. எண்வகை மெய்ப்பாடுகளும் எனக்குள் சித்திரமாயின. உரையாசிரியர்கள், விளக்கவுரை நல்கிய அறிஞர்கள் புத்தகவடிவில் என்னைச் சுற்றிக் குவிந்தனர். 'பட்டப்பகலில் பாவலர்க்குத் தோன்றும் இந்த நெட்டைக் கனவு' என்னை இன்னும் விட்டபாடில்லை. அச்சுரத்தின் புலம்பலைக் கணினியின் துணையோடு அவ்வப்போது காட்டிக் கொண்டிருந்த என்னைச் செவிலியரின் கனிவோடு பராமரித்தவர்கள் தமிழாகரர் தெ. முருகசாமி ஐயா மற்றும் முனைவர் பா.சுந்தர் அண்ணன் ஆகியோர். கவிஞர் இரா.மீனாட்சி அக்காவையும், நண்பர்கள் முனைவர் மு.பழனியப்பன், முனைவர் இரா.குறிஞ்சிவேந்தன் ஆகியோரையும் விட்டு வைக்கவில்லை.

இந்தக் கணத்தோடு என்னிடம் இருந்து விடைபெறும் அக் கனவு, இந்நூலுள் நிரந்தரமாய் உறைகிறது. எடுத்துப்படிக்கும் எவருக்கும் இக்கனவு வாய்க்கும் எனும் என் நம்பிக்கை பொய்க்காமல் இந்நூலை வடிவமைத்துதவிய அன்புத்தம்பி சொ. அருணன் அவர்களுக்கு நன்றி. இந்நூலை முறைமை செய்து அளித்ததோடு முன்னுரையும் நல்கிய தமிழாகரர் தெ. முருகசாமி ஐயா அவர்களுக்கும் சாற்றுக்கவி பாடிக் கொடுத்த சான்றோர், தொல்காப்பியச் செம்மல், பேராசிரியர் ஆ.சிவலிங்கனார் ஐயா அவர்களுக்கும், தோழர் சபாபதி அவர்களுக்கும், அழகுற வெளியிடும் பாவை பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தாருக்கும் என் நன்றி. எப்போதும்!

திருவள்ளுவரின் 'ஆழ்ந்திருக்கும் கவியுளத்தைத் தொல் காப்பிய மெய்ப்பாட்டின் ஊடாகக் கண்டு காட்டும் இந்நூலைச் செம்மொழித் தகுதியெனும் சிம்மாசனத்தில் சிறப்புற வீற்றிருக்கும் தமிழன்னையின் திருவடிகளில் காணிக்கை ஆக்கி மகிழ்கின்றேன். தூண்டித் துணைநின்ற அனைவருக்கும், ஏற்றுப் படிக்கும் வாசகர்களுக்கும் நன்றி.

புதுச்சேரி — மிக்க அன்புடன்

11.12.2009 — சேதுபதி



Tirukkural is complete in itself. It is a treatise par excellence on the art of living. It contains lofty human ideas embracing all the aspects of love. It is a book on Ethics; on Live; on Virtue. It teaches people how to behave in the society. It is also a book on political Science. It gives us a clear-cut account of political truths. It is a book of Wisdom. It is a Vedham that guides a man through the various stages of his growth. It is Vedham in general. Tirukkural believes in God but it is not a book made for God. Tirukkural believes in kings but it is not a book made for kings. Books that talk about Gods and Kings have forgotten the common man in the society. But Tirukkural places man at the forefront and guides him. Hence it is a new Vedham.

- ***Thavathiru Kundrakkudi Adigalar***



திருக்குறளும் தொல்காப்பியமும்

தொல்காப்பியமும் திருக்குறளும் காலத்தால் பழமையன; கருத்தால் புதுமையன. முன்னையது இலக்கணம்; பின்னையது இலக்கியம். இல்லையில்லை, முன்னையது மொழிக்கு இலக்கணம் வரைவது; பின்னையது வாழ்விற்கு இலக்கணம் பகர்வது. முன்னையது சூத்திரங்கொண்டது; பின்னையது அதனை ஒத்த பாக்களால் ஆனது. விளக்கம் வேண்டிய அளவிற்கு வரிகளை விரிக்கும் வாய்ப்பு, இலக்கண நூலான தொல்காப்பியத்திற்கு உண்டு. ஆனால், இலக்கியமாயினும், வரையறுத்துக்கொண்ட வடிவம் மற்றும் வகைமையின் காரணமாகத் திருக்குறளுக்கு அந்த வாய்ப்பும் இல்லை; எனினும், தன்னளவில் தகுதியாக நிறைவுறக் கொண்டு விளங்குகின்றது.

இன்றளவும் முயன்று பலர் விரிவுரையும், விளக்கமும் எழுதி எழுதி ஓய்ந்துபோனபோதும் ஒப்புயர்வில்லாத நிலையில் இளமைப்பொலிவோடும், கருத்துச் செறிவோடும் திருக்குறள் திகழ்கின்றது. அதன் நுட்பம்

அறிதோறும் அறிதோறும் நமது அறியாமையை அறிவித்துக் கொண்டே, அதேபோது அறிவு புகட்டிக்கொண்டே விரிகிறது. நவில்தொறும் நவில்தொறும் அந்நூலின் நயம் இனிது புலப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

எனவே, வள்ளுவத்தின் ஆழ்ந்திருக்கும் கவியுளத்தை விரிவுறக் காண, அவர் காலத்தையும், அவர் கருத்தில் கொண்டவற்றோடு தொடர்புடைய பிற இலக்கியங்களையும் ஒத்து உறழ்ந்து காண்பது இன்றியமையாததாகிறது. அதற்கு, அவர் காலத்துக்குப் பின்னர்த் தோன்றிய நூல்களைக் கருத்தில் கொண்டு காண்பதைவிடவும், அவருக்கு முன்னர்த் தோன்றிய நூல்களை, குறிப்பாக, சங்க இலக்கியத்தையும், தொல்காப்பியத்தையும் காண்பது பொருத்த முடையது. அப்போதுதான் வள்ளுவர் மரபுவழி வந்த பாங்கும் மரபு கடந்து செய்த புரட்சியும் தெளிவாகப் புலப்படும்.

வள்ளுவர் குறிப்பறிய...

திருக்குறட்சிறப்பை, இலக்கிய, வாழ்வியல் நிலைகளில் உணரத் தலைப்பட்டு எழுதப்பெறும் ஆய்வுகள் பெரும்பாலும் அற நூல்களை, காப்பியநூல்களை, சமயநூல்களைக் கருத்தில் கொண்டு எழுந்துள்ளன. திருக்குறள், உலகியல் நிலையில் தனியிடம்பெறும் நூல்களோடும் ஒப்பிட்டும் ஆராயப்பெறுகின்றது. அதேசமயம் திருவள்ளுவருக்கு முன்தோன்றிய சங்க இலக்கியத்தோடு ஒப்பிட்டு அறிய, ஆராயப்பெறும் அளவிற்குத் தொல்காப்பியத்தோடு வைத்து ஆராயப்பெறுதல் அவசியம்.

இதனை வலியுறுத்துவாற்போன்று, மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார், "திருக்குறள் பின் தோன்றிய நூல்களை எங்ஙனம் ஆட்சி செய்திருக்கின்றது என்று பலர் பறையறையக் கேட்டிருக் கின்றோம். அக்குறளையும் ஆட்சி செய்த நூல் தொல்காப்பியம் என்று அறிந்துகொள்ளுங்கள். திருக்குறள் கற்றுப் பிற தமிழ் நூல்களைக் கற்பார் காணும் இன்பம் வேறு; குறளறிவின்றிப் பிற தமிழ்நூல்களைப் படிப்பார் அடையும் இன்பம் வேறு. அதுபோல, தமிழில் காலத்தாலும் சிறப்பாலும், முதன்மையுடைய தொல் காப்பியத்தைப் படித்தபின், திருக்குறள் முதலான தமிழ் நூல்களைக் கற்பார் அழுத்தமான புதிய அறிவு விளக்கம் பெறுவர். தொல் காப்பியம் கல்லாதார் பெற்றுள்ள தமிழறிவு எப்படியும் குறைபாடு உடையதே"[1] என்று குறிப்பிடுகின்றார்.

இன்பத்திற்காக மட்டுமன்றி, உரைநலம் காண்பதற்கும் இது இன்றியமையாதது. எனவே, திருக்குறள் உரைநலம் காண்பார்க்கு இன்றியமையாத சில கடைப்பிடிகளைக் கூறும் வ.சுப.மா., "வள்ளுவர் கற்ற நூல்களின் கல்வி உரையாசிரியனுக்கும் வேண்டும். அவர் கற்ற தமிழ் நூல்கள் எத்துணையோ? அவை யெல்லாம் நமக்குக் கிடைக்கவில்லை என்று சொல்ல முடியாது. தொல்காப்பியமும் சங்க நூல்களும் அவர் கற்றவற்றுள் நமக்குக் கிடைக்கின்றன. வள்ளுவர் குறிப்பை அவர் சொற்கொண்டும் நடை கொண்டும்தானே அறியவேண்டும்? அவர்தம் சொல்லும் நடையும் சங்கத்தன்மையன... வள்ளுவர் காலக் குழுவியல் அமைப்பையும் மொழியமைப்பையும் அறிவிக்கும் தனிக்கருவிகளாவன தொல்காப்பியமும் சிறப்பாகச் சங்கத்தொகை நூல்களும் ஆகும்"[2] என்கின்றார்.

தொல்காப்பியரும் திருவள்ளுவரும்

காலத்தால் மூத்த தொல்காப்பியம் தந்த தொல்காப்பியர், அதற்குப் பின்னர்த் தோன்றிய திருக்குறள் தந்த திருவள்ளுவருக்கு முன்னவர்; தந்தை எனத் தக்கவர். இவ்விருவருக்கும் இடைப்பட்ட உரிமை கலந்த தமிழ்உறவைத் தந்தை மகன் உறவாக்கிப் பார்க்கிறார், தமிழறிஞர் வ.சுப.மா.

"தந்தையின் பொருளை உரிமையோடு மகன் எடுத்துக் கொள்வது போல, திருவள்ளுவர் தொல்காப்பியரின் சொற் செல்வத்தைப் பொருட்செல்வத்தோடு அள்ளிக் கொள்கின்றார். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று திருக்குறளை மூன்று பிரிவு செய்யும் கருத்தை வழங்கியவர் யார்? 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு' (1037) எனவும், 'அறம் முதலாகிய மும்முதற்பொருள்' (1363) எனவும் தமிழ் முதல்வன் தொல்காப்பியன் சுட்டியிருத்தல் காண்க"[3] என்பது அவர் தரும் விளக்கம்.

இவற்றுள், காமத்துப்பால் திருக்குறளை ஏனைய அறநூல் களுள்ளும் தனித்து அடையாளம் காட்டும் பகுதி. "காமத்துப்பால் முழுவதுமே தொல்காப்பியவழி தழுவியது. உலகத்து அறநூலா சிரியர்கள் அன்பு அருள் ஈகை முதலான அறங்களைக் கூறுவர். இறைமாட்சி முதலிய அரசியல் அறங்களையும் கூறுவர். இவற்றோடு எந்த அறநூலாளனும் காமத்துப்பாலைச் சேர்க்கான். காமங்கூடாது என்ற விலக் கறங்களே இடம்பெறும். இன்னின்ன வாறு காமம் துய்க்க வேண்டும் என்ற இன்ப அறங்களையும் ஏனை இருவகை அறங்களோடு வள்ளுவர் சேர்த்து முப்பாலாகப்

பாடினார். இதற்குக் காரணம் தமிழ்மரபு, சங்கமரபு என்பது நம்மனோர்க்குத் தெளிவு"[4] என்கின்றார் வ.சுப.மா.

காமத்துப்பாலா? இன்பத்துப்பாலா?

இங்கு 'காமத்துப்பாலா? இன்பத்துப்பாலா?' என்ற விவாதம் திருக்குறளை வைத்து எழுந்த காலத்து, வடமொழிச் சொல் என்று காமத்தைச் சுட்டி, இன்பத்துப்பால் என்று பெயர் சூட்டியோரைச் சாடும் துரை அரங்கசாமி என்னும் தமிழறிஞர், தொல்காப் பியத்தைத் துணைக்கொண்டு காமம் என்ற சொல், தமிழே என்று நிறுவுகிறார்.

"காமம் என்பது தூய தமிழ்ச் சொல்லேயாகும். தமிழிலிருந்து இச்சொல் வடமொழிக்குச் சென்றதெனலாம். அன்றி, வட மொழிக்கே உரியதாய், இன்பம் ஒன்றே கருதி ஆண்மகன் பெண் மகளிடத்தும், பெண்மகள் ஆண்மகனிடத்தும் கொள்ளும் விழைவு அல்லது ஆசை என்ற பொருளை உணர்த்தி நிற்கின்றதெனக் கொள்ளலாம். தமிழ்மொழிக்கே உரிய காமம் என்னும் தூய தமிழ்ச் சொல், 'கமம் நிறைந்தியலும்' என்று தொல்காப்பியரால் பொருள் உணர்த்தப்பட்ட கமம் என்ற உரிச்சொல், முதல் நீண்டு வழங்கிய பெயர்ச்சொல் ஆகும். காமம் என்பதன் பொருளும் நிறைவு எனவேபடும்"[5] என்கிறார் அவர்.

திருக்குறளுள், அறத்துப்பாலுள் தனிநிலைச்சொல்லாக ஓரிடத்தில் வரும் காமம், பொருட்பாலில், தொடருக்கு நிலை மொழியாக ஓரிடத்தும், சொல்லுக்கு முதல் நிலையாக நான்கிடத்தும் வருகின்றது. "காமத்துப்பாலில் மட்டும் நோக்கினால், தனிநிலைச் சொல்லாகவோ, நிலைமொழியாகவோ, சொல்லுக்கு முதல்மொழியாகவோ 38 இடங்களில் காமம் என்ற சொல் வந்துள்ளது; காமன் என்ற வடிவில் ஓரிடத்தில் வந்துள்ளது. இன்பம் என்ற சொல்லோ காமத்துப்பாலில் இரண்டே இடங்களில் மட்டுமே வந்துள்ளது. அவ்விரண்டிடங்களிலும்கூடக் காமம் என்ற சொல்லும் உடன் வந்துள்ளது. எனவே, காமம் என்ற சொல்லே காமத்துப்பாலில் பயின்று வந்துள்ளதால், 'தன்குறி வழக்கம் மிக எடுத்துரைத்தல்' என்ற உத்தி முறையைக் கையாண்டுள்ள திருவள்ளுவர், காமத்துப்பாலுக்கு அப்பெயர்தான் இட்டிருக்க வேண்டும், இன்பத்துப்பால் என்ற பெயரை இட்டிருக்க முடியாது என்று துணிந்துகூறலாம் அன்றோ!" என்கின்ற அரங்கசாமி, "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு' என்று தொடங்கும்

தொல்காப்பியர், அதைத் தொடர்ந்து, 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் காமக்கூட்டம்' என்று கூறியிருத்தலையும், அதனால் காமம் என்ற சொல்லை அவர் ஆண்டிருத்தலையும்" சுட்டி, 'காமம் என்ற சொல் தொல்காப்பியருக்கு விலக்கன்று; அது போலவே, அச்சொல் திருவள்ளுவருக்கும் விலக்கன்று என்று துணிந்து கூறலாம்"[6] என்று விளக்குகிறார்.

'முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றி...'

திருக்குறள், தமக்கு முன்னதாகித் தமிழ் தந்த தொல்காப் பியத்தைப் பல இடங்களில் பொன்னேபோற்போற்றிப் பாடி யிருக்கின்றது.

"அன்புடைமை அதிகாரத்து, 'என்பு' என்னும் சொல் பல விடங்களில் தொடைபட வந்து நிற்கின்றது. இங்ஙனம் யாக்கும் நினைவு திருவள்ளுவர்க்கு,

என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
அன்பு தலையடுத்த வன்புறைக் கண்ணும் (தொல்.1059)

என்ற தொல்காப்பியத் தொடையால் எழுந்திருக்கலாம். தமிழ் முதனூல், 'அவன் சோர்வு காத்தல் கடன்' (1119) எனப் பெண்ணுக்கு அறிவுறுத்தும். இவ்வறிவுரையை, 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என்று திருக்குறள் விரிவு செய்யக் காண்மின்"[7] என்று வ.சுப. மா., காட்டு கின்றார். அந்த வகையில்,

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப (தொல்.1434)

எனவரும் தொல்காப்பிய நூற்பா,

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (நீத்தார் பெருமை-28)

எனத் திருக்குறளாகவும்,

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை இன்மை யான (தொல்.981)

என்ற தொல்காப்பிய நூற்பா,

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில் (நாணுத்துறவுரைத்தல்-1137)

என்ற திருக்குறளாகவும் உருப்பெற்றிருப்பதைக் காணலாம்.

எழுத்தெனப்படுவ
அகர முதல்
னகர இறுவாய் முப்பஃதென்ப (தொல்.1)

என்னும்தொல்காப்பிய முதல் நூற்பா மரபையே திருவள்ளுவர், 'அகரமுதல' எனத் தொடங்கிப் 'பெறின்' என்று னகரமாக முடியும் எழுத்தமைப்பைக் கொண்டு நூல் வகுத்திருக்கக் கூடும்.

மக்கட்பேறு

"மக்கட்பேறு என்ற ஓர் இனிய சுவையான பொருளை அதிகாரமாக வள்ளுவர் தழுவிக் கொண்டதற்குத் தமிழ் அகத்திணை மரபே காரணம்" என்று சுட்டும் வ.சுப.மா. அதற்கான விளக்கத்தையும் பின்வருமாறு விரிக்கின்றார்.

"அகத்திணைக் கற்பொழுக்கத்தில் புதல்வனுக்குக் கூற்று இல்லா விட்டாலும் அவன் நெய்க்கிண்ணம் போல இன்றியமையாப் பாத்திரம் ஆவான். பிள்ளையால் இருவர்தம் பிணைப்பும் கடமைகளும் முயற்சிகளும் கூடுதலாகின்றன.

புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும் (தொல்.1090)

காமக் கிழத்தி தன்மகந் தழீஇ
ஏமுறு விளையாட்டு இறுதிக் கண்ணும் (தொல்.109)

இன்னகைப் புதல்வனைத் தழீஇ இழையணிந்து
பின்னகை வந்த வாயிற் கண்ணும் (தொல்.1095)

எனத் தொல்காப்பியத்து வரும் பல்குறிப்புகளை நோக்கின், தமிழினத்துக்கு மக்கட்பேற்றின்மேல் இருந்த காதல் பெறப்படும். அதனாற்றான் வள்ளுவர் 'பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை' என்று அறுதியிட்டு மொழிந்தனர்....ஆதலினன்றோ 'வாழ்க்கைத் துணைநலம்' என்ற அதிகாரத்துக்குப்பின் தோற்றுவாய் செய்து 'மக்கட்பேறு' என்ற அதிகாரத்தை வள்ளுவர் வழங்கினார். மகப்பேறு தாய் தந்தை இருவர்க்கும் ஒரு பெற்றியது என்றாலும் தாய்க்கே மற்றொரு பற்றுக்கோடாகும். ஆதலின் வாழ்க்கைத் துணைநலத்துக்கு அடுத்து மக்கட்பேறு அமைந்திருப்பது பொருந்துவதே

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

என்ற குறளும் மகச்செல்வத்தை மனையாளின் நன்கலமாகச் சொல்வதைக் காண்க."[9]

துறவறம் பாடவும் தொல்காப்பியமே துணை

இல்லறத்தின் இனிமையைத் திருக்குறள் பாடக் காரணமான தொல்காப்பியமே, துறவறத்தைப் பாடவும் துணை செய்திருக் கின்றது என்னும் கருத்தை, தவத்திரு குன்றக்குடி அடிகளார் முன்வைக்கின்றார்.

"பல ஆண்டுகள் இல்லறம் இயற்றிய பிறகு, உயிர்நலம் கருதியும் பொதுநலம் கருதியும் மனையறத்தைத் துறந்து தவ வாழ்க்கை இயற்றுதலைத் துறவறம் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே

(தொல்.பொருள் கற்பியல்-51)

என்பது தொல்காப்பியம். இத்தகைய வாழ்க்கையைத்தான் வள்ளுவம், துறவறத்தில் எடுத்துக் கூறுகிறது என்று கருத இட மிருக்கிறது"[10] என்கின்றார் அடிகளார். இது மேலாய்வுக்குரியது.

உயிர்ப்பகுப்பும் எழுபிறப்பும்

இதேபோல், வள்ளுவர் கூறும் எழுபிறப்பு என்னும் தொடரை விளக்க வரும் அடிகளார், "உயிரின் படிமுறை வளர்ச்சியில் ஆறு வகைப் பிறப்புகளைப் பொதுவாகத் தொல்காப்பியம் கூறும். அவையாவன:

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே (தொல்.மரபு-27)

படிமுறை வளர்ச்சியில் உயிர் ஓரறிவில் தொடங்கி ஆறறிவு வரை வளர்ந்து அதனைக் கடந்த பெருநிலை எய்துதல் ஏழாவது நிலை. இந்தப் படிமுறைகளை, 'எழு' என்றே குறிப்பிடுகிறது. ஆதலால், புதிதாகத் தோன்றிவரும் பிறப்பு என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால், எழுபிறப்பு என்றால், இனிவரும் பிறப்பு என்பது தெளிவாகப் புலப்படுகின்றது"[11] என்கின்றார்.

தொல்காப்பியமரபும் திருவள்ளுவப்புரட்சியும்

தொல்காப்பியம், 'வடவேங்கடம் தென்குமரி ஆஇடைத் தமிழ் கூறும் நல் உலகத்து' மொழி இலக்கணம். திருக்குறளோ, உலகினுக்கு வாழ்வியல் நெறிபுகட்டும் தமிழ் இலக்கியம். உள்ளதை வைத்து உரைக்க வேண்டிய கட்டாயம் தொல்காப்பியத்துக்கு உண்டு. உள்ளதற்குமேலே உள்ளத்தை மேலேற்ற வழி காணும் வாய்ப்பு, வள்ளுவத்துக்கு. தந்தையின் தோள் ஏறி நின்று உலகு பார்க்கும் வாய்ப்பு மகனுக்குக் கிட்டுவது போலத் தொல்காப்பியத்தைக் கற்றுத் தொல்காப்பியத்துக்கும் மேலேகும் சிறப்பு, திருக்குறளுக்குக் கிட்டி யிருக்கின்றது. அந்தவகையில் வேண்டுமிடத்துத் தொல்காப்பிய மரபை உள்வாங்கிய திருக்குறள் தம் கவிப்போக்கில் அது கடந்து புரட்சிகளையும் செய்திருக்கின்றது.

"திருவள்ளுவர்க்கு முன்தோன்றி நூல் செய்த தொல்காப்பியர் நாட்டில் இருந்த நிலைமையை உள்ளவாறு கூறினார். இப்படியிருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறினார். அதுவே சீர்திருத்தம் தான். மேலும் நூல் முறையிலேயே வள்ளுவர்தான் சீர்திருத்தம் செய்தார். திருக்குறளுக்கு முன்பு, ஒழுக்க இயலுக்காக முறையான ஒழுக்க நூல்- நீதி நூல் எதுவும் எழுந்ததில்லை. எனவே, ஒழுக்கம் இயல் கூற முதன்முதல் திருக்குறள் எழுந்ததே சீர்திருத்தம் தான்"[12] என்கின்றார் அடிகளார்.

தொல்காப்பியத்திற்குப் பின்வந்த திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாடியபோதிலும், அது தொல்காப்பியம் சுட்டும் நானிலக் கடவுளரைப் பாடவில்லை. பொதுமைநிலையில் கடவுட் பண்புகளைப் பாடுகிறது. 'இற்செறித்தல்' என்பதற்கு எதிர்க்குரல் எழுப்பி, 'சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்?' என்று கேட்கிறது. தமிழ்மரபில் இயல்பாக இருந்த கள்ளுண்ணல், புலால் உண்ணல் ஆகியவற்றைக் கடுமையாகச் சாடுகிறது.

தமிழர்தம் வாழ்வியல் நிலையினை அழகுற விளக்கும் காமத்துப்பால் வள்ளுவர் செய்த தமிழ்ப் புரட்சியின் உச்சம் எனலாம்.

"தொல்காப்பியம், அகத்திணைப்பாடலை, "நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்' புலப்படுத் தற்குக் கலிப்பாட்டும், பரிபாட்டும் ஏற்றன என்று மொழியும்.... திருக்குறள் காமத்துப்பால், மேற்கூறிய தொல்காப்பிய அகத் திணைச் செய்திகள் எல்லாவற்றையும் கூறாமல் தலை மக்களின் காதலுணர்ச்சி, பண்பாடு முதலியவற்றைப் புலப்படுத்துகின்றது. அகத்திணை பாடுதற்குக் கலியும், பரிபாட்டுமே ஏற்புடையன என்று தொல்காப்பிய நூற்பா கூறத் திருக்குறளின் காமத்துப்பால் குறள் வெண்பாவால் அமைந்துள்ளது"[13] என்று குறிப்பிடும் முனைவர் இரா.சாரங்கபாணி, "இப்பா குறுகியதாதலின் அகப் பொருள் செய்திகளை விரிவாகக் கூற வாய்ப்பில்லை. எனவேதான், இது, முதல், கரு, உரி என்னும் முப்பொருள்களுள் முன்னைய இரண்டினையும் விடுத்து, உரிப்பொருளை மட்டும் கூறிச் செல்கிறது. நிலப்புனைவு, காலப்புனைவு முதலியனவும் பெரிதும் இடம் பெறவில்லை. ஆனால், பொழுது கண்டிரங்கல், என்னும் அதிகாரத்தில் மட்டும் நெய்தல்திணைக்குரிய மாலைப்பொழுது சிறிது புனையப் பெறுகின்றது. அகத்திணை ஏழனுள் கைக்கிளை பெருந் திணைகளை நீக்கி அதன் ஐந்திணையை மட்டும் கூறுகின்றது"[14] என்றும் குறிப்பிடுகின்றார்.

மரபுவழியில் வைத்துத் திருக்குறளைப் பார்க்கும் இயல்பில் இக்கருத்து, ஆய்வாளர்வழி புலப்படுகின்றது. கடுகு மற்றும் அணு அளவிலும் குறுகிய பகுதியைத் துளைத்து, அதனுள் ஆகப்பெரிய செய்திகளை அமைத்து. வாழ்வாங்கு வாழும் வழிபுகட்ட, வளவள வெனப் பேசாது, குறுகியும் போகாது, நறுக்குத் தெறித்தாற்போல், குறுகத்தறிப்பதையே நோக்கமாகக் கொண்ட திருக்குறளுக்கு, அகப்பொருள் செய்திகளை விளக்கிக் கூற வேண்டிய அவசியம் இல்லை. அதன் உலகு தழுவிய பார்வைக்கு, நிலப்புனைவும், காலப் புனைவும் கட்டாயமில்லை.

இன்னும் சொல்லப்போனால், நிலமும், பொழுதும் தமது இருப்பைப் புலப்படுத்தும் தக்க சான்றுகள்; உலகு எனும் பொது எல்லையைச் சுருக்கி, வட்டாரத் தன்மையை, இலக்கியத்திற்குத் தந்துவிடும் இயல்புடையவை. நிலம், பொழுது கடந்து எல்லா வுயிர்களுக்கும் இயல்பாக எழும் காதல் உணர்வை, உலகளாவிய நிலையில், இலக்கியம் மூலம் தமதாக உணர்ந்துகொள்ளும் மனித குலத்திற்கு உணர்த்தப் பொதுமைநிலையைக் கடைப்பிடிக்கும் நோக்கத்தால்தான், திருக்குறள், தமிழ்மரபின் கருப்பொருளை

மட்டுமே கைக்கொண்டிருக்கின்றது. பொருந்தாதனவற்றைத் தள்ளுகிற இயல்பில் பெருந்திணையையும், கைக்கிளையையும் புறந்தள்ளிய திருக்குறள், பிரிவிற்குப் பெருங்காரணமாகிய, பரத்தையர் மரபை முற்றிலும் விலக்கிய புரட்சிஇலக்கியம் என்றே துணிந்து கூறலாம். எனினும், புலவி, ஊடலுக்குக் காரணமாக இன்னொரு பாத்திரத்தைக் கற்பனையாகப் படைத்தளித்திருக்கிறது. அதுவே திருவள்ளுவரின் கவியாற்றலுக்குத் தகுந்த களமாகி, இலக்கியப்பெருவிருந்து படைக்கின்றது.

"தொல்காப்பியர் கூறும் பரத்தையிற்பிரிவைக் குறள் குறிப்பிடவில்லை. இருப்பினும் உரையாசிரியர்கள் சில குறளுக்குத் தலைவன் பரத்தைமையை உடையனாகக் கொண்டு வலிதின் ஏற்றி உரை கண்டுள்ளனர். 'மடன்மா கூறும் இடனுமாருண்டே' எனத் தொல்காப்பியம் தலைவன் மடலேறல் குறித்துக் கூறலாம் எனக் கூறும். இம்மடலேறுதலைத் திருக்குறள் 'நாணுத் துறவுரைத்தல்' என்னும் அதிகாரத்தில் பல குறளில் விரித்துப் பேசுகிறது. களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளுக்குரிய கூற்று வகைகளைத் தொல்காப்பியம் விரிவாகக் கூறுகிறது. அக்கூற்றுகளுள் தலைவன் தலைவியர் கூற்றுகளே மிகுதியாகவும் தோழி, பாங்கன் முதலியோர் கூற்றுகள் சிலவாகவும், குறளில் காணப்படுகின்றன. தலைவி வெளிப்படையாகத் தோழியை நோக்கிக் கூறுவன இரு குறள்கள் (1262, 1284) உள்ளன"[15] என்பன போன்ற செய்திகள் மேலாய்வுக்கு வழிவகுக்கக் கூடியன.

"தலைமக்களுக்குரிய திணைப்பெயர்களுள் நெய்தல் நிலத் தலைவன் பெயராகிய துறைவன் என்னும் பெயர் மட்டும் குறளில் ஈரிடத்து ஆட்சி பெற்றுள்ளது என்பது நினையத் தகும். 'துறைவன் துறந்தமை தூற்றாகொல் (1157), 'தண்ணந் துறைவன் தணந்தமை (1277) என்னும் குறள் காண்க"[16] என்கின்றார் சாரங்கபாணி.

திருவள்ளுவர், மயிலையில் வாழ்ந்ததாகச் சொல்லப்பெறுவது உண்மையாயின் தாம் வாழ்ந்த பதியின் பதிவா என்பதை ஆராய இடமளிக்கும் குறட்பாக்கள் இவை.

இதுபோல், புறத்திணை மரபுகள் திருக்குறளோடு ஒப்பிட்டுப் பெரிதும் ஆராய்தற்குக் களங்கள் அமைத்துக் காத்திருக்கின்றன.


ஆக, திருக்குறள் நுட்பமும், ஆழமும், அழகும், விரிவும் காணத் தொல்காப்பியத்துடனான ஒப்பீடு பெரிதும் உதவக் காணலாம். தமிழ் மரபறியவும், தமிழர்தம் பண்பாட்டு மாற்றங்களைப் புரிந்து

கொள்ளவும், தமிழர்கள் வாழ்ந்த தடத்தின் ஒவ்வாச் சுவடுகளை முற்றாக ஒதுக்கிய முதல்நூலாகவும், முழு நூலாகவும் சமைந்த திருக்குறள், தமக்கு முன்னர்த் தோன்றிய தொல்காப்பியத்தை ஒட்டியும், மாற்றியும் மேற்கொண்டுள்ள பயணத்தை மதிப்பிடவும் இத்தகு ஆய்வுகள் இடம் வைக்கின்றன என்பது புலப்படுகின்றது.

இனி, தொல்காப்பிய மெய்ப்பாடுகள் குறித்து உரையாளர்களின் கருத்துக்களை உற்றுநோக்கலாம்.

சான்றெண் விளக்கம்

1. முதறிஞர் வ.சுப.மாணிக்கம், தொல்காப்பியக்கடல், பக் 82-83
2. மேலது.
3. மேலது, ப.90.
4. மேலது, ப.100.
5. டாக்டர் மொ.அ.துரை அரங்கசாமி, காமத்துப்பாலா? இன்பத்துப்பாலா? பக்.18-19.
6. மேலது, பக்.15-16.
7. முதறிஞர் வ.சுப.மாணிக்கம், தொல்காப்பியக் கடல், ப.90.
8. மேலது, பக்.100-102.
9. மேலது.
10. தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை, தொ-1, ப.148.
11. மேலது, பக். 160-161.
12. தவத்திரு குன்றக்குடி அடிகளார்நூல்வரிசை,தொ-3, பக்.175-176.
13. முனைவர் இரா.சாரங்கபாணி, வள்ளுவர் வகுத்த காமம், ப.15.
14. மேலது.
15. மேலது, ப.17.
16. மேலது, ப.18.



தொல்காப்பிய மெய்ப்பாடு - உரைகளின் ஊடே ஒரு பயணம்

எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களைக் கொண்ட தொல்காப்பியத்துள், பொருளதிகாரம் தனித்தன்மை உடையது. அகமென்றும், புறமென்றும் பிரிவு கொண்டமையும் வாழ்வியல் முறையை, நூற்பாக்களுள் வகுத்துச் சொல்வது தொல்காப்பியப் பொருளதிகாரம்.

இதனுள், பொருளியலுக்கு அடுத்து இடம் பெறுவது, மெய்ப்பாட்டியல்.

மெய்ப்பாட்டியல் - விளக்கம்

"மெய்ப்பாடென்பது பொருட்பாடு. அஃதாவது, உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல்"[1] என்று இத்தலைப்பிற்கான பொருளை உரைக்கின்றார் உரையாசிரியரான பேராசிரியர்.

தொல்காப்பிய மெய்ப்பாட்டியல், 27 நூற்பாக்களை உள்ளடக்கியது. அவற்றுள் முதல் 12 நூற்பாக்களிலும்,

இறுதி ஒரு நூற்பாவிலும் உணர்த்தப்படுவது அகத்திற்கும் புறத்திற்குமான பொது மெய்ப்பாடுகள். இடையில் இடம்பெறும் 14 நூற்பாக்கள் அகத்திணைக்குரியன.

செய்யுளியலில் மெய்ப்பாடு, 34 உறுப்புகளுள் ஒன்றாக அமைகின்றது. அதன் முதல் நூற்பாவில்,

பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ (தொல். 1259)

எனும் தொடரில் இருபதாவது உறுப்பாக அமைகின்றது, மெய்ப்பாடு.

இதற்கு, 'மெய்ப்பாடென்பது சொற்கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்' என்று உரை எழுதுகிறார் பேராசிரியர். இதனை அடியொற்றி நச்சினார்க்கினியரும், 'மெய்ப்பாடென்பது சொற் கேட்டார்க்குப் பொருள் கட்புலனாதலை'[2] என்று குறிக்கிறார்.

பிற்காலத்தில் எழுந்த தண்டியலங்காரசாரம், 'மெய்ப்பாடாவது, நேராகக் கண்டதுபோலத் தோன்றும் கருத்து'[3] என்கின்றது.

'மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடு'

இம்மெய்ப்பாட்டிற்கு விளக்கம் நல்கும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாக்கள்,

உய்த்துணர்வு இன்றித் தலைவரும் பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும் (தொல்.1460)

எண்வகை இயல்நெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே (தொல்.1461)

என அமைகின்றன.

பேராசிரியர் உரையில்...

இதற்கு, 'உய்த்துணர்ச்சியின்றிச் செய்யுளிடத்து வந்த சொல்லப் படும் பொருள் தானே வெளிப்பட்டாங்குக் கண்ணீரரும்பல், மெய் சிலிர்த்தல் முதலாகிய சத்துவம் படுமாற்றான் வெளிப்படச் செய்வது மெய்ப்பாடென்னும் உறுப்பாம் என்றவாறு" "கவிப் பொருள் உணர்ந்தால் அதனானே சொல்லப்படும் பொருள் உய்த்து வேறு கண்டாங்கு அறிதலை மெய்ப்பாடென்றான், அது தேவருலகங் கூறினும் அதனைக் கண்டாங்கறியச் செய்தல் செய்யுள் உறுப்பாம் என்றவாறு"[4] என்று உரை செய்கிறார் பேராசிரியர்.

மேலும், "தலைவரு பொருளான்' எனவே நோக்குறுப்பால் உணர்ந்த பொருட்பிழம்பினைக் காட்டுவது மெய்ப்பாடென்பது இதன் கருத்து. இக்கருத்தினால், 'கவி கண்காட்டும்' எனவும் சொல்லுப"[5] என்று விளக்குகின்றார்.

இளம்பூரணர் உரை

இந்நூற்பாவின் முதலடியில் இடம் பெறும் 'தலைவரும் பொருளான்' என்ற தொடரை, 'தலைவரு பொருண்மையின்' எனப் பாடமாகக்கொண்டு, "யாதானும் ஒன்றைக் கூறியவழி அதன்கண் பொருண்மையை விசாரித்து உணர்தலன்றி அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடு என்னும் உறுப்பாம் என்றவாறு" என்றும், "செய்யுட் செய்வார் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டுமென்பது கருத்து"[6] என்றும் உரைக்கிறார் இளம்பூரணர்.

நச்சினார்க்கினியர் உரை

நச்சினார்க்கினியார், "அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல், உய்த்துணர்ச்சியின்றிச் செய்யுளிடத்து வந்த பொருளானே கண்ணீரரும்பல், மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலிய சத்துவம் படுமாறு வெளிப்படச் செய்வது மெய்ப்பாடெனும் உறுப்பாம் என்றவாறு. அது தேவருலகம் முதலியவற்றைக் கூறினும் கண்டாங்கு, அறியச் செய்யுள் செய்தல் செய்யுளுறுப்பென்றார். 'தலைவரு பொருளான்' எனவே நோக்குறுப்பானுணர்ந்த பொருட்பிழம்பினைக் காட்டுவது மெய்ப்பாடாம் என்று கொள்க"[7] என்று எழுதுகிறார்.

தமிழண்ணல் நோக்கில்...

இவ்வுரைகளை முன்னிறுத்தி, "அஃதாவது, பாடலே அம் மெய்ப்பாடு – உருக்கொண்டு வெளிப் புறப்பட்டுத் தோன்றுகிறது. அதுவே, மெய்ப்பாடு. "கவிப்பொருள் உணர்ந்தால் அக்கவியானே சொல்லப்படும் பொருள்கள் வேறு கண்டாங்கு அறிதல் மெய்ப்பாடு" என்று சிறப்பு விளக்கமும் பொருளை உணர்வதால் வேறு தனித்துக் கண்டாங்கு (to create a separate image) பெறும் மனவுருவையே அறியச் செய்தல் என்னும்போது, படைப்பு வன்மையால் அக்காட்சி தோற்றுவிக்கப்படுவதை உணர்த்துகிறார், இங்ஙனம் அறியச்செய்தலும், அறிதலுமே மெய்ப்பாடென் கின்றன"[8] என்று தமிழண்ணல் விளக்குகின்றார்.

இந்தவகையில், பேராசிரியரை அடியொற்றிய அவரது விளக்கம், "மெய் என்பது பொருட்பிழம்பு; பாடு என்பது தோன்றுவது. கவிதைதான் மெய்யாகிய பொருட்பிழம்பைத் தோற்றுவிக்கிறது; அங்ஙனம் பொருள் கண்கூடாகுமாறு அக் கவிதை- செய்யுள் படைக்கப்பட வேண்டும். மெய்ப்பாடு என்பது சொல்ல வந்ததை, அப்படியே கண்ணாற் கண்டதுபோல், காதால் கேட்டது போல் உருவாக்கிக் கண்முன்னர் நிறுத்துவதே, படைப்பதே மெய்ப்பாடு"[9] எனத் திட்டவட்டமாக அமைகின்றது.

மெய்ப்பாடு- சொல் விளக்கம்

சுவை என்பது வேறு; மெய்ப்பாடு என்பது வேறு. இவ்விரு சொற்களும் தொல்காப்பியத்தில் பல இடங்களில் பல்வேறு விதமாக ஆளப்படுகின்றன. செய்யுள் உறுப்பே, 'மெய்ப்பாடு' என்று தெளிவாக வரையறுக்கின்றார் தொல்காப்பியர்.

மெய்யெழுத்து, உடம்பு, உண்மை என்ற பொருள்களில் மெய் எனும் சொல் இடம்பெறுகின்றது. 'முனிவு மெய்ந்நிறுத்தல்' (தொல்.1217) என்ற தொடர் தொல்காப்பியத்தில் இடம் பெறுகின்றது. வெறுப்பை உடம்பிலே வெளிப்படுத்தல் என்பது அதன் பொருள்.

இச்சொல்லை முன்வைத்து, "இலக்கியத்தில், 'மெய்ந்நிறுத்தலே' மெய்ப்பாடாகிப் பொருள் வெளிப்பாடாகிறது. மெய்ப்பாடு, பொருட்பாடு என்பன ஒருபொருள் தரும் தொடர்களாய் ஆளப் படினும், இவற்றிடை நுண்ணிய வேறுபாடும் உளது. பொருள் அழுத்தமாய் உணர்வை வெளிப்படுத்தும் பாங்கில், தெளிவாகப் புலனாகுமாறு செய்வதே மெய்ப்பாடாகும். வெறுமனே பொருளறிதல் எல்லாம் மெய்ப்பாடாகிவிடாது. மெய்யில் தோன்றுதல், மெய் தோன்றுதல், அதிலுள்ள மெய்ம்மையே தோன்றுதல், மெய்யாக- மெய்வடிவாகத் தோன்றுதல், கண்ணுக்கு மெய்யாகித் தோன்றுதல் என்ற பொருள் எல்லாம் தொல்காப்பியர் காலத்திலேயே நன்கு உணரப்பட்ட பொருள்களாகும்"[10] என்று விளக்கம் அளிக்கிறார் தமிழண்ணல்.

செய்யுளியல் அடிப்படையில், 'மெய்ப்பாடு' என்பது 'உண்மைப் பொருளாய் உணர்ந்து அனுபவித்தல்' - 'உண்மைப் பொருளாய் உணர்ந்து அனுபவித்தலின் முறைமைகளைத் தொகுத்துக் கூறுவது, 'மெய்ப்பாட்டியல்' என்ற விளக்கமும் கருதத்தக்கது.[11]

எண்வகை மெய்ப்பாடுகள்

எண்வகை இயல்நெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே (தொல்.1461)

என்னும் நூற்பாவிற்கு, "இதுவும் மேற்கூறப்பட்ட மெய்ப்பாடே; பிறிதிலக்கணத்தனவென்று கொள்ளற்க என்றவாறு" எனச் சுட்டும் பேராசிரியர்,

"எனவே,

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை (தொல்,மெய்:3)

என அவை நந்நான்காமெனவும், மெய்ப்பாட்டியலுட் கூறியவா றெல்லாம் பிறவாற்றான் வேறுபடுவனவுங் கொள்ளப்படுமென்ற வாறு"[12] என்று விளக்குகிறார்.

தொல்காப்பியம் சுட்டும் மெய்ப்பாடுகள் நானான்காக வகைப் படுத்தப்பட்டுள்ளன.

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப (தொல்.1195)

என்பது நூற்பா.

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருள்

'பண்ணைத் தோன்றிய' என்பது இளம்பூரணர் கருத்தில், 'விளையாட்டு ஆயத்தின்கண் தோன்றிய' என்பதாகும். உரியியல் நூற்பா 21இல் 'கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு' (802) என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதைக் கொண்டு, 'பண்ணைக்கு' இவ்விதம் பொருள் கொள்கிறார், இளம்பூரணர். மேலும், 'கண்ணிய புறனே நானான்கென்ப' என்பதற்கு, 32 பொருளையுங் குறித்து அதன் புறத்து நிகழும் பொருள் 16' என்றும் குறிக்கின்றார்.[12]

'முடியுடை வேந்தருங் குறுநிலமன்னரு முதலாயினோர் நாடக மகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டுங் காமநுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும், அவை கருதிய பொருட்பகுதி பதினாறாகி அடங்கும் நாடக நூலாசிரியர்க்கு'[13] என்கின்றார் பேராசிரியர்.

இதனை மறுத்து, "நாடகத்தில் மட்டுமன்றி, நாடகமே போன்று

ஆடிப்பாடி இன்பம் நுகரும் வாழ்க்கையிலும் மெய்ப்பாடுகள் காணப்படுதலால், 'நாடகத்தில் தோன்றிய' என்றோ, 'கூத்துள் தோன்றிய' என்றோ கூறாமல் 'பண்ணைத் தோன்றிய' என்றார் தொல்காப்பியர். கூத்துள் தோன்றியதேயாயினும் இங்கு பேசப்படுவது செய்யுளுள்- இலக்கியத்துள் அமையும் மெய்ப்பாடு பற்றியதே என்பதில் எவ்வித ஐயமும் இல்லை"[14] என்கிற தமிழண்ணல்,

நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே (தொல்.1259)

என்ற நூற்பாவைத் துணைக்கொள்கிறார்.

அவ்வண்ணமே கருத்தளிக்கும் மு.ராமசாமி, "மொழியின் எழுத்து, சொல், பொருள் பற்றி இலக்கணங்கூறும் தொல் காப்பியம், செய்யுள் நீங்கிய வேறெந்த இலக்கிய வகைமை குறித்தோ, குறிப்பாக நாடகம், நாட்டியம் குறித்தோ எந்த வரையறையையும் எங்கும் தரவில்லை. தரவேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பதும், நாடகம் தொடர்பான நம் கருத்தை அதில் ஏற்றிப் பார்ப்பதும் ஒரு வியாக்கியானப் பார்வை என்கிற அளவிலே ஏற்றுக் கொள்ள முடியுமேயொழிய அதைத் தொல்காப்பியருக்கு நெருக்கமானது என்று கூறிவிடமுடியாது"[15] என்று விளக்கம் தருகின்றார். அந்த வகையில், 'பொருள்' தோன்றிய அல்லது உற்பத்தியாகிய இடம் 'பண்ணை' என்பதும், அப்பொருளானது, புறவயமாக நான்கு நான்காக வெளிப்படும் என்பதும் இம்முதல் நூற்பாவின் பொருள்' என்று சுட்டும் அவர், 'பண்ணை' என்ற சொல்லுக்குப் பேச்சுவழக்கில் இருந்து, 'உள்ளே', 'குழி', 'அகம்' என்ற பொருள்களைத் தகுந்த எடுத்துக்காட்டுகளைத் தந்து, 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்' என்பதை 'உள்ளே (அகத்தில்) தோன்றிய எண்ணான்கு பொருளும்' என்று எளிதில் பொருள் கொண்டுவிடமுடியும்'[16] என்று தெளிவுறுத்து கின்றார்.

எண்ணான்கு பொருள்- 8 மெய்ப்பாடு அதற்கு நான்கு நான்கு எனக் கொண்டு 8X4=32 என அடுக்கி இளம்பூரணர் எடுத்துக் காட்டுகிறார். இதனைப் பிற்கால உரையாசிரியர் நாவலர் பாரதியார் ஏற்று விளக்குகிறார். ஆனால், அவற்றை நானான்காக்கி 4X4=16, என்று நாடகத்தில் தோன்றுவதாகச் சுட்டும் பேராசிரிய உரை ஏற்பதற்கில்லை. 'காலப் போக்கில் அவர் (பேராசிரியர்) உரையைக்

கேட்டு எழுதினார் யாரேனும் தவறுபட எழுதியிருக்கக்கூடும் என எண்ணத் தோன்றுகிறது'[17] என்று அமைதிகாட்டுகிறார் தமிழண்ணல்.

'நானான்கென்பது பதினாறன்று; அவை முப்பத்திரண்டையும் மெய்ப்படுகுறியொப்புமையால் நிரலே நந்நாலாக இனம்புணர்த் தெண்ணும் வகைமுறை' என்று தொல்காப்பிய மேற்கோள்களைச் சுட்டி விளங்க வைக்கிறார் நாவலர் பாரதியார். எனவே, நானான் கென்பது, நான்கின் வகை- நான்கின் தொகுப்பு- அது பதினாறன்று என்பதைத் தெளிவுபடுத்தும் மு.ராமசாமி,

நாலிரண் டாகும் பாலுமா ருண்டே (தொல்.1196)

என்ற நூற்பாவிற்கு 4X2=8 ஆகச் சொல்லவும் படுமே' என்று பொருள் தருகின்றார்.[18] இந்தக் கணக்கின் அடிப்படையிலேயே,

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப (தொல்.1197)

என்னும் அடுத்த நூற்பா தோற்றம் கொள்கின்றது.

இதனை முன்னிறுத்தி, 'தொல்காப்பியர் முன் நிற்பன எல்லாம் சங்க இலக்கியம் போன்ற திணையிலக்கியமேயாகும். தனிப்பட்ட உலகப்பொருள்களைப் பாடும் மரபு எதுவும் அவர் முன் இல்லை. அடிப்படையான மெய்ப்பாடுகள் எட்டு; அவை ஒவ்வொன்றும் நான்கு நான்கு காரணம் பற்றிப் பிறக்கின்றன என்று மிகப் பரந்து பட்ட எண்ணற்ற மெய்ப்பாடுகளை ஒரு கட்டிற்குள் கொண்டு வருகிறார்"[19] என்கின்றார் தமிழண்ணல்.

"ஒன்பது சுவையெனப்பட்டவற்றுள் உருத்திரமொழித்தொழிந்த எட்டனையுங் கூறுங்காற் சுவைக்கப்படும் பொருளும், அதனை நுகர்ந்த பொறியுணர்வும், அது மனத்துப்பட்ட வழி உள்ளத்து நிகழும் குறிப்பும் குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தாற் கண்வரும் வேறுபாடாகிய சத்துவங்களுமென நான்காக்கி, அச்சுவை எட்டோடுங் கூட்டி, ஒன்று நான்கு செய்து உறழ, முப்பத்திரண் டாமென்பது. எனவே, சுவைப்பொருளும் சுவையுணர்வும் குறிப்பும் விறலுமென நான்காயின. விறலெனினும் சத்துவ மெனினும் ஒக்கும்"[20] என்று பேராசிரியர் எழுதுகிறார்.

நகை - எள்ளல், இளமை, பேதைமை, மடம்

அழுகை - இளிவு, இழவு, அசைவு, வறுமை

இளிவரல்	-	மூப்பு, பிணி, வருத்தம், மென்மை
மருட்கை	-	புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்
அச்சம்	-	அணங்கு, விலங்கு, கள்வர், இறையெனப் பிணங்கல்
பெருமிதம்	-	கல்வி, தறுகண், இசைமை, கொடை
வெகுளி	-	உறுப்பறை, குடிகோள், அலை, கொலை
உவகை	-	செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு

என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அக-புற மெய்ப்பாடுகள்

இவை முப்பத்திரண்டு போக, சிறுசிறு மெய்ப்பாடுகளாகப் பின்வருமாறு முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளையும் வகுத்தளிக்கிறார் தொல்காப்பியர். அவையாவன.

உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பெனாஅக்
கைமிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணுதல் துஞ்சல் அரற்றுக் கனவெனாஅ
முனிதல் நினைதல் வெரூஉதன் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்
கையாறு இடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ
இவையும் உளவே அவையலங் கடையே (தொல்.1206)

'இவை முப்பத்திரண்டும் மேற்கூறிய முப்பத்திரண்டும் போல, அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகி நிகழும் மெய்ப்பாடெனக் கொள்க' [21] என்று விளக்கம் நல்கும் பேராசிரியர் இவற்றிற்கு ஓரிரு வரிகளில் தக்க விளக்கம் நல்கியிருக்கிறார்.

"இவை அனைத்துமே மனித உணர்வு பற்றியவை; சடப் பொருள் என்னும் உலகப் பொருள் பற்றியவை அல்ல. அகமும் புறமுமான இலக்கியம் பற்றிய மெய்ப்பாடுகளே" என்று குறிப்பிடும் தமிழண்ணல், " மெய்ப்பாடு' என்பது இலக்கியத்தில் வரும்போது 'மெய்ம்மைப் பாடாகிறது'. மனித உணர்வு அருவம்; அதனைப் பருப்பொருட்டாக்கித் தர இலக்கியம் முயல்கிறது; பொருட்பிழம்பாக்கித்தர முயல்கிறது. மீண்டும் படிக்கும் உள்ளம்

அதனை உள்வாங்கிக் கொண்டு அருவமாகவே உணர்கிறது. அருவ உணர்வு, மெய்ப்பட- உருப்பட- மெய்ம்மைப்பட- தோன்றிப் படிப்பவருக்குச் சென்று சேர்வதற்கு உதவுதலால் இஃது இலக்கியத்தில் மெய்ப்பாடு எனப்பட்டது. 'மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்' (தொல்.1460) என்னும்போது தொல்காப்பியர் தெளிவாக இதை உணர்த்துகிறார்"[22] என்கின்றார்.

அகத்திணைக்குரிய மெய்ப்பாடுகள்

அகத்திணைக்கு உரிய நூற்பாக்கள் பதினான்காகும். இவற்றுள் 62 அகத்திணை மெய்ப்பாடுகள் சுட்டப்படுகின்றன. "இவற்றுட் சில மெய்யின்கண் தோன்றும் மெய்ப்பாடுகள் போல அல்லாமல், கூற்றுக்கள் போலவும் உள்ளன. வாய்திறந்து கூறப்படும் கூற்றுக்களும் ஒருவகை மெய்ப்பாடுகளேயாதலால், ஒரு சில அங்ஙனம் கலந்து வருகின்றன எனலாம். இவையெல்லாம் உயர்ந்த மக்களிடத்து நிகழும் மெய்ப்பாடுகள். அவர்களிடத்தும் தனித் தனியே நிகழக் கூடியன பல மனவிகாரங்கள், மெய்ப்பாட்டு வேறுபாடுகள் இருக்கலாம். அவற்றை நீக்கிவிட்டு, எல்லா மாந்தரிடத்தும் நிகழக்கூடியனவாகத் தோன்றும் அடிப்படைப் பொதுநீர்மைகளையே இங்ஙனம் ஆசிரியர் வரையறைப் படுத்துகின்றார். இதனால் அகத்திணைப் பாடல்களில் வரும் தலைவி அல்லது தலைவன் குறிக்கோட்படைப்பாய், மனித இனப் பொதுப்படைப்பாய், அடிப்படை உணர்வுகளை வெளிப்படுத்து வதில் ஒரு தன்மையுடைய- மிகச்சிறந்த நுட்பமான வேலைப்பாடு மிக்க- அச்சில் வார்த்தெடுக்கப்பட்ட படைப்புக்களாய்க் காட்சி நல்குகின்றனர்."[23]

'நன்னயப்பொருள்கோள்'

> கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
> உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
> நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே (தொல்.1221)

என்பது மெய்ப்பாட்டியலின் இறுதி நூற்பா.

இதற்கு, "மனத்து நிகழ்ந்த மெய்ப்பாட்டினைக் கண்ணாலும் செவியானும் உணர்தல் என்பதென்னையாதலின், மெய்ப்பாடு பிறந்தவழி உள்ளம் பற்றி முகம் வேறுபடுதலும், உரை வேறுபடுதலும் உடைமையின் அவை கண்ணாலும் செவியானும் உணர்ந்து கோடல் அவ்வத் துறைபோயினாரது ஆற்றல் என்பது கருத்து"[24] என்று விளக்கம் அளிக்கின்றார், பேராசிரியர்.

"நன்னயப்பொருள்கோள்' என்றும் அழகியல் சார்ந்த இம் மெய்ப்பாடு தொல்காப்பியரால் சுட்டப்படுகிறது. பொருள்+ கோள். கொள்ளுதலே கோளாயிற்று.- முதனிலை திரிந்த தொழிற் பெயர். மெய்+பாடு, படுதலே- தோன்றுதலே பாடு ஆயிற்று- முதனிலை திரிந்த தொழிற்பெயர். மெய் பொருள் ஆகிறது. எனவே, மெய்ப்பாடு என்பதே பொருள்கோள்தான்- பாட்டின் பொருளைப் படிப்பவன் தன் மனத்தில் கொள்ளுதல்தான் எனத் தெளியலாம். அதனால்தான் பேராசிரியர் மெய்ப்பாடு என்பது பொருட்பாடு என்றார். 'சொல் கேட்டார்க்குப் பொருள் கண் கூடாதல்' என்பது போன்ற பேராசிரிய விளக்கங்களும் இதன்வழிப் பட்டனவே, ஆயினும் சாதாரணமாகக் கொள்ளும் சொற்பொருள் வேறு; மெய்ப்பாடாகக் கொள்ளும் பொருள் வேறு என அறிதல் வேண்டும். அதனால்தான், பின்னதை, 'நன்னயப் பொருள்கோள்' என்றார் தொல்காப்பியர். 'மெய்ப்படத் தோன்றும் பொருட்டாகும்' என்னும்போதும், தொல்காப்பியர் சாதாரணமாகத் தோன்றும் பொருட்டாதலினின்றும் அதுவேறுபட்டது என்பதை நன்கு உணர்த்திவிடுகிறார்"[25] என்று தமிழண்ணல் நன்கு உணர்த்துகின்றார்.

இதனை ஒட்டி, இடைத்தொடர்புக் கொள்கையையும் (Communication theory) வரையறுக்கின்றார்.

"மெய்ப்பாடு என்பது படைப்பவர் படிப்பவரிடையே ஏற்படும் இடைத்தொடர்பு (Communication) பற்றியது. 'மெய்ப்பட முடிக்கின்ற' படைப்போன் செயலும், 'திண்ணிதின் உணரும்' படிப்பவன் செயலும் கூடிய வழி நடப்பது சுவை என்பது அங்ஙனம் மெய்ப்பாடு தோன்றியபின் பெருகிப்பாயும் உணர்வாகும். மெய்ப்பாடு அமைந்தால் சுவை தானே தோன்றும். தொல்காப்பியர் சுவைத்தோற்றத்திற்கு அடிப்படையான மெய்ப்பாட்டு அமைவையே வற்புறுத்துகிறார்"[26] என்று மேல்விளக்கம் அளிக்கின்றார்.

1. நகை - ஹாஸ்யம்
2. அழுகை - கருணம்
3. இளிவரல் - பீபத்ஸம்
4. மருட்கை - அற்புதம்
5. அச்சம் - பயானகம்

6.	பெருமிதம்	–	வீரம்
7.	வெகுளி	–	ரௌத்திரம்
8.	உவகை	–	சிருங்காரம்
9.	(நடுவுநிலை)	–	சாந்தம்

என ஒன்பது இரசங்கள் (நவரஸங்கள்) வடமொழியாளரால் இதனோடு ஒப்பக் காட்டப்பெற்றாலும், தொல்காப்பியர்தம் மெய்ப்பாட்டுக் கோட்பாடு, வடமொழி இரசக் கோட்பாட்டோடும் வேறுபட்டதாகும். பிற்காலத்தில் தோன்றிய சுவைக்கு மெய்ப்பாடே அடிப்படையாகி, அது அணியாகவும் சுருங்கிற்று. தண்டியலங்காரம் 35 அணிகளில் ஒன்றாகச் சுவையணி என்று இதைக் கூறி விளக்குகின்றது. நம்பியகப்பொருள், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், மாறனலங்காரம் முதலிய நூல்களும் மெய்ப்பாட்டைச் சுவையாக்கி விளக்கிநின்றன.

மேலை இலக்கிய உருக்கோட்பாட்டோடும் (Imagism) ஒப்ப நோக்கத்தக்க மெய்ப்பாடு, தமிழ் அழகியற்கலை (Tamil Aesthetics) பற்றிய ஆய்வுகளுக்கு வழிவகுக்கக் கூடியது என்று தமிழண்ணல் உறுதி கொள்கின்றார்.

ஆக, மானுட குலத்திற்கு உரியது மெய்ப்பாடு. அது உலக முழுமைக்கும் பொதுவானது. எனினும் கண்ணினும் செவியினும் உணரும் வண்ணம் உலகியலாக அமையும் இதனைச் செய்யுள் பதிவுசெய்து காட்டுகின்றது. அருவுருவாகிய மனித உணர்வைக் கண்ணால் காணுமாறும், செவியால் கேட்குமாறும் மெய்ப்பட, மெய்யில்படக் காட்டுவது மெய்ப்பாடு. சுவை, இரசக் கோட்பாடு களுக்கெல்லாம் மூத்த இம்மெய்ப்பாடு, தமிழ் அழகியற் கலை பற்றிய ஆய்வுக்கு வழிவகுப்பது என்பது பெறப்படுகின்றது.

எண்ணிறந்த அளவில் அமையும் மெய்ப்பாடுகளை எட்டினுள் அடக்கி உரைத்த பாங்கு தொல்காப்பியரின் மேதைமையை இனிதுணர்த்த வல்லது. இம்மெய்ப்பாடுகள் திருக்குறளில் இடம்பெறும் பாங்கு குறித்துப் பின்வரும் கட்டுரையில் காணலாம்.

சான்றெண் விளக்கம்

1. பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், ப.1
2. தமிழண்ணல், தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகள், மெய்ப்பாடு, ப.15.
3. மேலது.
4. பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், ப.412.
5. மேலது.
6. தமிழண்ணல், தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகள், மெய்ப்பாடு, ப.16.
7. மேலது, பக்.18-19 .
8. மேலது, பக்.22-23.
9. மேலது. பக்.23-24.
10. மேலது, பக்.62-63.
11. மு.ராமசாமி, தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் முதல் நூற்பா- சில விசாரணைகள், உங்கள் நூலகம், ப. 16.
12. மேலது, ப.14.
13. பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், ப.1.
14. தமிழண்ணல், தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகள், மெய்ப்பாடு, பக்.29-30.
15. மு.ராமசாமி, தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் முதல் நூற்பா- சில விசாரணைகள், உங்கள் நூலகம், ப. 16.
16. மேலது, பக்.16-17.
17. தமிழண்ணல், தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகள், மெய்ப்பாடு, ப.35.
18. மு.ராமசாமி, தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் முதல் நூற்பா- சில விசாரணைகள், உங்கள் நூலகம், ப. 16.

19. தமிழண்ணல், தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகள், மெய்ப்பாடு, ப.49.

20. பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், ப.4.

21. மேலது, ப.21


22. தமிழண்ணல், தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகள், மெய்ப்பாடு-பக்,52-53.

23. மேலது, ப.47.

24. பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், ப.56.

25. தமிழண்ணல், தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகள், மெய்ப்பாடு, பக்.71-72.

26. மேலது.



திருக்குறளில் தொல்காப்பிய மெய்ப்பாடுகள்

"தொல்காப்பியம், சங்கவிலக்கியம், திருக்குறள் முதலாய நூல்கள் இயற்கையோடு இயைந்தன. ஆதலால் அவை ஞாயிறு திங்கள்போல என்றும் புத்தொளி தரவல்லன. திருக்குறள் மக்கட்கு உயிர்நூலாவதுபோலத் தொல்காப்பியம் தமிழுக்கு உயிர் நூலாகும்; தமிழ் மக்களின் உலக வழக்கையும் செய்யுள் நெறியையும் ஆராய்ந்து எழுதிய நாட்டுநூலாகும்"[1] என்பார் வ.சுப.மாணிக்கனார்.

செம்மொழிச் சிறப்பைத் தமிழுக்கு நல்கிய சிந்தாமணிகள் மேற் சொல்லப்பெற்ற சிறப்புறு நூல்கள்; இறவா இயல்புடைய இத்தமிழ் நூல்கள், இன்றளவும் தமிழின் தனித்தன்மையை உலகறியப் பறை சாற்றும்

உன்னதச்செல்வங்கள்; எடுத்துப் பயில்வோர்க்கெல்லாம் அமுதாகி உயிர் வளர்க்கும் ஆற்றல் மையங்கள் எனலாம்.

இவற்றுள் தொல்காப்பியம் தமிழுக்கு முழுமையாகக் கிடைத்த முதல் இலக்கணநூல். இதன் காலம் குறித்துப் பலவிதமான கருத்துகள் நிலவுகின்றன. அவற்றை ஒப்புநோக்கி, 'கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கு முந்தியது'[2] என முடிவு கொள்ளப்பெறுகின்றது.

திருக்குறள் காலமும் பலவித கால வரையறுகளுக்குட்படுத்தப் பட்டு, இறுதியாக, 'கிறித்துப் பிறப்பதற்குமுன் முப்பது ஆண்டுகள்'[3] என முடிவுசெய்து தமிழ் ஆண்டினைத் திருவள்ளுவர் ஆண்டு எனக் கணக்கிடுவர்.

காலத்தால் தமக்கு முந்திய சங்கஇலக்கியமும் தொல் காப்பியமும் நடைபயின்ற வாழ்வியல் தளங்களில் தமது இலக்கியப் பார்வையைச் செலுத்திய திருக்குறள், அவற்றின் பாங்குகளையும் பார்வைகளையும் அவ்வாறே கொள்ளாமல், தம்முடைய அறிவியல் நோக்கிற்கேற்பப் புதுப்பித்துக்கொள்கின்றது. இப் பாங்கினைத் தன்னளவில் நிறுத்திக்கொள்ளாமல், வருங்காலத்திற் கேற்ப வடிவமைத்துக்கொள்ளத் தமது இசைவினையும் வழி முறைகளையும் பெருமிதத்தோடு வழங்குகின்றது.

"பொதுவாக, உண்மையைக் காண்பதில் ஒரு மனிதன் தனது சிந்தனைக்கு, அறிவிற்கு முழுஉரிமையும் கொடுத்து, அதன் அடிப்படையில் அமைந்த முடிவுகள் எப்படிப்பட்டனவாக இருப்பினும், விருப்பு வெறுப்பு இன்றி அவற்றை ஏற்கும் மனநிலை பெற்று இருந்தால் அதை அறிவியல்பார்வை என்கிறோம். அதன் வழி அமைந்த செய்முறையை அறிவியல் அணுகுமுறை என்று குறிப்பிடுகிறோம். 'அறிவியல் முறை', 'அறிவியல் ஆய்வு முறை' (Scientific Method) என்பது வரையறுக்கப்பட்டு இடம்பெற்றது, 17ஆவது நூற்றாண்டில் இருந்துதான். அந்தக் காலப்பகுதியிலிருந்து உண்மை காண்பதற்கு அறிவியல் ஆய்வுமுறை பயன்படுத்தப் பட்டதோடு, அதற்குக் கிட்டத்தட்ட இலக்கணமும் வகுக்கப் பட்டது. இன்று அது ஒரு ஆய்வுக்கருவியாகப் பலராலும் பயன் படுத்தப்பட்டு வருகிறது. பழைய காலத்தில் இருந்த மேதைகள் பலர் இயற்கையிலேயே அறிவியல் அணுகுமுறையைப் பயன்படுத்தும் சிந்தனை வளமும் தெளிவும் பெற்றிருந்தார்கள். அவர்கள் வாழ்ந்த கால எல்லையைத் தாண்டி, மரபுகளையும் மீறி எதிர்காலத்திற் குள்ளும் ஊடுருவும் திறனோடு பிரச்சினைகளை

அவர்களால் அணுக முடிந்தது. இந்தக்கூறுபாடு வள்ளுவர் குறளில் பரவி இருப்பதைக் காணலாம்"[4] என்கிறார் வா.செ.குழந்தைசாமி.

மெய்ப்பாடு என்பது மெய்யில் படும்படியாகத் தோன்றுவது. சமூகத்தில் புலப்படும் ஒரு காட்சி தொல்காப்பியர் வழிப்பட்டு நூற்பாவாக வெளிப்படுகின்றது. அதனைக் கற்கும் உரையாசிரியர் உளவழிப்பட்டு அவர்தம் உரையில் வெளிப்படுகின்றது. அதனைக் கற்போர்க்கும் அவ்வனுபவம் கிட்டுகின்றது. அவ்வாறே திருவள்ளுவருக்கும், திருக்குறளுக்கும், அதனைக் கற்போர்க்கும், கண்டு எழுதுவோர்க்கும்.

அகவுணர்வு மெய்த்தோற்றம் கொள்ளுதலை மெய்ப்பாடு எனலாம். அது காதல் உணர்வு மட்டுமன்று.

வாழ்வியல் நிகழ்வுகளைக் காணுந்தோறும் உள்ளுக்குள் எழும் உணர்வுகளை மெய் பிரதிபலிக்கின்றது. அதனைக் காண்பார்க்குக் காட்சியாகின்றது.

கண்டார் சொல்லும் விளக்கமும் மெய்யாதல் வேண்டும். கேட்டார் உணரும் பொருளும் மெய்யாதல் வேண்டும். ஆனால், தத்தமது வசதிக்கேற்ப, திரித்தும், மாற்றியும் சொல்லி, காட்டி நிற்கும் தன்மை மனிதர்க்கு வாய்க்கும்போது, உண்மையை - மெய்ம்மையை இன்னமும் மறைக்காமல் மெய்யே (உடல்- அதனால்தான் அதற்கு மெய் என்று பொருளோ?) காட்டி விடுதலால், இம்மெய்யின்கண்படுதலால், இது மெய்ப்பாடு என்று பெயர் பெறுகின்றதுபோலும்.

அதிலும் முகம் உள்ளது உள்ளவாறே பிரதிபலிக்கும் ஆற்றல் வாய்ந்ததாகிறது. அதனால்தான்,

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும் (குறிப்பறிதல்- 707)


என்று திருக்குறள் சுட்டுகின்றது. இக்குறளுள், எண்வகை மெய்ப்பாடுகளில் உவகையும், வெகுளியும் வெளிப்பட்டு விடுகின்றன. உவகையால் மருட்கை (வியப்பு) தோன்றும். நகை பிறக்கும். பெருமிதத்திற்கும் வழி வகுக்கும். அதற்கு மாறாகத் தோன்றும் காய்தலாகிய சினம் நகை கொல்லும். அழுகை தோன்றக் காரணமாகும். இளிவரல் (வருத்தம்) உண்டாகும். அச்சமும் எழும்.

எப்படியாயினும் எண்வகை மெய்ப்பாடுகளும் இயல்பில் தோன்றும் இடம் அகம். அகத்தில் ஏற்படும் உணர்வினை, மெய்

காட்டுகின்றது. இதனைக் கண்ணினும், செவியினும் திண்ணிதின் உணரும் உணர்வுடை மாந்தர் இனிது காண்கின்றனர். இதனை, .

கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது நெறியின்
நன்னயப் பொருள்கோள் என்னருங் குரைத்தே (தொல்.1221)

என்று தொல்காப்பியம் சுட்டுகின்றது. இவ்வாறு உணர்ந்தோர் செய்யும் செய்யுளில் தோன்றும் மெய்ப்பாடு, சொல்வழி பொருள் புலப்படுத்துவாக அமையும். அச்சொல்லினைக் கேட்டார்க்குப் பொருள் கட்புலனாகும்; அத்தகையதோர் கவி கண் காட்டும். அக் கவிப்பொருளை, மெய்ப்பாடாகக் கண்டுணரலாம்.




இங்கே, வாழ்க்கை நிகழ்வு, படைப்பாளி வயப்பட்டுப் படைப்பாகத் தோற்றம் கொள்கின்றது. படிப்பாளி அதனைக் கற்கும்போது அது கட்புலனாகின்றது. அதன் வழி காணும் வாழ்க்கை இன்னொரு பரிமாணம் எய்துகின்றது. முழுமை எய்த வைக்கும் படியான இலக்கியவாழ்வு, மெய்ப்பாட்டின் வழியாக நேர்கோட்டில் ஒன்றும் படைப்பாளி/படிப்பாளிக்குச் சித்திக்கின்றது. இதனை விளக்கும் படைப்பாளி மக்களுக்கு உயிர்எனத் தகும் நூல் தந்தவனாகின்றான். படிப்பாளி அவனைத் தெய்வத்திற்கு நிகராகக் கொண்டாடுகின்றான். மெய்ப்பாட்டை மையமாகக் கொண்டு முழுமையடைகிறது இலக்கியவாழ்க்கை.

இவ்வண்ணம் விளக்கமாகும் மெய்ப்பாடுகளை எண்வகைப் படுத்துகின்றது தொல்காப்பியம்.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என
அப்பால் எட்டே மெய்ப் பாடென்ப (தொல்.1197)

என்று சுட்டப்பெறும் மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றிற்கும் நான்கு நான்கு வகைகளைக் கொண்டு முப்பத்திரண்டாக விரிவு எய்துகின்றது.



இம்மெய்ப்பாடுகள் அகவாழ்விற்குப் பெரிதும் பொருந்தும் எனினும் புறத்திற்கு உரிய மெய்ப்பாடுகளாகவும் இவை காட்டப் படுகின்றன.

இவை ஒவ்வொன்றும் திருக்குறளில் இடம்பெறும் பாங்கு பற்றி ஆராயும்போது கிட்டும் மெய்ப்பாட்டு உணர்வுகள் எட்டுக் கட்டுரைகளாக இந்நூலுள் அமைந்திருக்கின்றன.

எண்ணான்கு மெய்ப்பாடுகளையும் திருக்குறள் நூலுள் தேடி அவற்றை ஏற்றும் மறுத்தும் புதுக்கியும் திருவள்ளுவர், நூல் செய்த பாங்கினை ஆராயும் வண்ணம் எட்டுக் கட்டுரைகள் விரிகின்றன. எட்டு மெய்ப்பாடுகளும் தம்முள் தோன்றக் குறள் பாடும் திருவள்ளுவரின் ஆழ்ந்திருக்கும் கவியுளம் கண்டு காட்டும்

வண்ணம் ஒவ்வொரு கட்டுரையும் அமைகின்றன. ஒவ்வொரு மெய்ப்பாட்டுக் கட்டுரையிலும் ஒரு குறட்பா சிறப்புற விளக்கம் கொள்கின்றது.

இவைபோக, சிறுசிறு மெய்ப்பாடுகளாகத் தொல்காப்பியம் சுட்டும் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகிய முப்பத்திரண் டினையும் திருக்குறளுள் தேடும் முயற்சியாக 'இன்னும் சில மெய்ப் பாடுகள்' என்னும் கட்டுரை அமைகின்றது.

இதுபோல், அகத்திணைக்கு உரிய ஏனைய தொல்காப்பிய மெய்ப்பாடுகளையும் திருக்குறளில் காணும் முயற்சிக்குத் தூண்டு கோலாகவும் இந்நூலைக் கொள்ளலாம்.

இனி எண்ணான்கு மெய்ப்பாடுகள் திருக்குறளில் இடம்பெறும் பாங்கைப் பின்வரும் கட்டுரைகளில் விரிவுறக் காணலாம்.

சான்றெண் விளக்கம்

1. முதறிஞர் வ.சுப.மாணிக்கம், தொல்காப்பியக் கடல், ப. 45.
2. மது.ச.விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாறு, ப.33.
3. மேலது. ப.84.
4 டாக்டர் வா.செ.குழந்தைசாமி, வாழும் வள்ளுவம், பக்.68-69.
5. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப.353.
6. மேலது.
7. மேலது.
8. தமிழண்ணல், திருக்குறள் நுண்பொருள் உரை, ப.166.
9. சிற்பி. திருக்குறள் உரை, ப. 94.
10. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை, ப.110.
11. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப.
12. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை, ப103.



குறுநகை புரியும் குறளாசான்

தமிழிலக்கியத்தின் அறநூல்களுள் சிகரம் எனத்தக்கது திருக்குறள். தாம் சார்ந்த நெறி அல்லது மதத்தின் தத்துவங்களை விளக்கவேண்டிச் செய்த அறநூலாக அமையாது, வாழ்வின் இயங்குதலை அனுபவ வாயிலாய் உள்வாங்கிப் படைப்பியல் நோக்கோடு உலகறிய உரத்துக்கூறிய பெருமைக் குரியது. எந்த விடத்தும் பிசிறற்று ஒலிக்கும் பெருங்குரல் திருக்குறளின் அகக் குரல். காணும் நோக்கில் வெளிப்படும் குறைபாடுகள், ஐயங்கள் களையத் திருவள்ளுவரின் ஆழ்ந்திருக்கும் கவியுளங் காணத் தெரிந்தால் அவை சுவடின்றி ஒழியும். காரணம், திருக்குறள் காய்தல் உவத்தலின்றி, எவர்க்கும் அஞ்சாது நேர்பட, உலகினர்க்கு உறுதி உரைத்த ஒப்பற்ற நூல்.

அறநூல்; ஆன்மிக நூல்; உலகப்பொதுநூல் எனக்கூறும் அத்தனை சிறப்புகளையும் தன்னுள் அடக்கி ஓங்கி உயர்ந்து நிற்கும் திருக்குறள், ஓர் உயரிய உலகியல் இலக்கியம். அந்தவகையில் இந்த நூல் அருளிய திருவள்ளுவர் ஓர் உயர்ஒழுக்க இலக்கியவாதி.

எத்தனை முறை எடுத்துப் படித்தாலும் அதன் எளிமையும், அழகும், பொருளின் உறுதியும் வலிமையும் குறள் நூல் நல்கிய திருவள்ளுவரைப் பெரிதும் வியக்க வைத்துக்கொண்டே இருக்கின்றன. படிக்கிற நமக்கே இத்தனை தோன்றுமெனில், பார்த்த, அனுபவித்த திருவள்ளுவருக்கு எத்தனை தோன்றி யிருக்கக்கூடும் என்று படைப்பு மனங்கொண்டு அனுபவித்துச் சுவைப்பதுண்டு. திருக்குறளுக்குள்தான் எத்தனை சுவைகள்!

உறுதிப்பொருள் உரைக்கின்றபோதெல்லாம் திருவள்ளு வருக்குள் பலவிதமான மெய்ப்பாடுகள் தோன்றி, உள்ளீடாகவும், நுட்பமாகவும், வெளிப்படவும் திருக்குறட்பாக்களில் புலப்பட்டு நிற்கின்றன.

இங்கு, வாழ்க்கை விளையாட்டைப் புறத்தேநின்று கண்டு அகத்தே அக்காட்சியைக் கொண்டு அதன்வழி மெய்யியலை வகுக்கும் திருவள்ளுவருக்குள் மிளிரும் நகையினை இக் கட்டுரையில் விளங்கக் காணலாம்.

நகை தோன்றும் இடங்கள்

நகையாகிய சிரிப்பு மனிதவர்க்கத்திற்கே உரிய சிறப்பான மெய்ப்பாடு. ஆயத்தாரோடு கூடி மகிழும் இடத்து நகை தோன்றுதல் இயற்கை. அதனால்தான் பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளுள் நகை முதலாக அமைகின்றது.

"நகையென்பது, சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச்சிரித்தலுமென மூன்றென்பது"[1] என்கின்றார் பேராசிரியர்.

இது தோன்றுதற்கான காரணங்களைத் தொல்காப்பியர் தமது நூற்பாவில் தெளிவுற உரைக்கின்றார்.

"எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப' (தொல்.-1198)

இகழ்தல், இளமை, பேதைமையாகிய அறிவின்மை, மடமை என்கின்ற நான்கின் அடிப்படையில் நகை தோன்றும் என்பது இதன் விளக்கம்.

எள்ளல் ஏற்புடையதன்று

இவற்றுள் முதலாவது இடம்பெறுவது எள்ளல். 'தான் பிறரை எள்ளி நகுதலும், பிறரால் எள்ளப்பட்டவழித்தான் நகுதலுமென இரண்டாம்' என்கிற பேராசிரியர், 'எள்ளல் என்பது இகழ்ச்சி'[2] என்கிறார் பேராசிரியர்.

'நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்' (புறம்-72)

எனும் புறப்பாடல் நகுதலாகிய இகழ்ச்சி இழிவு எனும் உணர்வில் பிறந்தது. நகுதலுக்கு இலக்காதல் துன்பம் தரும்.

எனவே, ஒருவரை எள்ளி நகையாடுதல் மனிதப்பண்பிற்கு உகந்தது அன்று. அது மனவருத்தத்தையும், உட்பகையையும் உருவாக்கக் கூடியது. அதனால்தான்,

உருவு கண்டு எள்ளாமை வேண்டும் (வினைத்திட்பம்-667)

என்கிறது திருக்குறள். நட்புவட்டத்தில் மட்டுமல்ல, தீய பகைமை உடையவரிடத்தும் உள்ள நல்ல பண்புகளையே காட்ட வேண்டும். இன்னாதன சொல்லக்கூடாது என்று அதனை ஒரு பண்பாக வலியுறுத்துகின்றது குறள்.

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புஉள பாடறிவார் மாட்டு (பண்புடைமை-995)

அதற்காக நகையே கூடாது என்பதன்று பொருள். நல்ல நட்பின் ஆக்கத்திற்குப் பெரிதும் துணைபுரிவது நகை. முதன்முதலில் மனிதர்கள் சந்திக்க நேரும்போது பரிமாறிக்கொள்ளும் மெய்ப்பாடே நகைதான். அது முகத்துத் தோன்றுவது. அது முகத்தோடு மட்டும் முடிந்துவிடல் தகாது. அந்நகை அகத்திருந்து வெளிப்படல் வேண்டும். அதனால்தான்,

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு (நட்பு- 786)

என்று குறள் கூறுகிறது. முகத்தில் மலர்ச்சியும், அகத்தில் இகழ்ச்சியும் தோன்றப் புரிவது நட்பும் அன்று; நல்ல மெய்ப்பாடும் அன்று.

நகுதற்பொருட்டன்று நட்டல்

குறுநகையாய்த் தொடங்கும் நட்பு, அடுத்த நிலையில் அளவொடு சிரித்தல் என்பதாகி, பெருகச்சிரித்தலில் நிற்கும். இந்த

அளவிற்கும் பெருக்கத்திற்கும் இடையே நட்பும் வளர்ந்திருத்தல் வேண்டும்; ஒருவரை ஒருவர் அறிந்து அளவளாவி உள்ளன்புடன் தொடர்ந்திருக்க வேண்டும்; வளர்பிறை போலாதல் வேண்டும். அது அல்லாது, நகுதற்பொருட்டாக மட்டும் கொள்வது நட்பு ஆகாது என்கிறது குறள்.

நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு (நட்பு-784)

இங்கே, 'மிகுதிக்கண்' என்பது எல்லைமீறா இயல்பிற்குச் சொல்லப்பட்டது. எல்லை மீறும்போது மனவருத்தம் உண்டாகின்றது; பகை வளர்கிறது; புறங்கூறுவார் சொல் கேட்க வைக்கின்றது; அதுவே உண்மை என்று நம்பவைக்கின்றது. அதனால், பகை மேலும் அதிகரித்துத் தனிமனித சண்டையாகிப் போர் அளவிற்கு நீளுகின்றது.

இவ்வழி அமையும் நட்பு தீநட்பாகின்றது. இவ்வகையாக நகைக்குரிய தூர்த்தரின் நட்பினால் வரும் கேடு பகைவர் தரும் கேட்டைவிடப் பலகோடி மடங்கு பெரியது என்று திருக்குறள் எச்சரிக்கவும் செய்கின்றது.

நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்துஅடுத்த கோடி உறும் (தீநட்பு- 817)

என்பது குறள். பகையினும் அஞ்சத்தக்க நகைக் கூட்டம் என்று இதனைச் சுட்டும் திருக்குறள், பகை என்ற பண்பற்ற ஒன்றினை நகைச்சுவைக்காகக் கூட விரும்பக்கூடாது என்றும் எச்சரிக்கின்றது.

பகை என்னும் பண்புஇல் அதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று (பகைத்திறம் தெரிதல்-871)

'விளையாட்டு வினையாயிற்று'என்ற பழமொழியைச் சுட்டி, "பாஞ்சாலியின் நகைப்பில் பாரதப்போரும், விளையாட்டாகக் கவிதை பாடியதில் மாதவியின் பிரிவும் கிட்டியது"[3] என்று இலக்கியச்சான்று காட்டி இக்குறட்பாவிற்குப் பொருள் உரைக்கின்றார் அடிகளார்.

கூடிச் சிரித்தல் கூடாது

நட்பினர் உடன் இருக்கச் செவிச்சொல்லையும், சேர்ந்து நகைத்தலையும் ஒருவன் மன்னரைச் சேர்ந்தொழுகும் காலத்துக் கொள்ளக் கூடாது என்கிறது திருக்குறள்.

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்துஒழுகல்
ஆன்ற பெரியார் அகத்து (மன்னரைச் சேர்ந்தொழுகல்-694)

இக்குறளில் இடம்பெறும் 'செவிச்சொல்' - 'இரகசியம்' என்பதாகும். 'கேட்கும் ஒருவர் காதில் மட்டுமே புலன் ஆவதால் செவிச்சொல் என்றார். பலர் கூடியுள்ள அவையிலும் பலர் பணி செய்யும் அலுவலகங்களிலும்கூடச் செவிச்சொல் தவிர்க்கப்படுதல் வேண்டும். நகைத்து விளையாடுதல் அறவே கூடாது'[4] என்று தற்காலத்திற்கேற்ப, இக்குறளுக்குப் பொருள் விரிக்கின்றார் அடிகளார். இரகசியம் சொல்லுதலும், இரகசியமாகக் குழுவினராய்க் கூடிச் சிரித்தலும் கூடாது என்கிறது குறள். கூடாது என்பதையும் பூடகமாய்ச் சொல்லும், 'அவித்து ஒழுகல்' என்பது அழகிய கவித்தொடர். 'ஆன்ற பெரியார் அகத்து' என்னும் தொடர் இதற்கான களத்தை இன்றைக்கும் விரித்துவைத்திருப்பது இனிமை.

இந்தப்படிநிலைகளையெல்லாம் ஆழ, அகல ஆராய்ந்து நட்பிற்கு இலக்கணம் நல்லபடியாக வகுத்தளிக்கின்றது திருக்குறள்.

பொதுப்பட நட்பினை அறிமுகப்படுத்தி (நட்பு), அது கொள்ளத் தக்கதா? தள்ளத்தக்கதா? என்று உணர, அந்நட்பை ஆராய (நட்பாராய்தல்), தேவையான கருத்துருக்களை முன்வைத்து இரண்டு அதிகாரங்களைப் படைக்கின்ற திருக்குறள், தள்ளத் தக்கவற்றைக் கண்டறிந்து தீநட்பு, கூடாநட்பு என்ற இரண்டதிகாரங்களைப் படைத்தளிக்கின்றது. நல்நட்பின் காரணமாக வளரும் உறவைப் பழைமையெனப் போற்றுகின்றது. நட்பின் படிநிலையில், தலைவன் தலைவி உறவான அகவுறவிற்கும் இதனையே அடித்தள மாக்குகின்றது.

உடம்பொடு உயிரிடை என்னமற் றென்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு (காதற்சிறப்புரைத்தல்-1122)

என்று உடம்புக்கும் உயிருக்குமான உறவாக நட்பினை விரிக்கின்றது திருக்குறள்.

கண் காட்டும் நகைகள்

இத்தகு தலைவன் தலைவிக்கு இடையில் நிகழும் சந்திப்பில் தோன்றும் முதல் மெய்ப்பாடாகிய நகை, காமத்துப்பாலில் சிறப்புற வெளிப்பட்டுநிற்கின்றது.

யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும் (குறிப்பறிதல்-1094)

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும் (குறிப்பறிதல்-1095)

தலைவியின் நகைப்பில் தம்மீதுள்ள காதற்குறிப்பறிந்த தலைவனது குரலில் வெளிப்படும் குறட்பாக்கள் இவை. கண் காட்டும் நகைகள் இவை.

தன்னையே நோக்கி நகும் தலைவி

விரைந்து தம் காதலரைக் கண்ட கண்கள் இன்றைக்கு, அவரைக் காணாது தவிக்கின்றது; காண ஏங்குகின்றது. அதனால் கலங்கு கின்றது. இதன் மடமைத்தன்மை சிரிக்கக் கூடிய ஒன்று என்று தலைவி தோழியிடம் கூறித் தம் கண்களையே நகையாடிச் சிரிக்கின்றாள். இம்மெய்ப்பாடு இனிது துலங்கும் குறட்பா,

கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து (கண்விதுப்பழிதல்-1173)

என்பதாகும். இக்குறட்பாவில் இடம்பெறும், "'இது' என்றது, மேற் கூறிய கழிமடச்செய்கையை. அது வருமுன்னர்க் காப்பார்க்கு நகை விளைக்குமாகலான். 'நகத்தக்கதுடைத்து' என்றாள்"[6] என்று பரிமேலழகர் விளக்கம் அளிக்கின்றார். 'மடமையென்பது பெரும் பான்மையுங் கொளுத்தக்கொண்டு கொண்டதுவிடாமை'[6] என்பது பேராசிரியம். இக்குறட்பாவில் தோன்றும் நகை தன் மடமையால் நகுதல் பிரிவில் அடங்கும்.

முகை மொக்குள் உள்ள நறுமணம்போல், பேதையாகிய தலைவியின் நகைமொக்குள் உள்ள குறிப்பினை உணர்ந்து தலைவன் உரைக்கும் குறட்பாவும் (குறிப்பறிவுறுத்தல்-1274) காமத்துப்பாலில் இடம்பெறுகின்றது.

அகத்திற்குப் பொருந்தும் நகை எனும் மெய்ப்பாடு இவ்வாறிருக்கப் புறத்திலும் வெளிப்படும் இம்மெய்ப்பாட்டினைப் பல இடங்களில் திருக்குறள் இனிது புலப்படுத்திநிற்கின்றது.

இயல்பான மெய்ப்பாடு - நகை

நகுதல் மனிதர்க்கு இயல்பான பண்பு. அது அல்லாதல் இயற்கைக்கு முரண். பகல் ஒளிமயமானது என்பது இயற்கை. அதனை இருளாக்கல் செயற்கை. ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும்போது இயல்பாகத் தோன்றவேண்டியது நகை. அவ்வாறு தோன்றாமல் செய்வது. பகை. அல்லது மனமுரண்.

அதுசமயம், முறைத்துக்கொள்ளலும், வார்த்தைகளால் குரை(றை)த்துக் கொள்ளலும் நடைமுறை. அது பண்பன்று என்று உணர்த்துகின்றது இக்குறள்.

நகல் வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள் (பண்புடைமை-999)

'பண்பின்மையான் ஒருவரோடும் கலந்து உள்மகிழ்தல் மாட்டாதார்க்கு; மிகவும் பெரிய ஞாலம் இருளில்லாத பகற் பொழுதினும் இருளின்கண் கிடந்ததாம்'[7] என்கின்றார் பரிமேலழகர்.'எல்லாரோடும் கலந்தறியப் பெறாமையின் பண்பு இல்லார்க்கு உலகியல் தெரியாது என்பார்'[8] என்பது அவர் தம் மேல்விளக்கம்.

'தானும் அறியானாகித் தமக்கு அறிவிப்பானும் இன்றி ஒருவன் இருப்பதற்குக் கலந்து ஒழுகாமை என்னும் குற்றம்'[9] என்று காரணம் காட்டுகின்றார் பரிப்பெருமாள்.

மனிதப்பண்பைக்கெடுப்பது மனமுரண் அல்லது பகை. என்பதைச் சுட்டி, "மனமுரண்பாட்டால்- பகையால் கண்டும் காணாமலும், ஒரோவழிக்கண்டாலும் நெஞ்சொடுபட்ட சொற்கள் பேசாமலும் மகிழாமலும் வாழ்தல் இருள்நிறைந்த வாழ்க்கை என்பது உணர்த்திற்று"[10] என்று விளக்கம் தருகின்றார் குன்றக்குடி அடிகளார்.

புறங்காட்டும் பொய்நகை

இம்மனவேறுபாடு தோன்றுவதற்கும், மனிதர்களிடையே பகை யுண்டாக்குவதற்கும் காரணமாகப் பெரிதும் அமைவது புறங் கூறுதல் அதுகருதியே புறங்கூறாமையை அறமெனப் போதிக்கிறது திருக்குறள். அதற்கு மாறாக, ஒருவன் இல்லாதபோது அவனைப் புறங்கூறிக் கண்டபோது பொய்நகை காட்டுதலானது, அறத்தினை அழித்து நல்லது அல்லாதன செய்தலைவிடவும் தீயது' என்கின்றது குறள்.

அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன்அழீஇ பொய்த்து நகை (புறங்கூறாமை-182)

இவ்வாறு புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலை விடச் சாவது மேல் என்பது குறளின் தீர்ப்பு.

நஞ்சென அஞ்சத் தக்க நகை

வலிந்துதேடிக்கொள்ளும் சாவுக்கு இணையான அவமானத்தை இது உண்டாக்கும். பகையை வளர்க்கும். மனமகிழ்ந்து சிரிக்கும் படியாக நட்பினைப் பெற்று வாழும் நன்மையறியாதார்தாம், பகை சொல்லி உறவெனத்தகும் நட்பைப்பிரிப்பர் என்கிறது.

பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர் (புறங்கூறாமை-187)

நட்பிற்கு நஞ்சு எனத் தகும் வஞ்சம். அது மனத்தகத்தே உடையாரொடு எக்காரணம் கொண்டும் நட்புக்கூடாதென்று உரைக்கிறது திருக்குறள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வஞ்சகத்தார் ஒப்புக்குச் சிரித்துப் பேசிப் பழகினாலும், அது மெய்ப்பாடு அன்று; பொய்ப்பாடேயாம்.

முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா
வஞ்சரை அஞ்சப் படும் (கூடாநட்பு-824)

என்று எச்சரிக்கவும் செய்கிறது. இத்தகைய வஞ்சரை, 'அகத்தில் கறுத்துப் புறத்தே வெளுத்தவர்' என்று திருவருட்பா சுட்டும்.[11]

முகத்திற்கு இனிமையாக நீட்டி முழக்கிய சிரிப்பு அது எனக் கண்டதால் 'நகாஅ' என்று அளபெடையிட்டுத் திருவள்ளுவர் சுட்டுகின்றார்போலும்.

அகத்தே நகும் ஐம்பூதங்கள்

இத்தகைய வஞ்சமனத்தானின் செயல்கண்டு ஐம் பூதங்களும் அகத்தினுள்ளே சிரிக்கும் என்று சிரிக்காமல் சொல்கிறது திருக்குறள்.

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும் (கூடாவொழுக்கம்-271)

"காமம் தன்கண்ணே தோன்றி நலியாநிற்கவும் அதனது இன்மைகூறிப் புறத்தாரை வஞ்சித்தலின், 'வஞ்சமனம்' என்றும், அந்நலிவு பொறுக்கமாட்டாது ஒழுகும் களவொழுக்கத்தைப் 'படிற்றொழுக்கம்' என்றும், உலகத்துக் களவுடையார் பிறரறியாமல் செய்வனவற்றிற்கு ஐம்பெரும் பூதங்கள் சான்றாகலின், அவ் வொழுக்கத்தையும் அவன் மறைக்கின்ற ஆற்றையும் அறிந்து அவன் அறியாமல் தம்முள்ளே நகுதலின், 'அகத்தே நகும்' என்றும்

கூறினார். தம்முள்ளே நகுதலின், 'அகத்தே நகும்' என்றும் கூறினார். செய்த குற்றம் மறையாது ஆகலின், அவ்வொழுக்கம் ஆகாது என்பது கருத்து"[12] என்பது பரிமேலழகர்தம் விளக்கம்.

தூதுக்குத் துணையாகும் நகை

மனிதர்க்கு மனிதர் இடையில் உறவுண்டாகச் செல்லும் பயணம் தூதாகிறது. அகவாழ்விற்குத் துணை செய்யும் தூது அகத் தூதாகவும், புறவாழ்விற்குத் துணை செய்யும் தூது புறத்தூதாகவும் அமைகின்றது. தூது ஒரு கலை. தக்கன சொல்லி, தகாதன தவிர்த்து, மிகைபடவும் கூறாது, குறையுறவும் அமையாது உரியன கூறி உறவுண்டாக்கச் செய்யும் தூதுக்கு நகை இன்றியமையாதது.

தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது (தூது-685)

என்பது குறள். "காலக் கேட்டைத் தவிர்க்க, "தொகச்சொல்லி' என்றார். எந்த ஒன்றை விரித்துச் சொன்னாலும் வழுக்கள் ஏற்படும்; அதைத் தவிர்க்கவும், "தொகுத்துக் கூறுதல்" என்றார். கோபம் வரக்கூடிய செய்திகளை அப்படியே எதிர்மறையாகச் சொல்லாமல் நலம் பயக்கும் வழிவகை கண்டு மகிழ்ச்சி பொங்கச் சொல்லுதல் தூது"[13] என்பார் அடிகளார்.

காணாதான் காட்டும் கண்காட்சி

குற்றங்களுள் ஒன்றாகச் சுட்டிப் பேதைமைக்குத் தனியதிகாரம் படைத்துவிளக்குகின்றது திருக்குறள். அத்தகு பேதை ஒருவன் தமது புல்லறிவாண்மை வெளிப்படத் தமது மெய்ப்பாட்டைப் வெளிப்படுத்தும் ஒரு காட்சியைப் பின்வரும் திருக்குறள் புலப்படுத்துகின்றது.

காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தாம் கண்ட வாறு (புல்லறிவாண்மை-849)

மெய்ப்பொருளைக் காணாதவன், உண்மையைக் காணாதவன், கடவுளைக் காணாதவன், ஒன்றும் காணாதவன் எனப் பல முன்னொட்டுக்களை வைத்துக்கொள்ள இடம் வைத்துத் தொடங்கும் இக்குறளில் அவன் காட்டும் காட்சி, அதுவும் அவன் கண்டதுபோல் காட்டும் காட்சி புலப்படவில்லை. மாறாக, அவனது மெய்ப்பாடு அழகுறக் காட்டப்பெறுகின்றது. அதனைக் கண்டு தமது தாடி நலியாமல் வள்ளுவர் தமக்குள் சிரிக்கும் மெய்ப்

பாட்டை நுட்பமாய்க் காட்டும் இக்குறள். அளபெடையாகிவிடாமல் நெடில் தொடர்களைக் கொண்டே நீட்டிச் சொல்வதில் புரிகிறது மென்னகை.

இன்னுமொரு நகைக்குறள்

இக்குறளில் வெளிப்படும் புல்லறிவாண்மையுடைய பேதையை அனேகமாக எல்லாரும் அடையாளம் கண்டுகொள்ளலாம். காணாததைக் கண்டதாகக் காட்டுவது பேதைமை என்றால், நிலையில்லாததை நிலை என்று அறிந்தும் அறியாமல் நினைப்பவனின் நிலையைக் காட்டும் இன்னொரு நகைக் குறளும் உண்டு.

'கோடியும் அல்ல, பல!'

நிலையாமையைப் பற்றி எல்லா அறஇலக்கியங்களும் பேசுகின்றன. இளமை, யாக்கை முதலான பலவும் நிலையாதன. அவற்றை நிலை என்று உணர்ந்துகொள்ளல் புல்லறிவாண்மை என்று சொல்லி முதற்குறளைத் தருகின்றார் திருவள்ளுவர். அற்கா இயல்பினதாகிய செல்வத்தை அடுத்த இரு குறட்பாக்களில் வைக்கிற அவர், யாக்கை மற்றும் இளமை நிலையாமையை அடுத்து வரும் மூன்று குறட்பாக்களில் விளக்குகின்றார்.

சொல்லிக்கொண்டு வரும்பொழுதே, தம் காலத்தில் வாழும் மாந்தரை எண்ணிப்பார்க்கிறார். விரைந்தோடும் காலத்தின் முன்னோடும் மனிதர்களின் மனவோட்டம் அவருள் ஒரு குறு நகையைத் தோற்றுவிக்கின்றது.

புறவோட்டங்களைவிடவும் மனிதனின் அகவோட்டம் எத்தனை விரைவாய் இருக்கிறது என்பதைக் கருதிப் பார்க்கிறார். இருக்கிற ஒருபொழுதுக்குள், பறந்து பறந்து மனிதன் கட்டும் மனக் கோட்டைகள்தாம் எத்தனை? விளையாடும் குழந்தைகள் ஒரு மண்கோட்டை கட்டி முடிப்பதற்குள் ஒரு மனிதன் மனக் கோட்டைகள் மட்டுமா கட்டுகின்றான்? அதில் அவன் செய்கின்ற அலங்காரங்கள், அங்கே புரியும் அதிகாரங்கள், ஆட்சி ஆர்ப் பாட்டங்கள்... ஒன்றா, இரண்டா, நூறா, ஆயிரமா, இலட்சங்களா?

'கோடியும் அல்ல, பல!'

கருதுகின்றவை மட்டுமா, அவற்றைக் கருதுகின்றவர்களும் அந்த எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டு விரிகிறவர்களாய் இருக்கிறார்கள்!

அவர்களை நினைக்கிறபோதே திருவள்ளுவருக்குள் நகைப்புத் தோன்றுகின்றது.

அத்தகைய நகைப்புக்குரியர் யாவர்?

'ஒரு பொழுதும் வாழ்வது அறியாதவர்கள்!'

அப்படியென்றால் அவர்கள்மீது இரக்கம் அல்லவா பிறக்க வேண்டும்? ஆனால், திருவள்ளுவருக்கு நகை பிறக்கக் காரணம் என்ன?

மெல்ல நகும் ஓசையென ஒரு குறள்

நாம் வரைந்து வைத்தும் சிலையெழுப்பியும் அழகு பார்க்கும், ஆராதிக்கும் உருவத்தை ஏற்ற திருவள்ளுவர் தம் நரைத்த மீசை நலியாமல், உள்ளுக்குள் மெல்ல நகுகிற ஓசைபோல் இந்தத் திருக்குறள் பிறக்கிறது.

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல' (நிலையாமை-337)

இது ஒரு புதுவிதமான அறியாமை! அறிவின் அடிப்படையில் ஏனைய உயிர்களுக்கெல்லாம் மேலானவனாய்த் தம்மை நினைத்துக்கொள்ளும் மனிதனின் அறியாமை! பேதைமை!

இந்தக் கணம் என்ன செய்வதென்றே தெரியாத ஒருவன் இனி வருங் கோடியுகங்களுக்கும் தானே தலைவனாகி இருந்து என்னென்னவோ செய்து, வாழ்ந்து.... திருவள்ளுவரின் வெளிக் காட்டாச் சிரிப்பைப் போல் இந்தச் சிந்தனையும் நீண்டுகொண்டே போகிறது.

பிழைப்பைக் கெடுக்கும் நினைப்பு

இங்கு வாழ்தல் என்பது கவனத்திற்கு உரிய சொல். அறநிலை பிறழாது தன்தொழில் புரிவோரே வாழ்பவர். இதில் பிழைத்தவர்கள் தாம் எண்ணிக்கையில் அதிகம். அந்தப் பிழைப்பிலும் மண் அள்ளிப் போட்டுவிடுவது இந்தக் கேடுகெட்ட நினைப்பு! அதன் அடிப்படையில்தான், 'நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்குதாம்'! என்ற சொலவடை (பழமொழி) தோன்றியிருக்க வேண்டும்.

பானை விற்கப் போகும் ஒருவன். அதனை விற்றுப் பெருக்கிய காசில் மாடு வாங்கி, பண்ணை வைத்து சம்சாரியாகி மன்னராகித் தன் பகைவரை எட்டி உதைப்பதாய் நினைத்து விட்ட உதையில்

உள்ள பானையும் ஓடாய் உடைந்துபோனதாய்க் கூறப்படும் கனவுக்கதை, வெறுங்கதையல்லவே! இந்தப் பானை ஒரு குறியீடு. வியாபாரி ஒரு குறியீடு. அடுக்கி வரும் எண்ணங்களும் குறியீடுகளாய் நின்று உணர்த்தும் உண்மையை இந்தத் திருக்குறள் நுட்பமாய் அமைக்கின்றது.

அதிலும் 'ஒரு பொழுதும்' என்று திருவள்ளுவர் சொல்லும் தொடரில் இடம்பெறும் - உம்மில்தான் எத்தனை அழுத்தம்? வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு சிரிப்பை அடக்கிக்கொள்ளும் ஒரு தாத்தாவைப்போல!

புன்னகையும் பொன்னகையும்

திருவள்ளுவரின் இந்தப் புன்னகைக்குப் பரிமேலழகர் பொன்னகை சூட்டுகிறார்- இழிவு சிறப்பு உம்மையால், 'பொழுது' என்பது ஈண்டுக் கணத்தின்மேல் நின்றது. காரணமாகிய வினை யினளவே வாழ்தற்கும் அளவாகலின், அஃதறியப் படாதாயிற்று "[14] என்கிறார். கோடிக்கும் மேற்பட்ட அவற்றில் கொஞ்சமேனும் கூறாவிடில் உரையாசிரியருக்கு எப்படி உறக்கம் வரும்? ஊசி நுனியளவில் ஊரைக் கூட்டிக் காட்டிவிடுகிற சாமர்த்தியர்கள் அல்லவா உரைகாரர்கள்!

"பலவாய நினைவுகளாவன- பொறிகளான் நுகரப்படும் இன்பங்கள் தமக்கு உரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக் காரணமாமாறும், அது தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாம் முயலுமாறும், அவற்றிற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், நீக்கி அப்பொருள் கடைக்கூட்டுமாறும், அதனைப் பிறர் கொள்ளாமல் காக்குமாறும், அதனால் நட்டாரை ஆக்குமாறும், நள்ளாரை அழிக்குமாறும், தாம் அவ்வின்பங்கள் நுகருமாறும் முதலாயின."[15]

அந்த ஒரு பொழுதை - அதாவது தாம் பொருள் கொண்ட ஒரு கணத்திற்குள் தமது நினைவுக்குள் வரும் பல நினைவுகளை அடுக்கிக் காட்டுவதில் வித்தகராகப் பரிமேலழகர் மேற்சுட்டிய கருத்தில் பளிச்சிடுகிறார். இங்கு பரிமேலழகர் ஒருவரின் உரையே இத்தனை விரிக்கும்போது, அவரைப்போல் வந்த, வருகின்ற, இன்னும் வரப்போகும் உரைகாரர்கள் தத்தம் போக்கில் என்னென்ன விரிக்கப் போகிறார்களோ? (இந்தப்பட்டியலில் வரும் என்னையும், உங்களையும் சேர்த்துப் பார்த்துத் தான் திருவள்ளுவர் இப்படிச் சிரிக்கிறார் போலும்!)

புதிரான புன்னகை

இத்தகைய பலரின் தோற்றத்திற்கான காரணம்தான் யாது? புதிரான புன்னகையைத் தன்னுள் பொதிந்திருக்கும் இக்குறட் பாவைத் தாங்கிநிற்கும் அதிகாரம் சொல்லும் - நிலையாமை!

(அவசரப்பட்டு அதிகார வைப்பு முறை மாற்றிப் பொருள் கொள்ளும் புண்ணியவான்களை எண்ணியும் இந்தச் சிரிப்பு நீள்கிறது போலும்! இதெல்லாம் காலத்தால் நிலைக்குமா? யுகங் கடந்து நிற்கும் திருக்குறளுக்கு அருகில், அல்ல வெகு தொலைவில் நிற்கும் அருகதையேனும் கிட்டுமா என்று மெய்மை உணர வழியின்றி என்னென்னவோ எண்ணி, எண்ணி, எண்ணி யதையே எண்ணி, அதுவும் ஒரு பொழுதுள்...!)

இதற்கும்மேல் நீட்டல் பேதைமை! கருத்திற்கு நேரே வந்து விடலாம். திருவள்ளுவரின் இந்தப் புன்னகை, வெற்றுப் புன்னகை அன்று, பொருள் நிறைந்த புன்னகை!

இந்த நிலையாமைக்குள்ளும் ஒரு நிலைத்த உண்மையை மௌனமாய்ப் புதைத்து ஒரு புன்னகையைப் பூசி வைத்திருக்கிறார் என்றே தோன்றுகிறது! இதுவே சரியென வாதிக்க அல்ல, இப்படியும் ஒரு படி யோசிக்க மட்டுமே, இது!

குறுநகை புரியும் குறளின் பொருள்

ஒருபொழுதும் வாழ்வதறியாதவர், கோடிக்கும்மேல் பல வற்றைக் கருதுவது எதனால்? நில்லாதனவற்றை நிலை என்று உணரும் புல்லறிவாண்மையால்; பேதைமையால்; மடமையால்!

செல்வம். யாக்கை. இளமை முதலான அனைத்தும் நிலையாதவை. இவற்றை நிலைக்கவிடாது இழுத்துச் செல்லும், இந்தக் கணம், இந்தப் பொழுது, ஒரு நிலை (Stage). ஆனால், இதுவே, ஒரு நிலை (Standard) யில்லா நிலை.

எனினும், இந்தநிலையில், யாக்கையோடு, உயிர் பொருந்தி யிருக்கும் பொழுதில், நிலைக்கும் வண்ணம் ஒன்றை, நிலைக்கக் கூடிய ஒன்றைக் கருதிச் செய்தல் அல்லது சிந்தித்தல், வாழ்வைப் பயன் உடையதாக்கி விடும். அந்தப் பயன் அளவு கருதி, அதன் ஆயுளும் நீளும். அதற்கு அமரத்தன்மையும் ஏற்படச் செய்யும். அந்த ஒரு பொழுதில், ஒரு கணத்தில் தோன்றிய சிந்தனையின் வெளிப்பாடு தானே, இந்தத் திருக்குறளும்.

நிலையில்லாதோடும் காலத்தின் அணுவெனக் கணந்தோறும் நின்று இயங்கும் ஒரு பொழுதில், உறுதியாய் ஒன்றி, ஒன்று நன்று எனக் கருதுவது, கருதிச் செயலில் முனைவது, நிலையிலாச் செல்வத்தைக் கொண்டு, நிலையிலா, யாக்கையில் நிற்கும் உயிருள்ளபோதே, நிலைக்க வைக்கும் அறத்தைப் புரிவதுதான், நிலைபேற்றிற்கான வழி என்பதை நிலையாமையை முன் வைத்துத் திருவள்ளுவர் இந்தக் குறட்பாக் குறுநகையால் கூறும் பொருள்!

அதனால்தானே,

"வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது யாக்கை தாழாது அறஞ்செய்மின்!'

என்று இறைவருக்குத் தோழராகிய சுந்தரர் பாடுகின்றார்.

ஆக, இத்தகு குறுநகைக் குறள் காட்டிய பெரும் பொருள் எத்தனை எளியது, இனியது!

தோல்வியும் வெற்றியாய்...

இந்த நுட்பம் (இதை நுட்பம் என்று கருதும் என்னையும் எள்ளிப் பிறந்த குறுநகையோ, அல்லது குழந்தையின் பேதைமை கண்டு குதூகலிக்கும் அருள் உள்ளத் திருக்குறிப்போ!) இது வரை கருதாமல் இக்குறளைக் கடந்துபோனது கண்ட வள்ளுவ நகைப்போ?

முடியவில்லைதான்! எனினும் முயன்று தோற்பதில் நமக்கும் சிரிப்பு வருகிறதே!

இது குறுஞ்சிரிப்பன்று; பலரும் கூடிச் சிந்திக்க வேண்டிய குறட்சிரிப்பு அல்லவா?

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம், பேராசிரியம்,ப.4.
2. மேலது.
3. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை, ப.258.
4. மேலது, ப.212.
5. திருக்குறள் உரைக்கொத்து, காமத்துப்பால், ப.117.
6. தொல்காப்பியம் பொருளதிகாரம், பேராசிரியம்,ப.6.
7. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.292.
8. மேலது.
9. மேலது, ப.293.
10. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை, ப.287.
11. மேலது, ப.246.
12. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப.245.
13. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை, ப.209.
14. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப.311
15. மேலது.



அழுகையைச் சிரிப்பாக்கும் அதிசயச்சித்தர்

“வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும்” என்பது பழமொழி. அதுபோல் மனம்விட்டு அழுதால் துயர் விட்டுப் போகும் என்று சொல்லலாம். குழந்தை அழுதால் தாய் அணைப்பாள். தாயே அழுதால்? தாயுமான தெய்வம் முன்வந்து காக்கும் என்பது சமய நம்பிக்கை. அதனால்தான் “அழுதால் உன்னைப் பெறலாமே” என்று அருளாளர்கள் இறைவனை முன் வைத்துப் பேசுகின்றனர். இலக்கிய உலகத்தில் அழுகை இவ்வாறிருக்க, இலக்கணஉலகில் எண்வகை

மெய்ப்பாடுகளைப் பேசும் தொல்காப்பியர் அழுகையைப் பற்றியும் பேசுகின்றார். அது தோன்றற்கான சூழலை முன்வைத்து விளக்கும் தொல்காப்பியச் சூத்திரத்தின் அடியொற்றி, அழுகையினைத் திருவள்ளுவர் வெளிப்படுத்தும் பாங்கை இக்கட்டுரையில் விளங்கக் காணலாம்.

இரண்டாவது மெய்ப்பாடு - அழுகை

தொல்காப்பியர் உரைக்கும் எண்வகை மெய்ப்பாடுகளுள் இரண்டாவது அமைவது அழுகை. நகையை முன்வைத்து, அழுகையைப் பின்வைத்ததற்கான காரணத்தைப் பேராசிரியர் பின்வருமாறு உரைப்பார். "மற்று நகையை முன்வைத்ததென்னை யெனின், 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருட்கும்' (249) இவையென்னும் இயல்பில்லனவல்ல என்றதற்கு விளையாட்டுப் பொருட்டாகிய நகையை முன்வைத்தா னென்பது. அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன்பின் வைத்தான்."[1]

அழுகையின் தோற்றக் காரணம்

விளையாட்டு வினையாகி அழுங்குழந்தை கதைதான்! யோசித்துப் பார்த்தால், வாழ்க்கையெனும் விளையாட்டில், நகை- ஒரு நாணயத்தின் ஒரு பக்கம் எனில், அழுகை, அதன் இன்னொரு பக்கம்தான் போலும்! இல்லையில்லை. அழும்போதும், நகும் போதும் கண்கள் நீர் சிந்துவதால், ஒரு முகத்திற்கு இரு கண்கள் என்றே கூறலாம்போலும்! அதுகருதித்தான், அழுகை வரும் காரணங்களை அடுக்கும் தொல்காப்பிய நூற்பாவின் இரண்டாம் அடிக்கு, "விளிவில் கொள்கை - கேடில் கொள்கை. அங்ஙனம் கூறிய மிகையானே அழுகைக் கண்ணீர்போல உவகைக் கண்ணீர் வீழ்தலும் உண்டு. அதனையும் அழுகைப்பாற்சார்த்தி உணரப் படும்"[2] என்று விளக்கம் தருவார்போலும் பேராசிரியர்.

அழுகை எதனால் வருகிறது?

"இளிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே' (தொல்.-.1199)

என்கிறது, தொல்காப்பியம். அதாவது, 'இளிவால்- பிறரால் இகழப் பட்டு எளியனாதல். தந்தையும் தாயுமாம் முதலாகிய சுற்றத் தாரையும், இன்பம் தரும் நுகர்ச்சியையும் இழத்தல். அசை யென்பது, பண்டைநிலைமை கெட்டு வேறொருவாறாகி வருந்துதல். வறுமை என்பது போகந் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்.

இவை நான்கும் தன்னாலும், பிறராலும் நிகழக் கூடியது. எனவே, எட்டாயின'[3] என்று பேராசிரியரால் விளக்கம் சொல்லப்பெறுகிறது.

'தொல்விடம்'

திருக்குறள் நெறியில் வாழும் ஒருவருக்கு, அவர் யாராயினும் சரி, பிறரால் இகழப்படும் இளிவு வரப்போவதில்லை.

தாயாயினும், தந்தையாயினும், வேறு சுற்றத்தார் யாராயினும் பிறப்பார் யாரும் இறப்பார் என்பது உறுதி.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு (நிலையாமை - 339)

என்ற தெளிவு வந்துவிட்டபிறகு, இழவு குறித்து வருந்தியழ வேண்டாம் என்ற துணிவு பிறந்துவிடும்.

தன்னிலை பிறிதாதல் வருத்தத்திற்குரியதுதான். 'எப்படி இருந்த நான் இப்படியானேன்?' என்று வருந்தும்படிக்கு வள்ளுவநெறி ஒழுகுவார் வழுக்கிவிழுந்து தவிப்பதும் இல்லை.

உயிரினும் ஓம்பப்படும் ஒழுக்கம் அனைத்தையும் காக்கும். அதனையும் மீறித் தடுமாறும் நிலை வரின், "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் போல, ஒழுக்கமுடையார்தம் வாய்ச்சொல்லில், குறளறம் வெளிப்பட்டு அழும் நிலை வராது அரவணைக்கும். ஆனால், இந்த வறுமை இருக்கிறதே, அது பொல்லாதது. ஈவு இரக்கம் இல்லாதது. எவரையும் வருந்தியழ வைத்து விடுகிறது.

எதற்கும் கலங்காத திருவள்ளுவரைக் கலங்கி அழவைத்த கொடுந்துயர் அது.

இதற்கு முன்னர்க் கூறிய ஏனைய துயர்களெல்லாம் வாய்விட்டு அரற்றி ஆற்ற வழி விட்டுநிற்பனவாகும். ஆறுதல் அளிக்க, உறவோ, நட்போ முன்வந்து உதவ மாறக்கூடியது. ஆனால், வறுமை அத்தகையதன்று. தோழமையிடம் கூட, பேசக்கூடாதது ஏழைமை.

கொஞ்சம் கொஞ்சமாய்க் கொல்லும் விடம் அது. அதனால் தான், 'தொல்விடம்' என்று மணிவாசகப் பெருமான் அதற்குப் பெயர் சூட்டுகின்றார் போலும். இடையிலும், கடையிலும் வந்து கௌவிக்கொள்வது கூட அல்ல, பிறக்கும்போதே கூட வந்து கொல்வதாகிவிடுகின்றது.

திருவள்ளுவரின் எச்சரிக்கையும் அறிவுரையும்

ஒருவனுக்கு வறுமை ஏற்படக் காரணம், அவனது செயல் அல்லது செயலின்மைதான். மலையளவு செல்வமிருப்பினும், 'குந்தித்தின்றால் குன்றும் மாளும்'. எனவே, உழைக்கத் தொடங்கும் ஒருவனை வறுமை வந்து பிடுங்கித் தின்கின்றது எனில், அவன் செய்த குற்றம், கூடாரை நட்பெனக் கொண்டொழுகி இருக்க வேண்டும்; அதுவும், இல்லையெனில், முறையற்ற அரசின்கீழ் வாழும் துயருக்கு உள்ளாகி இருத்தல் வேண்டும் என்று திருவள்ளுவர் கணிக்கின்றார். கணிப்பதோடு மட்டுமன்று, உடன் எச்சரிக்கவும் செய்கிறார்.

ஒருவர் வருந்தி அழும் அளவிற்கு அவர்தம் செல்வங்களை யெல்லாம் எவர் எடுத்துக் கொள்கிறாரோ அவர் செல்வங்களும் அவ்வண்ணமே போகும் என்று எச்சரிக்கின்றார்.

"அழக்கொண்ட எல்லாம் அழப் போம்' (வினைத்தூய்மை- 659)

என்பது அவர் விடும் எச்சரிக்கைச் சாபம்! அதேசமயம், அவ்வாறு கொள்ளப்பட்ட செல்வம் வினைத்தூய்மையால் விளைந்தது எனில், 'பிற்பயக்கும் நற்பால் அவை' என்று உறுதி உரைக்கின்றார். இதற்கு அனுபவம்தான் உரைகல். மற்றவை அனைத்தும் உரைகள்.

நண்பனாய்ப் பழகி, நட்டப்படுத்திவிடும் ஒருவனை அழிக்கும் ஆயுதமாக உலர்ந்துபோகும் கண்ணீரே ஆகும் என்றும் திருவள்ளுவர் எச்சரிக்கின்றார்.

தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து (கூடா நட்பு.828)

இது கூடாநட்பிற்கு! கொடுங்கோல் அரசுக்கோ, பின்வரும் குறளால் தீர்வு சொல்லப்பெறுகின்றது.

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை (கொடுங்கோன்மை- 555)

பிறிதொரு நாளில் அன்று; அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படையாக அத்துளிகள் மாறுவது உறுதி என்கின்றார்.

இந்த அழுகைகள் எல்லாம் இழிவு தரத்தக்க இழிவுகள், இழப்புகள். இவை வருமுன்பே, தடுத்துக் காப்பாற்றும் கடமை நட்புக்கு உண்டல்லவா?

பலர் அறிய அழும் அழுகைதான், அவலம். பலர் அறியுமுன்பே அத்தகு அழுநிலை தோன்றுவது உறுதி என்ற தெரிந்த உடனே, உயிர் நட்பானது அருகில் வந்து அடித்தும் திருத்தவேண்டும். அது தடியினும் வலிய சொற்களால்! அத்தகையோரின் நட்பை ஆய்ந்து தேடிக் கொள்ள வேண்டும் என்கின்றார் திருவள்ளுவர்.

அழச் சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல் (நட்பாராய்தல்– 795)

'இன்றும் வருவது கொல்லோ?'

இப்படி எத்தனையோ வகைகளில், அழுகை வராமல் தற் காக்கவும், பிறரைக்காக்கவும் உரிய வழி முறைகளை வகுத்தளித்த வள்ளுவரின் கண்களிலும் கண்ணீர்த்துளிகளைக் கசியச் செய்து விடுகிறது, வறுமை. அதற்கு வள்ளுவர் இட்ட பெயர், நல்குரவு. "அஃதாவது, நுகரப்படுவன யாவும் இல்லாமை"[4] என்கிறார் பரிமேலழகர்.

அதனை, 'இன்மையின் இன்னாதது' என்கிறார் திருவள்ளுவர்; அந்த இன்மையைப் பாவி என்கிறார். அது, இழிதொழில்களையும், இளிவந்த சொற்களையும் கூற வைக்கும்; நற்குடிப் பிறந்தாரையும் விட்டு வைக்காது. அது பல துன்பங்களும் விளையும் பழனம்; அறம் சாராத நல்குரவானது, ஈன்ற தாயாயினும் பிறன் போல நோக்க வைத்துவிடும் என்று பலபடச் சொல்லி விளக்க முடியாத கொடுமையை, அடக்கமுடியாத அழுகையை, இமைகள் மூடிய பிறகும் விழிகள் பொலபொலவென்று நீரைச் சொரிவது போல, சொற்களைப் பொழிந்து இந்தக் குறள் வள்ளுவர் வாயினின்றும் பிறந்து விடுகின்றது.

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு (நல்குரவு–1048)

வறுமையைக் கண்ட வள்ளுவரின் நெஞ்சக் கொதிப்பில் பிறந்த குறள் இது என்று கூறும், மார்க்சிய அறிஞர் எஸ்.ஆர்.கே. (எஸ்.இராமகிருஷ்ணன்), "நேற்று என்னைக் கொல்லாது கொன்ற வறுமை இன்றும் என்னைப்படுத்தி வைக்கப்போகிறதா?' என்று நித்திய தரித்திரன் நடுநடுங்குவதைச் சித்திரிக்கும் குறள் இது"[5] என்றும் குறிப்பிடுகின்றார்.

கூடிய மட்டிலும் கவிக்கூற்றாக வந்து அறமுரைக்கும் திருவள்ளுவர், இந்த இடத்தில், தானே வறுமை வயப்பட்ட

நிலையில் உரைக்கும் பாத்திரக்கூற்றாகவே இக்குறளைக் கூறுகின்றார்.

'நெருநலும் கொன்றதுபோலும் வந்த நிரப்பு (நல்குரவு) இன்றும் வருவதுகொல்லோ?' என்று கேட்கிற அவலம் நெஞ்சுபிழிகிற அழுகையாக வெளிப்படுவதைப் பார்க்கலாம். நகையில் வெளி வரும், 'உம்' ஒலியிலும், இவ் அழுகையில் இரண்டு இடங்களில் வெளிவரும், 'உம்' ஒலியிலும் எத்தனை அழுத்தம்! நேற்றும், இன்றும் வரும் வறுமை – இன்மை நாளையும் வருமே! நாளையும் மற்று மொரு நாள்தானே. நாள் கடத்துவது எப்படி?

இப்படி எந்தப் பறவையும், விலங்கும், அற்பப்புழுவும் கவலைப்பட்டதில்லையே. நாகரிகத்தின், அறிவின் உயர்ந்த நிலையில் இருக்கும் மனித குலத்திற்குத்தானே இத்தகு இழிவு?

இதுவரைக்கும் நல்குரவு என்று கூறிவந்த வள்ளுவர், இந்தக் குறளில் நிரப்பு என்கிறார். பொதுவாய், இச்சொல், வறுமையைக் குறிக்கும் எனினும், குறைவு என்னும் பொருளையும், சோம்பு என்னும் பொருளையும் குறிக்கின்றது.[6] என்னதான் உழைத்து ஈடு கட்டி நிரப்ப முயன்றாலும் குறைவுதானே நிரம்பியிருக்கின்றது. எத்தனை முயன்று வலிந்து உற்சாகம் கொண்டு உழைத்தாலும் சோர்ந்து சோம்பிப் போக வைத்துவிடுகின்றதே!

தெய்வத்தான் ஆகாதெனினும் (என்று தெரிந்தும்) மெய் வருத்தத் தரும் கூலி கூட நிரப்ப முடியாத 'நிரப்பாகி' விடுகின்றதே!

'நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்'

காணக் காண, கருதக் கருதக் கண்ணீர் ஆறாய்ப்பெருகி, தாடி வழியே அது உருகி ஓடுவதுபோல் ஓடுகின்றது. பட்ட இடம் எல்லாம் சுடுகின்றது. ஆற்றாத வேகத்தில் அடுத்த குறள் பிறக்கிறது.

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது (நல்குரவு–1049)

தூக்கமாத்திரை போட்டுக்கொண்டால்கூடத் தூங்க முடியாதாம், நிரப்பினுள் சிக்கிக்கொண்ட ஒருவன். பரிமேலழகர் சொல்கிறார்– "மந்திரம் மருந்துகளால் ஒருவனுக்கு நெருப்பிடையே கிடந்து உறங்கலும் ஆம். நிரப்பு வந்துழி யாதொன்றானும் உறக்கம் இல்லை. நெருப்பினும் நிரம்பக் கொடிது என்றவாயிறாயிற்று. இதுவும் அவன் கூற்று."[7]

உரையாசிரியர்களையும் அழவைக்கும் உக்கிரமான வறுமை! அதன் காரணமாய் வயிறு காயக் கிடக்கும் மனிதன் ஒருவன் வயிறெரிந்து, அனுபவ வாக்காய்ச் சொன்னான்- "குத்துப்பட்டவன் கிடந்தாலும் கிடக்கலாம். குறைவயிற்றுக்காரன் கிடக்க முடியாது' என்று.

தூய்மையில்லாத் துறவின் தோற்றுவாய்

வள்ளுவத்தாடி, மார்க்சியத் தாடியாக மாறுவதும், பெரியாரின் தாடிபோலத் தோன்றி, மெல்ல மெல்லக் குன்றக்குடி அடிகளாரின் தாடியெனவும் தோற்றங்கொள்கிறது. இக்குறட்பா.

'பக்கத்திருப்பவர் துன்பம் பார்க்கப் பொறாத புண்ணிய மூர்த்தி' யாகிய திருவள்ளுவரின் அழுகை, நெருப்பாகி, நெருப்பு வெறுப் பாகிக் கடைசிக்குறளுக்குள் வெடிக்கிறது. அதன் தெறிப்பில், இத்தகு வறுமை காரணமாய், காவியுடுத்துத் துறவிபோல் அலையும் ஒரு கூட்டம் வள்ளுவர்வழி வந்து நம் கண்ணில் படுகிறது.

துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்புக்கும் காடிக்கும் கூற்று (நல்குரவு-1050)

வறுமையின் காரணமாகத் துறவு பூண்டு, இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் இழுக்குக் கொணர்ந்து சேர்க்கும் அவலம், தனிமனித அவலமன்று, கொடிய சமூக அவலம்.

அந்த ஆத்திரத்தில்தான் அடிகளார் திருவள்ளுவராகவே மாறிப் பேசுகின்றார்- "வறுமை மிகமிகக் கொடியது. வறுமை பசியினால் வருத்துகின்றது; ஊக்கத்தைக் கெடுக்கின்றது; இனிய பண்புகளைக் கெடுக்கின்றது; கருணையிற் சிறந்த கடவுளின்றும் விலக்குகிறது. திருவள்ளுவருக்கு வறுமையின்மீது ஏராளமான கோபம். அதனால், 'இன்மை' என்ற பெயர் சூட்டிக்கொண்டு வருகின்ற பாவி என்றே அழைக்கின்றார். வறுமை இந்த உலகில் துய்த்து மகிழும் இன்பத்தைக் கெடுக்கிறது. சரி, பரவாயில்லை! அடுத்த உலகமாகிய அமரர் உலகத்திலாவது இடம் கிடைக்குமா? என்று கேட்டால் அதுவும் கிடைக்காது. அந்த உலகத்தினைப் பெற அருளை, அறத்தினை, தூய்மையினை விலையாகத் தர வேண்டும். இந்த மூன்றையும்தான் வறுமை கெடுத்துவிடுகிறதே! ஆதலால், அந்த உலகமும் இல்லை"[8] என்று வருந்தி உரைக்கின்றார். அந்த வறுமையின் குரல் வளையை நெறிக்க இறுதிக்காலம் வரைக்கும் பலப்பலப் பணிகளை மேற்கொண்டு, இன்றும் தொடரக் காரணமானவர். திருக்குறள் இயக்கம் கண்டு இயக்கியவர்.

இவருக்கு முன்னோடியான, திருவள்ளுவர் எடுத்த முயற்சிகளைத் திருக்குறளிலேயே காண முடியும்.

வறுமையினும் வறுமை

கொடியது யாவற்றினும் கொடியது வறுமை. வறுமைக்கு உவமை சொல்ல வந்த வள்ளுவருக்கு வறுமையே உவமையாவது வறுமையின் அழுத்தச் சித்திரம்.

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது

என்கின்றார். "வறுமைக்கு உவமை வறுமையே. அதன் கொடுமையை விளக்கிக்காட்ட வேறு ஓர் உவமை இல்லை. வறுமை உவமையுலகத்தையே வள்ளுவர்க்குக்கூட வறிதாக்கி விட்டது. நல்குரவு என்ற பெயரால் ஓர் அதிகாரம் வைத்துப் பத்துக் குறள்களில் வறுமையின் கொடிய இழிவுகளை வெளிப்படுத்து கின்றார். வறுமைஎன்பது எவ்வாற்றானும் கூடாது; பொருளீட்டுதல் உலகக் கடமை. ஈட்டாது விதி விதியென்று கூறிக்கொண்டு மடிந்து கிடக்கற்க என்று வள்ளுவர் அறையும் திருக்குறட் பறை போல் யாரும் அறைந்ததில்லை"[9] என்கின்றார் வ.சுப. மாணிக்கனார்.

அழுகையைச் சிரிப்பாக்கும் அதிசயச் சித்தர்

தன் துயருக்காக அழாது, உலகின் துயருக்காக அழும் திருவள்ளுவரின் கண்ணீர்த்துளிகள், கொடுமையை ஒழிக்கும் ஆயுதங்களாகக் குறட்பாக்களைப் படைக்கத் தொடங்கி விடுகின்றன. அழுகைக் கண்ணீரையே நகைக் கண்ணீராக ஆக்க முனைந்துவிடுகிறார் திருவள்ளுவர்.

இடுக்கண் வருங்கால் நகுக (இடுக்கண் அழியாமை-621)

எனக் கட்டளையிடுகிறார்; இடும்பைக்கு இடும்பைப் படுக்கும் பக்குவத்தைத் தருகிறார்; துன்பத்தையே இன்பமாக மாற்றும் வித்தையைக் கற்றுத்தருகிறார்; இகழ்ச்சி கூறும் பகைவரும் பாராட்டும்படி அழுகையை ஆயுதமாக்கி எழச்செய்கிறார்; இன்னாமையையே இன்பம் ஆக்குகின்றார்.

வறுமையைக் கண்டு பயந்துவிடாமல், திறமையை மாற்றிச் சரிந்துவிடாமல், தன்னொழுக்கம் பேணித் தலை தூக்கி மானுடம் எழ, அழுகைக் கண்ணீரையே ஆனந்தக்கண்ணீராய் மாற்றும் இரசவாத வித்தை தெரிந்தவர் திருவள்ளுவர். நேற்று வந்த நிரப்பு,

இன்றும், இன்றுபோல் நாளையும், இனி ஒவ்வொரு நாளும், ஏன் ஒவ்வொரு வேளையும் என அடுத்தடுத்து, அடுக்கியே வரட்டுமே, அதற்காக மானுட மனம் அழிந்துபோதல் நியாயமில்லை. ஒன்றல்ல, பத்தல்ல, ஆயிரமல்ல. எத்தனைவேண்டுமானாலும்,


அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும் (இடுக்கண் அழியாமை-625)

இதுதான் அழுகையைச் சிரிப்பாக்கும் அற்புதவழி. இவர்தான் அற்புதச் சித்தர். அவரைத் தயக்கமின்றிச் சரணடைந்தால் ஒன்னார் விழையும் சிறப்பு, தன்னால் வந்து எய்தும்! கண்கள் எப்போதும் ஆனந்தக் கண்ணீரையே சொரிந்து கொண்டிருக்கும் உறுதி!

மானுடம் அழிந்துவிடாது; மானுடன் அழிவில்லான்!

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.5.
2. மேலது, ப.8
3. மேலது.
4. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.337.
5. எஸ்.ஆர்.கே. 'குறள்- ஒரு ஞானநூல்', கல்பனா - பிப்ரவரி1980, ப.14.
6. பவணந்தர் தமிழ்ச் சொல்லகராதி - ப.308.
7. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.345.
8. குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை, தொ-2., பக்.329-330.
9. மூதறிஞர் வ.சுப.மாணிக்கம், திருக்குறட்சுடர், ப.21.



வள்ளுவருக்கு வந்த வருத்தம்

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்று சொல்லப்படும் தொடர், இடையில், 'இன்பமுடன்' என்ற சொல்லை உள்ளடக்கி நிற்பதாகும். எனினும், வாழ்க்கை முற்ற முழுக்க இன்பமயமானதாகவா இருக்கின்றது? எண்ணிப்பார்க்கும் யார்க்கும் இன்பத்தைக் காட்டிலும் துன்பமே பெரிதாய் இருப்பதான தோற்றம் ஏற்படுவது ஒன்றும் பொய்யல்லவே! இவ்விரண்டுக்கும் ஆட்படாது நடுநிற்பதான வெறுமை அதைவிடக் கொடுமை யல்லவா? இப்படி, வாழ்க்கை இன்பமாகவும், துன்பமாகவும், வெறுமையாகவும் அமைவதற்கு யார் காரணம்? தானா? தாமா? இறைவனா? இயற்கையா?

உலகம் பொதுவாய்ச் சொல்வது விதி. விரித்துக்கேட்டால், 'அவனவன், அதனதன் தலைவிதி' எனப் பதில் வரும். தலை யிருப்போர்க்கெல்லாம்

அவ்விதி இருக்குமாயின் அதனை எழுதிய தலைவன் அல்லது தலைவி யார்? 'சமயக்கணக்கர் மதிவழி செல்லாது' எதனுள்ளும் மெய்ப்பொருள் காணும் வள்ளுவருக்குத் தான் வழிகாட்டத் தெரியும் என்று சொல்லிய தமிழறிவின் துணைக் கொண்டு வள்ளுவரை நாடுகின்றோம்.

வள்ளுவருக்கு வந்த வருத்தம்

வருத்தம் தீர்க்கும் வகைதேடி, விதிதேடி வள்ளுவரிடம் போனால், அவரே வருத்தப்பட்டுப்போய் இருக்கின்றார். அது 'மெய்'வருத்தம் அன்று. 'பொய்' வருத்தமுமன்று. உலகம் போய்க் கொண்டிருக்கும் போக்குக் குறித்த வருத்தம். அறம்கூறி ஆக்கம் பேண முயன்றவருக்குத் தேக்கத்தை உண்டாக்கிய வருத்தம். இசைபட வாழ்வது விடுத்து, இழிவுறும் நிலையில் மானுடம் இயங்கும் நிலை குறித்த வருத்தம். தன்நிலையில் இருந்து உயர வேண்டிய மாந்தர், நிலையினின்று இழிந்து, தலையின் இழிந்த மயிரனையரான வருத்தம்... இதுவும் ஒரு மெய்ப்பாடு அல்லவா? இதனைத் தெளிவாக்கத் தொல்காப்பியரை நாடுகின்றோம்.

தொல்காப்பியர் சுட்டும் 'இளிவரல்'

எண்வகை மெய்ப்பாட்டில் மூன்றாவதாகத் தொல்காப்பியர் சுட்டுவது இளிவரல். இழிவெனப் பொருள் படும் இம்மெய்ப்பாடு தோன்றற்குரிய காரணங்களை நான்காக்கிப் பின்வரும் நூற்பா நல்குவார் அவர்.

> மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
> யாப்புற வந்த இளிவரல் நான்கே (தொல்.-.1200)

தலையின் இழிந்த மயிருக்கு மூப்புக் காரணமாக இருக்கலாம். பிணியும் காரணமாகலாம். தந்தையையோ, தாயையோ இன்னபிற உயிருக்குயிரான உறவையோ இழந்த வருத்தம் காரணமாகவும் இருக்கலாம். இவையெல்லாம் இயல்பானவை. மூப்புக்கும், பிணிக்கும் ஆட்படாத வள்ளுவருக்கு வந்த வருத்தம் தான் இளி வரல் எனும் மெய்ப்பாட்டைத் தோற்றுவித்திருக்கக்கூடும்.

இளிவரல் தோன்றக் காரணமானவற்றை முன்வைக்கும் இந்நூற்பாவிற்கு உரைவகுக்கும் பேராசிரியர், 'வருத்தமெனினும் முயற்சி யெனினும் ஒக்கும்.' யாப்புற வந்த' என்பது திட்பமுற வந்த என்றவாறு. அங்ஙனங் கூறிய மிகையானே வீரமுதலாயின பற்றியும் இளிவரல் பிறக்கும் என்றவாறு. இவையும் முன்னையபோலத் தன்கண்

தோன்றுவனவும், பிறன்கண் தோன்றுவனவும் பற்றி எட்டாதலுடைய என்பது கொள்க"[1] என்றுரைக்கின்றார்.

வருத்தம் வந்த வழி

தன்கண்ணும், பிறர்கண்ணும் தோன்றும் இளிவரல், திருவள்ளுவருக்குப் பிறன்கண் தோன்றித் தன் கண்ணும் வந்தெய்தியிருக்கக்கூடும். அதற்குக் காரணம், மூப்போ, பிணியோ இருந்திருக்க முடியாது. மூப்பு வருதல் இயற்கை. பிணி வருமுன் காத்தல் முயற்சி. ஆனால், வருத்தம் வாராதிருக்க வழியுண்டா? உண்டு. முயற்சி...இடைவிடா முயற்சி. தெய்வத்தான் ஆகாது எனத் தெரிந்தும் தொடர்ந்து மேற்கொள்ளும் முயற்சி; அதனையும் மீறித் தோற்கடித்துவிடும் விதி, அதாவது ஊழ் கண்டு ஒரு வருத்தம் வந்துவிடுகின்றது, திருவள்ளுவருக்கு.

அத்தகு சூழலை அவரது காலம் அவருள் புகுத்திவிடுகின்றது. தமிழறிஞர் சாமி.சிதம்பரனார், "வள்ளுவர் காலத்து மக்கள் தலைவிதியிலே, ஊழ்வினையின் வலிமையிலே கொண்டிருந்த நம்பிக்கையை ஊழ்வினை என்னும் அதிகாரத்தால் காணலாம். அவர் காலத்து மக்கள் நம்பிக்கையை அவர் மறைத்துவிடவில்லை. அப்படியே எழுதுகிறார்"[2] என்று குறிப்பிடுவதை இங்கு நினைவு கூரலாம். எனவே. சிறப்புற வாழ, அறமுரைத்துச்செல்லும் திருவள்ளுவரின் படைப்பியல் செல்நெறி, ஊழில் சென்று நிற்கின்றது.

ஊழெனப்படுவது

எத்தனை முயன்றாலும், மற்றது சூழினும் தான் முந்துறும் ஊழ். இதற்கு நியதி, பால், முறை, உண்மை, தெய்வம், விதி என வேறு பெயர்களும் உண்டெனப் பரிமேலழகர் உரைக்கின்றார்.

"ஊழாவது, முன்பு செய்த வினை பின்பு விளையும் முறை. மேற்கூறிய அறத்துப்பகுதியும், இனிக் கூறுகின்ற பொருட்பகுதியும், இன்பத்துப்பகுதியும் முன் செய்த நல்வினையால் வருதலையும், இவற்றிற்கு மாறான பாவமும் வறுமையும் துன்பமும் தீவினையால் வருதலையும் அறியாதே அவை உலகத்தில் மக்கள் பலர் தம் முயற்சியால் வந்தன என்பரன்றே! அதற்காக இது கூறப்பட்டது"[3] என்கின்றார் மணக்குடவர்.

"ஊழாவது போன சென்மத்தின் வினைப்பயனைச் சொல்லியது"[4] என்று ஒரேபோடாகப் போட்டு விடுகின்றார் பரிதியார்.

அப்படியானால், போன சென்மத்தின் வினைப்பயனை, இந்தச் சென்மத்திலும், இந்தச் சென்மத்து வினைப்பயனை அடுத்த சென்மத்திலும், அடுத்த சென்மத்தின் வினைப்பயனை அதற்கு அடுத்த சென்மத்திலும், அதற்கு அடுத்த சென்மத்தின் வினைப் பயனை, அதற்கும் அடுத்தடுத்த சென்மத்திலும், அதற்கு அடுத் தடுத்தடுத்த.... என்று முடிவிலாதேகும் இப்பிறவித்தொடர், ஊழெனும் சங்கிலியால் கட்டுப்பட்டிருக்கின்றது. எத்தனை முயன்றாலும் உடனுக்குடன் பிணித்துவரும் மர்மக்கயிறு, இது. இக்கயிற்றில் சிக்காதிருக்கவேண்டுமெனில் வினைபுரியாதிருக்க வேண்டும். வினைசெய்யாதிருத்தல் உயிர்க்கு இயல்பு ஆகாது. 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்று பேசிய சங்கத்தொடர், 'மனையுறை மகளிர்க்கு அவ்ஆடவர் உயிர் என்று முடிச்சுப் போடுகின்றது. உடலும் உயிரும் அவனும் அவளும் எனத் திருக்குறள் கவிதை பாடுகின்றது. இவ்வுறவு அனைத்துயிர்க்கும் பொருந்தும். எனவே, வினை புரிதல் உயிரின் இயல்பு; கடமை.

"உயிர்கள் வினை செய்தல் இயற்கை. வினை செய்தலே உய்தற்குரிய வழியாதலால் வினை செய்தலைத் தவிர்க்க முடியாது; தவிர்க்கவும் கூடாது. இறைவன் நன்றுடையான்; தீயதில்லான்; அவனுடைய படைப்புகள் இன்பம் விளைவிப்பனவாம். ஆதலால், நம்முடைய துன்பங்கலந்த இன்பங்களும்- துன்பங்களும் நம்முடைய படைப்புகளே தவிர, இறைவனுடைய படைப்புகளல்ல. நம்முடைய தலைவிதியை நாமே எழுதிக்கொள்கிறோம். கடவுள் நியதி என்ற முறையமைப்பில் அவரவர் செய்த விளைவுகளுக் கேற்ப வினைப்பயனை அனுபவிக்க வழி நடத்துகிறார். அதுவும் நம்மீதுள்ள கருணையினாலேயாம். பொருந்தா உணவை உண்டவர்கள் உண்டமையின் காரணமாக விளையும் துன்பத்தினை நீக்கிக்கொள்ள முயன்று வெளியெடுக்கும் வாந்தியைப்போல, அவரவர் செய்த வினைகளின் பயன்களை அவரவர்களே முயன்று அவரவர்களே அனுபவிக்கவேண்டுமென்பதே இயற்கையின் நியதி. இங்ஙனம், விருப்பு-வெறுப்புகளுடன் செய்யும் வினைகள் அனுபவத்துக்கு வராமல் போகா. அங்ஙனம் அனுபவத்திற்கு வரும்பொழுது, 'ஊழ்' என்று பெயர் பெறுகின்றது. ஆர்வம் நிறைந்த முயற்சி, தளராத நெஞ்சம், நிலை கலங்காத உள்ளம் ஆகியவை ஆக்கும் ஊழாகிய ஆகூழின் அடையாளம். மாறாக, சோம்பிய உள்ளம், நெஞ்சில் நிதமும் கவலை, ஏங்கி இளைத்தல் ஆகியவை போகூழின் அடையாளம் என்று திருவள்ளுவர் அடையாளம்

காட்டுகிறார்"[5] என்பது வள்ளுவர் வழி வந்த குன்றக்குடி அடிகளாரின் விளக்கம்.

ஆகூழும் போகூழும்

ஆக, ஒருவனுக்கு ஆக்கம் தருவது ஆகூழ். அழிவு தருவது போகூழ். ஆகு+ஊழ்= ஆகூழ். போகு+ஊழ்= போகூழ்.

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி (ஊழ்-371)

இங்கு அசைவின்மை என்பது மடியின்மை. 'பொருளின் ஆக்க அழிவுகட்குத் துணைக்காரணமாய முயற்சி மடிகளையும் தானே தோற்றுவிக்கும் என்பது கருத்து'[6] என்பது பரிமேலழகர் விளக்கம். மடியாகிய சோம்பலின்றி இடைவிடாது முயல்பவர்களுக்கு ஆக்கம் தரும் ஊழ், ஆகூழ். அம்முயற்சிக்குத் தடையாக மடியை உண்டாக்குவது போகூழ்.

இழவூழும், ஆகலூழும்

இவ்விரண்டிற்கும் நடுவில் இருக்கும் இரண்டு ஊழ்கள், இழவூழும், ஆகலூழும்.

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை (ஊழ்-372)

என்கின்றார், திருவள்ளுவர். 'ஒருவனுக்கு எல்லா அறிவும் உளவாயினும் கைப்பொருள் இழத்தற்கு ஏதுவாகிய ஊழ் வந்துற்ற விடத்து அஃது அதனைப் பேதையாக்கும்; இனி அவனறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருள் ஆதற்கு ஏதுவாகிய ஊழ் வந்துற்றவிடத்து அஃது அதனை விரிக்கும்'[7] என்கின்றார் பரிமேலழகர். 'அறிவும் அறியாமையும் ஊழால் வரும்' என்று விளக்கம் நல்கும் மணக்குடவர், 'ஆகலூழ் அறிவை விரிக்கும் என்றும், இழவூழ் அறிவைக் கெடுக்கும்'[8] (அறியாமையை உண்டாக்கும்) என்றும் சுட்டுகின்றார்.

நுண்ணிய நூல் பல கற்பினும்...

அவ்வாறாயின், அறிவைக் கொடுக்கும் அற்புதநூல்களைக் கற்கிற ஒருவனை ஊழ் என்ன செய்து விட முடியும் என்ற வினா எழுகின்றது. அவ்வழி ஆராயும் திருவள்ளுவர்,

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும் (ஊழ்-373)

என்று உணர்கிறார். திருக்குறள் உட்பட எத்தனை நுட்பமான நூல்கள் ஆயினும் பெறப்படுவோனின் அறிவு நிலையைப் பொருத்துத்தானே அந்நூலின் நுட்பம் புலப்படும். ஆகச்சிறந்த நூலாயினும், அதனை அச்சிடுவோனும், கட்டமைப்போனும், விற்பனை செய்வோனும் அதன் நுட்பம் உணரக்கூடிய அறிவைப் பெற்றிருக்கிறானா என்பது கேள்விக்குறிதானே!

தண்டாமரையின் உடன்பிறந்தும் அதன் தன்மையுணராத மண்டூகங்களான தவளைகள் எத்தனை? இத்தகு பேதங்கள் உடைய அறிவினால் பேதையாகத் தோற்றும் ஒருவனுள் புகுந்து நூல் என்ன செய்துவிட முடியும்?

இருவேறு

எனவே, இருவேறு உலகம் தோன்றிவிடுதல் இயல்பாகி விடுகின்றது. திருவேறாகவும் தெள்ளியராதல் வேறாகவும் போய் விடுவதை அவதானிக்கின்றார் திருவள்ளுவர். 'அறிவுடையராதற் காகும் ஊழ், செல்வமுடையராதற்கு ஆகாது; செல்வமுடையராதற் காகும் ஊழ், அறிவுடையராதற்கு ஆகாது'[9] என்று பிரித்துணர்த்து கின்றார், பரிமேலழகர்.

இவ்வாறு இருவேறுபட்ட உலகில் நல்லவும், தீயவுமான இரு வேறு கூறுகளும், ஊழால் தோற்றங் கொள்கின்றன.

நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவை செல்வஞ் செயற்கு (ஊழ்-375)

என்று திருவள்ளுவர் கண்டு காட்டுகின்றார். அதாவது, அழிக்கும் ஊழ் உற்ற காலம் முதலிய நல்ல வாயினும் அழிக்கும். ஆக்கும் ஊழ் உற்றவழி அவை தீயவாயினும் ஆகும் என்பதாகி விடுகின்றது.

வகுத்தான் யார்?

இந்த நிலையில் காக்கும் பொருள் கைவிட்டுப்போதலும், விட்டாலும் விலகாத பொருள் நிலைப்பும் நேர்ந்துவிடுகின்றது. எதனால்?

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (ஊழ்- 377)

இங்கு வகுத்தான் என்பதற்குப் பரிமேலழகர் உள்ளிட்ட பலர் தெய்வம் எனப்பொருள் கொள்கின்றனர். அடிகளாரோ, "இங்கு வகுத்தான் என்று குறிப்பிடுவது கடவுளையன்று. கடவுள் பொதுவான இயல்புடையவர். ஆதலால், அவர் யாரொருவருக்கும் வலியச்சென்று தீமை செய்யார். எந்தவோர் உயிர்க்கும் தீமை நிகழ்த்த உடன்படமாட்டார். ஒவ்வோர் உயிரும் சிந்தனையால், செயலால் செய்த செயல்களே பயன்தரும் வகையில், ஊழ் எனப் பெயர் பெற்று வருவது. இந்த ஊழினை உயிர்கள் அனுபவித்துக் கழித்துத் தாமே ஏற்றிக்கொண்ட சுமையினை இறக்கிக் கொள்வதற்கு, இறைவன் துணையாக இருக்கின்றான் என்பதே உண்மை. இஃதன்றி நம்முடைய இன்பதுன்பங்களுக்குக் கடவுளோ, ஊழோ காரணம் என்று காட்டுவது நெறியுமன்று; முறையுமன்று. ஆதலால் வகுத்தான் என்பது நேரடியாக ஊழைக் குறிப்பிட்டாலும், அந்த ஊழினை உருவாக்கிக் கொண்ட மனிதனையே சாரும்"[10] என்கின்றார்.

இங்கு வகுத்தான், தமது வாழ்வைச் சரியான முறையில் வகுத்து இயங்குபவன் என்பதாகக் கொள்வதில் எந்தத் தடையும் இல்லை.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு (இறைமாட்சி-385)

என்ற திருக்குறளை இங்கு ஒப்புநோக்கலாம். இக்குறள் நாட்டுக் கரசனை மட்டுமன்றி வீட்டுக்கு அரசனையும் குறிக்கும். இன்றளவும் வினைக்கே உரிய ஆண்பிள்ளையை, 'அரசு' என்று குறிக்கும் வழக்கு கிராமங்களில் உண்டு. எனவே, இயற்றல், ஈட்டல், காத்தல் இவற்றோடு அவற்றைத் துய்க்கும் முறையினையும் வகுத்துக் கொள்ள வேண்டியது அந்த அரசின் கடமையே தவிர, ஆண்டவனின் கடமையன்று. எனவே, செல்வத்தையோ, அறிவையோ தேடிப்பெற்றுக் காத்துக்கொள்வதோடு கடமை முடிந்துவிடுவதில்லை. அவற்றைத் துய்ப்பதிலும் அக்கடமை நீள்கிறது. அத்துய்ப்பு தன்னளவில் மட்டும் முடங்காது, பிறர் துய்க்கவும் வகைசெய்வதாக அமைதல் வேண்டும். இதனை விரித் தெழுதிப் போகும் விதிநூல் இல்லை திருக்குறள் என்பதனால், அடுத்த குறளை ஆக்கப்போய்விடுகிறார் திருவள்ளுவர்.

துப்புரவின்மையால் துறந்தோரைக் கருதி...

இத்தகு துய்ப்பிற்கு வழியின்றி, கிடைக்காமையினாலே, வறுமை வயப்பட்ட நிலையிலேயே துறவுக்கு வருபவர்களைக்

காணுகின்றார். துப்புரவு இல்லாதவர்கள் துறப்பவர்களாக ஆகி விடுகிறார்கள். இல்லையில்லை. துறப்பவர்களே மிகுதியும் துப்புரவு இல்லாதவர்கள் ஆகிவிடுகிறார்கள்.

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின் (ஊழ்-378)

என்று எழுதிவிடுகின்றார் திருவள்ளுவர். துறவு என்னும் தூயநெறி, பெருநெறி; துய்ப்பில்லாத் துயரின்பாற்பட்டுத் தோன்றுவது பிழையில்லை; அத்துய்ப்பு, துறவிற்குப் பின்னர் கிட்டுமாயின் துறவின் தூய்மை என்னாகும்? ஒட்டுமொத்த பழிப்புக்கும் இழிவுக்கும் உள்ளாகும். அப்போக்குத் தனியொரு துறவியோடு முடிந்து விடுவதில்லையே. ஒட்டுமொத்த துறவுலகத்திற்கே அல்லவா இழுக்கை ஏற்படுத்தி விடும்?

துறந்தார் பெருமைத் துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று (நீத்தார் பெருமை-22)

என்னும் பெருமையின் பெருந்தோற்றம் எங்கே? வறுமை காரணமாய் வந்து சிறுமைப்பட்டு நிற்கும் அற்பத்துறவு எங்கே? உயர்வுக்குத் துணைபுரிய வேண்டிய துறவு இழிவுக்கு வழிவகுத்து விடுவதோடு, இன்னபிற இழிவாளர்களும் உருவாகத் தோற்றுவாய் ஆகிவிடுகின்ற வருத்தம் வள்ளுவருக்கு வந்துவிடுகின்றது. இதுவும் விதியின் வலிதான் போலும் என்று நொந்து கொள்ளும் வருத்தம்.

ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் (ஊழ்-380)

என்ற வருத்தத்தோடு முடிந்துவிடுவது, ஊழ் அதிகாரம் மட்டுமன்று, அறத்துப்பாலும்!

ஊழையும் உப்பக்கம் காண...

இந்த இழிவிலிருந்து எழ வழியே இல்லையா? எழுந்த இலக்கியங்கள் எத்தனையோ கடைசியில் விதியின் வழியில்போய் நிற்கின்றனவே!

‘ஊழ்வினை உருத்து வந்தூட்டும்’ என்று சிலம்பு இசைக்கின்றது. நாடுவிட்டுக் காடேகக் காரணம் விதி என்று பேசிய இராமனை நோக்கி, ‘விதிக்கு விதி செய்வேன்’ என்று வில்லேந்திய இலக்குவன், ‘வெஞ்சின விதியை வெல்ல வல்லமோ?’ என்று கேட்டுநிற்கும் இடம் விதி சிரிக்கும் களமல்லவா?

எடுத்துவைக்கும் ஒவ்வொரு முயற்சிக்கும் முன்னே ஓர் அடியெடுத்துவைத்து நின்று சிரிக்கும் விதியின் விளையாட்டு எப்போது முடியும்? தனக்கு முன்னால் நீட்டிக் கட்டப்பெற்ற காரட் கிழங்கைத் தின்ன வேகவேகமாய் ஓடும் குதிரையின் விரைவு போலத்தான் இந்தவிதியுடன் நாம் நடத்தும் வாழ்க்கையா?

ஆம்! அப்படித்தான் என்று எல்லா அறஇலக்கியங்களும் ஒப்புக் கொண்ட ஒன்றைத் திருவள்ளுவர் ஒப்புக் கொள்ளவில்லை. மெய்ப்பொருள் காண்பதல்லவா அவர் சுட்டும் அறிவு. அவரது ஆய்வு மேலும் தொடர, அது பொருட்பாலாய் விரிகிறது.

"வள்ளுவர் ஊழைப்பற்றி உரைத்திருக்கும் குறள் பத்து. ஆனால், அதற்கு எதிராகக் கூறியிருக்கும் செய்யுட்கள் நாற்பது. ஊழ்வினை என்ற அதிகாரத்திலே பத்துப்பாடல்களிலே ஊழின் வலிமையைப்பற்றி உரைக்கின்றார். ஊக்கம் உடைமை, மடி யின்மை, ஆள்வினைஉடைமை, இடுக்கண் அழியாமை என்ற நான்கு அதிகாரங்களிலே நாற்பது செய்யுட்களால் ஊழ்வினைக்கு அஞ்சவேண்டாம் என்று வலியுறுத்துகின்றார். திருவள்ளுவர் ஊழ்வினையை மறுக்கவில்லை. ஆனால், அதை எதிர்க்க வழிகாட்டுகிறார்"[11] என்று சாமிசிதம்பரனார் சுட்டுகின்றார்.

ஒவ்வொரு முறையும் முந்திஎழும் ஊழை நான்கு புறத்திருந்தும் நாற்பது குறட்பாக்களால் எதிர் கொள்ளத் தூண்டிய வள்ளுவநெறியை மறந்து இன்னமும் விதியை நம்பிப் பரிகாரம் தேடிக் கோயில் குளமெங்கும் அலைந்து தலையின் மயிரை இழித்துக்கொண்டு தம்பிறப்பையும் இழிவு செய்யும் மானுடம் குறித்து மட்டுமல்ல, அதுவே வழியெனப்பேசும் துறவியர் குறித்தும் வருந்தும் வள்ளுவரின் மெய்ப்பாடு இந்தக் குறளில் தோன்றுவதுகூட, ஊழ்தானோ?

"ஊழிற் பெருவலி யாவுள?"

- இன்னும் எத்தனை நாட்களுக்கு?

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.5.
2. சாமி.சிதம்பரனார், வள்ளுவர்வழி, ப.39.
3. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப350.
4. மேலது.
5. குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை, தொ-2, பக்-260-261)
6. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப.351.
7. மேலது, ப.352.
8. மேலது.
9. மேலது, ப.354.
10. குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை, தொ-1, ப.264.
11. சாமி.சிதம்பரனார், வள்ளுவர்வழி, ப.39.



அதிசய அறிஞர்

திருவள்ளுவரைக் கற்கும்போதெல்லாம், கருதும் போதெல்லாம் வியப்பு வந்து பெருகிக்கொண்டே போகின்றது. எப்படி எழுதினார் இப்படி? எந்தநோக்கில் இருந்து கற்றாலும் இப்போதுதான் சொல்வது மாதிரி, எந்த வயதினருக்கும் ஏற்றாற்போலப் புரியும்படி எப்படிச் செய்யமுடிந்திருக்கும்?

'பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா' என்பது பாரதியார் வாக்கு. வள்ளுவரை வியக்கும் நமக்கு, வள்ளுவரே வியந்த இடங்களையும் காணும்போது, பெரு வியப்பாகி விடுகின்றது.

தனியே நோக்கத் தனிப்பொருளும், அதிகாரம் நோக்கப் புதுப் பொருளும், பால் பகுப்பில் காணச் சிறப்புப் பொருளும் பொதுளத் தோன்றும் திருக்குறளில் பல வியப்புக் குறட்பாக்கள் உண்டு. அவற்றில் ஒன்று,

'அறிதோறு(ம்) அறியாமை கண்டற்றால்'

அறிவுடைமை அதிகாரத்திற்கு முற்றிலும் பொருந்தும் இக்குறள் இன்பத்துப்பாலில் போய் இடம் பெற்றது இயல்பாகவா? திட்டமிட்டுச் செய்ததுவா?

புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே (தொல்.-1201)

என்று 'வியப்புணர்த்துதல்' என்னும் மெய்ப்பாட்டை - மருட்கையை விளக்க, அதுதோன்றும் இடங்களை விளக்குகின்ற, தொல்காப்பியத்தைத் துணைக்கொள்ளலாம்.

வள்ளுவப்பெருமை

'புதிதாகக் கண்டனவுங், கழியப் பேசியனவாயினவும், இறப்பச் சிறியனவும், ஒன்றாய்த் திரிந்தனவுமென நான்கும் பற்றி வியப்புத் தோன்றும்'[1] என்கின்றார் பேராசிரியர்.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து (பெருமை-978)

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல் (பெருமை-979)

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும் (பெருமை-980)

என்ற மூன்று குறட்பாக்களிலும் பெருமை- சிறுமைகளை வரையறுத்துச் சுட்டும் திருவள்ளுவர்,

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது (அடக்கமுடைமை-124)

என்று அடக்கத்தின் பெருமையை மலையினும் பெரிதெனக் காட்சிப்படுத்துகின்றார். இதே அடக்கமுடைமை அதிகாரத்தில்,

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின்ஊஉங்கு இல்லை உயிர்க்கு (அடக்கமுடைமை-122)

என்று உரத்துச் சொல்லிவிடுகின்றார்.

பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே (புறம்-192)

என்ற சங்கமரபு திருவள்ளுவருக்கும் உண்டு என்பதால், பெருமையும் சிறுமையும் இல்லா நடுவுநிலைமையாகிய ஒப்புரவு

பேணவேண்டி உயர்அறம் உரைக்கின்றார். அடக்கத்தோடு அறிவையும் உடைமையாகக் கொள்ள வேண்டும் என்பதால்தான் பொருளதிகாரத்தில், கல்வியை முதற்பொருளாகக் காட்டி நிற்கின்றார். அதுவே கேடில் விழுச்செல்வம் என்பது அவரது துணிபு. கேடு நீக்கி ஆக்கம் அளிக்கும் கல்வி சிறுமை போக்கிப் பெருமை தரும் என்பதும் இங்குக் குறிக்கத்தக்கது.

ஆக. திருவள்ளுவர் பெருமை, சிறுமை, ஆக்கம் இவை மூன்றையும் விட, முதன்மையாய்த் தொல்காப்பியர் சுட்டும் புதுமையாக எதனைக் கண்டு வியக்கின்றார் என்பதைக் காணலாம்.

புதியது நோக்கின்...

எது புதுமை? எது பழமையாகாதோ, அது புதுமை. நேற்றைய புதுமை, இன்றைய பழமை. இன்றைய புதுமை, நாளைய பழமை. என்றைக்கும் புதியதாக இருக்கும் ஆற்றல் எதற்கு உண்டு? இன்னும் சொல்லப்போனால், புதுமையின் தோற்றுவாய்கூடப் பழமைதான் என்றே தோன்றுகின்றது. பழமையை வைத்துத்தான் புதுமையைப் புதுமையாக அறிந்து கொள்ள முடிகின்றது.

அந்த அனுபவத்தில்தான், ‘முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றித்தாய்ப்’ பரம்பொருளைக் கண்டு கருதிப் போற்றுகின்றார், மணிவாசகர்.

கட்புலனாகும் எந்தப்பொருளுக்கும் கவர்ந்திழுக்கும் புதுமைப் பொலிவு உண்டு. ஆனால், அதன் நிலைப்புத் தன்மை நீடித்திருப்பது அரிது. எனவே, வியப்பு மாறாவண்ணம் தன்வசம் ஈர்க்கும் புதுமைக்குத்தான் இளமைப்பொலிவு இருக்கமுடியும். அத்தகு ஆற்றல் உரியது எதுவெனத்தேடித்தேடிப்பார்க்கும் அறிவு, கடைசியில் தன்னையே கண்டு வியக்கின்றது. ஆம். அறிய அறிய அதன் விரிவு இன்னும் பெரிதாய், விரிய விரிய, அதுவே புதிது புதிதாய்ப் பொலிவதை அறிகிறபொழுது எழுகிற வியப்பு அது.

அறிவெனும் புதுமை

நேற்றைப் புதுமையைப் புறந்தள்ளி, இன்றைய புதுமையை முன்வைத்து, நாளைய புதுமையைப் படைத்துக்கொண்டு மேலேகும், அறிவின் வியத்தகு தோற்றம், மானுடகுலத்துக்குக் கிடைத்த சொத்து.

சிற்றறிவு, பேரறிவு என்ற வரையறைகளைப் புறந்தள்ளிய வள்ளுவம் வாலறிவினைத் தரிசனப் படுத்துகின்றது. அத்தகு அறிவின் திருவுருவாக இறைவனைப் போற்றி, 'வாலறிவன்' என்று வணங்குகின்றது,

அந்த வாலறிவனை, உணரவும், வணங்கவும் நூலறிவினைப் புகட்டத் திருக்குறள் படைக்கின்றார், திருவள்ளுவர். அறிவை விரிவுசெய்து அகண்டமாக்கும் வள்ளுவவழியில் பயணம் செய்கின்றபோது, அறியாமை விலகிப்போவதையும் காண முடிகின்றது. ஒளிவரும்போது விலகி வழிவிடும் இருள் மீண்டும் பின்புறம் கலந்து ஒன்றாதல்போல் அறிவின் அடியில் அறியாமை அடைக்கலம் ஆகும் காட்சியை, வள்ளுவர் பார்க்கிறார். 'விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல்' எனும் உவமை, முயக்கற்றம் பார்க்கும் பசப்புக்குத் துணையாகி விடுகின்றது.

இருளைப் போர்வையாகக் கொண்டு இணைந்த உடல்களின் உயிர்கள் அறிவால் சுடர்கின்றன. அறியாமை மெல்ல மெல்ல நாணத்தைப்போல அகல்கின்றது. 'நவில்தொறும் நூல் நயம் போலும், பயில்தொறும் அதன் பண்பும் பயனும் வெளிப் படுகின்றது; பக்குவப்படுத்துகின்றது; அறிதொறும் அறிதொறும் அறியாமை தெரிகிற அதிசயம் நிகழ்கிறது.

இது என்ன வியப்பு? உணர்வில், உணர்ச்சியில் திளைக்கும் இடத்தில் அறிவுக்கு என்ன வேலை? அறிவெது? உணர்ச்சி எது?

அனுபவத்தில் அறிவும், உணர்ச்சியும் உரசிக்கொள்ளும் வேளையில் தோன்றுவதல்லவா, மெய்ப்பாடு! அது ஒன்றும் பொய்ப்பாடு இல்லையே! வெற்று பாவனை இல்லையே!

அறிவெனப்படுவது

புனைவுகள் தோற்கும் இடம் அறிவு. அங்கே உண்மை, தன் ஒப்பனைகளைக் கலைந்தே ஆகவேண்டும். நிர்வாணம் போலச் சத்தியம் சுடர்விட வேண்டும். குழந்தையைப் போலக் குதூகலம் தரக்கூடிய அறிவு அங்கே பிறக்கும். அதன் செயல்பாடுகள் அனைத்து இன்பங்களையும் கொடுக்கும்.

அனுபவத்தில் அறிவின் நிலை என்ன? எது அறிவு?

உண்மையில் நமது அறிவெல்லாம், நாம் அறிந்ததெல்லாம் நேற்றைய அறிவு. நேற்றைய நிகழ்வுகளில் கண்டறிந்த

உண்மைகளை இன்றைய அறிவாகப் பாடம் படிக்கின்றோம். இன்றையத் தேவைக்கான அறிவை இன்னும் கண்டறியவில்லை. இந்த அளவிற்கு அறிவு கொண்டிருப்பவர்களைத் திருக்குறள் அளவுகோல் கொண்டு அளந்தால் அவர்களை அறிவாளிகள் என்று ஒப்புக்கொள்ள முடியாது.

திருவள்ளுவர் நோக்கில் அறிவுடையார் என்பவர் ஆவது அறிவார். நமது அனுபவத்தில் அறிவாளிகள் என்போர் ஆனது அறிந்தவர்கள் ஆக இருக்கிறார்கள். ஆகிறதைக்கூடக் கண்டு கொண்ட அறிவாளிகள் நம்மிடத்தில் இல்லை என்றுதான் தோன்று கின்றது.

ஆக, நம்மைப்பொறுத்தவரையில், நமது அறிவெல்லாம் நேற்றைய அறிவின் தோற்றம். அதன் வயப்பட்ட நமது வாழ்வு நேற்றைய வாழ்வு. நாம் இன்னமும் இறந்தகாலங்களில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எதிர்காலம் குறித்த கவலையில் நிகழ்காலம் களவு போய்விடுகிறது. உள்ளீடற்ற பொக்கையாய்ப் போய்விடுகிறது. கவலை தின்னும் வாழ்க்கை, கறையான் அரித்த புத்தகம்.

'கொன்றழிக்கும் கவலை என்னும் குழியில் வீழ்ந்து குமையாதீர்' என்று கட்டளையிடுகின்றார் பாரதியார். ஏனெனில் சென்றது இனி மீளாது.' எனவே, இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்று எண்ண மதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு தின்று இன்புற்று வாழ்ந்திடுவீர். தீமையெலாம் ஒழிந்துபோம். திரும்பி வாரா' என்று ஆருடம் சொன்னாலும், நமது அறிவுபோய், ஊழில் முடங்கி விடுகிறது.

வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும், பாரதியும் வகுத்தளித்த தமிழ் எழுத்தைப் படிக்காமல், யாரும் எழுதாத, உண்மையில் இல்லாத தலை எழுத்தைப் போய்த்தான் தடவித் தடவிப் பார்க்கிறோம். தடுமாறிக் கவலைக் குழியில் விழுந்து மாள்கிறோம். அது வெறும் குழியன்று. கொன்று அழிக்கும் கவலை எனும் குழி. முதலில் அது கொல்லும். பின்னர் அழிக்கும். அதற்கா பிறப் பெடுத்தோம்? வையத்துள் வாழ்வாங்கு வாழுதற்கல்லவா?

அறிவெனும் வழியில்...

திருவள்ளுவரின் பயணம் அறத்தைக் கடந்து பொருள் தேடிப் புறப்படுகிறது. அவரது பயணத்தில், ஊழில் முடிகிற அறத்துப்பால்,

இறைமாட்சியில் பொருட்பாலாகப் புத்துருக்கொள்கிறது. ஊழையும் உப்பக்கம் காணத் திருவள்ளுவஅறிவு திட்பமுடன் இயங்கியதன் விளைவு அது. அதனை எதிர்கொள்ளும் ஆயுதமாக அவர் கண்டது அறிவை. அறிவு பெறும் வாயில் கல்வி. கல்லாத போதும் கேள்வி உதவும். கல்வி கேள்விகளில் அறிவு உடைமைப் பொருளாகிறது. அது மக்கட்கு மட்டுமாகத் தெரியவில்லை. எல்லா வுயிர்களுக்கும் அறிவு உண்டு. அதன் அடிப்படையிலேயே உயிர்களைத் தொல்காப்பியம் வரிசைப்படுத்திப் பார்க்கிறது. தமக்கு உரிய அறிவளவில் முடங்கிவிடாமல் அனைத்து உயிர்களின் அறிவையும் தன் வசமாக்கிக்கொள்ளும் மானுட அறிவுதான் மகத்தான அறிவு. அந்த அறிவின் செயற்பாடு, பிறிதின் நோய் தன்னோய் போல் போற்றச் செய்வது. அதனால் தன்குற்றம் கடியப்படும். அத்தகு அறிவு பெரியாரைத் துணைக்கொள்ளும். சிற்றினம் சேரவொட்டாது. தெரிந்து செயல்படும் வகையுணர்த்தும். வலிமையையும், காலத்தையும், இடத்தையும் அதுவே அறியச் செய்யும். தெரிந்து தெளிவித்து வினையாடச் செய்யும். இப்படி, அறிவின் செயற்படு நிலைகளை விரித்துப் பார்த்தால் திருவள்ளுவரின் அதிகாரவரிசை விளக்கங்கள் வியக்கும்படியாய் நம்முள் விரியும். ஆக, அறிவு அற்றம் காக்கும் கருவியாகி விடுகின்றது.

அந்த அறிவு எத்தகையது? எப்படிக் கிட்டியது? குறுக்கு நெடுக்காகத் திருக்குறளில் பயணம் மேற்கொண்டு பார்த்தால் நமக்குக் கிட்டும் அறிவு பின்வருமாறு அமைகிறது.

வள்ளுவர் வழங்கும் 'அறிவு'

அறிவுடைமை அதிகாரத்தில் சுட்டப்பெறும் அறிவானது, நன்றின்பால் உய்க்கும் அறிவு.

சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு (அறிவுடைமை-422)

மனத்தை அதுசென்ற புலத்தின்கண் செல்லவிடாது, அப் புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதனின் நீக்கி நல்லதன் கண் செலுத்துவது அறிவு என்று பரிமேலழகர் விளக்குகின்றார். 'குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன் போல வேறாக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவு என்றார். அஃது உயிர்க்குணம் ஆகலான்'[2] என்பது பரிமேலழகரது முத்திரை.

அந்த வரிசையில் முதலில் அமைவது கேள்வியறிவு.

எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (அறிவுடைமை-423)

எண்பொருள ஆகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு (அறிவுடைமை-424)

கேட்டலால் பெறும் அறிவு, மெய்ப்பொருளையும் கடந்து நுண் பொருள் காண்பதாகவும் அமைய வேண்டும்.அடுத்தது, ஒழுகும் அறிவு. அத்தகைய அறிவுக்கு மலர்தல், கூம்பல் இல்லை.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு (அறிவுடைமை- 426)

'உலகம் யாதொருவாற்றான் ஒழுகுவதாயிற்று; அவ் வுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றான் ஒழுகுவது அரசனுக்கு அறிவு'[3] என்கிறார், பரிமேலழகர். அறிவொழுக்கம் புகலும் இத் திருக்குறள் சுட்டும் உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டு.

அறிவு என்ன ஒரே இடத்தில் கிடைக்கும் சந்தைப்பொருளா? எனவே, பலப்பல அதிகாரங்களில் இருந்தும் திரட்டித் தொகுத்துப் பகுத்து, உணர்ந்து கொள்ள வேண்டியதாக இருக்கின்றது.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (மெய்யுணர்தல்-355)

எனும் குறள் உற்றறிந்து உணரும் அறிவைக் கொடுக்கிறது.

'யாதொரு பொருள் யாதோர் இயல்பிற்றாய்த் தோன்றினும், அத்தோன்றிய ஆற்றைக் கண்டொழியாது, அப்பொருளின்கண் நின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய் உணர்வாவது'[4] என்கின்றார் பரிமேலழகர். இதற்கு மேலும் விளக்கம் அளிக்கின்ற அவர், "பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக் கொண்டு, வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்ற உண்மையைக் காண்பது என்றவாறாயிற்று. அஃதாவது, 'கோச்சேரமான் யானைக் கட்சேஎய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை' என்ற வழி, அரசன் என்பதோர் சாதியும், சேரமான் என்பதொரு குடியும், வேழ நோக்கினையுடையான் என்பதோர் வடிவும், சேய் என்பதோர் இயற்பெயரும், மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பதோர் சிறப்புப் பெயரும், ஒரு பொருளின்கண் கற்பனை ஆகலின், அவ்வாறு உணராது, நிலம் முதல் உயிர் ஈறாகிய தத்துவங்களின் தொகுதி

என உணர்ந்து, அவற்றை நிலம் முதலாகத் தத்தம் காரணங்களுள் ஒடுக்கிக் கொண்டு சென்றால், காரணகாரியங்கள் இரண்டும் இன்றி முடிவாய் நிற்பதனை உணர்தலாம். 'எப்பொருள்' என்ற பொதுமை யான், இயங்கு திணையும், நிலைத்திணையும் ஆகிய பொருள்கள் எல்லாம் இவ்வாறே உணரப்படும். இதனான், மெய் உணர்வினது இலக்கணம் கூறப்பட்டது"[5] என்கிறார்.

மற்றைய நூலார் கொடுக்கும் அறிவு விளக்கத்தை, அறிவு நிலையில் உணர்ந்த திருவள்ளுவர், பிறப்பிற்கு ஏற்றத்தாழ்வைக் கற்பித்து, ஊழின் வசத்தில் ஒப்படைத்த மானுட வாழ்வை மீட்க உரைத்த குறள்,

பிறப்பு என்னும் பேதைமை நீங்கச் சிறப்பு என்னும்
செம்பொருள் காண்பது அறிவு (மெய்யுணர்தல்-358)

என்பதாகும். இப்படி அதிகாரங்கள்தோறும் அறிவு குறித்து விளக்கும் திருக்குறளையே தேடித் தொகுத்துணர நாம் தயாராக இல்லாதபோது, இன்னும் எல்லா நூல்களையும் எடுத்துப் படித்து, இவ்வுலகம் அனைத்தையும் உற்றுக் கவனித்துக் கண்டுணரும் அறிவு எப்போது சாத்தியமாகும்?

அறிவுத்தேடல் இன்னும் விசாலமாகிக் கடைசியில் இன்பத்தைத் தேடி இன்னொரு பாலை, மூன்றாம் பாலான, காமத்துப்பாலை எல்லாருக்கும் எழுதிக் கொடுக்கின்றது, திருவள்ளுவஅறிவு.

அங்கும் அறிவு, தரிசனப்படுகிறது. அதுதான் அறிவு நிலைக்கு முற்ற விளக்கம் சொல்லும் அதிசயக் குறளாக அமைகின்றது.

அறிதோ றறியாமை

அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு (புணர்ச்சி மகிழ்தல்- 1110)

(புணர்ந்து உடன்போகின்றான் தன்னுள்ளே சொல்லியது) என்று குறிப்புக் கொடுக்கும் பரிமேலழகர், 'அறிதோ றறியாமை- நூல்களானும், நுண்ணுணர்வானும் பொருள்களை அறிய அறிய முன்னை அறியாமை கண்டாற்போலக் காணப்படாதுநின்றது' என்று குறிப்புத் தந்ததோடு, 'அறிவிற்கு எல்லையின்மையான், மேன்மேல் அறியஅறிய முன்னையறிவு அறியாமையாய் முடியா நின்றது எனத் தன் ஆராமை கூறியவாறு'[6] என்றும் சுட்டுகின்றார்.

'இப்புணர்ச்சி மகிழ்தல் தலைமகட்கும் உண்டேனும் அவள் மாட்டுக் குறிப்பான் நிகழ்வதல்லது கூற்றான் நிகழாமை அறிக'[7] என்று பெண்பால் உணர்வையும் சேர்த்துச் சொல்லி விடுகிறார். ஆண்பால், பெண்பால் இரண்டையும் ஒன்றாக்கி மூன்றாம் பாலை உருவாக்கிவிடும் திருவள்ளுவர், வீடு எனும் நான்காம் பயனையும் இங்கேயே தந்துவிடுகின்றார். ஐம்புலன்களும் அனுபவிக்கும் இன்பத்தை ஒண்டொடிக் கண்ணுளே உள என்று உரைக்கும் பாலும் இதுதான். இதுதான் அழுக்காறு முதலான அனைத்தையும் போக்கி, 'இழுக்கா இயன்றதறம்' என்று உணர்ந்து உயர்த்திக் கொள்ள உதவும் ஆறு. எழுபிறப்புக்கும் ஏமாப்புடைத் தாகும் கல்வி தரும் கலவி. இதன் நுணுக்கம் உணர்ந்தால் எண்வகை மெய்ப்பாடும் கடந்து ஒன்பான் சுவையாகிய சிருங்காரத்தையும் அனுபவிக்க முடியும். இப்படிப் பத்துப் பத்துப் பாக்கள் வழியாக அறிவை அமுதமெனப் புகட்டிய திருக்குறளே ஒரு மருட்கை தரும் இலக்கியம் அல்லவா?

அறிவியல் யுகமென அறியப்பெறும் இந்தவுலகம், காதல் இன்பத்தைக் கலவி இன்பத்தைப் புறந்தள்ளுகிறது. சலிப்புத் தோன்றும் சதைப்பசியைக் காதல் என்று காட்டும் இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டின் பெரும்பாலான (சின்ன, பெரிய) திரைகள் உண்மையில், அறிவை மறைக்கும் மாயத்திரைகள்; சாபக்குறிகள். வக்கிரம் பிடித்த ஊடகங்கள் போலியை மெய்யெனச் சித்திரித்துக் காட்டுவதாய்ச் சித்திரவதை செய்கின்றன. அவற்றின் இயக்கம் யாவும், மலரினும் மெல்லிய காமத்தை, வன்முறை யாக்குகிறது. அதிலும் வன்மம்தான் இருக்கிறது. முறையில்லை. குறையையும் கடந்த வெறி இருக்கிறது. எதையும் சிதைக்கும் வெறி. அறிவைச் சிதைத்துப் புதைக்கும் வெறி. அப்போது நிகழும் விரிசலில் எப்படி வளரும் அறிவு? எவ்வாறு கிடைக்கும் இன்பம்?

"அறிவு நிலைத்த ஒன்றன்று; அது வளரும் தன்மையது. அறிவு வளரவேண்டுமென்றால், அக்கறையோடு நேற்றைய அறிவை ஆய்வு செய்து சமுதாயத்திற்குத் தீங்கு தராத வகையில், ஏற்றுக் கொள்ளும் துணிவு வேண்டும்.காதல் வாழ்க்கையில், உணர்வு கலந்து ஒத்துக் கூடி வாழும் வாழ்க்கையில் இன்பம் மேலும், மேலும் கூடும். அந்த இன்ப வேட்கை தணியாது. மேலும் மேலும் வளரும். சுவைக்கச் சுவைக்க நேற்றையச் சுவையினும் இன்றையச் சுவை மேம்பட்டு விளங்கும். தலைமகன் - தலைமகளிடையே மாறுபாடில்லாது போனாலும், காதற்சுவை புதிதுபுதிதாகத்

தோன்றும். அது, காதலின் இயற்கை. அதுபோலத்தான் அறிவு இயல்பாகவே நாளுக்கு நாள் தழைத்து வளரும். ஆதலால், அறிவைத் தேங்கிக்கிடக்கும் குட்டையாக்கிக் கொள்ளாமல், மேலும் மேலும் புதிய சிந்தனையால் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்பதைத் திருவள்ளுவரின்,

அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு

என்ற குறளால் அறியலாம்"[8] என்று விளக்குகின்றார் அடிகளார்.

இன்பமா? காமமா?

அதனால்தான், இன்பத்துப்பால் என்று திருவள்ளுவர் தந்த பாலையே, காமத்துப்பால் என்று கருதிப் போற்றுகின்றோம்.

இதனைப் புறந்தள்ளும் எந்தச் சமயமும், இன்பத்துக்கு வழி காட்டாது. உண்மையில் இன்பத்திற்குச் சிறியதும், பெரியதுமான எல்லைகள் இல்லை.

"இன்பம் இன்பம் இன்பம்
இன்பத் திற்கோர் எல்லை காணின்
துன்பம் துன்பம் துன்பம்'

என்று பாரதியார் பாடியதுதான் சரி.

எல்லா வுயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற் றாகும் (தொல்.பொருள்-1169)

என்று பேசும் தொல்காப்பியம்,

"காமப் பகுதி கடவுளும் வரையார்'
(தொல்.பொருள்- புறத்திணையியல்-28)

என்று சுட்டுகின்றது. இதனை முன்வைத்து,

"காதல் வாழ்வைச் சிறப்பாகக் கொண்ட தமிழினம், பிற்காலத்தே சமயச்சார்பால் அதனை இழித்துக் கூறத்தொடங்கியது. நிலையாமையை வற்புறுத்தி நிலைத்த இன்பம் பெற இறைவனை வழிபட அறிவுறுத்தியது. காம இன்பம் புறக்கணிக்கப் பெற்றுத் துறவறம் போற்றப்பெற்றதால், பலரும் துறவு மேற்கொள்ள லாயினர். இந்நிலைமையை மாற்றுவதற்காகச் சமயநிலையிலும், சில மாற்றங்கள் ஏற்பட்டன. கோயில் சிலைகளும் சிற்பங்களும் இன்ப உணர்ச்சியைத் தூண்டும் போக்கில் அமைக்கப்பெற்றன.

கண்ணுதற்பெருங்கடவுளும் மாதொரு பாகன் ஆனார். திருமாலும் தன் மார்பில் திருமகளைத்தாங்கினார். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தற்கு இல்லற வாழ்வு தடையாகாது என்று கடவுள் நிலையிலும் காட்டினர்”[9] என்கின்றார் இரா. சாரங்கபாணி.

காமத்திலிருந்து கடவுளுக்கு...

‘காமத்திலிருந்து கடவுளுக்கு’ என்று வழிகாட்டும் ஓஷோ எனப்படும் ரஜனீஷ், ‘காமம் என்பது சிற்றின்பத்திற்கான ஒரு கருவியாக மட்டும் இருத்தல் கூடாது. ஆன்மிக உயர்வுக்கு ஒரு வழியாக இருக்க வேண்டும். பாலுணர்ச்சி ஒரு யோகமுறை போன்றது. புத்தர், மகாவீரர், ஏசுநாதர் ஆகியோரின் பிறப்பு ஏதோ எதிர்பாராமல் நடந்ததில்லை. பெற்றோர் ஒன்று கலத்தலினால் கிடைத்த பழங்களே. ஒன்றுகலத்தல் நன்றாக அமையாவிடின் சந்ததி இழிந்ததாக அமையும்’[10] என்கிறார்.

எனவே, பிறவிப்பெருங்கடல் நீந்த வேண்டிய ஒருவன் அல்லது ஒருத்தி இல்லையில்லை இருவரும், இணைந்து முதலில் கடக்க வேண்டியது காமக்கடல்.

இது இணையில்லாமல் கடக்க இயலாத கடல். அதனால்தான், பிரிவாற்றாத தலைமகள் பின்வருமாறு படர்மெலிந்து இரங்கிப் புலம்புகிறாள்.

1. காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல் (படர்மெலிந்து இரங்கல்-1164)

2. இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதுஅடுங்கால்
துன்பம் அதனில் பெரிது (படர்மெலிந்து இரங்கல்-1166)

3.காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளன் (படர்மெலிந்து இரங்கல்-1167)

அறிவின் ஆழநீளம் அறிந்துரைக்கும் திருவள்ளுவர், ‘அறிதோ றறியாமை’ கண்டு அதனைத் தலைவன் குரலில் தந்தது வியப்புத் தான். ஒருத்தியோடு உறைந்து வாழும் ஒருவனுக்கு உரிய இந்த வியப்பை ஒவ்வொரு - ஒருத்தனும், ஒருத்தியும் உணரவிடாது தடுக்கும் அறியாமை நீக்கும் அறிவு தருவது காமத்துப்பால்.

உடைநீக்கி உடல்பார்க்கும் வெறி கடந்து உடல்கடந்து மனம் பார்கும் அறிவு எப்போதும் தேவை. மலரினும் மெல்லிது காமம் அல்லவா?

வினாக்குறியாகும் காதலை வியப்புக் குறியாக்கி, இருபால் இணைவையும் சமக்(=)குறியாக்கும் திருக்குறள்கூட அறிதோ றறியாமை காட்டும் அதிசயக்கடல்தான். இறங்கி நீந்தாமல் கரையில் இருந்து வியந்து வேடிக்கை பார்ப்பதும்கூட ஓர் அறியாமைதான் என்பதை இந்தக் குறளை எடுத்துப் படிக்கும்போதுதான் அறிய முடிகிறது.


'மதிமை சாலா மருட்கை என்பது அறிவினை உலக வழக்கினுள் நின்றவாறு நில்லாமல் திரித்து வேறுபடுத்து வருவது'[11] என்று பேராசிரியம் தொல்காப்பியத்திற்குப் பொருள் கொடுக்கும். திரிபு இன்றி இயல்பாகிய அறிவுடன் கூடிய நிலையில் மருட்கை தோன்றுவதற்கு இடம் இல்லை என்று உறுதிபட உரைக்கின்றார் பேராசிரியர்.

"முன்னறியா யாணர்த் தன்மை; அஃதாவது, 'நூதனம்'என்ற குறிப்புத் தந்து, "யாதொன்றானும் எவ்விடத்தினும் எக்காலத்தினும் தோன்றாததோர் பொருள் தோன்றிய வழி வியத்தல். அது கந்திருவர் அந்தரம் போவது கண்டு வியத்தல் போல்வன"[12] என்று விளக்கம் நல்குகின்றார் இளம்பூரணர்.

இளம்பூரண வியப்பை இன்றைக்கு அறிவியல் சாத்தியம் ஆக்கியிருக்கின்றது. சிறுமையும், பெருமையும், அறிவியல் ஆக்கத்தால் புதுமையான காலத்தில், செல்லுபடியாகாத உரையாசிரியர்களது குறிப்புகளைக் கடந்து ஐம்புலனும் துய்த்து உணர்ந்து கொள்ளத் துணை செய்யும் காமத்தை அதிசய அறிவாய் அடையாளம் காட்டும் திருக்குறளைப்போல் அறிவைத் திரிக்காமல் அமுதமென ஊட்டும் அதிசயப் புதுமை நூல் வேறு உண்டோ? என்று கேட்கத் தூண்டுகின்றது.

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.11.
2. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.50.
3. மேலது, ப.54.
4. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப.330.
5. மேலது, ப.330-331.
6. திருக்குறள் உரைக்கொத்து, காமத்துப்பால், ப.42.
7. மேலது, பக்.42-43.
8. குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை, தொ-1, பக்.375-376.
9. முனைவர். இரா.சாரங்கபாணி, வள்ளுவர் வகுத்த காமம், ப.10.
10. மேற்கோள், நூல் மேலது, ப.5.
11. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.11.
12. டாக்டர் ந.சுப்புரெட்டியார், தொல்காப்பிய வாழ்க்கை, ப.267.



திருவள்ளுவரை அச்சுறுத்திய தீவினை

'அறிதோறும் அறியாமை வருகிறதோ, இல்லையோ அச்சம் வந்துவிடுகிறது' என்றார் ஓர் அறிவுஜீவி. எப்படியென்று கேட்கு முன்னர், அவரே சொன்னார். "இத்தனை அறிவியல் தொழில் நுட்பம் ஏதும் இல்லாத அக்காலத்தில் இருந்த இன்பத்தையும், அமைதியையும் மொத்தமாய்த் தொலைத்து விட்டோம்!"

இது அறிவின் விளைவா? அறியாமையின் விளைவா? என்று ஆராய்ச்சி செய்யும்போது, அறிவின் நிழலில் அறியாமை தங்கியிருப்பது துலக்கமாகின்றது. இப்போதும் அறிதொறும் அறியாமையே வெளிப்படு கின்றது. 'அது கிடக்கட்டும். அச்சம் ஏன் வருகிறது?

அதற்கான தோற்றுவாய் எது?' எனக் கேட்டவரைக் கூட்டிக் கொண்டு தொல்காப்பியரைத் தஞ்சம் புகுந்தேன்.

தொல்காப்பிய 'அச்சம்'

அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே (தொல்.-.1202)

என்கின்றது தொல்காப்பிய நூற்பா. "அணங்கென்பன. பேயும், பூதமும், பாம்பும் ஈறாகிய பதினெண் கணனும் நிரயப்பாலரும் பிறரும் அணங்குதற்றொழிலராகிய சவந்தின் பெண்டிர் முதலாயினாரும், உரு மிசைத் தொடக்கத்தக்கனவுமெனப்படும்"[1] என்கின்றார் பேராசிரியர்.

'விலங்கென்பன, அரிமா முதலாகிய அஞ்சுதக்கன' என்றும், கள்வரென்பர் தீத்தொழில் புரிவார்' என்றும் குறிப்பிடுகின்ற அவர், 'இறையெனப்படுவார் தந்தையும் ஆசிரியரும் அரசரும் முதலாயினார்'[2] என்கின்றார்.

அணங்காகும் பெண்

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும் என்நெஞ்சு? (தகையணங்குறுத்தல்-1081)

என்று மரபுவழிச் சுட்டியபோதிலும், அணங்குகுறித்தோ, பூதம், பாம்பு முதலானவை குறித்து அஞ்சும் நிலையிலிருந்து இன்றைய மானுடம் விலகிவந்துவிட்டதுபோல், வள்ளுவமும் விலக்கி உயர்ந்திருக்கின்றது. விலங்குகள் குறித்தும் பெரிதாய் அது அஞ்சி விடவில்லை. கைவேல் களிற்றொடு போக்கி மெய்வேல் பரியா நகும்' வீரம்பொருந்திய மானுடம் அல்லவா, வள்ளுவ மானுடம்!

விலங்காகும் மானுடம்

அப்படியானால், திருவள்ளுவர் எதுகுறித்து அச்சம் கொள்கிறார்?

கல்லாத மானிடரை விலங்காக்கி அஞ்சுகின்றார்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் (கல்லாமை-410)

என்பது குறள். 'கல்லாதார் விலங்கு'[3] என்கின்றனர் மணக்குடவரும் பரிப்பெருமாளும். "நாற்கால் சீவனாகிய மிருகத்திற்கும் மனிதத்திற்கும் எத்தனை தூரமுண்டு; அத்தனை தூரமுண்டு

கல்லாதாற்கும் கல்வியுள்ள பேர்க்கும் என்றவாறு"[4] என்கின்றார் பரிதியார்.

பொதுவாய், விலங்குகள் சாதுவானவை. கொடிய விலங்குகளும் உண்டு. ஆனால் உருவத்தை வைத்து அவற்றை அடையாளம் காண முடியும். அவற்றை அச்சமின்றி எதிர்கொள்ளும் ஆயுத பலமும் அறிவு வளமும் நமக்கு உண்டு.

அதேசமயம், தோற்றத்தைக் கொண்டு கண்டுபிடிக்க முடியா வண்ணம் உருவத்தால் மானுடராகவும், அறிவால் விலங்காகவும் இருப்போரைக் கண்டு அஞ்சாமல் இருக்க முடியுமோ?

அச்சம் திடுக்கிடத் தோன்றுவதாகும். கற்றார்க்கும் கல்லார்க்கும் வேறுபாடு தெரியாத நிலையில் கலந்து பழகுகையில், கல்லாதார் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும்போது திடுக்கிட வைக்கும் அச்சம் தோன்றக்கூடுமே!

வள்ளுவருக்கு வந்த அச்சத்தின் எச்சம் தான் பாரதியாரிடம் இப்படிப் பதிவாகிவருகிறது. அவர் தம் காலத்தை நினைவுகூர்ந்து எழுதுகிறார்: "இந்தக்குறள்தற்காலத்து ஆசாரத்திருத்தக்காரர்களில் ஒருவரால் இயற்றப்பட்டதன்று. தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரால் இயற்றப்பட்டது. படிப்பில்லாதவர்களையும், படித்தவர்களையும் ஒப்பிட்டு நோக்கினால், மிருகங்களையும் மனிதர்களையும் ஒப்பிடுவது போலுமென்கிறார் வள்ளுவர்."[5]

திருக்குறளில் விலங்கு எனச்சுட்டப்பெற்றாலும், மெல்லிய அச்சந்தரும் தன்மையில் அது மிருகமாவதைப் பாரதியார்தம் பதிவில் இருந்து காணலாம். ஆனாலும் கூடத் திருவள்ளுவருக்கு அச்சத்தைவிடவும் அவர்கள் மனிதர்கள் ஆகவில்லையே என்கின்ற ஆதங்கம்தான் இக்குறளில் மேலோங்கிநிற்கின்றது.

கள்வராகும் மூவர்

தொல்காப்பியர் காலம் வரை, அணங்கிற்கும் விலங்கிற்கும் அடுத்து மக்கள் அஞ்சியது கள்வர்களுக்கு. திருவள்ளுவருக்குக் கள்வர்பால் அச்சம் தோன்றவில்லை. மாறாக, இரக்கம்தான் மேலிடுகிறது. அவர்கள் நல்லவர்கள் ஆவதற்கு அறம் பாடுவதே அவருக்கு அறமாகத் தோன்றியிருக்கின்றது. கள்ளாமையை வலியுறுத்தி ஓர் அதிகாரம் படைக்கிறார்; 'எள்ளாமை வேண்டு மெனில் கள்ளாமை வேண்டும்' என்கிறார்;

களவினால் ஆகிய ஆக்கம் அளவு இறந்து
ஆவது போலக் கெடும் (கள்ளாமை- 283)

என்று அறம்பாடுகின்றார்.

உண்மையில் அவர் நோக்கில் யார் கள்வர்? ஆராய்ந்து பார்த்த திருவள்ளுவரிடம் அகப்பட்டவர்கள் இருவர்.

முதலாமவர். உறுவது சீர்தூக்கும் நண்பர்.

இரண்டாமவர் பெறுவது கொள்வார் - பொருட்பெண்டிர்; விலைமகளிர்.

இவர்கள் இருவரையும் கள்வருக்கு நேராக நிறுத்துகின்றார் திருவள்ளுவர். இவ்விருவரும், பிறர் பொருளைக் கள்ளத்தால் களவுகொள்ள, நட்பையும் நட்பின் மேலான அகவுறவையும் காட்டிப் பொருளை முன்வைத்து ஏமாற்றியவர்கள். நல்லவர்போல் நடித்த கள்வர்கள்; ஆணும் பெண்ணுமாகச் சமமான கள்வர்கள். இவர்கள் குறித்துக்கூட அச்சம் இல்லை. திருவள்ளுவருக்கு. அஞ்சாமல், அதே சமயம் ஏமாறாமல் மக்கள் விழித்துக் கொள்ள வேண்டிப் பின்வரும் குறளைக் கூறுகின்றார் அவர்.

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர் (தீநட்பு-813)

ஊர் கூடி, ஒரு திருடனைக் கையும் களவுமாகப் பிடித்து நிறுத்தித் தண்டிக்கும் வேளையில் உண்மையான திருடர்கள் என்று இருவரைப் பிடித்துக்கொண்டுவந்து நிறுத்தும் காவலர்போலத் திருவள்ளுவர் இக்குறட்பாவின்மூலம் காட்சியளிக்கின்றார். "நம்மிடம் ஆதாயம் கருதிப் பழகுகின்றவர்களும், திருடர்களும் விலைமகளிரும் சமம் என்பது திருவள்ளுவரின் மதிப்பீடு"[6] என்பது குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் மதிப்பீடு.

இவ்விருவரை அடுத்துத் திருவள்ளுவர், இன்னொரு திருடரை அடையாளம் காட்டுகின்றார். அவர் அரசர். தொல்காப்பியம் நிறைவாகத் தரும் அச்சத்திற்கு உரிய இறை. இதற்கு விளக்கம் அளிக்கும் பேராசிரியர் கருத்தைக்கொண்டு பார்த்தால், உண்மையில், தந்தையும், ஆசிரியரும் அன்பிற்குரியர். இறையாகிய அரசரோ முறை செய்து காப்பாற்றவேண்டியவர். ஆனால் அவர் முறை தவறி செங்கோன்மைவிட்டுக் கொடுங்கோன்மை புரிவாராயின் அவரே கள்வர் என்கின்றார் திருவள்ளுவர்.

யானோ அரசன் யானோ அரசன் (சிலம்பு:)

என்ற சிலம்பு வரி இங்குச் சிந்திக்கத்தக்கது.

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு (கொடுங்கோன்மை-562)

என்கிற குறளில், வேலொடு நின்றான் எனும் தொடர், ஆறலைக்கும் இடத்துத் தனியே வேல் கொண்டு நின்ற கள்வன்' ஆகிய ஆறலைக் கள்வனைக் குறிக்கின்றது.

“வேலொடு நின்றான்' என்றதனால், பிறரொடு நில்லாமையும், 'இரவு' என்றதனால், இறைப்பொருள் அன்மையும் பெற்றாம். தாராக்கால் ஒறுப்பல் என்னும் குறிப்பினனாகலின், இரவற் கோடலும் கொடுங்கோன்மை ஆயிற்று”[7] என்று பரிமேலழகர் விளக்கம் அளிக்கின்றார்.

“நிச்சயித்த கடமைக்கு மேல் வேண்டுகோளாகக் கொள்ளினும், அது வழியிற்பறிப்பதனோடு ஒக்கும்”[8] என்பது மணக்குடவர் விளக்கம். இன்றைய நிலையில் கையூட்டு அல்லது அன்பளிப்பு எனக் கொள்ளவும் இடம் வைக்கும் இக்குறள். இத்தகைய அரசன் கொலை புரியும் கொடியனைவிடவும் கொடியன் என்கின்றார் திருவள்ளுவர்.

ஆக, அணங்கும், விலங்கும் அச்சுறுத்தாத திருவள்ளுவரைக் கள்வராக வந்து அச்சுறுத்துவோராக கொடுங்கோல் அரசரும், பலன் கருதிப் பழகும் நண்பனும், விலைபெற்று உறவாடும் பொருட்பெண்டிரும் நிற்கின்றனர் என்றும் கூடக் கருத முடிய வில்லை. இவற்றிற்கெல்லாம் பின்னால் இருப்பது பொருளாதாரப் பிரச்சினை.

அவரவருக்குத் தேவைக்குரியன கிடைத்துவிட்டால் ஏன் திருட்டு நடக்கின்றது? பொருளுக்காக ஏன் பொய்முயக்கம் ஏற்படப்போகின்றது? நட்பு எப்படிச் சரியும்? இன்மை அல்லது பற்றாக்குறை என்பதை விட எல்லாருக்கும் எல்லாம் என்பதான ஒப்புரவு நிலை இல்லாத தன்மைதான் காரணம். இவற்றை ஈடுசெய்ய அறத்தைப் போதிக்கின்றார். ஈத்துவக்கும் இன்பத்தை வலியுறுத்துகின்றார். நடக்கவில்லையே! ஒரு மனிதர் முன்பு இன்னொரு மனிதர் 'இடு' என்று இரங்குவதுதான் அவருக்குப் பெரிய அச்சத்தைத் தந்து விடுகின்றது.

அஞ்சலும் அஞ்சாமையும்

'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்ற திருவள்ளுவர், 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' என்றும் கூறியிருக்கின்றார். அச்சத்திற்கும், அஞ்சாமைக்கும் இடையில் திருவள்ளுவர் நடத்தும் தர்க்கம் அற்புதமானது. குறட்பாக்களுள் இவை குறித்த பதிவுகள் இருப்பது போக, அதிகாரத்துள் வைத்த அச்சங்கள், இரண்டு. ஒன்று, இரவச்சம். மற்றொன்று தீவினை அச்சம்.

'இரவச்சம்'

இரவு+அச்சம்=இரவச்சம்: இரத்தற்கு அஞ்சுதல். பரிமேலழகர் சொல்வதுபோல், "அஃதாவது, மானம் தீர வரும் இரவிற்கு அஞ்சுதல்."[9]

பேய், பூதங்களைவிட, வல்விலங்குகளைவிட, கள்வர்களை விடவும் அச்சுறுத்தும் அவமானப்பேய், இது. மாற்றாருக்குமுன்பே, உள்நின்று அறுக்கும் மனச்சான்று. இது பொருட்பாலில் நின்று திருவள்ளுவர் புகட்டும் அறிவு. நல்குரவாகிய வறுமைவழி வந்த இரவுக்கு அஞ்சுதல் மானுடத்திற்கு அறம்.

உண்மையில் இது அச்சம் அன்று. ஆண்மை. பாரதியார் குறிப்பதுபோல், அச்சந்தவிர்க்கும் ஆண்மை. அதனால்தான்,

இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின் வன்பாட்டது இல் (இரவச்சம்–1063)

என்கிறார் திருவள்ளுவர். 'வறுமையால் வந்தெய்திய துன்பத்தை முயன்று நீக்குவேன் என்று கருதாது, இரந்து நீக்குவேன் என்று கருதும் வன்மைபோல, வலிய முருட்டுத்தனம் பிறிதில்லை' என்கிறது இக்குறள்.

'இரவன்மின்'

இத்தகு இரத்தலைவிடவும், இரந்துநின்றோரைக் கண்டு கரத்தல், அதனினும் கொடியது. அதனால்தான் இரப்பவர்களைவிட, கரப்பவர்களைக் கண்டு அஞ்சுகின்றார் திருவள்ளுவர். இரப்புக்கு அஞ்சவேண்டும் என்று அறமுரைக்கின்ற திருவள்ளுவர், தாமே இரக்கும்நிலைக்கு இறங்குகின்றார். அதுவும் யாரிடம்? இருப்பவர்களிடம் அல்ல, இரப்பவரிடமே!

எதற்காக?

இரப்பன்- யான் இரப்பேன்.

(யாருக்காக?

தனக்காக அன்று. இல்லையில்லை தனக்காகத்தான். அறமுரைக்கும் தனது அறத்தினின்று வழுவாதிருக்கும் அறத்தால்தான்!)

யாரிடம்?

'இரப்பாரை எல்லாம்.'

எதற்காக?

'இரக்காதீர்கள் என்று.'

இரக்க நேர்ந்தால்?

'மறுபடியும் உங்களிடம் இரப்பன்.'

எதற்கு?

'கரப்பார் - கரப்பவர்முன்- இருப்பதை இல்லை என்று சொல்லி மறைப்பவர்முன் -இரவன்மின் என்று.'

ஏன்?

பரிமேலழகர் பரிந்து எழுதுகிறார்: "இதனான் மானம் தீர வரும் இரவு விலக்கப்பட்டது"[10] என்று.

இப்போது திருக்குறளைப் பார்க்கலாம்.

இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று (இரவச்சம்- 1067)

சிறிதும் அஞ்சாமல் இரப்பன் என்று சொல்லித்தான் திருவள்ளுவர் தொடங்குகின்றார். இது மானம் தீரவரும் இரவன்று. மானம் பேண வரும் வீரம். அதுவும் தன்மானம் அன்று. பிறர் மானம். தமிழன்தன்மானம். மானுடத்தின் உயர்மானம். கரப்பார் மீதும் கரிசனம் காட்டும் திருக்குறள் இது. இது வறுமையின்பாற் பட்டது. பொருளொடு தொடர்புடையது. புறம் சார்ந்தது. இது புறத்தே தோன்றி நீங்கிவிடும் அச்சம். மற்றொன்றோ, அக அச்சம். உள்நின்று உடற்றும் அச்சம், அது தீய அச்சம், தீவினை அச்சம்.

'தீவினையச்சம்'

தீ(ய)+வினை+அச்சம்=தீவினைச்சம்;'அஃதாவது, பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல்'[11] என்பது பரிமேலழகர் தரும் விளக்கம்.

பாவங்களின் தோற்றுவாய், இரண்டு. ஒன்று, இன்மை. மற்றொன்று அழுக்காறு.

இன்மையெனும் ஒரு பாவியால் நேருவது வறுமை; நல்குரவு. அதன் காரணமாய்த் தோன்றும் அச்சம், இரவச்சம். இது புறப் பாவியால் தோன்றும் புற அச்சம்.

மற்றொரு பாவியான அழுக்காறு, அகப்பாவி. அப்பாவி மனிதர்களையும் காவுகொள்ளும் பெரும்பாவி. அழுக்காறு என்னும் பாவி என்னவெல்லாம் செய்வான் என்று முன்கூட்டித் தீர்மானிக்க முடியாது என்றாலும் ஒருசிலச் சொல்லிப் பார்க்கின்றார் திருவள்ளுவர்.

பிறகு, இரு பாவிகளும் ஒருசேரக் கூடிச் செய்யும் தீவினையை முன்வைத்துப் பின்வரும் திருக்குறளைச் சொல்கிறார்.

இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து (தீவினையச்சம்-205)

'இலன் என்று தீயவை செய்யற்க. வறுமை காரணமாகத் தீவினை செய்ய முயலாதே. செய்தால், அது உன்னை இன்னும் வறியன் ஆக்கும்' என்பது இக்குறளறம்.

வறுமை காரணமாகத் தீவினை புரிந்த யாவரும் சட்டத்தின்முன் வரும்போது பெறும் தண்டனை அவர்தம் இன்மையை இன்னும் அதிகமாக்கி விடுகின்றது என்பது நிகழ்வு.

தன்னையும் அறியாமல் மறந்தும் பிறன் கேடு சூழவேண்டாம் என்றும் இவர் எச்சரிக்கின்றார். சூழ்ந்தால், அறம் சூழும்.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு (தீவினையச்சம்-204)

அதனையும் மீறிச் சூழும் கேட்டிற்குத் தப்பிவிட ஒரு வழியும் நிறைவாய்க் காட்டுகின்றார் வள்ளுவர். அவ்வாறு தப்பிப் பவனுக்குத் தக்கதாய் ஒரு புதுப்பெயரும் தருகின்றார். அதனை, 'அருங்கேடன்' என்று அறிவிக்கிறார்.

'அருங்கேடன்'

'அருங்கேடன் என்பது அறிக'

யார் அவன்?

'மருங்கு ஓடித் தீவினை செய்யாதவன்'

அதாவது, செந்நெறிக்கண் செல்லாது கொடுநெறிக்கண் சென்று பிறர்மாட்டுத் தீவினைகளைச் செய்யாத ஒருவன்.

முடிவில் 'எனின்' என்ற நிபந்தனைச்சொல்லை வைக்கிறார், வள்ளுவர். அதாவது, அருங்கேடன் என்று அறிந்து கொள்க! (நேருருறச் செல்லாது) மருங்குஓடித் தீவினை செய்யா(தவ)ன் என்றால்!

இந்த அறிவிப்பு யாருக்கு?

ஊருக்கு அல்லவாம். ஒவ்வொருவனின் உள்ளத்திற்குமாம்!

மணக்குடவர் சொல்கிறார்: "ஒருமருங்கு ஓடிப் பிறர்க்குத் தீவினைகளைச் செய்யானாயின் தனக்குக் கேடு வருவதில்லையென்று தானே அறிக என்றவாறு. இது கேடில்லை என்றது"[12]

அருங்கேடன் என்பது அறிக மருங்குஓடித்
தீவினை செய்யான் எனின். (தீவினையச்சம்-210)

இங்கே, இத்திருக்குறளைக் கொண்டு ஒரு கண்ணாமூச்சி யாட்டம் காட்டுகின்றார், திருவள்ளுவர்.

இரண்டு எதிர்மறைகளை எதிர் எதிரே நிறுத்தி ஒரு உடன் பாட்டுக் கருத்தை உண்டாக்கிவிடுகிறார்.

.இந்தத் தீவினை இருக்கிறதே, செய்யவேண்டாம் என்று கருதி யிருக்கிறவனையும் செய்ய வைத்துவிடும். சும்மா இருப்பவனையும் வம்புக்கிழுக்கும் தீமை அதற்கெதிராகத் தீமையைச் செய்விக்கும். எனினும், தீமைக்கு எதிர் தீமையன்று. நன்மையே. நெருப்புக்கு எதிர் நெருப்பன்று. நீர் என்பதுபோல.

இந்த உண்மையைப்பின்வரும், பாடலடியைச் சான்று காட்டி விளக்குகின்றார், பரிமேலழகர். 'சென்று சேக்கல்லாப் புள்ள உள்ளில், என்றூழ் வியன்குளம்'[13]அகநானூறு-42) (சேக்கல்லா- தங்காத; புள்ள- பறவைகள்; என்றூழ்- வெப்பம்)

குளம் - நீர்நிலை. இங்கே நீர் இல்லை. அதனால் பறவைகள் வந்து தங்கவில்லை. அதனால் வெப்பம் தங்கியிருக்கின்றது. வெப்பம் போகவேண்டுமானால் பறவைகள் வந்து தங்கினால் ஆகுமா? நீர்தான் வேண்டும்.

இங்கே வெப்பத்திற்கும் நீருக்கும் இடையில் பறவைகளைக் கொண்டு வந்து நிறுத்துகிற இச்சங்கப்பாடலைப்போல, சூழலுக்குள் சிக்கித் தவிக்கும் ஒருவனைத் தீவினைக்கண் இருந்து காப்பாற்றத் திருக்குறள் அரும்பாடுபடுகிறது.

திருவள்ளுவர் முடித்த குறளுக்குப் பரிமேலழகர் உரை விரிக்கிறார்.

இங்கே, 'அருமை- இன்மை' என்ற பொருள் கொண்டு வந்தது என்று பரிமேலழகர் விளக்கம் தந்தாலும் வந்துவிடுமோ? என்ற அச்சம் வள்ளுவருக்கு வந்த விளைவுதான் அருங்கேடன் என்று சொன்னார் போலும்! அருமை+கேடன் = அருங்கேடன்.; அதாவது அரிதாகிய கேட்டை உடையவன்; கேடு வருவது அரிது. என்றாலும், தீவினை காரணமாக வந்துவிடுமோ என்ற அச்சம் தொனிக்கும் சொல் இது.

"ஓடி என்னும் வினையெச்சம், 'செய்யான்' என்னும் எதிர்மறை வினையுள் செய்தலோடு முடிந்தது. இதனால், தீவினை செய்யாதவன் கேடிலன் என்பது கூறப்பட்டது."[14]

இதை அனுபவவாக்காய், 'நல்ல சுழி நடுவிருக்கக் கோட்டான் சுழி குறுக்கே ஓடுவது' என்று சொலவடை சொல்லும். சுழி- என்றால் புத்தி. நடுவின்மையிழந்து புத்தியானது சுழித்திருப்பது என விளக்கம் கொள்ளலாம். இந்தச் சுழிதான் தீவினை செய்ய வைக்கின்றது. அவ்வாறு செய்பவர்கள் கேடர்கள் ஆகி விடுகிறார்கள். உள்ளச் சுழிவு, செயல் சுழிவாகி, என்றும் அழியாத பாவச்சுழி போட்டு அவனை வீழ்த்திவிடுகிறது.

அதனால்தான், பரிதியார், "கேட்டுக்கும், பாவத்திற்கும் உள்ளல்ல இவன் என்று அறியப்படும்; வாக்கினாலும், காயத்தினாலும், மனத்தினாலும் பாவத்தை அறியாதவன் என்றவாறு"[15]என்கின்றார்.

நேரடியாகக் கூடச் சொல்வதற்கு அஞ்சித்தான் திருவள்ளுவர் இப்படியெல்லாம் இலக்கணத்தைக் கொண்டு சுற்றி வளைத்துச் சொல்கிறாரோ?

தீயினும் அஞ்சத் தக்க தீமை

இப்படி எண்ணவும் முடியாதபடிக்கு என்னென்னவோ செய்து விடக்கூடிய தீவினை குறித்த அச்சம்தான் திருவள்ளுவரைப் பெரிதும் அஞ்ச வைத்த பேரச்சம்.

இந்த அச்சம் தீய அச்சம். தீயினும் அஞ்சத் தக்க தீய அச்சம். தீ என்றால் அவ்வளவு அச்சமா?

தீயினால் சுட்டபுண் ஆறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு (அடக்கமுடைமை- 129)

என்று சொன்ன திருவள்ளுவர் நாக்குத்தான், தீயினும் அஞ்ச வைக்கும் தீவினை பற்றித் திருக்குறள் பாட வைத்திருக்கின்றது. 'திருடன் புகுந்த வீட்டிலாவது மிச்சமிருக்கும், தீப்பிடித்த வீட்டில் என்ன இருக்கும்?' என்ற சொலவடையும், 'எரிகிற வீட்ல புடுங்குறது ஆதாயம்' என்ற தீவினை புரியும் நவீனக் கள்வரையும் காட்டிக் கொடுக்கும் சொலவடையும், திருவள்ளுவநெறிநின்று தமிழர்கள் அனுபவித்து உரைத்த பழமொழிகள்தாமே!

தீவிளையாட்டைவிடத் தீமை தருவது தீவினையாட்டம் என்பதால்தான், 'தீயினும் அஞ்சப்படும்' என்றார் திருவள்ளுவர். பாம்பு, பேய், பூதங்களைவிடவும் தீவினை புரியும் தீயவனைக் கண்டு அச்சப்படுகின்றார், திருவள்ளுவர்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் (தீவினையச்சம்- 202)

தீயினும் அஞ்சப்படுதற்குக் காரணம்

தீவினை தீயினும் அஞ்சப்படுதற்கு யாது காரணம்? இந்த 'உம்'மிலும் எத்தனை அழுத்தம்! திருவள்ளுவர் ஒரு 'உம்' போட்டால் போதாதா, உரையாளர்களுக்கு?

இக்குறட்பாவின் சொல் இடைவெளிகளில் அனுபவம் நிரப்பி உரையாசிரியர்கள் பலப்பல உரை தருகின்றனர். ஒவ்வொன்றும் அதனதன் இயல்பிற்கேற்பப் பொருந்திச் சிறப்பது திருக் குறளுக்கும் மெருகூட்டுகின்றது.

அக்கினி- குஞ்சென்றும், மூப்பென்றும் உண்டோ? நெருப்பைப் பொட்டலங்கட்டித் தரும் முயற்சியில் ஒப்பனைகள் வேண்டாமே! பிறப்பைப்போல நிர்வாணமாய் விளங்கும் கருத்தை, நெருப்பு ஒத்த கருத்தை முன்னொட்டுப் பின்னொட்டின்றி, உரையாசிரியர் களது பெயர்களோடு மட்டும் தருகின்றேன். அவரவர்க்குப் பட்ட சூடு, அக்கருத்து நெருப்பினை நினைவுறுத்தும் அல்லவா?

"பாவம் பாவத்தையே விளைத்தலால், பாவத்தை நெருப்பினும் பெரிது என்றால், நெருப்பு வேலைச் சுடமாட்டாது. பாவம் வேரளவாகச் சுட்டுப்போடும் என்றவாறு"[16] - பரிதியார்.

"தீத்தொழிலானவை தமக்குத் தீமை பயத்தலானே அத் தொழில்கள், 'தொடின்சுடும்' என்று தீக்கு அஞ்சுதலினும் மிக அஞ்சப்படும் என்றவாறு"[17] - மணக்குடவர்.

"பிறிதொரு காலத்தும் பிறிதொரு தேயத்தும் பிறிதோ ருடம்பினுஞ் சென்று சுடுதல் தீக்கு இன்மையின், 'தீயினும் அஞ்சப் படும்' என்றார்"[18]- பரிமேலழகர்.

"நெருப்பு, தொடின் தப்பாமல் சுடும். அதுபோலத் தீயவினை தப்பாமல் தீமை செய்யும். தீயின் இயல்பு நன்மை செய்தலே; உலகத்தின் ஆக்கமும் வளர்ச்சியும் தீயினாலேயாம். எல்லை இகந்து தொட்டால் சுடும். மற்றபடி தீயினால் விளையும் பயன்கள் ஆயிரம். ஆயிரம். தீயவினைகளால் நன்மை சிறிதும் இல்லை; இன்பமே இல்லை. துன்பந்தான் கிடைக்கும். ஆதலால், தீயவை தீயினும் அஞ்சப்படும்"[19] என்கிறார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

அவர்மேலும், "தீயைவிடத் தீமை கொடிது. தீ சார்ந்ததை மட்டுமே எரித்து அழிக்கும். அது தீமை தோன்றும் இடத்தையும் அழிக்கும். சேரும் இடத்தையும் அழிக்கும். தீ, ஒரோவழி பயன் படும்; தீமை பயன்படாது. அது, அறவே தீது; முற்றிலும் தீது. ஆதலால், தீயன சொல்லற்க. தீயன செய்யற்க. தீமை செய்தலைத் தவிர்த்திட ஒரே வழி நல்லன செய்தலேயாம்."[20] என்கிறார்.

அது சரி, 'நன்றாற்றலுள்ளும் தவறுண்டே!. அவரவர் பண்பறிந் தாற்றாக்கடை' என்கிறாரே வள்ளுவர், எதனால்?

பாம்புக்குப் பால் வார்த்தாலும் அது விடத்தைத்தானே கொடுக்கும்; படையும் நடுங்கச் செய்யும் பாம்பும் நடுங்கும் தீ கூடத் தீவினை கண்டு அஞ்சும்போது, திருவள்ளுவர் அஞ்சாமல் இருக்க எப்படி முடியும்?

துறைதோறும் துறைதோறும் அறிவியல் எழுந்து ஆளுமை புரியும் இந்தக் காலத்தில், அதனால் விளையும் அமைதியைவிட, அச்சம்தான் மேலோங்கிவருகின்றது. காரணம், நல்வினை ஒழித்த தீவினைகளின் எழுச்சி.

ஆயுதங்கள்கூட அச்சத்தின் வெளிப்பாடாகத்தான் இருக்கின்றன. அஞ்சாமை என்பது நெஞ்சுக்குள் இருத்தல்

வேண்டும். அதுகூட, அஞ்சுவது அஞ்சாத பேதைமையாய் இருக்கின்றது. பேதைமையால் விளையும் அச்சத்தைவிடவும் அபாயகரமானது, தீவினையால் விளையும் பயங்கரவாதம்.

எந்நேரத்தில், எங்கு என்ன நிகழுமோ என்று கணிக்க வொண்ணாநிலையில், உலகெங்கும் தலைவிரித்தாடும் பயங்கரத்தின் உற்பத்தி மூலம், தீவினை.

இந்த வேளையில் உலகின் எந்த மூலையில் எத்தகு வடிவில் தீவினை எழுமோ என்ற அச்சம், திருவள்ளுவரோடு நல்லவர்கள் எல்லாருக்கும் எழுவது இயற்கைதானே!

வருத்தம் போக்கும் வழி

என்ன செய்வது? அச்சத்திலிருந்து அஞ்சாமைக்கு இட்டுச் செல்வதுதான் திருக்குறளின் கடப்பாடு அல்லவா?

இத்தகு அச்சம் தோன்றுதற்குமுன்பே, கடவுள்வாழ்த்துப் பகுதியில் வழிவைத்துக் காட்டி வழிபடவும் சொல்லிவிட்டார், திருவள்ளுவர்.

'இருள்சேர் இருவினையும் சேரா' -

யாரை?

'இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு!'

எப்படி?

தீவினைக்கு எதிர்வினையாகிய நல்வினையும் சேராவண்ணம் தற்காத்தல் இயலும். நல்லதும் தீயதும் தோற்ற மயக்கங்கள் என்பதால் இருள்சேர் இருவினை. 'இருளுள்ள இடத்தில் ஒளியும், ஒளியுள்ள இடத்தில் இருளும் கலந்துநிற்கக் காண்பது இவ்வுலகம். இவற்றிற்கு அப்பாற்பட்ட பேரொளிநிலைமை எய்துதற்கு- இரு வினையுமற்ற தனிநிலை ஒன்றை எய்துதற்கு உயிர்கள் முயல வேண்டும். அதற்கு இறைவனின் உயரிய இறைமைப்பண்புகளைச் சொல்லிச் சொல்லிப் பாடிப்பாடி உருவேற்றி, நாமும் அந்நிலை நோக்கி உயர்தல் வேண்டும்"[21]- என்பார் தமிழண்ணல்.

அதுசரி, இறைவனை முன்வைத்தே இன்று எழும் தீவினை குறித்து அஞ்சாமல் எப்படி இருக்க முடியும்?

திருக்குறளை நம்புவோர் கூட, கடவுள் வாழ்த்து அவரால் எழுதப்பட்டதில்லை என்பதும், கடவுளை நம்புவோர்

திருக்குறளின் மெய்ப்பொருளை நம்பாதிருப்பதும், இருள்சேர் இருவினை தானே!

முழுமையுணர்ந்து எழுதிக்காட்டியபிறகும், முழுமையாக உணராமல் அவசரத்திற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் குறள் கொறித்துத் திரியும் எலிகளைப்போல இயங்கும் நம்மில் பல தமிழர்களின் நிலை எண்ணித் தாயுள்ளம் கொண்ட திருவள்ளுவர், அவர்களைத் தின்னவரும் தீவினை குறித்து அஞ்சாமல் இருப்பாரோ?

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.14.
2. மேலது.
3. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.38.
4. மேலது.
5. சீனி.விசுவநாதன்(தொ.ஆ), காலவரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொகுதி-1, ப.42.
6. தவத்திரு குன்றக்குடிபொன்னம்பல அடிகளார், தமிழ்ப்பண்பாடு, ப.25.
7. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.194.
8. மேலது.
9. மேலது, ப.358.
10. மேலது, ப.365.
11. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப.181.
12. மேலது, ப.189.
13. மேலது.
14. மேலது.
15. மேலது.
16. மேலது, ப.183.
17. மேலது.
18. மேலது.
19. குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை, தொ-4,ப.125.
20. மேலது, தொ-3, ப.87.
21. தமிழண்ணல், திருவள்ளுவர் அருளிய திருக்குறள் நுண்பொருள் உரை, பக்.26-27.



பெருமிதம் உடைய பேராளர்

தமிழுக்குத் தனிப்பெரும் அளவில் பெருமிதம் தருவதாகத் திருக்குறள் இருக்கிறது. இதுகுறித்துப் பாரதியாருக்குள் பொங்கும் பெருமை எழுத்தில் அடங்காது.

> வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்கின்றார். எல்லை கடந்த வானம்போல் பெருமிதம் பெருகும் தொடர் இது. திருக்குறள் குறித்த பெருமிதம் இப்படி இருக்கத் திருக்குறளுக்குள் திருவள்ளுவரே இவ்வாறு பெருமிதம் கொண்டு உரைக்கும் இடங்களும்

உண்டு. அவற்றுள் ஒன்றைச் சுட்டத் தொல்காப்பியத்தைத் துணைக்கொள்வது தேவையாகின்றது.

தமிழர்தம் போரறம்

தமிழர்தம் தனிப்பெரும் அடையாளங்களுள் ஒன்று வீரம். அகமும் புறமுமென அறியக்கிடைக்கும் தமிழர்தம் பொருளிலக்கணம் நுட்பமானது. அந்தமரபில் செழித்த தமிழ் இலக்கியப் பெரு வெளியின் சிறப்புறு பகுதி, சங்க இலக்கியம்.

அவற்றுள் அகம் சார்ந்த இலக்கியங்கள் அதிகம். அகநூல்களின் பாடுபொருளே கவிதைக்குரிய தன்மையைக் கொடுக்கும் இயல்பினது. கொஞ்சம் சறுக்கினாலும், புள்ளிவிவரமாய், வரலாற்றுக் குறிப்பாய், நிகழ்வு பற்றிய பதிவாய்ச் சுருங்கிவிடும் ஆபத்து, புறநூல்களுக்கு நேர்ந்துவிடும். அறநூல்களுள் திருக்குறளுக்கு இருக்கும் தனித்தன்மை பெருமிதமானது என்றால், புறநூல்களுள் புறநானூறு பெறும் இடம் சிறப்பானது. வரலாற்றை, நிகழ்வை, புகழைப் பாடுகின்றபோதும், அவற்றுக்கென்று ஒருவிதத் தனிப்பண்பை வரையறுத்துப் பெருமிதம் குறையாது கவிதையாய்ச் சொல்லும் மிடுக்கைப் புறநானூற்றில் பல கவிதைகளில் நன்கு சுவைக்கலாம். திருக்குறளோ அகமும் புறமும் ததும்பப்பாடும் தமிழ்க்கவிப் பெருக்கு எனலாம்.

திருவள்ளுவரின் பெருமிதம்

பொதுவாய்த் திருக்குறள் நூலமைப்பில் பேச எடுத்துக் கொள்ளும் அதிகாரத்தின் தலைப்பை ஏதேனும் ஒரு கோணத்தில் அணுகுவதாகத் தொடங்கும் முதல் திருக்குறள். அதன் மற்றொரு கோணத்தை விரிக்கும் அடுத்த குறள். தர்க்கங்களை மேலெழுப்பிப் பாடுபொருளின் நுட்பங்களை உணர்த்தி அடுத்தடுத்த குறட்பாக்கள் விரியும். பன்முகநோக்கில் பாடுபொருளின் அனைத்துத் தன்மை களையும் உணர்த்தி, முத்தாய்ப்பாய்ப் பத்தாவது குறளை முடிக்கும் இடத்தில் திருவள்ளுவரின் முத்திரை துலங்கும். அதன் தொடர்ச்சியே போல, அடுத்த அதிகாரம் பிறக்கும்.

இந்தப் பொதுவான தன்மையை மாற்றிப் புதுமையாய்த் தொடக்கத்திலேயே கம்பீரத்தைக் காட்டிநிற்கும் அதிகாரம் படைச் செருக்கு. தலைப்பின் தனித்தன்மை முதற்குறளிலேயே பளிச்சிட்டு விடுகின்றது.

தறுகண் மிகுதியினால், அறம் உரைக்கும் தன் நிலை - மறந்து என்பதைவிட - தெரிந்தும் அதனை மீறித் தாமே ஒரு படை வீரனாகிப் பெருமிதத்தோடு திருவள்ளுவர் தன்கூற்றான கவிக் கூற்றையே பாத்திரக்கூற்றாக்கிப் பேசுகின்றார்.

பெருமிதத்தோடு திருவள்ளுவரின் குரல் இக்குறளில் பதிவாகிற அழகை, நிறுத்திப் படித்தால் உணர முடியும். எதிரில் நிற்பது பகைவர் என்றாலும் அவர்களுக்குள் பதுங்கிநிற்பது கூற்று. மரணம் நிச்சயிக்கப்பெற்ற கணம். அச்சம் இல்லை; நடுங்குதல் இல்லை; உளறலும் இல்லை; தெளிவு; உறுதி; தறுகண்; உரத்து எழுகிறது போர்வீரனின் குரல்.

'என் ஐ முன் நில்லன்மின்'

'(என் முன்நிற்பவர்களே, நான் யார் என்று தெரியாமல் நிற்கிறீர்கள்! ஆனால்,) என்தலைவன் முன் நிற்காதீர்கள்! (அவ்வாறு) முன்னின்றவர்கள் (எல்லாம், வீரமரணம் எய்தி, நடு)கல்லாக (இப்போது) நிற்கிறார்கள்'

விளக்கம் வேண்டிச் சொல்லிய இத்தொடரின் அடைப்புக்குறிச் சொற்களை அகற்றி, அப்படியே வள்ளுவர் வாக்காகப் படித்தால் தறுகண் சுடர்விடும் கவிதையாய், இக்குறள் மிளிரும் அழகைத் தரிசிக்கலாம்.

என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ
முன்நின்று கல்நின் றவர் (படைச்செருக்கு- 771)

இங்கே தலைவனின் பெருமை சுட்டப்பெறுகின்றது. தலைவனின் வெற்றி, இதுபோன்ற மறச்செருக்கு உடைய படையினரால் அமைவது. இவனைக் கடந்து இவனது மன்னன் முன்னால் பகைவர் செல்லவே முடியாது. நிற்றல் முற்றிலும் சாத்தியமே இல்லை. அவ்வாறு நின்றே ஆகவேண்டுமெனில், நடு கல்லாகத்தான் நிற்கமுடியும். என்றால், இந்த இடத்தில் பகைவனின் மீது கண்ணோட்டம் கொண்டு அன்புடன் அமைதிக்கான ஆற்றுப் படுத்துதல் நடந்துவிடுகின்றது. மரணத்தை உறுதியாக்கும் போருக் கென்றே வந்தாயிற்று. எனினும், வேண்டாம் என்று ஆற்றுப் படுத்துவதிலும் ஒருவித வீரம் வெளிப்படும் பாங்கு, இக்குறளில் பொலிகின்றது.

பேராண்மையும் ஊராண்மையும்

பிறன்மனை நோக்காப் பேராண்மையை அகவொழுக்கத்திற்கு வலியுறுத்திய வள்ளுவம், புறவொழுக்கத்திற்கும் பின்வருமாறு பேராண்மையை வலியுறுத்துகின்றது.

பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு (படைச்செருக்கு-773)

இது வரை உலகவழக்கு, ஆண்மையின் பெருநிலை, போர்க் களத்தில், பகைவரைக் கொன்று அழிப்பதுதான் என்று சொல்லப் பட்டு வந்தது. ஆனால், அக்களத்தில் எதிர்நின்று போரிடும் பகைவர்க்கு ஒன்று உற்றக்கால், ஒருவிதத்தில் தாழ்வு நேருங்கால், அவர்பால் இரக்கம் கொண்டு அதனை, முதலில் தீர்த்தல், ஊராண்மை என்கின்றது இக்குறள். 'ஊராண்மை- உபகாரியாம் தன்மை'[1] என்பது பரிமேலழகர் குறிப்பு.

எதிரில் ஏதுமற்று நின்ற இராவணனைப்பார்த்து, 'இன்றுபோய்ப் போர்க்கு நாளை வா' என்று கம்பராமனால் கருணை காட்டி விடப் பட்டது. இது பாரதியார் பாடலில் இடம்பெறும், 'பகைவனுக்கு அருளும் நன்னெஞ்சைக்' குறிப்பது.

இத்தனைக்கும் இவ்வீரனோ, எதிர்நிற்கும் பகைவீரனோ, வீரத்தில் குறைந்தவர்கள் அல்லர்.

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து (படைச்செருக்கு-776)

என்ற பாங்குடையவர்கள்தாம். மனோன்மணீயம் பாடுவதுபோல், 'போர்க்குறிக் காயமே புகழின் காயம்' எனப் புறப்பட்டு வந்தவர்கள் தாம். எனினும், போரில், பகைவர்க்கும் இழிவு வந்துவிடா வகையில், வீரத்தை வெளிப்படுத்தத் தக்க வாய்ப்பளிக்கும் நேர்த்தியை, ஓர் அறமாகப் போர் அறமாக வகுத்தளிக்கும் பாங்கு தமிழர்க்கு உண்டென்பதைக் காட்டுவதில் தலைநிற்பது திருக்குறள் தானே! இல்லையென்றால்,

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும் (படைச்செருக்கு-774)

நிலை ஏற்படுமா? கிளம்புகின்றபோதே,

கானமுயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது (படைச்செருக்கு- 772)

என்று தெளிந்து வந்தவர்கள்தாமே!

இது வேட்டைக்குக் கிளம்பிய வேகம் இல்லையே! வெற்றி அல்லது வீரமரணம் என்று வாழ்வின் நிலை உணர்ந்து கிளம்பிய இறுதி அல்லது உறுதி யாத்திரை அல்லவா?

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து (படைச்செருக்கு- 780)

இரவச்சம் குறித்து வருந்தும் திருவள்ளுவர், இரந்தும் பெற வேண்டிய பரிசில் என்று குறிப்பிடுவது இதனைத்தானே! வேண்டுவன நல்கிப் புரந்தருளிய வள்ளலின், மன்னனின் கண்கள் கசிய, அவனது வெற்றிக்காக உயிர்கொடுத்துச் சாதல் யாசித்தேனும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றல்லவா!

அத்தகு நிலையில் வந்து இரப்பதும், இழிவு. இரப்பார்க்கு ஈய மாட்டேன் என்று கூறல் அதனினும் இழிவு, கொள் எனக் கொடுத்தல் உயர்வு. அதனைக் கொள்ளமாட்டேன் என்பது அதனினும் உயர்வு. இங்கே இடைப்பொருள் ஆக நிற்பது, வெற்றி. அதனை இரத்தலும், மறுத்தலும், பெறுதலும், கொடுத்தலும் தகாது. போராடி, போரிட்டுப் பெறுதல் வேண்டும். அதற்குத் தகுதி, வீரம். தறுகண்.

அதுகுறித்து வந்துநிற்கும் வீரனை, எளனப்படுத்தாமல், அவனுக்குத் தக்கது உணர்த்தித் தறுகண் வெளிப்பட நிற்கும் குறள், இது. கூறுபவன் ஏதேனும் ஓர் அணி சார்ந்தவன் எனினும் இக் கூற்றுக்குப் பின்னின்று குறள் கொடுக்கும் திருவள்ளுவர், எந்த அணியும் சாராதவர்.

உறுதிப்பட உரைக்கும் இவ்வீரனை எதிர்கொள்ளும் வீரன் ஒரு வேளை தோற்றும்போய்க் கல்லாக நின்றாலும்கூடக் கவலை யில்லாதவன் என்கிற கரிசனத்தால்தான், கானமுயலையும், யானையையும் காட்டி, அடுத்த குறளைத் தருகின்றார்.

எதிர்நின்றவனொடு பொருதி, வஞ்சினத்தை முடிக்கக் கருதி, வெல்லுமுன், பகைவரால் கொல்லப்பட்டாலும், அவனை யாரே இகழ்வார்? என்று சுட்டி.

இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர் (படைச்செருக்கு-779)

என்றெல்லாம் பேசும் பெருமிதம் வள்ளுவருக்குக் கைவந்த கவிதைக்கலை அல்லவா?

அடுகளமும், அவைக்களமும்

அடுகளத்திலும் நடுநின்று கவிதை பாடத் தெரிந்த திருவள்ளுவருக்குள் மிக்குயர்ந்து நிற்கும் மறச்செருக்கு, அவரையும் அறியாமல், ஒரு வீரனாகவே தன்னை நிலைநிறுத்தி, முதற்குறளை இசைக்க வைத்திருக்கின்றது, எனில், தறுகண் எத்தனை சிறப்பான மெய்ப்பாடாக இருக்க முடியும்?

போர்க்களத்தில் புறமுதுகு காட்டாமல் போரிடுவது போரறம் என்றால், அவைக்களத்தில், அஞ்சாமல் உறுதிப்பொருள் உரைத்தல் மறத்தினும் பெரிய மறம் அல்லவா?

அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை (அன்புடைமை-76)

என்பதுபோல், மன்னராட்சிக்காலத்தில் யார்க்கும் அஞ்சாது, துணிந்து கருதியது உரைத்த கல்விச்சிறப்பு உடையவர் திருவள்ளுவர் என்பதற்கு உயிரனைய சான்று, திருக்குறள். குறள்தோறும் வெளிப்படும் திருவள்ளுவரின் தறுகண், சிறப்புறத் துலங்கும் ஒருகுறளாகப் படைச்செருக்கின் முதற்குறளைக் கொள்வதற்கு இன்னும் ஒரு காரணம், இது எழுதப்பட்ட காலம், மன்னராட்சிக்காலம். தன் தலைவனுக்காகப் போரிட்டு உயிர் விடப் போகும் அல்லது உயிர்கொள்ளப்போகும் ஒரு படைவீரனின் குரல், இது.

'கால காலத்துக்கும்'

இன்றைக்கு மன்னராட்சி இல்லை. மக்களாட்சி வந்துவிட்டது. போர் மரபுகளும் மாறிவிட்டன. எனினும், போராட்டங்கள் குறைய வில்லை. போரில் களப்பட்டவர்களுக்கு நடுகல் வைத்தது அக்காலம் எனில், போராட்டத்தில் சிறந்தவர்களுக்குச் சிலை வைப்பது இக்காலம். எனவே, எக்காலத்துக்கும் பொருத்தமாகும் 'கல்'லை முன்வைத்துக் கல்வெட்டாய்க் கவிதை தந்திருக்கின்றாரே, திருவள்ளுவர்!

இக்குறளில் வெளிப்படுபவன் மன்னனாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதில்லையே! அவன் தலைமைப்பண்புகள் பொருந்திய பெரியவன்தானே! தலைவன்தானே! குறிக்கோளுடன்

அதனை நடைமுறைப்படுத்தக் களமிறங்கிப் போராடும் தலைவன் தானே! தக்க தலைவனின் பெருமிதமே, இத்தகு படைஞர்களைக் கொண்டு எழுச்சியோடு இயங்குவதுதானே!

அடுபோர் இல்லாத அரசியல் போரை, மறப்போரை மறுதலித்த அறப்போரை, காந்தியடிகளைக் கொண்டு உலகறிய நடத்தி, உயர்வு பெற்ற நாடுதானே நம்நாடு! அவருக்கும் முன்னால், 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்'என்று ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக்கவிமுழக்கம் செய்த சத்தியாக்கிரகியாகத் திருநாவுக்கரசர் திகழவில்லையா?

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே'

என்று தம்தலைவனாகிய இறைவனோடு ஒப்பந்தம் செய்து கொண்ட உயர்தொண்டர் அவர் அல்லவா? திருவள்ளுவ, இன்பத்துப்பால் மரபில்,

'முன்னம் அவனுடை நாமம் கேட்டு, மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டுப் பின்னர், அவனுடைய ஆரூர் கேட்டுப் பேர்த்தும் அவனுக்கே பிச்சியாகித் தன்னை மறந்து, தன்நாமம் கெட்டுத் தலைவன்பால் தலைப்பட்ட நங்கையாகவே' அவர் மாறியது, அகமும் புறமும் ஒருசேரக் கலந்த தறுகண்ணின் வெளிப் பாட்டு நிலையல்லவா?

இப்படித் தமக்குப் பின்னாலும் தக்கதொரு கவிப்படையைத் தோற்றுவித்துத் தந்த தலைவனாகத் திருவள்ளுவர் திகழ்ந்த போதிலும், ஆண்மகனினும் மேம்பட்ட பெண்கவிக்கு - ஔவை யாருக்குத் தமக்கும் மூத்த தலைமையிடம் தந்து தொண்டராகத் துலங்குவது பெருமிதத்தின் இன்னொரு பரிமாணம் அல்லவா?

தொல்காப்பியம் சுட்டும் பெருமிதம்

இத்தகு பெருமிதத்தினை, மெய்ப்பாட்டுவகைகளுள் ஆறாவது இடத்தில் அமைக்கின்றது, தொல்காப்பியம். "இஃது ஆறாம் எண்ணுமுறைமைக்கண் நின்ற வீரம் உணர்த்துதல் நுதலிற்று"[2] என்கின்றார் பேராசிரியர்.

கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே (தொல்.-1203)

என்பது தொல்காப்பியம் "இச்சூத்திரத்துள் வீரத்தினைப் பெருமிதம் என்றெண்ணினான்; என்னை? எல்லாரொடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதமெனப்படும் என்றற் கென்பது. கல்வி என்பது தவமுதலாகிய விச்சை. தறுகணென்பது அஞ்சுதக்கன கண்ட இடத்து அஞ்சாமை. இசைமை என்பது இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடு வருவன செய்யாமை. கொடையென்பது உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப்பொருளும் கொடுத்தல்"[3] என்று சிறப்பு விளக்கம் நல்குவார் பேராசிரியர்.

பயில்வோருக்கும் உரிமையாகும் பெருமிதம்

போர்க்கல்வியும், பொருகளத்துப் புகழும், பகைவனுக்கு அருளும் கொடையும் கூடிக் கலந்து கொடுக்கும் தறுகண் மெய்ப்பாட்டுக் குறட்பா, 'என்னைமுன் நில்லன்மின்!'

ஆம்!

திருவள்ளுவரை மிஞ்சிக் கவிபாடுவதாய்க் களமிறங்கிய இறங்கப்போகின்ற புலவர்களே, எம் தலைவனாகிய திருவள்ளுவர் முன் நில்லன்மின்! அவ்வாறு நின்றவர்கள் எல்லாம் எம் ஐயன் திருவள்ளுவரின் சிலைக்கு முன்னால் சிறுகற்களாய்க் கிடக்கும் நிலையை நன்குணர்வீர்கள்! அந்தப் பெருமிதத்தொடு ஒவ்வொரு தமிழரும் உரத்து உரைக்க, நமக்கும் சேர்த்தே திருவள்ளுவர் நாமாகப் பாடிய திருக்குறள்,

"என் ஐமுன் நில்லன்மின்!'

சான்றெண் விளக்கம்

1. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.49.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.15.
3. மேலது.



குணக்குன்றின் வெகுளி

வாழ்க்கைப்பாதை நேர்கோட்டில் அமைவதன்று; நெளிந்தும் வளைந்தும், நுடங்கியும் எழுந்தும் செல்ல வேண்டிய பாதை. சறுக்கியும் விழவும் நேரும் என்பதால், அவ்வண்ணம் சறுக்கு வோர்க்குத் தக்க ஊன்றுகோலாய் ஒழுக்கமுடையார் வாய்ச் சொற்களைக் கொடுக்கின்றன இலக்கியங்கள்.

இவற்றுள் தலைநிற்பது திருக்குறள், அது, இவ்வுலக வாழ்க்கை இனிய பயணமாக இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றது; பிறவியைப் பெருங்கடலாக உருவகப்படுத்துகின்றது. இறங்கினால் முழுகுவது உறுதி எனினும். நீந்தக் கற்றுக்கொடுக்கின்றது. தேங்கி விடாமலும், மூழ்கிவிடாமலும், தடைபல கடந்து நீந்தக் கற்றுக் கொள்ளவும் வேண்டும். அதுபோது சுய தடைகள்,

பொதுத் தடைகள் எனப் பல தடைகள் உண்டு. எதிர்பார்க்கும் நிலையிலும், எதிர்பாரா நிலையிலும் வரும் எத் தடைகளையும் வெல்லுதற்குரிய உறுதிப்பாட்டை முதலில் உளத்திற்கும், பின் உடலுக்கும் வழங்குதற்கான வழிமுறைகளைக் குறள்வழி கொடுக்கும் திருவள்ளுவர், கூடவே வருவதுதான் அழகு!

அவ்வாறு வரும் ஒரு வழிகாட்டி, உடன் உறைவதும், உண்டு, உறங்கி, ஒத்த உணர்வுகளில் பங்கேற்றுப் பக்குவமாய்க் காப்பதும் இயல்புதானே! அப்படி வரும் ஒருவர் எத்தனை பெரியராயினும் கூட்டி வரும் குழந்தைக்கேற்பத் தம்மையும் ஒரு குழந்தையாகவே பாவித்துக்கொண்டு நடக்கும் பக்குவம் கொண்டு தானே இருப்பர். அப்படியொரு பக்குவத்தைத் திருக்குறள்நூலின் பக்கங்கள் தோறும் பார்க்க முடியும். அறிவின் கனிந்த நிலையில் அருளாளராகத் தோன்றும் திருவள்ளுவரின் மெய்ப்பாடுகள், அத் தன்மை உடையன.

திருக்குறளில் தெரியும் ஒரு முரண்பாடு

எல்லாவிதிகளுக்கும் ஒரு புறனடை இருப்பதுபோல, ஒவ்வொரு நற்பண்புகளுக்கும் எதிர்நிலைப்பண்புகளும் அமைந்து விடுவதுண்டு. எதிர்பாராதவிதமாக, அவற்றிற்கு ஆட்படும் நிலை ஏற்பட்டு விட்டால், அவற்றினின்று தற்காத்துக்கொள்ளும் அற்புதக் கலையையும் திருவள்ளுவர் கற்றுத் தந்து விடுகின்றார்.

அந்தச் சமயங்களில் திருக்குறள் முரண்படுதன்மையுடையதாகத் தோற்றம் கொண்டுவிடுகின்றது. ஓரிடத்தில் ஊழின் வலியை உரத்துப் பேசும் திருக்குறள், ஊழையும் உப்பக்கம் காணமுடியும் எனப் பிறிதோரிடத்தில் பேசும். இந்த வரிசையில் இன்னும் சிலவற்றையும் சுட்ட இயலும். எனினும், இந்தத் தலைப்பின் கீழ் நமக்குத் தெரிகின்ற ஒரு முரண் வெகுளாமை பற்றியது.

கோபம் என்றொரு குணம்

வாழ்வியல்போக்கில் முணுக்கென்று முளைக்கும் கோபம், இயல்பானது. சுரணையுள்ள ஒரு மனிதனுக்குக் கோபம்கூட ஒரு வகையில் நல்ல குணம்தான். அதனால்தான், நீச்சல் பழகுவது போல, வண்டி ஓட்டிப் பழகுவதுபோல, 'ரௌத்திரம் பழகு' என்கின்றார் பாரதியார்.

ஆனால், அக்கோபம் வரம்புமீறிச் சினம் ஆகிவிடாமல் காப்பது நல்ஒழுக்கம். சினம் வெகுவாக எழும்போது வெகுளி எனப் பெயர்

பெற்று விடுகிறதுபோலும். மானுடம் வெகுண்டெழும் நிலைக்குத் தள்ளப்படும்போது அழிவுக்கு அடிகோலும் போர்கள் நிகழ்கின்றன. எனவே, தம்மையும் அழித்துப் பிறரையும் அழித்துக் கேடு விளைக்கும் வெகுளி வருமுன் காப்பது அறம் என்பதால் திருவள்ளுவர் 'வெகுளாமை' குறித்து ஓர் அதிகாரம் படைக்கின்றார்.

வேண்டியது என்றும் வெகுளாமை

அறத்துப்பாலில், வாய்மையை அடுத்துப் பிறக்கும் வெகுளாமை அதிகாரத்திற்கு விளக்கம் அளிக்கும் பரிதியார், 'வெகுளாமையானது, வாக்கினால் பொய் சொல்லாததுபோல மனத்தினால் குற்றமாகிய கோபத்தையும் விடுக என்றவாறு'[1] என்கிறார். வெகுளி மனக்குற்றமாகிப் புறக்குற்றங்கள் நிகழ்தற்கு ஏதுவாகி விடுகின்றது. அதனால், 'வெகுளுதற்குக் காரணம் உள்ள இடத்தும் வெகுளாராதல்'[2] என்று விளக்கம் அளிக்கின்றார் மணக்குடவர். விரிவானநிலையில் பரிமேலழகர் பின்வருமாறு விளக்கம் அளிக்கின்றார். "அஃதாவது, சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன்மாட்டு உளதாய இடத்தும் அதனைச் செய்யாமை. இது பொய்ம்மை பற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின், வாய்மையின் பின் வைக்கப்பட்டது."[3]

அந்த இடம், செல்லிடம். 'சினத்தைச் செல்லுபடியாகிற இடத்தில் செலுத்தாமல் காப்பதுதான் காப்பு. அல்லாத இடத்தில் காத்தால் என்ன? காவாக்கால் என்ன?' என்று முதற்குறளில் இடம் சுட்டும் திருவள்ளுவர், அவ்வாறு காவாதுவிட்டால் ஏற்படும் தீமையின் அளவை, அடுத்த குறளில் குறிக்கின்றார். தீமை பிறத்தலுக்குக் காரணமாகிய சினம், நகையையும், உவகையையும் கொல்லும் பகையும் ஆகிவிடுகின்றது.

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற (வெகுளாமை-304)

என்பது குறள். இவ்வாறு, 'வெகுளாமை' என்னும் அதிகாரமிட்டுப் பேசும் திருக்குறள், வெகுளாமையின் நற்பயன்களையும், வெகுளியால் எய்தும் தீமையையும் பகுத்துக் காட்டுகின்றது. தற்கொலைக்கு நிகரானது சினம். எனவே, 'தன்னைத்தான் காக்கின் சினம் காக்க!' என்கிறது. சினமானது, சேர்ந்தாரையும் கொல்ல வல்லது. அத்தகைய சினத்தைத் தனக்கு உரிய குணப்பொருளாகக் கைக்கொண்டவனின் செயல், வலிய நிலத்தைத் தம் கையால்

அறைபவனின் செயலுக்கு ஒப்பாகும். சினத்தை உடையவர் இறந்தவருக்கு ஒப்பாவார் என்றெல்லாம் விளக்குகின்றது.

வேண்டிய எல்லாம் தரும் வெகுளாமை

உள்ளிய எல்லாம் உடன் எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின் (வெகுளாமை-309)

என்ற திருக்குறள், வெகுளியை விட்டவர் எண்ணிய அனைத்தையும் எய்துவார் என்று சுட்டுகின்றது. எனவே, வெகுளா திருத்தல் மிக நன்று என்று சொல்லிய திருவள்ளுவரே வெகுண் டெழுந்து சபித்த ஓரிடமும் திருக்குறளில் உண்டு.

திருவள்ளுவரின் கோபத்தால் பிறந்த சாபம்

ஆம்! 'பரந்து கெடுக' என்று சபிக்கின்றார் திருவள்ளுவர்.
யாரை?
'உலகு இயற்றியானை!'
எதற்காக?
'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்'
இரந்தும் உயிர் வாழ்வார் யார்?
சொல்லவில்லை.

ஆனால் அதிகார வைப்புமுறையில் குறள் அமைப்புமுறையில் காணுங்கால், இத்தொடர் குடிமக்களைக் குறிக்கும். இது சரிதானா? ஏன் வெகுளாமை பாடிய திருவள்ளுவர் வெகுண்டெழுகின்றார்? என்பதறியத் தொல்காப்பியரையும் துணைக் கொள்ளலாம்.

தொல்காப்பியம் சுட்டும் வெகுளி

தொல்காப்பியம், வெகுளியெனும் மெய்ப்பாட்டை, ஏழாம் இடத்தில் வைக்கின்றது. இம்மெய்ப்பாட்டின் தோற்றக் காரணங்களை வழக்கம்போல் நான்காய்ப் பகுத்துப் பின்வருமாறு வழங்குகின்றது.

உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே (தொல்.-1204)

"உறுப்பறையென்பது, கைகுறைத்தலுங் கண்குறைத்தலு முதலாயின. குடிகோள் என்பது தாரமுஞ் சுற்றமுங் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கட் கேடுசூழ்தல். அலையென்பது, கோல் கொண்டலைத்தன் முதலாயின. கொலை என்பது அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல். இவை நான்கும் பொருளாக வெகுளி பிறக்கும்"[4] என்று விளக்குகின்றார் பேராசிரியர்.

அதாவது, '1.உறுப்புக்களைக் குறைத்தல் (அறுத்தல்), 2. தம் கீழ் வாழும் குடிகளைத் துன்புறுத்தல், 3. வைதல், அடித்தல், 4.அறிவாற்றல், புகழ் முதலானவற்றைக் கொன்றுரைத்தல்'[5] ஆகிய காரணங்களால் வெறுக்கத்தக்க சினம் தோன்றும் என்பது ச.வே.சு.வின் தெளிவுரை.

திருவள்ளுவ அறம்

அறம் பாடிய திருவள்ளுவப்பெருமானுக்குத் தனித்தும் ஓர் அற முண்டு. தன்னலம்கருதி எவ்வறத்தையும் பாடாத செந்நலம் உடையவர். அறத்தில் அற்புதமாக மானுட மேன்மைக்குணங்களை இயல்பாக்க வழி வகுக்கும் அவர், பொருளில் சமூகக் கொடுமைகளைக் காணும்போது பெரிதும் தீவிரம் காட்டுகின்றார். கொல்லாமையை வலியுறுத்தும் அவர், 'கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல்' செங்கோன்மை என்கின்றார். அது பயிரிடை முளைக்கும் களைகளைதல் ஒத்தது என்று அமைதி கூறுகின்றார். தனிமனித அறம் பேசுவது அறத்துப்பால் என்றால், சமூக அறம் பேசுவது பொருட்பால் என்றும் கூறலாம். இந்தச் சூத்திரத்தை உள்வாங்கிப் பின்வருமாறு விளக்கும் தவத்திரு பொன்னம்பல அடிகளாரின் உரையும் இங்கு கவனிக்கத்தக்கது.

"பெயக் கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

என்று கூறிய திருவள்ளுவர், நட்புக்காக, உறவுக்காக, அன்புக்காக, உயிர்போகக் கூடிய எல்லை மீறிய துன்பம் வரும். ஆனாலும், பொறுத்துப்போகச் சொன்ன திருவள்ளுவப்பெருமான், எப்பொழுது ஆவேசப்படுகிறார், ஆத்திரப்படுகிறார்? 'வெகுளி தீது' என்று சொன்னவர் வெகுண்டு எழுகிறார். போர் கூடாது என்றவர், போர்க்குணத்தோடு போராடச் சொல்கிறார். எப்பொழுது? எங்கே? 'நீ குடிக்கும் குவளை நீரில் நஞ்சு கலந்தால், நட்புக்காக, உறவுக்காக, உயிரைத் தியாகம் செய். ஆனால், ஊர்ப் பொதுக் குளத்தில் நஞ்சு கலக்கப்பட்டால், வேடிக்கை பார்க்காதே. போர் வாள் ஏந்திப்போராடு' என்கின்றார். நஞ்சினும் கொடிய வறுமைக்கு ஏழ்மைக்கு ஆட்படுத்தி வாழும் வாழ்க்கைக்கு யார் காரணமாய் இருந்தாலும் அவர் அழிக்கப்படவேண்டியவர். அவர் ஆண்டவனாய் இருந்தாலும் அழிக்கப்பட வேண்டியவன் என்று ஆவேசப்படுகிறார். தனி மனிதர்கள் தங்களுக்கு வருகின்ற துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளலாம். சமூகத்திற்கு ஒரு கேடு-

தீங்கு வருமானால் போர்க்குணத்தோடு போராடச் சொல்லும் திருவள்ளுவம் வாழ்க்கை முழுவதற்கும் வழிகாட்டுகின்றது"[6] என்று ஒரு சூத்திரம்போல் விரிக்கின்றார்.

ஆத்திரமன்று: இது அறச்சினம்

இது ஆத்திரத்தால் வந்த சினமன்று; அறச்சினம். தன்னலம் பேணி மன்னுயிர் வாட்டும் கொடுங்கோன்மை கண்டு குமுறும் கோபம். தீயினும் அஞ்சத்தக்க தீமைகளுக்குத் துணைபோகும் வறுமை சிதறக் கண்கள் சிவந்து, மனஞ்சினந்து, மேனி பதற வெகுண்டெழும் கணம். இது, 'குணம் என்னும் குன்றேறி நின்றார் வெகுளி' இதனைக் 'கணமேனும் காத்தல் அரிது' என்று நீத்தார் பெருமை பேசும் திருக்குறள். 'துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற்குணங்கள் ஆகிய குன்றின் முடிவின்கண் நின்ற முனிவரது வெகுளி, தான் உள்ள அளவு கணமே ஆயினும், வெகுளப்பட்டாரால் தடுத்தல் அரிது'[7] என்று விளக்குகிறார் பரிமேலழகர்.

ஆக, கணநேரத்தில் தோற்றம் கொள்ளும் வெகுளி கனமானது; கடுமையானது; அது தோன்றக் காரணமானவர்களால் காத்தற்கு அரிது. அதுபோல், வெகுண்டெழுந்த குணக்குன்றரும் அவ் வெகுளியைக் கணநேரமே காத்திருப்பர் என்பதும் இங்கு பெறப் படுகின்றது.

அத்தகு வெகுளி நிற்கும் நேரம் கணநேரம் என்றாலும், அது தோன்றுதற்குரிய காலம் கணநேரம் அன்று. காலகாலமாய்க் காத்துக் காத்து, பொறுத்துப் பொறுத்து இயலாத நிலையில் பொங்கி யெழுந்த சினத்தின் புறத்தோற்றம். 1061 குறள் வரை அமைதியொடு பாடிவந்த திருவள்ளுவர் அதற்குப் பின் சினந்து சபித்ததன் வெளிப்பாடு.

அவ்வளவு காலமும் வறுமையைப் போக்காது. இரத்தலே ஒருவருக்கு உரிய தொழில் என்று நியமனப்படுத்திய சமூகத்தின் மீது, அத்தகு சமூகத்தைக் காக்கும் அரசின் மீது பொங்கியெழும் அறச்சினம்.

புரட்சிப்புலவர் திருவள்ளுவர்

எடுத்தவுடனேயே திருவள்ளுவர் சினம் எய்திவிடவில்லை. வறுமைநோய் போக்க மருந்து தேடுகின்றார். இரப்பவர்க்கு ஈதலை அறம் என்று வலியுறுத்துகின்றார். அதற்காகவே, இரப்பதே

தொழிலாகக் கொள்வோரையும் இரவச்சம் பாடி எச்சரிக்கின்றார். இருதிறத்தும் சொல்லிப் பயனின்றி, இரத்தலே மானுடகுலத்தின் ஒரு பிரிவினர்க்குத் தொழில் என்று வருகின்றபோது திருவள்ளுவருக்குத் தோன்றும் வெகுளி ஒரு புரட்சியாளனின் போர்க்குணமாக வெளிப்படுகின்றது.

பொதுவுடைமைச் சித்தாந்தம் புவியில் தோன்றுமுன்னரே, ‘இழப்பதற்கு ஒன்றுமில்லை, பெறுவதற்குப் பொன்னுலகம் காத்திருக்கின்றது’ என்று புரட்சியை மொழிந்த கார்ல்மார்க்ஸின் தத்துவம் இவ்வுலகில் கருக்கொள்ளுமுன்பே, தமிழகத்தில் தோன்றிய புரட்சியாளராகத் திருவள்ளுவர் பொலிகின்றார்.

திருவள்ளுவரின் காலமும், திருக்குறளின் புரட்சிக் கருத்தும்

இந்தக் கோணத்தில் திருவள்ளுவரைக் கண்டு காட்டிய மார்க்சிய அறிஞர் எஸ்.இராமகிருஷ்ணனின் கருத்துரையையும் இங்குக் கருத்தில் கொள்வது சிறப்பு. தமிழ் மரபில் நின்று வரலாற்றுத் தொலைநோக்கோடு பின்வருமாறு எழுதுகிறார் அவர்:

“திறமைக்குத் தக்கவாறு பாடுபட்டுத் தேவைக்கு ஏற்றவாறு பொருட்களைத் துய்க்கும் வளமார்ந்த வாழ்வை, நல்குவது நவீன கம்யூனிசம்; அதனை மனோபாவனைச் சுடரொளியில் கண்டான் கம்பன்; விஞ்ஞானரீதியாக வகுத்தான் மார்க்ஸ். கருவிலே திருவுடைய புலவனே எனினும், கால வரம்பை முற்றிலும், கடந்து விட முடியாது. நவீன கம்யூனிசம் கற்பனையில் உதிப்பதற்கும் வள்ளுவர்காலச் சமுதாயச் சூழல் இடம் தரவில்லை. எனவே, அவர் இல்லாமை இல்லாது ஒழித்த பொதுவுடைமை ஏற்பாட்டைக் கற்பனையிலும் கண்டார் இல்லை. ஆனால், வறுமையையும், நிலையில்லா வாழ்வையும், கூட்டாக அனுபவித்த பண்டைய பொதுவுடைமை முறையினைப் பற்றி வள்ளுவர் அறிந்திருந்தார். நூல்கள் வாயிலாகவும், வழிவழி வந்த கதைகள் வாயிலாகவும் மட்டுமன்று; பூர்வீகப் பொதுவுடைமையின் மீத மிச்சங்களை அவர் நேரிலும் கண்டிருப்பார்.

வேட்டையாடியோ, ஏனைய குலங்களின் பொருட்களை வன் முறையால் கைப்பற்றியோ வாழ்க்கை நடத்திய பூர்வீக குலங்களைப் பற்றிப் புறநானூறு பேசும். ஆயர் குடிகளின் கால் நடைகளைக் கவர்ந்த குறிஞ்சி நில வேடர்கள் அந்தப் பசுக்களைத் தம் ஊர்மன்றத்தில் நிறுத்திப் பங்கிட்டுக் கொள்வர் என்பதைச் சங்க நூல்கள் வாயிலாக அறிகிறோம். வாளால் போர் செய்தோர்,

உளவு அறிந்து வந்த ஒற்றர், பறவைகளை நோக்கிச் சகுனம் கூறியோர் ஆகியோர்க்குப் பங்கிட்டுக் கொடுப்பதைப் பாதீடு என்றனர். உடுக்கையைப் போன்ற இசைக்கருவிகளான கிணை, துடி ஆகியவற்றைக் கொட்டுவோரும், பாட்டுப் பாடும் பாணனும் உள்ளத்து உணர்ச்சியை உடம்பில் புலப்படுத்தி சூடு விறலியும் பெறுவதைக் கொடை என்றனர்.

தனி உடைமை பெருவழக்கமாக அமைந்த நாகரிகச் சமுதாயம் நிலை கொண்டபின்னர், பாமர மக்களின் வறுமையை உள்ளி மறுகிய சான்றோரைப் பழங்கால நாட்டம் ஆட்கொண்டது. தொல் கால மக்களின் குலப்போர்களையும், தரித்திரத்தையும் அல்ல, உள்ளதைப் பகிர்ந்து, வாழ்ந்த குலநெறியையும் குலத்தினர் தமக்குள்ளே ஒத்துவாழ்ந்த பாங்கையும் அவர்கள் விரும்பிப் போற்றினர். எனவே, பாதீடும் கொடையும் புதிய ஏற்றம் கண்டன. உடையவர்களின் சொத்துரிமையைச் சான்றோர் அறைகூவினார் அல்லர் என்பது மெய்யே; ஆனால், அவர்கள் தமது உணவுப் பொருட்களை இல்லாதவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டு மென்று மன்றாடினர் சான்றோர். ‘செல்வத்துப் பயனே ஈதல்’ என்பது சான்றோர் சூத்திரம். பாதீடு என்பதே, ‘பாத்து ஊண்’ (பகிர்ந்து உண்ணல்) என்று குறிப்பிடப்பெறும் குறளில், ஈகை என்ற சொல்லும் அப்பொருளிலேயே ஆளப்பெறுகிறது.... கொடுமை யிலும் கொடுமை சாதலே எனினும், ஈதல் இயலாதபோது சாதல் இன்பமாம் என்பர் வள்ளுவர்.

சாதலின் இன்னாதது இல்லை இனிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை (230)

பகிர்ந்து உண்ணா வாழ்வினும் சாதலே இனியது என்ற வள்ளுவர், ‘ஈத்து உவக்கும் இன்பத்தை’ (228) விஞ்சும் இன்பம் ஏதுமில்லை என்றும் கூறுவார்”[8] என்று குறிப்பிடுகின்றார்.

‘உலகியற்றியான்’ யார்?

இத்தகு இன்பம் அறியாது பதுக்குவோர் ஒருபுறம் துய்த்து வாழ, அடிப்படை உணவுக்கும் ஒன்றுமின்றி உயிர்வாழ இரக்கும் நிலையில் இன்னொருபுறத்தார் துடித்து மாயக் காரணமாய சமுதாயத்தைப் படைத்த முதல்வன், ‘பரந்து கெடுக’ என்று சபிக்கின்றார், திருவள்ளுவர்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (இரவச்சம்-1062)

இக்குறளில் சுட்டப்படும், 'உலகியற்றியான்' யார்? இதுகுறித்து உரையாளர்கள் பலப்பலவாய் உரைக்கின்றனர்.

உரையாளர்களின் விளக்கங்கள்

மேற்சுட்டிய குறளுக்கு, 'இவ்வுலகத்தைப் படைத்தவன் இதன் கண் வாழ்வார்க்கு முயன்று உயிர் வாழ்தலையன்றி இரந்தும் உயிர் வாழ்தலை வேண்டி விதித்தானாயின், அக்கொடியோன் தானும் அவரைப் போன்று எங்கும் அலமலந்து கெடுவானாக'[9] என்று உரை பகர்கிறார் பரிமேலழகர். "மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும், அதற்கு வேண்டுவதாய உண்டியும், அதற்கு ஏதுவாய செய் தொழிலும் பழவினை வயத்தான் கருவொடு கலந்தவன்றே அவன் கற்பிக்குமன்றே? அவற்றுள் சில உயிர்க்கு இரத்தலையும் ஒரு செய் தொழிலாகக் கற்பித்தானாயின் அத்தீவினையால் தானும் அத்துன்பமுறல் வேண்டும் என்பதாம்"[10] என மேல்விளக்கம் செய்கின்றார் அவர்.

மணக்குடவரும், பரிப்பெருமாளும், "துப்புரவு இல்லாக்கால் இறந்துபடாதே பிறர்மாட்டு இரந்து கொண்டும் உயிர்வாழ்தல் வேண்டுமாயின், உலக நடையை இவ்வாறாகக் கற்பித்த முதல்வன் மிகக் கெடுவானாக வேண்டும்"[11] என்று விளக்கம் அளிக்கின்றனர்.

பரிதியார், 'உலகியற்றியானைப் பிரமன்'[12] என்று சுட்டுகின்றார்.

அதே பொருளில், காலிங்கரும், "குடிப்பண்பினார்க்குத் தமக்கு ஒன்று இரத்தல் இளிவரவு என்று ஒழியாது புறத்து ஈவாரைத் தேடி எங்கும் பரந்து சிறிது இரந்துகொண்டும் தமதுயிர் வாழ வேண்டு வதாயின், இவ் வுலகினைப் படைத்தோன் தான் உயிர்வாழாது பரந்து கெட்டு விடுக; என்பதனால் உலகத்துச் சிலரை உயர்ந்தோராகப் படைக்கும் விதாதா ஆகியும் பின்னும் அவர்கள் இயல்பாவதாயின் அவரும் இழந்தோரே ஆகலின் பெரிதும் வஞ்சனை உடைத்து இவன் படைப்பு என்றவாறு"[13] என்று சுட்டுகின்றார். (விதாதா- பிரமன்)

ஆக, ஆளுபவர்களை எதிர்க்க அஞ்சியோ, அல்லது தயங்கியோ, அவர்களை விடுத்து, உலகைப் படைத்த பிரமனின் மீது இச்சாபத்தை ஏற்றிவிட்டவர்கள் பழைய உரைகாரர்கள். கடவுள் மறுப்பாளர்கள்கூட இத்திருக்குறளை அவ்வண்ணமே ஏற்றுப் பேசுதலும் உண்டு. ஆனால், நடுநின்று திருக்குறளில் ஆழ்ந்திருக்கும் கவியுளம் கண்டு திருக்குறள் பேரவையை உலகு தழுவிய நிலையில் உருவாக்கிய, தவத்திரு குன்றக்குடி அடிகளார், இக்குறளுக்குப் பின்வருமாறு விளக்கம் நல்குகின்றார்.

அடிகளர் தரும் விளக்கம்

"எங்கு நாட்டில் நிதியியலை முறைப்படுத்தி நிர்வகிக்கின்ற அரசு தோன்றவில்லையோ, அங்கு அரசை ஆட்டிப்படைக்கின்ற தனியார் நிதிக்குவியல் தோன்றும் என்ற சிந்தனைக்குரிய வாக்கு நினைவிற்கொள்ளத்தக்கது. அதனாலன்றோ, முறையான நிதியியல் ஆட்சியியல் நடத்தாது, நாட்டில் வறுமையாளர்களை வளர்த்து இரந்து வாழ்பவர்களாக ஆக்கும் அரசு பரந்துகெடுக என்றது வள்ளுவம். இங்கு, 'இயற்றியான்' என்ற சொல் கடவுளைக் குறிக்காது. கடவுள் என்பது குணமேயாம். குணியன்று. பண்பே யாம். பண்பியன்று. இயற்றியான் என்பதால், குணங்களாகவே விளங்கும் கடவுளைக் குறிக்காது அரசையே குறிக்கும்"[14] என்கின்றார் அடிகளார். அவர் மேலும் தருகிற விளக்கமாவது:

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்' என்ற உண்மையினால், கடவுள் மனித உலகத்துக்கு இரத்தலை ஒரு தொழிலாக அமைக்க வில்லை என்பது பெறப்படுகிறது. ஒரு நியதி கடவுள் நியதி. பிறிதொரு நியதி கடவுள் நியதியினைச் சார்ந்த, ஆனால், இந்த உலகிடை நிலவும் அரசியல் நியதி. கடவுள் நியதியும், அரசியல் நியதியும் இலட்சியத்தால் ஒன்றேயாம். ஆயினும் முறைகளால் மாறுபடுகிறது. அரசியல் நியதியை அருட்சார்பின்றி, ஆணவச் சார்புடையோர் இயற்றி இயக்குவாராயின் ஆங்குச் சமநிலை கெடும். தன்னலச் சார்புடையோர் அந்த முத்திரையுடன் சுரண்டுவர்; பொருள் குவிப்பர்; செல்வராவர். அம்முத்திரை கிடைக்கப்பெறாதார் ஏழைகளாகி இரக்கும் நிலையினை எய்துவர். இந்த நிலையில் இரக்கும் நிலையடைந்தோர் முயற்சியில் தாழ்ந்தவர்களல்லர். உழைக்காதவர்களுமல்லர். நேரிய முயற்சியும், கடுமையான உழைப்பும் உடையவர்களேயாம். உழைப்பாளிகள் இரக்கும் நிலை யடைந்தது சமுதாயச் சீர் கேட்டினாலேயாம். அந்தச் சீர்கேட்டைத் தடுத்து நிறுத்துவது அரசின் கடமை. இன்றைய மக்கள் சமுதாயத்திலும் உழைப்பவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். உழைக்காதவர்கள் பலர் உல்லாச வாழ்க்கையில் இருக்கிறார்கள். எனவே, இரந்து வாழ்கின்ற நிலைமைக்கும் காரணமான அரசு கெடுக என்கின்றார். 'கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக' என்றார் வள்ளலாரும். இங்கு இயற்றியான் என்பது கடவுளைச் சாராது. ஆதலால், நாம் நம்முடைய நாட்டு மக்களை வறுமைக் கடலினின்றும் கரையேற்ற, நெறிவழிப்பட்ட முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். பிறரிடம் இரந்து நம் வறுமை போகாது."[15]

இரத்தல் ஒரு தொழிலா?

பிறப்படிப்படையில் பேதமற்று விளங்கும் மனிதவர்க்கம், செய்கின்ற தொழில் அடிப்படையில் வேறுபட்டிருக்கின்றது. மனு தர்ம அடிப்படையில் வகுக்கப்படும் வருணாசிரமதர்மவழியில், பின்வரும் குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரையையும் இங்கு நோக்கலாம்.

பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (பெருமை-972)

என்ற குறளுக்குப் பொருளுரைத்த பரிமேலழகர், "எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமே எனினும், பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒவ்வா. அவை செய்யும் தொழில்களது வேறுபாட்டான் என்றவாறு"[16] என்கிறார். அவர் மேலும், "வேறுபாடு - நல்லனவும், தீயனவும் இரண்டு மாயினவும், இரண்டுமல்லனவாயினவுமாய அளவிறந்த பாகுபாடுகள். வினைவயத்தான் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்திநின்று அதன் பயன் அனுபவித்தல் எல்லா வருணத்தார்க்கும் ஒத்தலின், 'பிறப்பொக்கும்' என்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக்கல்லாகிய தொழிற்பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலின், 'சிறப்பு ஒவ்வா' என்றும் கூறினார்"[17] என விளக்கம் அளிக்கின்றார்.

இங்கு வருணாசிரம வழிநின்று பரிமேலழகர் காட்டும் தொழிலில், இரத்தல் எந்த வருணத்தாருக்கு உரிய தொழில் என்கின்ற கேள்வி எழுகின்றது.

"மாந்தர் எவரும் பிறப்பில் தொழில் செய்பவராகவோ, பெருமைக்குரியவராகவோ பிறப்பதில்லை. பிறப்பிலேயே உயர்வுடையவர்கள் என்பது புகழ்ச்சியேயாம். அறிவியல் சார்ந்த உண்மையல்ல... பிறப்பில் அனைவரும் சமம். மொழி இல்லை; மதம் இல்லை; உடைமை இல்லை; தொழில் இல்லை; பெருமை இல்லை; சிறுமை இல்லை; வளர்ச்சியின் காரணமாகச்சில பெறலாம். ஆயினும் மானுடத்தின் அடிநிலைக்கொள்கையான சமம், சமத்துவம் ஆகியனவற்றை இழந்துவிடக்கூடாது. சமூகத்தின் இயக்கத்துக்குப் பல தொழில்கள் தேவை. தொழில்கள் சில உயர்வான அறிவு சார்ந்த உழைப்பாக இருக்கலாம். பல உடல் சார்ந்த உழைப்பாகவும் இருக்கலாம். ஆயினும் தொழிலின்கண் உள்ள வேறுபாடுகள் தொழிலைச் செய்பவர்களிடம் வந்துவிடக் கூடாது. வந்தால் சமூகவியல் அறிவியலை,

பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (பெருமை-972)

என்ற திருக்குறள் வாயிலாகத் திருவள்ளுவர் உணர்த்துகின்றார்"[18] என்கின்றார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

எனவே, உடலாலும், அறிவாலும் உழைக்கும் எந்தவகையிலும் சாராத இரத்தலைத் தொழில் என்று எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? வலிந்து வருணத்திற்கு உரிய தொழில்களை முன்னிறுத்திய உரையாளர்கள், வழக்கம்போலத் தற்காத்துக் கொள்ள, உலகியற்றியானைப் பிரமனாகப் பார்க்கும் தன்மையை வழங்கிவிட்டனர் என்றே தோன்றுகின்றது.

இதற்கு மறுதலையே போல், பின்னால் வந்த ஔவையார், 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' என்று இரண்டு சாதிகளை மட்டும் எடுத்து மொழிகின்றார். இந்தச்சாதிகளும் இருக்கக்கூடாது என்பதே திருவள்ளுவரின் எழுச்சியென்பதை மார்க்சிய ஒளியில் கண்டுரைக்கின்றார் எஸ்.ஆர்.கே.

முற்போக்குச் சிந்தனையாளர்களின் முன்னோடி

மேற்சுட்டிய திருக்குறளை முன்வைத்துப்பேசும் எஸ்.ஆர்.கே., "இரத்தலின் இழிவையும், துன்பத்தையும் உன்னியே, இரந்து வாழும் இழிவுக்கு உள்ளாகும் சமுதாயத்தைப் படைத்த முதல்வன் கெட்டழிவானாக என்றே சபிக்கிறார் வள்ளுவர். ஆனால், இல்லாதவர்க்குச் சோறு போடாது, சாபம். திரிபுரம் எரித்த தீ கொடும் பசி உருவாய் மக்களைத் துன்புறுத்தும்போது, சமுதாயப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும். இதை உணர்ந்த வாழ்வு இயல் ஞானி வள்ளுவர். எனவே, இரவு அச்சம் என்னும் அதிகாரத்தில் இரவின் இழிவைப் பாடிய பேராசானே, வேறு வழி இல்லாத நிலையில் வறியவர்கள் இரப்பதும் பழியாகாது என்ற கருத்தில் இரவு அதிகாரமும் பாடினார். உள்ளதை மறைக்காது அள்ளிக் கொடுக்கும் கொடை வள்ளலிடம் இரக்காதிருப்பதே கோடி மடங்கு நன்று என்று இரவச்ச அதிகாரத்தில் இயம்பியவரே-

கரவாமை உவந்துறையும் கண்அன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும் (1061)

'கொடுப்பதற்கு வசதி உள்ளவரானால் தயங்காது கேள்; அவர் கொடுக்காவிட்டால் அது அவர் குற்றம்; உனக்குப் பழி இல்லை' என்றும் (இரவு அதிகாரத்தில்) ஏழைகளுக்கு அறிவுறுத்துவார்....

முன் அதிகாரத்தில் வறியவரின் இரத்தலுக்குப் பரிந்து பேசி விட்டு, அடுத்த அதிகாரத்தில் இரத்தலின் இழிவை வள்ளுவர் பேசுவதில் முரண் உண்டு என்பது வெளிப்படை. அந்நாளையச் சமுதாயச் சூழலில், இயல்பாக எழுந்த முரண்பாடு அது. இரந்து உயிர்வாழ்தல் மானத்துக்கு இழுக்கு; ஆனால், வறியவர்க்கு உதவ வேறு வழிதென்படவில்லை. பூர்வீகப்பொதுமைவாழ்வின் நல்லறங்களை முன்னிட்டு, அந்த வாழ்வை மீண்டும் நிலைநாட்ட முடியாது. மருதநில விவசாய ஏற்பாட்டில் பொருள் உற்பத்திச் சக்திகள் பெருகியுள்ள சூழலில், கடிகாரத்தைப் பின்னுக்குத் திருப்ப முடியாது. மேலும், பண்டைய பொது வுடைமையை இலட்சிய மாகப் போற்றுவதும், வியப்பாவேசமாக முடியும். பூர்வீகப் பொதுமை வாழ்வில் குலங்கள் பற்றாக்குறை வசதிகளையே பகிர்ந்து வாழ்ந்தன; அவை ஓயாது போரிட்டு அழிந்தன. சமுதாயம் பல நூற்றாண்டுகள் முன்னேறி, எங்கும் ஆலைகளின் ஓசை ஒலித்து எதிரொலிக்கும் எந்திரநுட்ப- விஞ்ஞானநெறியில் வாழ்வைக் காணும் வாய்ப்புக் கை கூடும்போதே எல்லோரும் இன்புற்று வாழும் நவீனப்பொதுவுடைமை ஏற்பாட்டை மலரச் செய்ய முடியும். இருபதாம் நூற்றாண்டில்தான் நயத்தக்க நாகரிகமான நவீன சோஷலிச யுகம் தொடங்கியிருக்கிறது. எனவே, வள்ளுவம் அக்கால அவலத்துக்குத் தீர்வுகாண, ஈகை, விருந்தோம்பல் முதலிய அறங்களை எடுத்துரைப்பதற்கு மேலாக எதுவும் செய்ய முடியாது. அன்றைய நிலையில், பொருள் ஈட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்த செல்வர்களைச் சாடி, ஈதல் முதலிய சான்றோர் நெறிகளை அறிவுறுத்துவதே மக்கட் பண்பால் கனிந்த உயர்ந்தோர்க்குக் கை வந்தது. அந்த முற் போக்கான பணியில் ஈடுபட்டார் வள்ளுவப் பேராசான்"[19] என்று முற்போக்குச் சிந்தனையாளர்களுக்கு முன்னோடியாகத் திருவள்ளுவர் திகழ்ந்தமையை இனிது சுட்டுகின்றார்.

இத்தனைக்கும், இரவு அதிகாரத்தில், "இரப்பான் வெகுளாமை வேண்டும்' (இரவு-1060) என்று பேசியவர், இரப்பவர் சார்பாக, இவரே வெகுண்டெழுவது புரட்சியாகும். வெகுளாமையை வலியுறுத்திய வள்ளுவர்க்கும் வெகுளி வருகிறது. அப்படி வெகுண்டெழுந்து, 'செத்தாருள் வைக்கப்படும்', 'அவியினும் வாழினும் என்றெல்லாம் பேசுகிறார். வெகுளியை வெறுத்தொதுக்க வேண்டும் என்று கூறிய வள்ளுவருக்கு வெகுளி தோன்றியது நியாயமா? என்று கேட்கலாம். தன்னலத்திற்கு ஊறு செய்யும்

பொழுது வெகுளி கூடாதுதான்; சமுதாயத்தின் பொது ஒழுக்கத்திற்கு ஒருவன் ஊறு செய்வதால் வெகுண்டெழுந்து தீப்போல் காய்வதில் தவறில்லை"[20] என்கிறார் அடிகளார்.

ஒருவன் ஊறு செய்வதே பொறாது திருவள்ளுவர் வெகுண்டெழுகின்றார் என்றால், ஒரு மன்னன், உலகமுழுதாளும் பெருமன்னன் ஆளும் உலகில், ஒருவன் இரந்துதான் உயிர் வாழ வேண்டும் எனில் அவனைப் பெரிதும் வெகுண்டு சபியாமல் எப்படித் திருவள்ளுவரால் இருக்க முடியும்? எனவே, இக்குறள் வெகுளிகளின் சிகரம் ஆகவே வெளிப்படுகின்றது.

ஆக, வரலாற்றின் படிநிலைகளை உற்றுக்கவனித்து, ஒப்பு நோக்கித் தமக்குப் பின்னும் நீளும் வறுமையின் முதல்நாடி முற்றும் நீக்க முடியாத வெகுளி, திருவள்ளுவரிடமிருந்து சாபமாக வெளிப்படுவதைக் காணமுடிகிறது. பரந்து கெடுக என்று வெளிப்படும் வெகுளி, உலகியற்றியானோடு மட்டும் முடிந்து விடுவதாகத் தெரியவில்லை. பேதப்படுத்தி உலகாளும் மன்னர்களை விட்டுப் பரந்தாமனின் கொப்பூழ் மலரில் குடியிருக்கும் பிரமனின் தலைமீது பழிபோட்டுத் தப்பிக்க முயலும் உரையாளர்கள் மீதும் தொடர்வதாகத் தெரிகிறது; அத்தோடும் நில்லாமல் எங்கெல்லாம் வறுமையின் கொடிய கரம் துரத்தத் தப்பித்தோடி இரந்து மனிதர்கள் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் அரசாட்சி புரிகின்ற ஆளும் வர்க்கத்தின்மீதும் அறக்கதிரவனாய் நின்று காய்கின்றது.

குணமென்னும் குன்றேறி நின்ற திருவள்ளுவர்தம் வெகுளி இன்னும் குறைந்தபாடில்லை.

சான்றெண் விளக்கம்

1. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப.274.
2. மேலது.
3. மேலது.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.16.
5. முனைவர் ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, ப.485.
6. தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், தமிழ்ப் பண்பாடு, பக்.27-28.
7. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப.31.
8. எஸ்.ஆர்.கே., 'குறள்- ஞான நூல்' கல்பனா-ஏப்ரல் 1980, பக்.10-11.
9. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.360.
10. மேலது.
11. மேலது.
12. மேலது.
13. மேலது, ப.361.
14. தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை, தொ-1, பக்.216-217.
15. மேலது, தொ-1, பக்.338-339.
16. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.265.
17. மேலது.
18. தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை, தொ-3, பக்.114-115.
19. எஸ்.ஆர்.கே. 'குறள்- ஞானநூல்', கல்பனா-ஏப்ரல்,1980, பக்.12-14.
20. தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை, தொ-3, ப.163.



ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் வள்ளுவத்தாய்

பிறப்பை இழிவென்று கருதும் பேதைமை இன்றிச் சிறப்பென்று கருதும் செம்மையைத் தருவது திருக்குறள். உலக வாழ்வு இன்பக் களம் என்று கண்டு, ஆணும், பெண்ணும் இல்லறமேற்றுக் காமம் துய்த்துக் கண்போற் புதல்வரைப் பெற்றுத் தாமும் மகிழ்ந்து தாம் வாழும் உலகும் மகிழக் காரணமாகி, வையத்துள் வாழ்வாங்கு வாழும் பெற்றியை வழங்குவதில், ஏனைய அறநூல்களைக் காட்டிலும் திருக்குறள் முன்னிற்கிறது எனலாம்.

உன்னுந்தோறும் உவகையெய்தும்படி நன்னெறி அனைத்தையும் நல்கிய திருக்குறளில், உவகையாகிய

மெய்ப்பாடு விளங்கத் தோன்றும் இடத்தைத் தொல்காப்பியத் துணைக்கொண்டு விளக்கமுறக் காண்பது இக்கட்டுரை.

உவகை எனும் மெய்ப்பாடு

எண்வகை மெய்ப்பாடுகளுள் இறுதியாக அமைவது உவகை. இதன் தோற்றுவாய் குறித்து,

செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே (தொல்.-1205)

என மொழிகின்றது, தொல்காப்பியம். இதற்கு விளக்கம் அளிக்க வரும் பேராசிரியர், 'இஃது ஈற்றுக்கண் வந்த உவகை உணர்த்துதல் நுதலிற்று. செல்வமென்பது, நுகர்ச்சி. புலனென்பது கல்விப் பயனாகிய அறிவுடைமை; புணர்வென்பது காமப்புணர்ச்சி முதலாயின. விளையாட்டென்பது யாறுங் குளனுங் காவுமாடிப் பதியிகந்து வருதல் முதலாயின. இவை நான்கும் பொருளாக உவகைச் சுவை தோன்றும். உவகையெனினும் மகிழ்ச்சியெனினும் ஒக்கும்'[1] என்று விளக்கம் அளிக்கின்றார்.

'செல்வத்தால் ஏற்படும் நுகர்ச்சியாலும், புலமையால் ஏற்படும் அறிவுமுதிர்ச்சியாலும், உள்ள இணைப்பாலும், உள்ளம் ஒத்தாரோடு கூடி ஆடும் விளையாட்டாலும், துன்பம் நீங்கிய மகிழ்ச்சி தோன்றும்'[2] என்கிறார் ச.வே.சு

ஈத்துவக்கும் இன்பம்

ஆக, செல்வத்தால் ஏற்படும் இன்பநுகர்ச்சி, தாமே நுகர்வதை விடவும், பிறர் நுகரக் கொடுக்கும் வண்மையில் மேன்மை யுறுகின்றது. இதனை ஈத்துவக்கும் இன்பம் என்றே குறிப்பிடலாம். இது ஈதலால் எய்தும் உவகை எனில், பெறுபவனும் எய்தும் பேரின்பத்தைத் திருவள்ளுவர் பின்வரும் குறட்பாவில் குறிப்பிடுகின்றார்.

இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துஉள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து (இரவு-1057)

'தம்மை அவமதித்து இழிவு சொல்லாது பொருள் கொடுப்பவரைக் கண்டால், அவ்விரப்பாரது உள்ளம் மகிழ்ந்து உள்ளுள்ளேயே உவக்கும் தன்மையுடையது' என்கிறது இக்குறள். இக்குறளுள், இகழ்ந்து எள்ளாது என்னும் சொல்லைக் கொண்டு 'நன்கு மதித்தலும், இனியவை கூறலும்' என்ற பொருள்களை

வருவித்துக் கொள்ளும் பரிமேலழகர், 'நிரப்பு இடும்பை கெடுதலளவேயன்றி, ஐம்புலன்களானும் பேரின்பம் எய்தினாராகக் கருதலான், 'உள்ளுள் உவப்பது உடைத்து'[3] என்று விளக்கம் அளிக்கிறார்.

எனினும், 'இதன் தன்மை அறியாத (புல்லறிவாண்மை உடைய) ஒருவன் நெஞ்சுஉவந்து ஈவானேயாகில், அது கொடுப்பவனுடைய தன்மையைவிடக் கொள்பவன் செய்த தவம் என்றும் குறள் குறிப்பிடுகின்றது. அவன் ஏதோ கொடையின் தன்மையை உணர்ந்து கொடுக்கின்றான் என்று அவனை, வள்ளல்களின் வரிசையில் வைத்துவிடவேண்டாம். அவ்வாறு நினைந்துசென்று மறுமுறை இரந்தால் அவன் அவ்வண்ணம் இருக்கமாட்டான்' என்று எச்சரிக்கையும் செய்கிறது இக்குறள்.

அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம் (புல்லறிவாண்மை-842)

'புல்லறிவுடையான் ஒருவனுக்கு மனமுவந்து ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின், அதற்குக் காரணம் பெறுகின்றவனின் நல்வினையே. வேறொன்றும் இல்லை'[4] என்பது பரிமேலழகர் விளக்கம்.

அதேசமயம், "உள்ளதை மறைக்காது அள்ளிக் கொடுக்கும் கொடை வள்ளலிடம் இரக்காதிருப்பதே கோடி மடங்கு நன்று என்று இரவச்ச அதிகாரத்தில் இயம்பியவரே-

கரவாமை உவந்துறையும் கண்அன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும் (1061)

'கொடுப்பதற்கு வசதி உள்ளவரானால் தயங்காது கேள்; அவர் கொடுக்காவிட்டால் அது அவர் குற்றம்; உனக்குப் பழி இல்லை' என்றும் (இரவு அதிகாரத்தில்) ஏழைகளுக்கு அறிவுறுத்துவார்"[5] என்பதையும் எஸ். ஆர்.கே. சுட்டிக்காட்டுகின்றார்.

செல்வத்துப் பயன் ஈதல். அதனால் கொள்வோரும், கொடுப் போரும் எய்துதல் இன்பம். இது செல்வத்தால் ஏற்படும் இன்ப நுகர்ச்சி. இது ஒரு நிலை.

புலவர் தொழில்

உவப்பானது, கல்விப்பயனாகிய அறிவுடைமையிற் கனிந்து தோன்றுவது; புலமையால் ஏற்படும் அறிவு முதிர்ச்சியால் புலப்படுவது. உவக்கும்படியாகக் கூடி, எண்ணுந்தோறும் இனி

இவரை என்று காண்போமோ என்று கருதி வருந்தும்படியாகப் பிரியும் தன்மை கற்றறிந்தாரால் எய்தும் என்னும் கருத்தில்,

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் (கல்வி-394)

என்று அதற்கும் ஒரு குறளைக் காட்சிப்படுத்துகின்றார் திருவள்ளுவர்.

"புலவராகிய கற்றறிந்தாரது தொழிலானது, யாவரையும் அவர் உவக்குமாறு தலைப்பெய்து இனி இவரை யாம் எங்ஙனம் கூடுதும் என நினையுமாறு நீங்குதலாகிய தன்மைத்து"[6] என்று விளக்கும் பரிமேலழகர், 'தாம் நல்வழி ஒழுகுதல், பிறர்க்கு உறுதி கூறல் என்பன இரண்டும் தொழில் என ஒன்றாய் அடங்குதலின், அத் தன்மைத்து என்றார்'[7] என்று மேல்விளக்கம் நல்குகின்றார். மேலும், 'அத்தன்மை, அப்பயனைத் தரும் நன்மை. நல்லொழுக்கம் காண்டலானும், தமக்கு மதுரமும் உறுதியுமாய் கூற்றுக்கண் நிகழ்வு எதிர்வுகளின் இன்பம் பயத்தலானும் கற்றார்மாட்டு எல்லாரும் அன்புடையர் ஆவர் என்பதாம்'[8] என்றும் விளக்குகிறார்.

இவ்வாறு கற்றாரது உயர்வினை வகுத்துக் கூறும் திருக்குறள் கல்விப் பயனாகிய அறிவுடைமையால் தோன்றும் உவப்பு எனும் மெய்ப்பாட்டிற்கு உருக்கொடுக்கின்றது.

உள்ளத்துள் உவந்துறையும் தலைவர்

உள்ளப்பிரிதல் புலவர் தொழில். உடனுறை வாழ்வில் பொருள் முதலாயின தேடித் தலைவியைப் பிரிதல் தலைவன் இயல்பு, அதனால் எய்துவது துன்பம். அதனையும் இன்பமாக்கும் அன்பினை அகச் சுவைபட அளிக்கின்றது திருக்குறள். மூன்றாம் நிலையில் சுட்டப்படும், புணர்வை, காமப்புணர்ச்சியை, காமத்துப் பால் அதிகாரத்துள் உவகையெனும் மெய்ப்பாட்டிற்கான களம் அமைத்துக் காட்டுகின்றது திருக்குறள்.

காதல் உறவில் மெய்யுறு புணர்ச்சியை விடவும், உள்ளப் புணர்ச்சியை உவந்து பேசுவது காமத்துப்பால். காதல் இயல்பானது. எண்ணுந்தோறும் இனிமை தருவது இதன் சிறப்பு. உண்மையில் பிரிவு துயர் தருவது. ஆனால், பிரிவுத்துயரையும் மகிழ்வாக்கும் ஆற்றல் மிக்கது அன்பு. அத்தகு ஆற்றல்சால் அன்பு தலைவியின் உள்ளத்தில் உவகை பூக்க வைத்துவிடுகின்றது. இது, தலைவன் பிரிந்து சென்றுவிட்டார் என்று பேசும் ஊருக்காக- ஒப்புக்குப்

போலியாய்க் காட்டும் ஒப்பனை உவகை அன்று. உள்ளத்தின் உள்ளூறும் அன்பின் அழகிய மெய்ப்பாடு இது. இது திருக்குறட் புரட்சியின் திருத்தோற்றம். காமத்துப்பால் கண்டெடுத்த புரட்சித் தலைவியின் பொலிவுறு மெய்ப்பாடு

ஊர் அலர் பேசுவதை ஒவ்வாத சங்க இலக்கியத்திற்கு மறு தலையாக ஊரவர் பேசும் அலரை எருவாக்கி உவந்து காதல் பயிர் வளர்ப்பது திருக்குறட்சிந்தனை. அந்தப் புதுமைநோக்கில்தான், பிரிந்த காதலரும் உவப்போடு உள்ளே இருப்பதாகப் பேசுகிறாள் காமத்துப்பால் தலைவி. உவகை முதலில் உள்ளத்துள் எழுவது. அதுபோல் உள்ளத்துள் உறைபவராகத் தலைவர் திகழ்கிறார். அதுவும் உவந்து உறைகின்றார். அவரைப் போய்ப் பிரிந்து போய் விட்டார் என்று அறியாமல் பேசுகிறதே இவ்வூர் என்று அதிசயிக்கிறாள் தலைவி. தலைவியின் குரலில் உவகை மெய்ப் பாட்டைத் தம் குறளில் பின்வருமாறு பதிவு செய்தளிக்கின்றார் வள்ளுவர்.

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்

ஏதிலர் என்னும்இவ் வூர் (காதற்சிறப்புரைத்தல்-1130)

காதல் கனிவில் பிறக்கும் உவகை இது.

தொல்காப்பியத்தில், நான்காம் நிலையில் சுட்டப்பெறுவது, விளையாட்டு. 'விளையாட்டென்பது யாறுங் குளனுங் காவுமாடிப் பதியிகந்து வருதல் முதலாயின' என்று சொல்லப்பெறும் விளக்கத்திற்கேற்பத் திருக்குறள் அமையாவிடினும், அளவிறந்து உவகை தோன்றுமாயின் அதனால் நிகழும் விளைவினைச் சுட்டுவதில் சிறப்பிடம் வகிக்கின்றது.

கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு (தொல்.802)

என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு விளக்கம் நல்கும்போது, “அக்காலத்து விளையாட்டு என்பது சிறுவர் விளையாட்டை (Sports)க் குறிக்காமல், பெரியவர்களின் இன்ப விளையாட்டைக் குறித்தது. தலைமகன் பரத்தையருடன் ஆடிப்பாடித் திரிவதும், கூத்துள் நடித்து மகிழ்வதும் விளையாட்டு எனப்பட்டன”[9] என்று விளக்கம் தருவார் தமிழண்ணல்.

பரத்தையர்பால் ஆடிப்பாடும் எதனையும் திருவள்ளுவர் ஏற்க வில்லை. அதேசமயம் இன்பவிளையாட்டில் மூழ்கித் தன்னிலை தடுமாறும் அரசனையோ, ஆடவரையோ திருவள்ளுவர் எச்சரிக்கத் தவறவில்லை.

அல்லல் தரும் உவகைகள் - வள்ளுவம் தரும் எச்சரிக்கைகள்

'உவகை தரும் விளையாட்டு, உரிய அளவு மீறும் இடம். விளையாட்டு வினையாகும் விபரீதம் நிகழும் இடம்' என்று எச்சரித்து, அளவுக்கு மீறிய உவகை அரசனுக்குக் குற்றம் என்று வரம்பிட்டுக் காட்டுகிறது வள்ளுவம். அரசனுக்கே ஆபத்து எனில், ஏனைய அனைவர்க்கும் இதுபொதுவாகும் என்பதைச் சொல்லாமல் சொல்லிவிடுகின்றது.

இவறலும் மாண்பு இறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு (குற்றங்கடிதல்-432)

என்பது குறள். 'வேண்டும் பொருள் கொடாமை, நன்மையின் நீங்கிய மானம், அளவிறந்த உவகை ஆகியன அரசர்க்குக் குற்றமாகும்'[10] என்கின்றார் பரிமேலழகர்.

பிறிதோரிடத்தில், 'அளவிறந்த வெகுளியைவிடவும் ஆபத்தானது மிகுந்த உவகையால் வரும் மறதி' என்கின்றார் திருவள்ளுவர்.

இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு (பொச்சாவாமை-531)

மேற்காணும் குறளுக்கு, 'மிக்க உவகைக்களிப்பான் வரும் மறவி, அரசனுக்கு அளவிறந்த வெகுளியினும் தீது'[11] என்று பொருள் தரும் பரிமேலழகர், அளவு எது? அளவிறந்த நிலை எது? என்பதை வரையறுத்துப் பின்வருமாறு தெளிவு படுத்துகின்றார். 'மிக்க உவகை - பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதம் என்று இவற்றால் வருவது. அளவு - பகைவரை அடர்த்தற்கும் கொடியோரை ஒறுத்தற்கும் வேண்டுவது. வெகுளி, ஒரோவழிப் பகைவரையும் கொல்லும்; இஃது அன்னதன்றித் தன்னையே கோறலின், அதனினும் தீதாயிற்று'[12]

'இது காமத்தின் கண்ணும், வெகுட்சியின் கண்ணும் கடைப் பிடித்தல் கூறிற்று'[13] என்று தோற்றும் இடம் சுட்டுகின்றது பரிப் பெருமாள் உரை.

எல்லை மீறிய காமக்களிப்பும், வெகுளிப் பெருக்கும் தொல்லைகள் என்று எச்சரிக்கின்றது திருக்குறள்.

உவகை கொல்லும் பகை

இவ்வாறு சுட்டப்பெறும் மெய்ப்பாடுகள் எட்டு. நகை தொடங்கி உவகையில் முடியும் எண்வகை மெய்ப்பாடுகளுள் உவகைக்கு முன்னர்ச் சுட்டப்படும் வெகுளியானது நகைக்கும் உவகைக்கும் பகையாவதையும் சுட்டுகின்றது திருக்குறள். இது திருக்குறளின் தனித்தன்மை.

இன்மையைப் பாவி என்று பேசுதல்போல், பகைவர் என்று மனிதரைச் சுட்டாமல் பகைக்குக் காரணமான பண்பினை, மெய்ப் பாட்டினைச் சுட்டுகின்றது குறள். பகை தோன்றுமிடத்தில் நகை தோன்றாது. அதுவே உள்ளத்துள் தோன்றும் உவகைக்கும் எமன் என்பதை எச்சரிக்கையாக்கிப் பேசுகின்றது.

வெகுளியால் மகிழ்வுக்கொலை நிகழும். உவகையின் பகை வெகுளி என்று உரைக்கிறது பின்வரும் திருக்குறள்.

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற (வெகுளாமை-304)

காலிங்கர், 'நகையாகிய முகமலர்ச்சியும், உவகையாகிய மனமகிழ்ச்சியும் இவை இரண்டினையும் கொன்று விடுவதாகிய சினத்தைப்போல வேறு சில (பகையும் உள)வோ? எனவே, இதனைப்போல இவ்வுலகத்துப் பெருங்கேடு செய்யவல்லனவாய் இருப்பன சில பகையாவும் இலர் என்று பொருளாயிற்று என்றவாறு'[14] விளக்கம் அளிக்கின்றார். இதன்வழி நகை- முக மலர்ச்சி; உவகை- அக(மன)மலர்ச்சி என்றாகிறது.

கருதியது காட்டும் கண்ணாடி

அகமும், முகமும் உவகையின்முன் ஒன்றாதலைச் சுட்டும் திருக்குறள். உவகையைப் போலவே வெகுளிக்கும் அதுவே தோற்றுவாய் என்பதையும் உணர்த்திவிடுகின்றது. 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' உவப்பினையும் வெகுளியையும், ஒளிக்காமல் காட்டிவிடவல்லது என்கிறார் வள்ளுவர். கண்டபோது மட்டும் காட்டுவது அன்று. காணாதபோதும், ஒருவனை உள்ளத்தால் நினைந்த மாத்திரத்திலேயே தோற்றிவிடுவது. அது வெகுளியாக இருந்தாலும் சரி, உவகையாக இருந்தாலும் சரி, அதனை உடனே புலப்படுத்தி விடுகின்றது முகம். அதனைவிட அறிவுடையது வேறெது? என்று வினவுகின்றது பின்வரும் இக்குறள்.

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும் (குறிப்பறிதல்-707)

ஆக, செல்வத்தாலும், புலமையாலும், புணர்வாலும், விளையாட்டாலும் வெளிப்படும் உவகைக்கு இருநிலை உண்டு. தமக்கு உவகையும், பிறருக்கு அல்லலையும் விளைவிப்பதோடு பிறருக்கு ஏற்படுத்தும் அல்லலையும் தன்வசமாக்கிவிடுவதும் உண்டு. எனவே, இவ்விரு நிலைகளையும் தம் குறட்பாக்களில் தெளிவுறச் சுட்டிநிற்கும் திருக்குறள், அல்லல் நீத்த உவகையையும் அழகுறக் காட்டிவிடுகிறது.

அல்லல் நீத்த உவகை

செல்வங்கள் பதினாறு என்று பட்டியலிடும் பிற்காலவழக்கில், சந்தானம் ஆகிய குழந்தை பெரும்பேறு. இதற்கென்றே தனி அதிகாரம் படைத்து 'மக்கட்பேறு' என்று பேசுகின்றது திருக்குறள்.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற (மக்கட்பேறு-61)

என்று உரத்துமொழிகிறார் வள்ளுவர். காமத்தின் கனிந்த மழலை அமுது அது. இன்னும் சொல்லப்போனால், அக வாழ்வில் பிரிவினை ஒழித்துத் தலைவனும் தலைவியும் புணர்ந்து பெறும் இனியசெல்வம் அது. அதன் விளையாட்டு, அலகிலா விளையாட்டு. பெற்றோர்க்கு மட்டுமன்றி, காணும், கேட்கும் யார்க்கும் உவகை பயப்பது குழந்தை.

அதனிடம் மயங்காதார் யாருமிலர். எனவே, எல்லா நிலைகளிலும் அல்லல் நீத்த உவகை அளிப்பது மழலை. அதனை மக்கட்பேறு அதிகாரம் முழுக்கச் சொல்லிச் சொல்லி உவக்கின்றார் வள்ளுவர்.

காண்பார்க்கும், கேட்பார்க்கும், கருதுவார்க்கும், எழுது வார்க்கும் உவகைதரும் இம்மழலை அமுதைப் பயந்த தாயின் உவகைக்கு இணை வேறுண்டோ?

தாயாகவே மாறிப் பல இடங்களில் தன்பால் மறந்து தமிழ்ப்பால் இசைக்கிறார் முப்பால் தந்த ஒப்பிலா வள்ளுவர். குழலை விடுத்து, யாழை இழுத்துமூடிக் குழவியின் மழலையமுதுக்கு ஏங்கிநிற்கும் அவருக்கு, குழந்தை அளாவிய கூழ் பேரமுதாகிறது. குழவியின் மெய்தீண்டல் உடற்கின்பம் நல்குகிறது. அதன் சொல் செவிக்கு

இன்பம் அளிக்கிறது. என்ன இருந்தாலும், இக்குழந்தைக்கு உரியர் தந்தை, தாயர் தாமே என்கின்ற நினைவில் அவர்களையும் சுட்டுகின்றார். திடீரென்று தாம் கூறவந்த அறவுணர்வு அவரைத் தடுத்தாட்கொள்ள, உடனே,

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் (மக்கட்பேறு-67)

என்று அறம் பாடிவிடுகின்றார். எனினும், தாயை நினைக்கின்ற போது, அவருள் இயல்புறப் பூக்கும் உவகை பேருவகையாக மலர்கிறது.

ஒரு குறளும் பல்லுரைகளும்

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (மக்கட்பேறு-69)

என்று பாடிவிடுகிறார். விரித்துப் பேச வேண்டிய திருக்குறள் இது.

இக்குறள் வாயிலாக, அல்லல் நீத்த உவகையாக வள்ளுவப் பெருமான் காட்டும் உவகை, ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தாயுவகை! இந்தத் தாயின் பின்னணியில் பல தாயர்களை முன்னிறுத்துகின்றனர் உரைகாரர்கள்.

உரை 1. பரிமேலழகர்:- தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும்; தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தான் என்று அறிவுடையோர் சொல்லக்கேட்ட தாய் என்றவாறு.

கவானின்கட்கண்ட பொதுவுவகையினும் சால்புடையனெனக் கேட்ட சிறப்புவகை பெரிதாகலின், 'பெரிதுவக்கும்' எனவும், பெண்ணியல்பால் தானாக அறியாமையின் 'கேட்ட தாய்' எனவும் கூறினார். அறிவுடையார் என்பது வருவிக்கப்பட்டது. 'சான்றோன்' என்றற்குரியர் அவராகலின், தாய் உவகைக்கு அளவின்மையின், அஃது இதனாற் பிரித்துக் கூறப்பட்டது.[15]

உரை 2. மணக்குடவர்:- தான் பெற்ற காலத்தினும் மிக மகிழும்; தன் மகனைச் சான்றோனென்று கேட்ட காலத்துத் தாய் என்றவாறு.[16]

உரை 3. பரிதியார்:- ஈன்ற காலத்தில் ஆண்பிள்ளை என்று சொல்லக் கேட்ட மகிழ்ச்சியிலும் தன் பிள்ளை அறிவினால் பெரியவன் என்று கேட்ட தாய்க்கு அதிலும் மகிழ்ச்சி என்றவாறு.[17]

<u>உரை. 4 காலிங்கர்</u>:- மற்றிவனைத் தான் முன்னம் ஈன்றெடுத்த அப்பொழுதினும் பெரிதும் மன மகிழும், பின் புதல்வனை உலகத்துச் சிறந்தோர் பலரும், 'இவன் பெரிதுஞ் சால்புடையான்' என்று எடுத்து உரைப்பக் கேட்ட தாயானவள் என்றவாறு.[18]

தத்தம் காலத்து இயல்புநிலை வைத்து உரைநல்கியவர்கள் திருக்குறள் சுட்டிய 'தாய்'க்கும், 'சான்றோன்' என்ற சொல்லுக்கும் விளக்கம் நல்கியிருக்கின்றனர்.

'பெண்ணியல்பு அறியாமை' என்பது பரிமேலழகர் உரைக் கருத்து. இது வள்ளுவர் கருத்து இல்லை. அதுபோல், சான்றோன் என்பதற்கு, கல்விகேள்விகளால் நிறைந்தவன் என்பதும், அறிவினால் பெரியவன் என்பதும், உரையாசிரியர்கள் தரும் விளக்கம். வள்ளுவர் நல்கும் விளக்கமோ, வேறுவிதமானது; விளக்கமானது; குழப்பமில்லாதது.

இந்தக் குறளில் 'மகன்' சுட்டப்படுவதுபோல் ஏன் 'மகள்' சுட்டப் படவில்லை? ஈன்றபொழுதில் அது மகன் என்பதற்குப் பதிலாக மகள் என்றிருந்தால் அத்தாய் மகிழமாட்டாளா? அத்தாயின் இயல்புதான் என்ன என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன. தற்காலப்போக்கிற்கேற்பப் பதில் தேடுவதைவிடவும், திருக்குறள் தோன்றிய காலத்தை முன்வைத்து இக்கேள்விகளுக்கான விடைகளைக் காணலாம்.

ஈன்றபொழுதிற் தோன்றும் உவகை

ஐவகை நிலங்கள் அடிப்படையில் அமைந்த தமிழர்தம் வாழ்வு உடைமைச் சமுதாய அமைப்பாக ஆன வேளையில், பெண்ணும் உடைமைப் பொருளாக்கப்படுகிறாள். ஐந்திணையொழுக்க நிலை தோற்றம் கொள்கிறது. அந்த நிலையில், களவாகவும், கற்பாகவும் நிகழும் அகவாழ்வின் அன்புறு அடையாளமாகப் புறத்தே தோன்றும் உயிர் புதல்வன்; அல்லது புதல்வி. எனினும், பொதுப்பட மக்கள் எனப் பேசுகின்றது இலக்கியம்.

எத்தனை பெருஞ்செல்வம் இருப்பினும் மழலைச் செல்வமே மகத்தான செல்வம் என்று கொண்டாடுவது தமிழர்தம் மாண்பு. வள்ளுவருக்கு முன்பே,

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி

இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை- தாம் வாழும் நாளே - (புறம்-188)

என்று பாண்டியன் அறிவுடை நம்பி, மயக்குறு மக்களின் மாண்பைப் பேசுகின்றார்.

பொன்போற்புதல்வர்

இம்மையுலகில் புகழொடு விளங்கவும், மறுமையுலகை மறுவின்றி எய்யவும் உதவுவோர் மக்களே என்பது சங்கஇலக்கியத் துணிபு.

இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்ந்தனம் தோழி (அகம்-66)

என்ற செல்லூர்க்கோசிகன் கண்ணனாரின் அகப்பாடல் மக்கட் பேறு பற்றிப் பழந்தமிழ்க்குல எண்ணங்களை வடித்துக் காட்டுகின்றது. 'ஆலமர் செல்வனாகிய சிவனின் புதல்வன் முருகனைப் போன்றவன்' என்று தன்மகனைக் கொண்டாடுகிறான் கலித்தொகைத் தலைவன்.

அரிபொலி கிண்கிணி ஆர்ப்பு ஒவா அடி தட்ப
பாலோடு அலர்ந்த முலை மறந்து, முற்றத்துக்
கால்வல் தேர் கையின் இயக்கி நடை பயிற்றா
ஆல்அமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல, வரும் என் உயிர்!
பெரும! விருந்தொடு கைதூவா எம்மையும் உள்ளாய்
பெருந் தெருவில் கொண்டாடி ஞாயர் பயிற்ற
திருந்துபு நீ கற்ற சொற்கள் யாம் கேட்ப
மருந்து ஒவா நெஞ்சிற்கு அமிழ்தம் அயின்றற்றா
பெருந்தகாய்! கூறு சில
எல்லிழாய்!' (கலி-81)

என்ற பாடல் அடிகளில் அவன் மழலைச் செல்வத்தைக் கொஞ்சும் பாங்கு புலப்படுகின்றது. அதுபோல், 'அத்தத்தா என்னும் நின் தேமொழி கேட்டல் இனிது' (கலி-8) என்ற தலைவியின் கூற்றிலும் ஆண்குழவியின் மழலை அமுதின் சிறப்பு பதிவாகியிருக்கின்றது.

மக்கள் எனச் சுட்டப்பெற்றாலும், பொதுவாகச் சங்கப் பாடல்களில் பெரும்பாலும் பேசப்பெறும் மக்கள் ஆண்மக்களே. ஆண் குழந்தைகளின் பிறப்பே அளவிலா மகிழ்வு தருவனவாகச் சுட்டப்பெறுகின்றன.

"எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்' என்று உரைக்கும் நெட்டிமையார் பாடல் (புறம்-), 'ஆவையும் ஆனியல் பார்ப்பன மாக்களோடு, பெண்டிரையும், பிணியுடையாரையும்' விலக்கும் பட்டியலில், 'தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் பொன்போற் புதல்வர்ப் பெறாதாரையும்' விலக்குகின்றது.

தென்புலத்தார்க்கு அருங்கடன் இறுக்கும் பொறுப்பு புதல்வர்க்கு என உள்ள அக்கால நிலை ஒருபுறம் இருக்கப் போர்க் களத்தில் வீரம் வெளிப்படக் கடன் ஆற்றும் காளையைப் பெறுதலே தன் கடன் என்று கருதும் தாயர்கள் விளங்கியமையை, "ஈன்று புறந் தருதல் என்தலைக் கடனே' (புறம்-312) என்று மறக்குடி மகள் பேசுவதாகப் புலவர் பொன்முடியார் பாடும் பாடலினின்றும் அறிய முடிகிறது.

'பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்' எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலில் (நற்றிணை-111), பொற்கலத்தில் ஏந்திய பாலை உண்ண மறுத்து, பூ தலைச் சுற்றிய கோலுக்கு அஞ்சுவது போல், 'முத்து அரிப்பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று.. ஓடி ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி'யாகப் பெண்மகள் பேசப்பெறுகிறாள்.

இதேபோல் பெண்குழந்தைகள் குறித்துப் பேசும் பாடல்கள் ஆராயத்தக்கன. பெண்மகளைக் கேட்டு வரும் மன்னனுக்கு, அவளைப் பெற்ற தந்தை தர மறுத்தால் அவள் பிறந்த ஊர் என்னென்ன அழிவுகட்கு உள்ளாகுமோ என்று அஞ்சிப்பாடும் புறப்பாடல்கள் உண்டு. பாரிமகளிர் - புறப் பாடல்களுக்கு அகச் சான்றாய்த் திகழ்கின்றனர்.

கலித்தொகையில் ஆண்மக்களுக்கு நிகராகப் பெண்மக்களின் வீரம் பேசப்படுகின்றது. 'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை' மறுக்கும் உரிமை அவர்கட்கு உண்டு எனக்காட்டுகிறது முல்லைக் கலி. தாம் பெற்ற பிள்ளையை, அச்சமின்றிப் போர்க்கனுப்பும் மூதின்முல்லை குறித்துப்பேசுகிறது புறநானூறு.

உணர்ச்சிப் பெருக்குமிக்க சங்ககாலச் சமுதாயத்தில், பரத்தையர் பால் சென்று வந்த தலைவனை, வேறு வழியின்றி ஏற்றுக்

கொள்ளும் தலைமகள் அவன் உரைக்கும் 'பொய்ச் சூள்' தாம் பெற்ற மகனுக்கு ஊறு விளைக்குமோ என அஞ்சி ஏற்றுக் கொண்டதையும் அகப்பாடல் காட்டுகின்றது.

என்னதான் தலைவன் விரும்பிப் பரத்தையரோடு கூடப் போயினும், அங்கே குழந்தைப் பேற்றிற்கு இடமில்லை. அது அல்லல் நீத்த உவகை இல்லை. தலைவிக்கும் சுற்றத்தார்க்கும், ஏன் சமயங்களில் தலைவனுக்கேகூட அல்லல் அளிக்கும் உவகை தான், அது. எனவே, அல்லல் நீத்த உவகை தருவது மழலை; இன்னும் சொல்லப்போனால், பொருட்பெண்டிர் முயக்கம் கொள்ளாது ஆடவனைக் கடமையாற்றக் கவர்ந்திழுக்கும் அன்பு வளர் காந்தம்.

திருக்குறளின் தனித்தன்மை

எனவே, பரத்தையர் ஒழுக்கத்தைத் தாம் பாடும் ஒழுக்க வரிசையில் வைக்காமல் உதறிவிடுகின்ற திருவள்ளுவர், பெண்மையை, 'வாழ்க்கைத் துணைநலம்' என்று வைக்கின்றார். அறத்தில் வைக்கப் பெறும் இதனை அடுத்துப் பொருட்பாலில் 'பெண்வழிச்சேறல்', 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரங்களில் பொருட் பெண்டிரைச் சுட்டும் திருவள்ளுவர் காமத்துப்பாலில் பரத்தையர் பற்றிப் பேச வில்லை என்பது திருக்குறளின் தனித்தன்மைக்குச் சிறந்த சான்றாகும். அது மட்டுமன்றி, பெண்மையை நுகர்பொருளாகக் கொள்ளும் ஆண்களின் சிந்தனையைக் குற்றம் எனக் கடிந்து பேசலே வள்ளுவரின் கருத்தாக அமைகின்றது.

ஒருமை மகளிரே போல...

'பிறன்மனை நோக்காப் பேராண்மை' என்று பேசுவது வள்ளுவப் புரட்சி. இத்தகு ஒழுங்கிற்கு உரியவனாக ஆடவன் இருந்தாதல் வேண்டும். வள்ளுவருக்கு இங்கே பெண்களால் பிரச்சனை இல்லை. பிரச்சனைக்கு உரியவன் ஆடவன்தான். காரணம், பெண்மை இயல்பில் இனியது. ஒழுக்கத்தில் சிறந்தது. நிறை காக்கும் பாங்கு இயல்பில் கொண்டது. அவர்களை முன்னிறுத்தியே, ஆடவர்கட்கு இலக்கணம் புகட்டுகின்றார் திருவள்ளுவர்.

ஒருமை மகளிரே போலப் பெருமைதான்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு (பெருமை-974)

என்று சான்றாண்மைக்கு முன் வைக்கின்றார். தன்னைத் தான் கொண்டொழும் பாங்கை, ஆண்களுக்குக் கற்றுக் கொடுப்பது பெண்மை. பெண்மைக்கு இலக்கணம் கற்பெனில், ஆண்மைக்கு அடையாளம் சான்றாண்மை. "அஃதாவது, பல குணங்களானும் நிறைந்து அவற்றை ஆள்தல் தன்மை"[19] என்று சுட்டும் பரிமேலழகர், "'பல குணங்களானும்' என்பது சாலுதல். தொழிலால் பெறப்படுதலின், 'அவற்றை' என்பது. வருவிக்கப் பட்டது. பெருமையுள் அடங்காத குணங்கள் பலவற்றையும் தொகுத்துக் கொண்டு நிற்றலின், இஃது அதன்பின் வைக்கப் பட்டது"[20] என்று வைப்புமுறை குறித்தும் எழுதுகிறார்.

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின் (வாழ்க்கைத் துணைநலம்-)

என்ற குறளையும்,

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின் (சான்றாண்மை-988)

என்ற குறளையும் ஒப்புநோக்க இவ்வுண்மை புலப்படும்.

திருவள்ளுவர் காட்டும் புரட்சித்தாய்

ஆக, இன்று வரையிலும் மகன்பால் அன்பு பாராட்டுவது தமிழ்ப்பெண்டிரின் இயல்பாகியிருக்கிறது. ஆண்வழிச் சமுதாயமாக இருக்கும் இச்சமுதாயத்தில் ஒப்புரவு நாட்டப் பெண் முனைந்து நிற்கிறாள். அவளது தாயுளம் தந்தையரைத் திருத்த முயன்று தோற்றபோதிலும் தம்மதலையரைக் காத்துச் செம்மை பேணத் தலைப்பட்டுநிற்கிறது. தந்தை தவறிய இடங்களில் தம் சந்ததி தவறிவிடலாகாது என்று கொள்கிற கவனம் வெளிப் படுகிறது. இன்னொருத்தி பெற்ற பிள்ளையான தன் கணவன் இடரும்போது தன் பிள்ளையானால் சரிப்படுத்திச் சமுதாயத்தைச் சமன் செய்ய முடியும் என்ற நம்பிக்கை அவளுள் உயிர்த் தெழுகிறது. தன்னை ஒத்து மகள் பிறக்கிறபோது எழும் மகிழ்வை விடவும், தானாகாது ஆண்மையுடன் பிறந்த மகவைக்கண்டதும் ஒர் உவகை பிறக்கிறது. இத்தனை நாளாய்த் தன்னுள் தாங்கிய ஆண்மையுணர்வின் அடையாளம் அது என்று கண்ட ஆனந்த மாகவும் இருக்கலாம். அல்லது எதுவாகவும் இருக்கலாம். எல்லாத் தாயும் பிரசவ நிலையில் ஒரேமாதிரியா உணர்வு கொண்டிருக்க முடியும்? அது போல், என்னதான் முயன்றாலும், எல்லாரும்

வள்ளுவ உணர்வை ஒன்றுபோலவா எய்த இயலும்? படைப்பும் கூட ஈன்று புறந் தருதல் தானே! வள்ளுவத்தாய் ஈன்று புறந்தந்தது சான்றாண்மைக்கு ஆழி எனச் சொல்லத்தக்க பேரிலக்கியப் பிள்ளையான திருக்குறளைத் தானே!

எனவே, மகளைப் பெற்றபோது அத்தாய் மகிழ்ந்திருக்கவும் கூடும். அம்மகள் வளர்ந்து வாழ்க்கைத் துணை நலமாக அமைந்து விடுவாள். ஆனால், அவளைக் கைப்பிடிக்கும் ஆடவன், பெருமையும் உரனும் உடைய நல்லொழுக்கவானாக அமைய வேண்டுமே என்ற ஆதங்கம்தான் திருவள்ளுவருக்கு அதிகம்.

அதற்கான சூழலை, ஒழுகலாறுகளை முன்வைப்பதில்தான் வள்ளுவத்தாய்மை திருக்குறளாக வளர்கிறது. தான் விரும்பும் இலட்சிய சமுதாயத்திற்கு ஏற்ற ஆண்குழந்தையைப் பெற்ற தாய் முதலில் ஈன்ற பொழுதில் உவகை எய்துகிறாள்.

அவ்வுவகை பேருருக் கொள்வது அவன் சான்றோன் என்று மற்றோர் கூறுவதைக்கேட்கும்பொழுதுதாம். இங்கே, தாய் என்னும் சொல் முன்னிறுத்தப்பெறவில்லை. அவள் தாயாகுந்தன்மை, ஈன்ற நிலை முன்னிறுத்தப் பெறுகிறது. அந்தப் பொழுதில் தோன்றிய உவகை அளவையாகச் சொல்லி அமையும் பெரிது உவக்கும் என்ற அடுத்த தொடர், தன்மகனை என்ற தொடரை மையப் படுத்திக்கொண்டு நிற்கிறது.

அடுத்த தொடரில், 'சான்றோன் எனக் கேட்டது' தான் சுட்டப் பெறுகிறதே ஒழிய, கேட்க 'சொல்லியவர் யார்?' என்று சொல்லப் பெறவில்லை. சொன்னவர் முகமும் தெரியாது. எனவே, இது முகமன் இல்லை. உள்ளார்ந்த நிலையில் எழுந்த மதிப்பீடு. பாரதியார் வாக்கில் சொன்னால், 'உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!'

அதுதான் பேருவகை. ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தாயுவகை!

உண்மையில் சான்றோன் ஆக்கிய தந்தைக்குத்தானே இந்த உவகை தோன்றியிருக்க வேண்டும். தாய்க்கு ஏன் வந்தது? என்ற கேள்விக்கும் இந்தக் குறள் பதில் வைக்கிறது.

சான்றோன் ஆக்கியதில் தந்தைக்கு வந்தது உவகை. அவ்வாறு புகழப்பட்டதை, இல்லத்துறையும் தலைவி - மனைவி தன் கணவன் சான்றோர்களால் கூறப்பட்டதாகக் கூறியது கேட்டு, அவன் முகத்து உவகை கண்டு பேருவகை கொண்டவளாக இருந்திருக்கலாம் அல்லவா?

அடிகளார் நோக்கில்...

இந்த இடத்தில், குன்றக்குடி அடிகளார்தம் உரையையும் ஒப்பு நோக்கல் தகும்.

"தன் மகனை நல்லாண்மையுடைய சான்றோன் என்று உயர்ந்தோர் புகழ்ந்து கூறுவதைக் கேட்ட தாய் அம்மகனைப் பெற்ற பொழுதினும் பெரிது மகிழ்வாள். ஒருவர் செய்த நற் செயல்களின் பயனைக் கண்டவர்கள் மனம் கலந்து பாராட்டிக் கூறுவது புகழ்"[21] என்று பொதுப்பட விளக்கம் தந்த அடிகளார், காலச் சூழலைக் கருத்தில் கொண்டு பின் வருமாறு மேல் விளக்கம் தருகின்றார்.

"ஆசிரியல் காலத்தும் இன்றும் புறத்திணை - உலகியல், ஆண் மக்களால் நடத்தப்பெறுவதால் மற்றவர் புகழும் வாய்ப்பு ஆண்மகனுக்கே உண்டு. ஆதலால், 'மகன்' என்றார். ஒரோவழி மகளுக்கும் உண்டு - பொதுவிதியன்று; சிறப்பு வழியேயாம்"[22] என்கின்றார்.

உளவியல் நோக்கோடு உலகியலையும் கருத்தில் கொண்டு அவர் மேலும் சொல்கிறார்: "புகழ் என்பது கேட்பதற்குரியதே தவிர, காண்பதற்குரியதன்று. தந்தையினும் தாய் மகிழ்தல் இயற்கை. அதனால், தந்தைக்கு மகிழ்ச்சியில்லை என்பது பொருளாகாது. ஆயினும், ஒரே புறத்திணையில் தந்தையும் மகனும் ஈடுபடுவதால் ஒரோவழி தந்தையுள்ளம் பொறாது. வறிதே தகப்பனானவன் மகன் புகழில் அழுக்காறு கொள்ளுதல் நிகழலாம். அல்லது மகன் தந்தையை விஞ்சியதாகக் கருதி தந்தையிடத்து மதிப்பில்லாதபடி ஒழுகும்போது தந்தைக்கு மகிழ்ச்சி வராது."[23]

ஆக, வள்ளுவத்தாய் தம் குழந்தைக்குத் தந்தையாகிய கணவனையும் விஞ்சிய அன்புடையவள். தம்பிள்ளையின் வளர்ச்சியில் பேருவகை கொள்பவள் என்பது பெறப்படுகிறது.

சங்க இலக்கியத் தாயர்கள்

இத்தகு சிந்தனைகட்கெல்லாம் இடம் வைக்கும் திருக்குறள் காலத்துத் தாயானவள், 'சான்றோன்' எனக் கேட்ட தாய். அவளுக்கும் முந்திய சங்க இலக்கியத் தாயின் நிலையையும் இங்கு காண்பது பொருத்தம்.

புறநானூற்றில் காணப்பெறும் முதிய தாய், போர்க்களத்தில் தன் மகன் யானை எறிந்து களத்தில் இறந்தான் என்று கூறியது

கேட்டு ஈன்ற பொழுதினும் உவகை பெரிதாகக் கொண்டாள் என்று பேசுகிறது, பூங்கண் உத்திரையாரின் பாடல்.

வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்ட னென்னு முவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே (புறம்-277)

என்ற பாடல் அடிகளில் அப்பேருவகை வெளிப்படக் காணலாம்.

அதுபோல், 'புறமுதுகிட்டு இறந்தான்' என்ற சொல் பொறாது, 'அவ்வாறு அவன் இறந்தானாகில், அவன் பாலுண்ட எனது மார்பை அறுத்தெறிவேன்' என்று சினந்த தாய் ஒருத்தி, போர்க்களம் புகுந்து மகனைத் தேடிப்பார்க்கிறாள். அங்கே விழுப்புண் பட்டுச் சிதைந்து துண்டு துண்டாகிக் கிடக்கும் தன் மகனின் வீரமரணத்தைக்கண்டு, ஈன்ற பொழுதிற்பெரிதுவந்தாள் என்று பேசுகிறது, காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பாற்புலவர் பாடிய புறநானூற்றுப் பாடல்.

படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே (புறம்-278)

என்பது அப்பாடலின் உயிர்ப்பு வரிகள்.

பிறந்தது ஆண்குழவி என்பதால் ஈன்ற பொழுதில் மகிழ்ந்த அக்காலத்துத் தாயர், தம்பிள்ளை, போர்க்களத்தில் வீரசாகசம் புரிந்து இறந்தது கண்டு பேருவகை எய்தினர் என்பதையே வள்ளுவர் காலத்துக்கு முந்திய இலக்கியங்கள் சுட்டுகின்றன.

இந்த இடத்தில் திருவள்ளுவர் தம் இலக்கியத் தாயை வைத்து ஓசையில்லாமல் ஒரு புரட்சியைச் செய்துவிடுகிறார்.

திருக்குறட்புரட்சி

"மகப்பேறு தாய் தந்தை இருவர்க்கும் ஒரு பெற்றியது என்றாலும் தாய்க்கே மற்றொரு பற்றுக்கோடாகும். ஆதலின் வாழ்க்கைத் துணைநலத்துக்கு அடுத்து மக்கட்பேறு அமைந்திருப்பது பொருந்துவதே

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

என்ற குறளும் மகச்செல்வத்தை மனையாளின் நன்கலமாகச் சொல்வதைக் காண்க"[24] என்று மகனின்பால் தாய் கொள்ளும்

தனிப்பாசத்தைக் குறிப்பிடும் மூதறிஞர் வ.சுப.மா., அத்தாயைக் கொண்டே திருவள்ளுவர் செய்த திருக்குறட்புரட்சியையும் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியப்பின்னணியோடு காட்சிப் படுத்துகின்றார்.

"தொல்காப்பிய, சங்க இலக்கியங்கட்கும் திருக்குறளுக்கும் ஈண்டு ஒரு பெரு வேறுபாடு உண்டு. தலைவியின் ஊடலுக்கு முன்னை நூல்கள் தலைவனின் பரத்தமையை ஒரு பெருங் காரணமாகப் பின்னிப்பாடுதல் உண்டு. அவ்வகையூடல் நீக்கத்துக்கு அன்புக் குழந்தையைப் பிணக்கு தீர் கருவியாக ஆக்குதலும் உண்டு.

தந்தையர் ஒப்பர் மக்களென் பதனான்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும் (தொல்.1091)

நல்லோர்க் கொத்தனிர் நீயிர் இஃதோ
செல்வற் கொத்தனம் யாமென மெல்லவென்
மகன்வயிற் பெயர்தந் தோனே (அகம்-26)

எனத் தொல்காப்பியத்தும் அகநானூற்றிலும் பிற சங்கத் தொகைகளிலும் ஊடற்பொருளான மருதத்தில், சுந்தரர்க்குச் சிவன் போல், மகன் ஊடாடுபொருளாக இருக்கின்றான். வள்ளுவரோ, இக்கருத்துக்கெல்லாம் மாறுபட்டவர். முன்னோர் மொழிபொருள் என்பதற்காக அவர் பின்பற்றினாரிலர். மரபுப் புரட்சியும், இலக்கணப்புரட்சியும் இலக்கியப்புரட்சியும் செய்தார் வள்ளுவர். தமிழ் மரபில் வள்ளுவர் செய்தவை செயற் கரியவையும் செயற்குரியவையும் ஆம். காமத்துப்பாலில், புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை என ஊடலுக்கே மூன்று அதிகாரங்கள் எழுதியிருந்தும், தலைவனை மெய்யான பரத்தையொழுக்கம் உடையவனாகக் காட்டவில்லை. அவன் பரத்தமையைக் கற்பித்துத் தலைவி ஊடுவதாகவே கருத்துத் தொகுத்துள்ளார்.

இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்லது அவரளிக்கு மாறு (குறள்-1321)

என்ற குறளால் பரத்தைக் குறிப்பு ஊடலுக்குக் கற்பித்துக் கொண்ட இல்பொருள் என்பது வெளிப்படை. மெய்யான பரத்தை யொழுக்கமின்மையின் காமத்துப்பாலில் ஊடல் தீர்க்கும் மருந்தாகப் பிள்ளை வரவுக்கு இடமுமில்லை. பொருட்பாலில் வரைவின் மகளிர் என்ற இனமும் பரத்தையும் கூடா என்று கடிந்த

வள்ளுவர் அதனை நினைவிற்கொண்டு காமத்துப்பாலைத் திருத்தி யமைத்திருப்பது அவர்க்கேயுரிய தனித்தன்மையும் சிறப்பும் ஆகும். ஆதலின் திருக்குறள் சங்க இலக்கிய வழியே என்பதும் அவ்வழி வள்ளுவரால் செப்பனிடப்பட்டது என்பதும் போதரும்."[25]

காமத்துப்பாலில் இடம்பெறும் கற்பிற்சிறந்த தலைவியையே, அறத்துப்பாலில், 'சான்றோன் எனக் கேட்ட தாயாகக்' காட்சிப் படுத்துகிறார்.

அச் சான்றாண்மைதான் யாது? போர்க்களத்தில் யானை எறிந்து களப்படுவதா? அல்லது போரிட்டுத் துண்டு துண்டாகிச் சாவதா? எனில், அது, அக்காலத்திற்குப் பொருந்தும்.

அதற்கு மாற்றாய், அமைதியையும், அறவழிப்பட்ட ஆக்கத்தையுமே வலியுறுத்தும் திருக்குறளின் நோக்கிற்கு அது பொருந்தாது; இக்காலத்திற்கும் ஏற்புடையது ஆகாது. முறையற்ற போரும், முழுமையற்ற வாழ்வியல் பார்வையும் கொண்ட இக் காலத்தில் படுகளத்தில், எந்தத்தாயும் தம்மகனை இங்ஙனம் இழக்கச் சம்மதியாள். தம்மகன் மட்டுமன்றி யார் பெற்ற பிள்ளை யாயினும் வறிதே அழிந்து போவதை, மெய்யாகவே எந்தத் தாயுள்ளமும் ஏற்காது. இன்றைக்கு வீரத்தின் விளக்கம் வேறாகிப் போகிறது. அறம்பிறழாது வாழும் ஆண்மையும் அதற்கு உற்ற துணையாகும் பெண்மையுமே இன்றையத் தேவை.

பிறன்மனை நோக்காப் பேராண்மையும், திண்ணிய கற்புடைய பெண்மையுமே வள்ளுவ எதிர்பார்ப்பு. அத்தகு ஆண்மையும் பெண்மையும் கூடிக் கலந்து கொடுக்கும் நன்மக்கள்தாம் உலகின் பெருஞ்செல்வம். அவர்களால்தான் மானுடம் தழைக்கும். அதற்கு வீரத்தைவிடவும், விவேகத்தையும், வேகத்தையும் விடவும், உலகத்தார் உவந்தேற்கும் சான்றாண்மையே மிகவும் தேவை.

வள்ளுவர் கண்ட - காட்டுகின்ற திருக்குறள் தாய், உலகப் பொதுமை பேணுபவள். உலகப்பெருந்தாய். அவள் தன் மகன் வீரனாவதைவிடவும், தக்கோரால் சான்றோன் எனப்புகழ்தலையே விரும்புகிறவளாகத் திகழ்கிறாள். 'ஊழி பெயரினும் தாம் பெயராது சான்றாண்மைக்கு ஆழி என விளங்க வேண்டும்' என்று கருதுகின்றாள். அத்தகு சான்றாண்மை எது என்பதையும் வள்ளுவர் அழகுற அதிகாரம் வகுத்து விளக்குகின்றார்.

'தாய் கேட்டுவந்த சான்றோன்' யார்?

சான்றாண்மை மேற்கொள்பவர், 'நல்லவை எல்லாம் கடமை எனக் கொண்டு கடமையாற்ற வேண்டும்' என்கின்றார், திருவள்ளுவர்; 'குணநலமே சான்றோர் நலம்' என்கின்றார்; 'அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து தூண்களைக் கொண்டு அமைவது சான்றாண்மை என்னும் கட்டடம்' என்று காட்டுகின்றார்.

'பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு' என்கின்றார். சான்றோர்க்கு, 'மாற்றாராகிய பகைவரை மாற்றும் படை என்று ஆற்றல்மிகு பணிதலை'ச்சுட்டுகின்றார். மேலும், சான்றாண் மையைக் கண்டுணரக் கட்டளை(உரை)க் கல்லையும் காட்டுகிறார்.

'பொன்னை உரசிப்பார்ப்பதுபோல் சான்றாண்மையை உரசிப் பார்க்கும் கட்டளைக்கல், தோல்வியைத் துலை (ஒப்பு) அல்லார் (தம்மினும் இழிந்தார்) மாட்டும் ஏற்றுக் கொள்ளல்' என்கிறார்; 'இன்னா செய்யார்க்கும் இனியவே செய்தல்' என்கின்றார்.

இவற்றுக்கெல்லாம் மேலே பெண்ணிற்குக் கற்பென்னும் திண்மையுண்டாகப் பெறுதல் போல, ஆண்கட்கு, 'சால்பென்னும் திண்மை உண்டாகப் பெறுதல் வேண்டும்' என்கின்றார். அத்தகு திண்மை உண்டாகிவிட்டால், 'இன்மை' கூட ஒருவனுக்கு இளிவு இல்லை' என்கின்றார். இந்த இடத்திற்கு முன்பே,

ஈன்றாள் பசிகாண்பானாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (வினைத்திட்பம்-656)

என்ற குறளைக் கவனத்தில் கொண்டு வந்துவிடுகிறார்.

இக்குறளுக்கு, "ஈன்ற தாய் முதல் தெய்வம் என்று மறை மொழிதலானும், தன்னை ஈன்றாளை முன்னம் வணங்கி வழிபடுதல் யாவர்க்கும் கடன் ஆதலானும், மற்று இவள் பசி கண்டு இரங்கா நெஞ்சினன் ஆதல் மிகவும் தீவினை; மற்று அது யாம் கண்டு பொறுத்திருப்பதும் அன்று; அதனால் முழுவதும் உணர்ந்த சான்றோர் பழிக்கும் பழிதரு வினைகளைச் செய்தலே மிகவும் தீது"[26] என்ற காலிங்கர் உரை மெருகூட்டும்.

இதுபோல் இன்னொரு தாயையும் வள்ளுவர் காட்டுகிறார்.

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதலால்; என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி (கள்ளுண்ணாமை- 923)

'கள்ளுண்டு களித்தல் ஆகாது' என்பதைச் சொல்ல வந்த இக்குறள், 'அன்னையின் முன்பும் அது இன்னாது' என்கிறது. அதனால் பிறர் முன்பு செய்யத்தகாதவற்றையும் அன்னை தன் முன்பு செய்தால் பொறுத்துக் கொள்வாள் என்னும் கருத்து உய்த்துணரக் கிடக்கிறது. இதன் உரையில் பரிமேலழகர், 'யாது செய்யினும் உவக்கும் தாய்'[27] என்று சுட்டுகிறார்.

கள்ளுண்ட மகனை மட்டுமல்ல, என்னதான் வறுமை வந்த போதும், அறநிலையினின்றும் தம் மகன் நழுவுவதைத் தம் தாய் விரும்பாள் என்பதை நல்குரவு என்னும் அதிகாரத்தில் விளக்குகின்றார் வள்ளுவர்.

இங்கும் ஈன்ற தாய் என்ற தொடரைக் கையாள்கிறார்.

அறம் சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும் (நல்குரவு-1047)

இக்குறளில், ஈன்ற தாயானும் என்ற தொடரில் வரும் 'சிறப்பும்மை அவளது இயற்கை அன்புடைமை விளக்கி நிற்கிறது' என்று பரிமேலழகர் குறிக்கின்றார்.

'தான் பெற்ற மகனும் தன்னைப் பெற்ற மகனும்'

இங்கே இன்னொன்றையும் வாழ்வியல் நிலையில் விளக்கம் காண்பது பொருத்தம். கிராமப்புறங்களில், தாய் தம் மகனைக் கொஞ்சும்போது, 'என்னைப் பெத்த ராசா' என்று அன்பு பாராட்டுவாள். உண்மையில் அவனைப் பெற்றவள் அவள்தான். ஆனால், அவள் சொல்கிறாள்- 'என்னைப் பெற்ற அரசன்' என்று! எப்படி? அது வரையில், அவள் பெண். பெற்றோருக்கு மகள். தலைவனுக்குத் தலைவி. ஆனால், அவளைத் தாயாகப் பெற்ற பெருமை மகனுக்குத்தான் உண்டு. அது கருதியே, அவள் என்னைப் பெற்ற ராசா' என்று கொண்டாடுகின்றாள். அதுமட்டு மன்று, பெற்றதன் பயனைக் கிட்டச்செய்ததுபோல், பலராலும் பாராட்டுப்பெற்ற சூழலில் உவந்த தாய் மனம் கொடுக்கும் பட்டம்தான், 'என்னைப் பெத்த ராசா'.

ஆனால், அதே தாயே, 'நாம் பெத்த மகனே' என்று கூறுவதும் உண்டு. தன் வயிற்றில் பிறந்த காரணத்தால் பிள்ளை பெறும் இன்னல்களை எண்ணிக் கசியும் தான் தன்னைத் தானே நொந்து கொண்டு பேசும் தொடர், 'நாம் பெத்த மகனே' என்பதாகும். இவ்விரண்டு தொடர்களும் தோற்றச் சூழல் கருதி வெவ்வேறு உணர்வுகளை, மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தக் கூடியன.

1. உவகையின் மிகுதியில் தோன்றுவது- 'என்னைப் பெத்த ராசா'

2. இளிவரலின் (வருத்தத்தின்) மிகுதியில் தோன்றுவது - 'நான் பெத்த மகனே'

பத்துமாதம் தன் வயிற்றில் வைத்துத் தீயவை தீண்டாவண்ணம் காத்துப் பெற்றபோது ஏற்படுவது உவகை. இது சுகப்பிரசவம். தொல்லை இனி இல்லை என்னும் உவகையின் வெளிப்பாடு. இது அல்லல் நீத்த உவகை.

அக்குழவி பெரிய ஆளாகி, அனைத்துப் பண்புநலன்களும் ஒருங்குகைவரப்பெற்றுத் தக்கோரால் சான்றோன் என்று சுட்டப் பெறுவதைக் கேட்டபோது ஏற்படுவது பேருவகை. தன்னளவில் மட்டுமன்றிச் சமுதாயத்திற்கும் தம் மகவால் அல்லல் இல்லை என்பதோடு ஆக்கமும் கிட்டும் என்ற உறுதிப்பாட்டில் பிறந்த பேருவகை. தொல்காப்பிய உவகைக்கும் மேம்பட்டுத் தம் காலத்து இலக்கியத் தளங்களைக் கடந்து தகுநிலை காட்டி எழுந்த பேருவகை. ஆண், பெண் பேதம் கடந்து படைப்பாளிக்குள் எழும் தாயுவகை.


காமம் பாவம் என்று கருதிய அக்காலஅறச்சூழலுக்கு மத்தியில் அதுவே ஒழுக்கம் இன்பம், பேரின்ப வீட்டின் வாசல் என்றெல்லாம் விளக்கும் வள்ளுவம், தாய்மையின் வீறு வெளிப்படப் பேசும் இத்திருக்குறள், உவகையின் பேருருவை உணர்விக்கும் உன்னத மெய்ப்பாடு.

கால எல்லைகடந்து, பால் பேதந்தாண்டிப் பெருமையுடன் ஒளிர்கிறது வள்ளுவத்தாயுள்ளம்.

ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை- வள்ளுவனைச் சான்றோன் எனக் கேட்கும் தாயாகிப் பொலிகிறாள் தமிழ்.

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.17.
2. முனைவர் ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, ப.485.
3. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.354.
4. மேலது, ப.123.
5. எஸ்.ஆர்.கே., 'குறள்- ஞான நூல்' கல்பனா-ஏப்ரல் 1980, பக்.10-11.
6. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.354.
7. மேலது.
8. மேலது.
9. தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், - மெய்ப்பாடு, ப.29.
10. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.61.
11. மேலது, ப.169.
12. மேலது.
13. மேலது.
14. மேலது, அறத்துப்பால், ப.277.
15. மேலது, ப.70
16. மேலது.
17. மேலது.
18. மேலது.
19. மேலது, பொருட்பால், ப.274.
20. மேலது.
21. தவத்திரு குன்றக்குடிஅடிகளார், திருக்குறள் உரை, ப.29.
22. மேலது.
23. மேலது.
24. வ.சுப.மாணிக்கம். திருக்குறட்சுடர், பக்.100-103.
25. மேலது.
26. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், பக்.308-309.
27. மேலது, ப.209.



இன்னும் சில மெய்ப்பாடுகள்

மொழிக்கு இலக்கணம் நல்கிய தொல்காப்பியத்தின் மெய்ப் பாட்டியலை வாழ்விற்கு இலக்கணம் வகுத்த திருக்குறளோடு பொருத்திக்காணும் முயற்சியாகக் கொள்ளப்பெறும் இந்நூலுள், முன்னர்ச் சுட்டிய எண்வகை மெய்ப்பாடுகளை அடுத்து, மேலும் 32 மெய்ப்பாடுகளைச் சுட்டுகின்றது தொல்காப்பியம். 'ஆங்கு அவை ஒருபாலாக ஒருபால்' எனத் தொடங்கும் நூற்பா, மெய்ப்பாட்டிற்குரிய பிறநிலைக் களன்களை விரிக்கின்றது.

உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பெனாஅக்
கைமிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணுதல் துஞ்சல் அரற்றுக் கனவெனாஅ

முனிதல் நினைதல் வெரூஉதன் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்
கையாறு இடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ
இவையும் உளவே அவையலங்கடையே (தொல். -1206)

என்பது நூற்பா.

'இவை முப்பத்திரண்டும் மேற்கூறிய முப்பத்திரண்டும் போல, அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகி நிகழும் மெய்ப்பாடெனக் கொள்க'[1] என்று விளக்கம் நல்கும் பேராசிரியர் இவற்றிற்கு ஓரிரு வரிகளில் தக்க விளக்கம் நல்கியிருக்கிறார்.

இவற்றோடு, திருக்குறள் அதிகாரம் மற்றும் குறட்பாக்களைக் கொண்டு ஒப்புநோக்கிச் சுருக்கமாக ஆராய முற்படுகின்றது இக்கட்டுரை.

1. உடைமை

"உடைமை - செல்வம்; செல்வநுகர்ச்சியாயின் உவகைப் பொருளாம்; இஃது அன்னதன்றி நுகராதே அச்செல்வந் தன்னை நினைந்தன்புறுதற்கு ஏதுவாகிய பற்றுள்ளம்; அஃதாவது, நிதி மேனின்ற மனம்போலச் செல்வமுடைமையான் வரும் மெய் வேறுபாடு"[2] என்றார் பேராசிரியர்.

தொல்காப்பியர் காலத்தில், ஏன் இன்றைக்கும் வரைக்கும் உடைமை என்பது செல்வத்தைக் குறிப்பதாகவே அமைகிறது. அதனை,

உள்ளம் உடைமை உடைமை பொருள் உடைமை
நில்லாது நீங்கி விடும் (ஊக்கம் உடைமை-592)

என்னும் அணுகுண்டு ஒத்த குறட்பாவால் தகர்க்கிறார் வள்ளுவர். உடைமை மட்டுமல்ல,

உடையரெனப் படுவது ஊக்கம் அஃதிலார்
உடையார் உடையரோ மற்று (ஊக்கம் உடைமை-591)

என்று துணிந்து கேட்கிறார்.

ஒற்றை உடைமையான செல்வத்தை உடைத்து பத்து உடைமைகளை முன்வைக்கிறது, திருக்குறள். அவை, 1. அடக்கம் உடைமை, 2. அறிவு உடைமை 3. அன்புஉடைமை, 4. அருள்

உடைமை, 5. ஆள்வினைஉடைமை, 6. ஊக்கம் உடைமை, 7. ஒழுக்கம் உடைமை, 8. நாண் உடைமை, 9. பண்புஉடைமை, 10. பொறையுடைமை ஆகியனவாகும்.

உள்ளம் உடைமை எனும் ஊக்கம் உடைமையாகிய மெய்ப் பாடு புலனாகும்படியாக,

சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு (ஊக்கம் உடைமை-597)

என்ற குறள் வருகின்றது. அதில், புதையம்பால் புண்பட்டும் தளராது தன் பெருமை நிலைநிறுத்தும் களிற்றின் காட்சியைச் சுட்டி, அத்தகு ஆற்றலுடன் தளரும் இடத்தும் ஊக்கம் மிகக் கொண்டு தன்நிலை பேணும் தகுதியாளரைச் சித்திரிக்கின்றது.

2. இன்புறல்

இன்புறல்- 'அவ்வுடைமையை நினையுந்தோறும் இடையிட்டுப் பிறக்கும் மனமகிழ்ச்சி'[3] என்பது பேராசிரியம்.

இன்பத்துள் ஈத்துவக்கும் இன்பம் சிறப்பு. 'வண்மையின் மெய்ப்பாடு செருக்கெனத் தெரிகிறது வள்ளுவருக்கு. அதற்கும் உள்ளம் உடைமையாகிய ஊக்கம் உடைமை வேண்டும். இதனை,

உள்ளம் இலாதார் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு (ஊக்கம் உடைமை-598)

என்று எதிர்மறையாக, இம்மெய்ப்பாட்டினை நிறுத்தி உய்த்துணர வைக்கிறது குறள்.

3. நடுவுநிலைமை

நடுவுநிலைமை- 'ஒன்பது சுவையுள் ஒன்றென நாடகநிலையுள் வேண்டப்படும் சமநிலை; அஃதாவது, 'செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந் தோடா நிலைமை. அது காம வெகுளி மயக்க நீங்கினோர் கண்ணே நிகழ்வது; இது சிறு வரவிற்றாகலான் அவற்றொடு கூறினான்"[4] என்று விளக்குகிறார், பேராசிரியர்.

இதற்கென நடுவுநிலைமை என்ற ஓர் அதிகாரத்தையே வகுக்கிறது, திருக்குறள். மனத்தால் மட்டுமன்றி, சொல்லாலும், செயலாலும் நடுவிகந்து நிற்றல் தகாது என்று சுட்டும் திருக்குறள் சான்றாண்மைக்கு அணியாக, நடுவுநிலைமையை ஆக்கிக் காட்டுகின்றது

கேடும் ஆக்கமும் இல்அல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி (நடுவுநிலைமை-115)

சமன்செய்துசீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி (நடுவுநிலைமை-118)

இக்குறளில், தராசினை முன்னிறுத்தி, அதன் நடுநிலைமை காணும் மனிதரின் மெய்ப்பாட்டினை உய்த்துணர வைக்கின்றார் திருவள்ளுவர்.

4. அருளல்

'அருளல்என்பது மக்கண்முதலிய சுற்றத்தாரை யருளுதல்; அஃது, "அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்" (கலி.11) என்றாற்போல வருவது. ஆண்டைக் கருணையினை அழுகை யென்றமையின் இஃது அதனோடு அடங்காது'[5] என்று உரை செய்கின்றார் பேராசிரியர்.

இதற்கு 'அருளுடைமை' அதிகாரமே விளக்கம். இதனைத் துறவறவியலின் தொடக்கமாக வைக்கின்றார் வள்ளுவர். 'தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை'[6] என்று விளக்கம் அளிக்கும் பரிமேலழகர், 'இல்லறத்திற்கு அன்புடைமைபோல இது துறவறத்திற்குச் சிறந்தமையின்முன் கூறப்பட்டது'[7] என்று வைப்புமுறை சுட்டுகின்றார்.

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து (அருளுடைமை-250)

என்று அவரவர் மனத்தால் நினைந்துணர வைக்கிறது குறள்.

5. தன்மை

'தன்மையென்பது, சாதித்தன்மை.அவையாவன: பார்ப்பாராயிற் குந்தி மிதித்துக் குறுநடை கொண்டு வந்து தோன்றலும், அரசராயின் எடுத்த கழுத்தொடும் அடுத்த மார்பொடும் நடந்து சேறலும், இடையராயிற் கோற்கையுங் கொடுமடியுடைமையும் விளித்த வீளையும் வெண்பல்லுமாகித் தோன்றலுமென்று இன்னோரன்ன வழக்கு நோக்கிக் கொள்க'[8] என்கிறது பேராசிரியம்.

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்று பேசும் வள்ளுவமோ, சாதியடைப்படையில் இத் தன்மையினைச் சுட்டாது,

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (மெய்யுணர்தல்- 355)

என்று அறிவின் அடிப்படையில் காணச் சொல்கிறது. மேலும்,

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையால் ஆளப் படும் (தெரிந்துவினையாடல்-511)

என்று தெளிவுபடுத்துகிறது. இம்மெய்ப்பாட்டினைக் காட்சிப் படுத்துவதுபோல, ‘இகல்’ அதிகாரத்தில் அமையும் ஒரு திருக்குறள்-

இகல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர் (இகல்-855)

என வருகின்றது. இகல் என்பது மனமாறுபாடு. இருவர் தம்முள் பொருது, வலிமையை இழத்தலுக்கு ஏதுவாக இருப்பது. இந்தச்சூழலில், ‘ஒருவரோடு மாறுபாடு கண்ட வழி, மாறுபாடுகளை ஏற்றுக் கொள்ளாமல் மூர்க்கத்தனமான பிடிவாதம் செய்யாமல் ஒருவழியாக ஒதுங்கி ஒழுக வல்லாரை வெல்லக்கருதும் தன்மை உடையவர் யார்?தம்மொடு மாறுபடுவார் மாறுபாட்டை ஏற்காமல் மாறுபாட்டை ஒதுக்கி வைத்து ஒழுகுந்திறன் கொண்டோரை வெல்லுவார் யார்?’[9] என்று இக்குறள்வழி கேட்கிறார் வள்ளுவர். ‘மாறுபாடுகளை ஒதுக்கி வாழ்வோரை யாவரும் நேசிப்பர்; வெல்லநினையார்’[10] என்று அமைதிகாண்கிறார் அடிகளார்.

நாட்டுவழக்கில், இதற்குத் ‘தன்மையாக நடந்துகொள்ளுதல்’ என்று பெயர். இன்றைக்கும் இத்தன்மை இயற்கை சூழ்ந்த கிராமப் புறங்களில் இயல்பாக அமைவது கண்கூடு. இத்தகு மாறு பாடுகளின்போது மனங்கருதும் மாறுபாட்டால் முகந்திரித்துக் காட்டாமல் இயல்புற அமையும் தன்மையை மெய்ப்படுத்திக் காட்டும் இடம் இது. திருக்குறளின் தனித்தன்மையினைச் சுட்டும் இடம் என்பதும் தகும்.

6. அடக்கம்

‘அடக்கமென்பது, உயர்ந்தோர் முன் அடங்கி ஒழுகும் ஒழுக்கம்; அவை: பணிந்தமொழியும், தணிந்த நடையும் தானை மடக்கலும் வாய்புதைத்தலும் முதலாயின’[11] என்பது பேராசிரிய விளக்கம்.

'காக்க பொருளா அடக்கத்தை' என்று மொழியும் 'அடக்க முடைமை' என்னும் அதிகாரமும் இதற்கு விளக்கம். 'மெய்,மொழி, மனங்கள் தீநெறிக்கண் செல்லாது அடங்குதல் உடையன் ஆதல்'[12] என்று விளக்கம் தருகிறார் பரிமேலழகர்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றில்
எழுமையும் ஏமாப் புடைத்து (அடக்கம்உடைமை-126)

என்பது இதற்குரிய காட்சி.

7. வரைதல்

'வரைதல் என்பது காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம்; அவை, பார்ப்பாராயின் முத்தீ வேட்டலும், புலவுங் கள்ளும் முதலாயினகடிதலுமென்று இன்னோரன்ன கொள்க'[13] என்கின்றார் பேராசிரியர். இதுவும், வருண அடிப்படையில் விளக்கும் தன்மை.

திருக்குறள் வருணபேதம் கடந்தது. மானுடத்தைச் சாதி அடிப்படையில் பகுக்காது, பால்அடிப்படையில் ஒழுக்கம் போதிக்கிறது. செய்தொழிலில் வேறுபட்டாலும், மானுடம், உடலும் உயிருமாகி நிற்றல் ஆணுக்கும் பெண்ணுக்கும் இயல்பாகிநிற்கிறது அல்லவா? அதனால் வரைதல் என்னும் ஒழுக்கத்தை, 'நிறை காக்கும் காப்பைப் பெண்ணுக்கும், 'ஒருமைமகளிரே போலத் தன்மைத்தான் கொண்டொழுகும்' பாங்கை ஆணுக்கும் பெருமை எனப் பகுத்துக் காட்டுகிறது திருக்குறள்,

இந்த வரைதல் கடந்து போனால், ஆணாயினும் பெண்ணாயினும் அழுந்தும் இடம் அளறு (நரகம்)தான் என்று உறுதிபட மொழிகிறது குறள்.

வரைவுஇலாப் பெண்டிரைத் தழுவும் பூழியர்களை வைத்து, இம்மெய்ப்பாட்டைப் புலப்படுத்துகிறது, திருக்குறள்.

வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூழியர்கள் ஆழும் அளறு (வரைவில் மகளிர்-919)

பெண்வழியே பிறப்பது மானுடம். அவ்வழியே ஒழுக்கமும் ஆகிறது. எனவே, காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம் பெண்வழி ஆடவர்க்கும் ஆக்கி அனைவர்க்கும் உணர்த்துகின்றது குறள்.

8. அன்பு

'அன்பென்பது, அருட்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயம்; அஃதுடையார்க்குப் பிறர்கண் துன்பம் கண்டவழிக் கண்ணீர் விழுமாகலின், அவ்வருளானே அன்புடைமை விளங்குமென்பது. இவையெல்லாம் தத்தம் மனத்தின் நிகழ்ச்சியை வெளிப்படுப்பன வாகலின் மெய்ப்பாடெனப்பட்டன'[14] என்னும் பேராசிரியர், 'இனி வருகின்றனவற்றிற்கும் இஃதொக்கும்'[15] என்கின்றார்.

அன்பிற்கு அன்புடைமைஅதிகாரமே விளக்கம். அவற்றுள்ளும்,

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் (அன்புடைமை- 71)

என்ற குறள் சான்று.

9. கைம்மிகல்

'கைம்மிகல் என்பது ஒழுக்கக்கேடு; அது சாதித்தருமத்தை நீங்கினமை. தன்னுள்ள நிகழ்ச்சியானே பிறர்அறியுமாற்றால் ஒழுகுதல்'[16] - பேராசிரியம்.

கை என்னும் சொல் ஒழுக்கத்தைக் குறிப்பது. ஒழுக்கமீறல், கைம்மிகல் எனக் கொள்ளலாம். ஒழுக்கம் இன்னதென்று அறிந்தும் அதனை மீறும் தன்மை இது. இதனைப் பேதைமை என்று வகுக்கிறது, குறள்.

'நாணாமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும் பேணாமையே, இப்பேதைக்குத் தொழில்' என்று சுட்டும் திருக்குறள், 'ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான் அடங்காதது, பேதைமையினும் பேதைமை' என்கிறது.

பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல் (பேதைமை-832)

என்கிறது குறள். 'ஒருவனுக்குப் பேதைமை எல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது, தனக்காகாத ஒழுக்கத்தின்கண் காதன்மை செய்தல்'[17] என்று பொருள் உரைக்கிறார் பரிமேலழகர். இங்கே சாதித் தருமத்தைவிடவும், தமக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுங்கை மீறி நடத்தலே கைம்மிகல் என்பது கருத்தாக்கப்படுகிறது. 'இருமைக்கும் ஆகாதென்று நூலோர் கடிந்த செயல்களை விரும்பிச் செய்தல் என்பதாம்'[18] என்று மேல் விளக்கம் நல்குகிறார் பரிமேலழகர்.

அத்தகையவனின் கையில் உடைமை கிடைத்துவிட்டால் அவனது செயல் - மெய்ப்பாடு மதுவுண்டு மயங்கியவனைப் போல் இருக்கும் என்று பின்வரும் குறள் காட்சிப்படுத்துகிறது.

மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின் (பேதைமை-838)

'பேதைமையும் செல்வக்களிப்பும் ஒருங்கு உடைமையால் அவன் செய்வன, மையலும், மதுக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோல் தலை தடுமாறும்'[19] என்று விளக்குகிறார் பரிமேலழகர். கள்ளுண்ணாமையினும் இக் 'கை' செயல் எனும் பொருளில் வருகிறது.

கையறி யாமை உடைத்தே பொருள் கொடுத்து
மெய்யறி யாமை கொளல் (கள்ளுண்ணாமை- 925)

என்பது குறள். தீமையை விலை கொடுத்து வாங்கும் செய்'கை' இது. இயல்பாக வாய்க்கும் தீமை போதாதென்று மிகுதியாக வாங்கும் கைம்மிகல் இது எனலாம்.

10. நலிதல்

'நலிதல் என்பது பிறர்க்கின்னா செய்து நெருங்குதல்: அது தீவினைமாக்கட்கண் நிகழும். அவரைக் கண்டு அச்சம் எழுந்ததாயின், அஃது அச்சத்தின்கண் அடங்குமாகலின் அஃதன்று இஃதன்று'[20] என்று பிரித்துப் பொருள் உரைக்கின்றார் பேராசிரியர்.

தீவினை அஞ்சிச் சொல்லும் குறள் ஆயினும் தீவினைமாக்கள் பற்றியது இது.

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு (தீவினை அச்சம்- 201)

'தன்னை யார் என்ன செய்துவிட முடியும்?' என்றெழும் செருக்கின் வெளிப்பாட்டினை இக்குறள் காட்சிப்படுத்துகிறது. விழுமியாரின் அச்சமும், தீவினையாரின் அச்சமும் துலக்கமாகும் திருக்குறள் இது.

11. சூழ்ச்சி

'சூழ்ச்சி என்பது சுழற்சி, சூழ்வருவானைச் சுழலவரும் என்பவாகலின்; அது வெளிப்படுவதோர் குறிப்பின் அவன்கண் தோன்றின் அதுவும் மெய்ப்பாடு. அஃதாவது மனத்தடுமாற்றம்'[22] என்கின்றார் பேராசிரியர்.

மனந்தடுமாறி மட்டுமன்றி, 'மறந்தும் பிறன்கேடு சூழற்க' (தீவினை அச்சம்-204) என்று எச்சரிக்கிறது, குறள்.

12. வாழ்த்தல்

'வாழ்த்தல் என்பது பிறரால் வாழ்த்தப்படுதல். இது பிற வினையன்றோவெனின், ஒருவனை நீடுழி வாழ்க என்று வாழ்த்தல். பிறவினையாயினும் அவன் வாழ்விக்கப்படுதலின் அவன் அவ்வாறு கூறல் அமையு மென்பது'[23]- பேராசிரியம்.

தலைவியின் நலம் பாராட்டிப் பேசும்போது அனிச்சத்தையும், நிலவையும் வாழ்த்திப் பாடும் தலைவனின் உளவெளிப்பாடாக அமைகின்றன, இக்குறட்பாக்கள்.

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள் (நலம்புனைந்துரைத்தல்-1111)

மாதர்முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி (நலம்புனைந்துரைத்தல்- 1118)

இவற்றிற்கிடையே, தும்மினால் வாழ்த்த வேண்டும் என்ற பழங்கால வழக்கத்தை மனக்கொண்டு தலவன் ஊடல் காலத்தில் தும்மினான், அதன்பொருட்டேனும் தலைவி ஊடல் தணிந்து 'நீடு வாழ்க' என்று கூறுவாள் என்று. இந்தக்காட்சியைத் தலைவிக்கு உணர்த்தும் ப்ாடல், நாடகப்பாங்காக அமைகின்றது. எனினும், இது அக்காலத்து வழக்கு என்பதை இக்குறள் அழகாகப் பதிவு செய்கிறது.

ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடு வாழ்க என்பாக்கு அறிந்து (புலவிநுணுக்கம்-1312)

என்பது தலைவி கூற்றாய் வெளிப்படும் குறள்.

13. நாணுதல்

'நாணுதல் என்பது நாணுள்ளம் பிறர்க்கு வெளிப்பட அமையுமென்பது'[24] என்பது பேராசிரியரின் விளக்கம்

இதற்கு, நாணுடைமை என்ற அதிகாரமும், நாணுத்துறவுரைத்தல் அதிகாரமும் காட்டாய் அமையும்.

நாணுடைமை அதிகாரம் சான்றோர்க்கு அணியென்று நாணுதலைக் குறிக்கிறது. நாணுத்துறவுரைத்தல் அதிகாரமோ, தலைவி கூற்றாக நாணத்தை வெளிப்படுத்திநிற்கிறது.

யாம்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு (நாணுத்துறவுரைத்தல்-1140)

நாணுதல் அகத்தில் இல்லாது இயங்குவோர் மரப்பாவை (ரோபோ- இயந்திரமனிதன்) போல் இயங்குபவர்கள் என்று பொம்மலாட்டக் காட்சியை நிகழ்த்திக் காட்டுகிறது, பின்வரும் குறள்.

நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று (நாணுடைமை-)

14. துஞ்சல்

'துஞ்சல் என்பது, உறக்கம்; அது நடந்துவருகின்றான்கண்ணும் விளங்கத் தோன்றுமாதலின், அதுவும் மெய்ப்பாடாயிற்று'[25] என்பது பேராசிரியம்.

தன்னை மறந்து வருவது தூக்கம். மறக்கடித்து வருவது கட்போதை. எழவே முடியாத அளவிற்கு முழுமையாகிப்போன உறக்கம் மரணம். இவை உலகிற் காணக்கிடைக்கும் மெய்ப்பாடு. இவற்றுக்கு மத்தியில் காணமுடியாத உறக்கம், நெருப்பினுள் துயிலுதல். கணப்பொழுதேனும் நெருப்பில் நிற்கவே முடியாத போது கண்மூடி எப்படித் துயில முடியும்? ஆனால், இன்றைக்கும் இது நடக்கிறதே! வயிற்றைக் கிள்ளும் பசிக்கும், வாழ்வைக் கொல்லும் வறுமைக்கும் உட்பட்டு கோடிக்கணக்கான மனிதர்கள் அல்லல் உறுகின்றார்களே!

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது (நல்குரவு-1049)

என்கிறது குறள்; தூக்கம் வராவிடினும் கண்மூடிக் கிடக்கலாம். வறுமை வந்துவிட்டால் கண்கள்கூட மூட முடியாதே! கண்களே மூட முடியாதபோது எப்படித் துஞ்சல் சாத்தியமாகும்? அது சாத்தியமானால், நெருப்பினுள்கூடத் துஞ்சலும் ஆகும் என்கிறது. நெருப்பில் இருப்பதுபோலத் துடிக்கிறது இக்குறள். தூங்கமுடியாது தவிக்கிறார் திருவள்ளுவர். அவரது நினைப்பில் நிலம், நெருப்பாகிறது. நெருப்பு குறள் ஆகிறது. ஏன் இன்னும் அது படிப்போரைச் சுடவில்லை என்று பதைக்கிறது உள்ளம். வராத தூக்கத்தையும் மாத்திரை போட்டுக்கொண்டு வரவழைக்கும் மனிதர்களுக்கு இவர்கள் நிலையை எப்படிப் புரியவைப்பது?

ஒத்ததறியாமல் உயிர் வாழும் செத்தவர்கள் அல்லவா, அவர்கள். இந்த வாழ்வே நிரந்தரம். இந்தத் தூக்கமே நிம்மதி என்று கண்மூடிக் கிடக்கும் அவர்களிடம் நிலையாமையை உரத்துச் சொல்லத் துஞ்சல் எனும் மெய்ப்பாட்டைச் சாக்காட்டிற்கு உவமையாக வைக்கிறார் திருவள்ளுவர். உறங்குவது போலும் சாக்காடு என்று தொடங்கி உறங்கி விழிப்பது போலும் பிறப்பு என்று விழிப்பை உண்டாக்கிவிடுகிறது, அவர்தம் குறள். அதனை அறியாமல் இன்னும் துயில்பவர்களையும், கள்ளுண்டு களிப்பவர்களையும் நேர்பட வைத்து,

துஞ்சினார் செத்தாரிற் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்உண் பார் (கள்ளுண்ணாமை- 926)

என்று மொழிகிறது குறள். 'உறங்கினார் செத்தாரின் வேறாதல் உடையரேனும், அக்காலத்து அறிவின்மையான் வேறுபடார். அவ்வாறே கள்ளுண்பார் நஞ்சுண்பாரின் வேறாதல் உடையரேனும், எக்காலத்தும் அறிவின்மையான் வேறு எனப்படார்; அவர்தாமே யாவார்'[26] என்று விளக்கம் அளிக்கிறார் பரிமேலழகர்.

பொய்ப்பாடாகத் தோன்றும் துஞ்சலை மெய்ப்பாடாக்குகிறது, திருக்குறள்.

15. அரற்று

'அரற்று என்பது அழுகையன்றிப் பலவுஞ் சொல்லித் தன்குறை கூறுதல்; அது காடுகெழு செல்விக்குப் பேய்கூறும் அல்லல்போல வழக்கினுள்ளோர் கூறுவன'[27] என்பது பேராசிரியர் விளக்கம்.

அல்லலுற்று ஆற்றாது அழுபவளாகச் சிலம்பின் கண்ணகி காட்சி யளிக்கின்றாள். அவள் திருக்குறள் தாய் ஈன்ற செல்வி. கற்பின் கனலி. 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழு தெழுவாள்' அவள். 'பெய்யெனப் பெய்யும் மழை' என்பது குறியீடு. கண்ணகி சுடு என்றாள்; சுட்டது, வள்ளுவர் வைத்துக்கொள்ளாத அரற்றை, இளங்கோவடிகள் எடுத்துக்கொண்டார் என்றே தோன்றுகிறது.

16. கனவு

'கனவு என்பது, வாய்வெருவுதல்; அதனானும் அவனுள்ளத்துக் கண் நிகழ்கின்றதொன்று உண்டென் றறியப்படும்'[28] என்கிறார் பேராசிரியர்.

இம்மெய்ப்பாட்டிற்குக் 'கனவு நிலை உரைத்தல்' என்னும் அதிகாரக் குறட்பாக்கள் மிகுதியும் பொருந்தும். அது கனவின்மீது எழுதிச்சென்ற காதல் கவிதைகள். அது அகத்திற்குரிய மெய்ப்பாடு. புறம் நன்றாகாத போது அகம் எப்படி ஒழுங்காகும்? எனவே, கனவைப் புறத்தில் கொண்டு வந்து பொருத்தமாய் வைக்கிறது குறள்.

'இரத்தலும் ஈதலே போலும்!'

எப்படி?

இரத்தல் வேறு ஈதல் வேறல்லவா? இரண்டும் இருவேறு துருவங்கள் அல்லவா?

அப்படியா? கனவும் நனவும் ஒன்றாகுமா?

ஆகாதே!

காணும்போது ஒன்றாவது உண்டே? விழிக்கும் வரைக்கும் மூடிய இமைகளுக்கு உள்ளே நிகழ்வது கனவு. விழித்திருக்கும் போது விழித்திரையில் நிகழ்வது நனவு. கண்களைப் பொறுத்த வரையில், கனவும் நனவும் ஒன்றாதல் போல், வாழ்வில் இரத்தலும் ஈதலுக்குச் சமானமாகும் இடமுண்டு.

ஆம்! அந்த ஆச்சரியமான உண்மையை வெளிப்படுத்தும் குறள் இதுதான்.

இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு (இரவு-1054)

தம்மிடம் உள்ளதை கனவில்கூட மறைத்தலைச் செய்யாத வரிடத்தில் இரத்தலானது, ஈதலைப் போன்றது என்கின்றது, இக்குறள்.

கனவும் நனவும் ஒன்றல்ல. அதுபோல் இரத்தலும் ஈதலும் எதிரெதிரானது. ஆனாலும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. கனவு, நனவால் உணரப்படும். ஈதல் இரத்தலால் அமையும் இரண்டும் உணர்வு நிலையில் ஒன்றாகும் இடத்தை - கனவு நனவே போலத் தோற்றும் தன்மையை முன்வைத்து, 'இரத்தல் ஈதலே போலும்' என்று உவமிக்கிறார் திருவள்ளுவர். நனவில் மறைக்கவோ மாற்றவோகூட முடியும். ஆனால் கனவில் உள்ளதை மறைக்க முடியாது.

'அது கனவிலும் நடக்காது', 'கனவில்கூடத் தொடர்புகொள்ளக் கூடாது' 'அவன் உறவு கனவிலும் வேண்டாம்' என்றெல்லாம் மொழிதல் இன்றளவும் உலகஇயற்கை. அந்த அடிப்படையில், 'கனவிலும் இன்னாது மன்னோ' என்கிறார்.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு (தீநட்பு-819)

என்ற குறளில் கனவை முன்வைக்கிறார். அதில், 'வினையும் சொல்லும் ஒவ்வாது வேறு வேறாயிருப்பார் நட்பு, நனவின் கண்ணே அன்றிக் கனவின் கண்ணும் இன்னாதது' என்கின்றார். 'அஃதாவது வினையிற் பகைவராய், சொல்லின் நட்டாராய் இருத்தல்'[29] என்று பிரித்துவிளக்கம் அளிக்கிறார் பரிமேலழகர். 'நிகழ்வின்கண் உளதாய் இருத்தலால், 'கனவினும் இன்னாது' என்றார்'[30] என்பது அவர்தம் மேல்விளக்கம்.

வாழ்வில்கூட இன்னாததை விலக்கும் வள்ளுவர், கனவிலும் காட்டும் 'இன்னா', வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு! இன்னும் இருக்க வேண்டுமா? இது திருவள்ளுவரின் கனவாகவே போய்விடக்கூடாது.

17. முனிதல்

'முனிதல் என்பது வெறுத்தல்; அஃது அருளுஞ்சினமுமின்றி இடைநிகர்த்தாதல். 'வாழ்க்கை முனிந்தா' னெனவும், 'உறையுண முனியுமவன் செல்லுமூரே' எனவுஞ் சொல்லுபவாகலின்'[31] என்பது பேராசிரியம்.

உறுப்பளவில் மனிதரை ஒத்து இருந்தபோதிலும், மானுடப் பண்பில்லாதவர்பால் திருவள்ளுவருக்கு வெறுப்பு வந்துவிடுகிறது. அந்த வெறுப்பின் பதிவாக,

உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பு ஒத்தல் ஒப்பதாம் ஒப்பு (பண்புடைமை- 993)

என்ற குறள் அமைகின்றது. "உறுப்புகள் அமைவு மட்டும் பெற்று விளங்குவது வெறுக்கத்தக்கது. பண்பாட்டில் ஒத்திருத்தலே மக்களொடு ஒப்புடையது"[32]என்று விளக்கம் நல்குகிறார் அடிகளார்.

18. நினைத்தல்

'நினைத்தல் என்பது, விருப்புற்று நினைத்தல். நின்னை மிகவும் நினைத்தேன் என்பது வழக்காதலின்; அந்நினைவுள்ளம் பிறர்க்குப் புலனாதலின் மெய்ப்பாடாயிற்று'[33] என்பது பேராசிரியம்.

விளக்கமே வேண்டாத ஒரு திருக்குறள் -

உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள் (புலவிநுணுக்கம்-1316)

19. வெரூஉதல்

'வெரூஉதல் என்பது விலங்கும் புள்ளும்போல வெருவி நிகழும் உள்ள நிகழ்ச்சி; அஃது அஞ்ச வேண்டாதன கண்ட வழியும் கடிதிற் பிறந்து மாறுவதோர் வெறி'[34] என்கிறார் பேராசிரியர்.

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின் (ஊக்கம் உடைமை-599)

'யானை, உருவத்தால் பெரியது; பெருந் தந்தத்தை உடையது; எனினும், தன்னைவிடத் தோற்றத்தில் சிறியதான, தந்தமில்லாத புலி தாக்கும்போது வெரூஉம்.' இது காட்சி. முன்னொட்டுப் பின்னொட்டு ஏதுமின்றி இந்தக் காட்சியைத் திருவள்ளுவர் வைத்துக் காட்டுகிறார். எதற்கு? ஊக்கம் உடைமைக்கு, அதிகார வைப்புமுறை வைத்துப் பார்த்தால் ஒழிய, இக்குறளின் உட்பொருள் புலப்படாது. எனவே, மிகவும் திட்டமிட்டுக் குறள்நூலைத் திருவள்ளுவர் வகுத்தளித்திருக்கிறார் என்பது இதனால் புலப்படுகிறது. இங்கே, யானையும், புலியும் கானக விலங்குகளாகக் காட்சிப்படுத்தப் பெற வில்லை. நாட்டுமாந்தர்களின் இயல்புகளையே இக்குறள் குறியீடாகக் காட்டிநிற்கின்றது. வெரூஉதல் என்னும் மெய்ப் பாட்டை முன்னிறுத்தி மக்கட்கு ஊக்கமருந்தளிக்கின்றது இக்குறள்.

20. மடிமை

'மடிமை என்பது சோம்பு'[35] என்று சுட்டுகிறார் பேராசிரியர். மற்றைய மெய்ப்பாடுகளுக்கெல்லாம் சற்றே விரித்துரைத்த பேராசிரியருக்கு மடிமை பற்றி எழுதும்போது சோம்பல் வந்து விடுகிறது. அதையும் சுருக்கமாகச் 'சோம்பு' என்று சுட்டி விடுகின்றார்.

இன்மையின் இன்னாமையை விளக்கும் திருவள்ளுவர் சில இன்மைகளைக் கொள்ளவேண்டும் என்றும் குறிக்கின்றார். அவற்றுள் ஒன்று, 'மடியின்மை'. இது ஊக்கம் உடைமை அதிகாரத்தின் பின்னர் வருகிறது. 'கருதியன செய்யுங்கால், சோம்புதல் இல்லாமை'[36] என்று விளக்கம் அளிக்கிறார், பரிமேலழகர்.

சோம்பலுக்குச் சோம்பல் உண்டாக்கிச் செயல்படவேண்டும் என்பதைச் சோம்பல் இல்லாமல் சுட்டிக் காட்டும் அதிகாரம், இது. குடியை முன்வைத்து, மடியைக் கொண்டு பல பிடிக்கும் குறட் பாக்கள் பலவுண்டு.

21. கருதல்

'கருதல் என்பது மறந்ததனை நினைத்தல்'[37] என்பது பேராசிரிய விளக்கம்.

வள்ளுவமோ, 'மறந்தால்தானே நினைப்பதற்கு' என்கிறது.

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம் (காதற்சிறப்புரைத்தல்- 1125)

என்ற தலைவன் கூற்றுப் பாடல் இதற்குப் பொருந்தும்.

22. ஆராய்ச்சி

'ஆராய்ச்சி என்பது, ஒரு பொருளை நன்று தீதென்று ஆராய்தல்'[38] - பேராசிரியர்.

திருக்குறளே ஓர் ஆராய்ச்சி நூல்தாம். எப்பொருள் எத் தன்மைத்தாயினும், எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணவேண்டும் என்று ஆராய்ச்சி உணர்வைக் கற்போர் உள்ளத்தில் தோற்றுவிக்கும் பண்பு இந்நூலுக்குச் சிறப்பு.

ஒரு கருத்தை முன்வைத்துத் திருவள்ளுவர்மேற்கொள்ளும் ஆராய்ச்சி குறள் வெண்பாவாய்த் தொடங்குகின்றது. அதன் தொடர்ச்சி அடுத்த குறளாக அமைகிறது. இதனை பத்து என்னும் ஒழுங்கமைவுக்குள் வைத்துக் கொள்ளும் திருவள்ளுவ்ர், அடுத்த நிலையில் மற்றொரு அதிகாரத்தை விரிக்கிறார். இதற்கு, முந்தைய நூல்களையும் தம்கால வாழ்வியலையும் ஆழ உள்வாங்கித் தெளிந்த மனநிலையில் நடுவுநிலை பிறழாது நன்று தீதென்று ஆராய்கிறார். அவ்வண்ணம் கண்ட உண்மைகளைக் குழப்ப மின்றிக் குறட்பாக்களுள் விளக்கிவிடுகிறார். கவித்துவம் பொங்க, மெய்ப்பாடு துலங்கத் திருவள்ளுவர் வைத்த ஆராய்ச்சிகளுள் சில இன்னும் முடிவு தேடத் தூண்டுவன. அவற்றுள் ஒன்று,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். (அழுக்காறாமை-169)

என்னும் குறட்பா. அவ்விய நெஞ்சத்தானின் ஆக்கத்தையும், செம்மையுடையானுடைய கேட்டையும் ஒரு சேர நிறுத்திய திருவள்ளுவர் அதனை அப்படியே பழவினைப் பயன் என்ற முடிவுக்கு வரவில்லை. அது ஆராயப்படும் என்கின்றார். இதனைக் கருத்திற்கொண்டு, "பொறாமையுடையானது செல்வமும் செம்மை நலமுடையானுடைய கேடும் ஆராய்தலுக்குரியன. அறநூற் கொள்கைக்கு முரணான சமூக அமைப்பு, இயற்கை என்று கொள்ளத்தக்கதன்று. ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஒன்று. அரசின் முறை பிறழ்வாலும், இம்மாறுபாடுகள் நிகழலாம் என்பது கருத்து. அரசியல் பிழையும் இல்லையென்று துணிந்த பிறகே பழவினை என்ற முடிவுக்கு வரலாம்"[39] என்கின்றார் அடிகளார்.

23. விரைவு

'விரைவு என்பது இயற்கை வகையானன்றி ஒரு பொருட்கண் விரைவு தொழில்பட உள்ள நிகழும் கருத்து'[40] என்று இடையில் எந்தத் தடையும் காட்டாமல் ஒரே மூச்சில் விரைவாக விளக்கிச் சொல்கிறார் பேராசிரியர்.

காலம் விரைந்து செல்லக்கூடியது. அது இயற்கை. ஒரே சீராகத்தான் இயங்கும்; செல்லும். மனித வாழ்க்கை, இயற்கையோடு இணைந்தும் முன்னேறியும் விரைவாக இயங்கத்தக்கது. ஊழையும் உப்பக்கம் காண ஓடும் வாழ்க்கை மனித வாழ்க்கை.

விரைந்தோடும் வாழ்க்கைப் போக்கில், விழப்போகும் ஒருவனை, உடனே தாங்கும் ஒருவன் அவனிடத்தில், நெடுந் தொடர்களில் பேசிக்கொண்டிருக்க மாட்டான். காப்பாற்றப் போகும் வேகத்தில் ஒன்றிரண்டு சொற்களை அதுவும் அந்த நேரத்திற்கு உதவும் சொற்களை மட்டுமே விரைந்து சொல்வான். செயலைக் குறிக்கும் சொல் அது. எனவே, குழப்பம் இல்லாமல் நேர்படச் சொல்ல வேண்டும். உணரும்படியாகச் சொல்ல வேண்டும். அதுவும் உரத்துச் சொல்லவேண்டும். இத்தனை பதற்றத் தோடும் சொல்பவன் தக்கவற்றைச் சொல்ல வேண்டும். எத்தனை அவசரம்? எத்தனை அவசியம்?

பொறுப்போடு சொல்கிறார், திருவள்ளுவர். அந்தப் பாங்குதான் அவரை - அவர் என்ன மறுத்து விலகி விலகிப் போனாலும் வாசக உள்ளத்தில் குருபீடத்தில் இருத்தி மகிழ்கிறது. இல்லறவாசியாக அவர் சொல்லப்பட்டாலும் துறவியாகக் கொள்ளப்படுகிறார்.

துறவிகளுக்கும் துறவு நெறி புகட்டும் அவர் பழந்துறவி அல்லர். ஜெட்வேகத்தில் பறக்கும் நவீன வாழ்விற்கும் ஏற்ப, விரைந்து உபதேசிக்கும் வீரத்துறவி, விவேகத்துறவி.

அவரது வேக உபதேசம்தான் என்ன?

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (துறவு-350)

என்று பற்றற்ற வாழ்க்கையே தவம் என்று சொல்லிச் சென்றவர்களுக்கு மத்தியில் வாழ்க்கையில் பற்றுண்டாக்கப் பண்ணிய உபதேசம் தான் இந்தக் குறள். பற்றுகள் அனைத்தும் விட்டொழிக்கச் சொல்லும் துறவு அதிகாரத்தில் துணிந்தும், விரைந்தும் சொல்லப்படுகிற உபதேசம்.

'புறமாகிய செல்வத்தின்கண்ணும், அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாம் பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி விடுதல்'[41] என்று இவ்வதிகாரத்திற்குப் பரிமேலழகர் விளக்கம் அளிக்கிறார்.

அவ்வளவு விரைவில் விடக்கூடியதும், பற்றக்கூடியதுமாக இவை இல்லை என்று தெரிந்தும், மானுட இயல்பு புரிந்தும், வாழ்வாங்கு வாழ்தல் வேண்டிய விரைவினை முன்னிறுத்தி, பற்றிப் பற்றிப் பரிந்து சொல்கிறார் வள்ளுவர்.

விடற்கு என்ற ஒற்றைச் சொல்லை விட இத்தனை பற்றுகள் தேவைப்படுகிறது ஒருவனுக்கு. பற்றற்றான் பற்று ஒன்றைப் பற்றத் தான் இந்தப் பதற்றமும் பற்றுதலும். பரபரப்போடு நம்மையும் பற்றிக்கொள்கிறது. இக்குறளின் வேகமும், விவேகமும்.

24. உயிர்ப்பு

'உயிர்ப்பு என்பது, வேண்டிய பொருளைப் பெறாதவழிக் கையறவெய்திய கருத்து; அது, நெட்டுயிர்ப்பிற்கு முதலாகலின் அதனையும் உயிர்ப்பென்றானென்பது'[42] – பேராசிரியம்.

இணையைப் பிரிந்த இலக்கியச் சோகம் இது. இதனைப் புறத்திற்கும் பொருந்த அளிக்கின்றது குறள்.

உயிர்ப்ப உளரல்லார் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார் (பகைத்திறம் தெரிதல்-880)

இக்குறளுக்கு, 'தம்முடைய பகைவரின் ஆற்றலைச் சிதைக்கும் ஆற்றலிருந்தும் அஞ்சிச் சிதைக்காது இருப்பவர் மூச்சு விடுவ

தனாலேயே மனிதர், உயிர் வாழ்வோராகக் கருதப் பெறமாட்டார்'[43] என்று விளக்கம் அளிக்கின்றார் அடிகளார்.

25. கையாறு

'கையாறென்பது, அவ்வுயிர்ப்புமின்றி வினையொழிந்தயர்தல்'[44] என்கிறது பேராசிரியம்.

கூட்டத்திற் கூடிநின்று கூவிப்பிதற்றல் அன்றி நாட்டத்தில் கொள்ளாரது நிலையைச் சுட்டும் இதனை எலிக்கூட்டத்தைக் காட்டிப் புரிய வைக்கிறது குறள்.

ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும் (படைமாட்சி-763)

நாகம் உயிர்க்கும்போது எலிக்கூட்டத்தின் ஒலி என்னாகும்?

26. இடுக்கண்

'இடுக்கண் என்பது, மலர்ந்த நோக்கமின்றி, மையனோக்கம்பட வரும் இரக்கம்'[45] என்பது பேராசிரியம். 'துன்பம்'[46] என்கிறார் ச.வே.சு. 'இடுக்கண் அழியாமை' அதிகாரம் இம்மெய்ப்பாட்டைப் பலபடக் காட்டும். இடும்பைக்கு இடும்பைப் படுக்க இலக்கணம் வகுப்பது வள்ளுவம்.

27. பொச்சாப்பு

'பொச்சாப்பென்பது, அற்றற்படுதல்; அஃதாவது, பாதுகாத்துச் செல்கின்ற பொருட்கண் யாதானும் ஓரிகழ்ச்சியான் இடையறவு படுதல்'[47] என்கிறார் பேராசிரியர். மறதி என்கிறார் ச.வே.சு.

'இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக' என்கிறது திருக்குறள். பொச்சாப்பு என்னும் தன்மை போக்க எழுந்தது, 'பொச்சாவாமை' எனும் அதிகாரம்.

28. பொறாமை

'பொறாமையென்பது, அழுக்காறு; அஃதாவது, பிறர் செல்வங் கண்ட வழி வேண்டாதருத்தல்'[48] என்கிறது பேராசிரியம். இதனைத் தவிர்க்க எழுந்ததே திருக்குறள். அழுக்காறாமையை அறம் என்று வலியுறுத்துகிறது திருக்குறள்.

அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (அறன்வலியுறுத்தல்-35)

29. வியர்த்தல்

'வியர்த்தல் என்பது பொறாமை முதலாயின பற்றி மனம் புழுங்குதல்'[49]- பேராசிரியம்.

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர் (காலம் அறிதல்-487)

என்ற குறளில் 'உள் வேர்ப்பர்' என்றதனான். மனநிகழ்ச்சி ஆகியவாறு காண்க"[50] என்று வியர்த்தல் மெய்ப்பாட்டிற்கு இக் குறட்பாவைச் சான்று தந்து எழுதுகிறார் ந.சுப்புரெட்டியார்.

30. ஐயம்

'ஐயமென்பது, ஒரு பொருள்மேல் இருபொருள்தன்மை கருதி வரும் மனத்தடுமாற்றம்'[51] - பேராசிரியம்.

எதிர்நிற்கும் தலைவி அணங்கா? ஆய்மயிலா என்று இரு பொருள் தன்மை கருதி மனந்தடுமாறும் தலைவனின் அக வுணர்வை,

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு? (தகையணங்குறுத்தல்- 1081)

என்னும் காமத்துப்பால் குறள் சுட்டுகிறது.

இதுபோக, புறநிலையிலும் மனத்துள் எழும் வினாவை முகத்துள் அமைத்துக்காட்டும் ஐயக்குறட்பாக்கள் பின்வருமாறு.

புல்லறிவாளர் தாம் கல்லாத நூல்களையும் கற்றார் போலக் காட்டி ஒழுகுதல், தெளிவாகக் கற்றவற்றின் மீதும் ஐயம் தோன்ற ஏதுவாகும் என்பதை

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும் (புல்லறிவாண்மை-845)

எனும் குறள் சுட்டும். அதுபோல், உயர்குடிப்பிறந்தானிடம் நலம் பயக்கும் பண்புகளுக்கு மாறான இயல்புகள் தோன்றின் அவன் குடிறப்பிறந்த பண்பு ஐயத்திற்குரியதாகும் என்பதை

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும் (குடிமை-958)

எனும் குறள் வெளிப்படுத்திநிற்கிறது.

31. மிகை

'மிகை என்பது கல்லாமையுஞ் செல்வமும் இளமையும் முதலாக வரும் உள்ளமிகுதி'[52] என்கிறார் பேராசிரியர்.

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியால் வென்று விடல் (பொறை உடைமை-158)

செல்வமிகுதியால், இளமைமிகுதியால், கல்லாமையினால் உள்ள அறியாமை மிகுதியால், அதிகார மிகுதியால் என எத்தனை மிகுதியிருப்பினும் அவை கொண்டு மிக்கவை செய்தாரைத் தாம் தம் தகுதியால் வென்றுவிடும் வழியை உணர்த்துவது திருக்குறள்.

32. நடுக்கம்

'நடுக்கம் என்பது, அன்பும், அச்சமும் முதலாக உடம்பிற் புலப்படுமாற்றான் உள்ள நடுங்குதல்; புதல்வர்க்குப் பிணி இல்வழியும், எவனாங்கொல் என்று நடுங்குதல் அன்பான நடுங்குதலாம். அச்சமென்னும் சுவை பிறந்ததன் பின்னர் அதன் வழித் தோன்றிய நடுக்கம் அச்சத்தால் தோன்றிய நடுக்கமாம் என்பது'[53] பேராசிரியர் நல்கும் விளக்கம்.

கண்ணுள் காதலர் இருப்பதால் மை எழுத நேரும் கணத்தில் அவர் மறைய நேருமே என்று அஞ்சிக் கண்ணுக்கு மையெழுதா திருக்கிறாள் காமத்துப்பால் தலைவி.

கண்ணுள்ளார் காதல ரவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து (காதற்சிறப்புரைத்தல்- 1127)

அதுமட்டுமன்றி, அவர் நெஞ்சகத்தே இருப்பதால் சூடானது உண்டால் அவரைச் சுட்டுவிடும் என அஞ்சி வெய்துண்டல் தவிர்க்கிறேன் என்றும் குறிப்பிடுகிறாள்.

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து (காதற்சிறப்புரைத்தல்- 1128)

இவை அன்பால் வந்த நடுக்கம். அச்சத்தின் வந்த நடுக்கம், புறத்தில் அமைகிறது.

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து (வினைசெயல்வகை-680)

'ஆளும் இடம் சிறியதாகக் கொண்டவர் (சிற்றரசர் –அவர்க்கீழ் உள்ள அமைச்சர்) தம்மை எதிர்க்கும் வலியவரைக் கண்டு அஞ்சி

நடுங்குதலைத் தவிர்க்க, அவர்களிடம் சமாதானம் செய்து கொள்வர்' என்று நடுக்கத்தை முன்னிறுத்திச் சமாதானத்தை வலியுறுத்துகிறது இக்குறள்.

உண்மையில், நடுக்கம் இல்லா மானுடம்தான் வள்ளுவ நோக்கம். நடுக்கு அற்ற காட்சியினை- தெளிவினை உடையவர், என்னதான் இடுக்கண் பட நேரினும் அதிலிருந்து தப்ப, இழிவான செயல்களைச் செய்ய மாட்டார் என்று உறுதி கொடுக்கிறது இக்குறள்.

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர் (வினைத்தூய்மை- 654)

"இவை அனைத்துமே மனித உணர்வு பற்றியவை; சடப் பொருள் என்னும் உலகப் பொருள் பற்றியவை அல்ல. அகமும் புறமுமான இலக்கியம் பற்றிய மெய்ப்பாடுகளே"[54] என்று குறிப்பிடும் தமிழண்ணல், " மெய்ப்பாடு' என்பது இலக்கியத்தில் வரும்போது 'மெய்ம்மைப்பாடாகிறது'. மனித உணர்வு அருவம்; அதனைப் பருப்பொருட்டாக்கித் தர இலக்கியம் முயல்கிறது; பொருட்பிழம்பாக்கித்தர முயல்கிறது. மீண்டும் படிக்கும் உள்ளம் அதனை உள்வாங்கிக் கொண்டு அருவமாகவே உணர்கிறது. அருவ உணர்வு, மெய்ப்பட- உருப்பட- மெய்ம்மைப்பட- தோன்றிப் படிப்பவருக்குச் சென்று சேர்வதற்கு உதவுதலால் இஃது இலக்கியத்தில் மெய்ப்பாடு எனப்பட்டது. 'மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்'(தொல்.1460) என்னும்போது தொல்காப்பியர் தெளிவாக இதை உணர்த்துகிறார்"[55] என்கின்றார்.

படைப்பாளியின் அருவஉணர்வு, படைப்பு வழி உருவெய்திப் படிப்போரின் உளத்தில் மெய்க் காட்சியைத் தோற்றுவித்து விடுகிறது.

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.20
2. மேலது.
3. மேலது.
4. மேலது.
5. மேலது.
6. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப.216.
7. மேலது.
8. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.20.
9. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை, ப.253.
10. மேலது.
11. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.20
12. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், ப.114.
13. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.20.
14. மேலது.
15. மேலது.
16. மேலது.
17. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், ப.113.
18. மேலது.
19. மேலது,ப.119.
20. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.20
21. மேலது.
22. மேலது.
23. மேலது.

24. மேலது.
25. மேலது.
26. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், பக்.212-213.
27. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.20
28. மேலது.
29. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், பக்.98-99.
30. மேலது.
31. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.21.
32. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை, ப.286.
33. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.21.
34. மேலது.
35. மேலது.
36. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால், பக்.247.
37. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.21.
38. மேலது.
39. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை, ப.52.
40. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.21.
41. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால், பக்.315.
42. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.21.
43. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை, ப.259.
44. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.21.
45. மேலது.
46. முனைவர் ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியத் தெளிவுரை, ப.487.
47. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.21.

48. மேலது.

49. மேலது.

50. டாக்டர் ந.சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.286.

51. தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம், ப.21.

52. மேலது.

53. மேலது.

54. தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், மெய்ப்பாடு, பக்.52-53.

55. மேலது.



துணைநின்ற நூல்கள்

1. அகநானூறு (தொகுதி 1-2)
   வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு 1998

2. அகரமுதல்வன். த. முனைவர்,
   திருக்குறள் இயக்கம்,
   பார்வதி பதிப்பகம், திருவெண்காடு, முதற்பதிப்பு. 2004.

3. அரவிந்தன்.முனைவர்
   உரையாசிரியர்கள்,
   மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2ஆம்பதிப்பு, 2008.

4. குறுந்தொகை
   வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு 1998

5. குழந்தைசாமி.வா.செ. டாக்டர்,
   வாழும் வள்ளுவம்,
   பாரதி பதிப்பகம், சென்னை.2ஆம் பதிப்பு, 1988.

6. சாரங்கபாணி. இரா, முனைவர்,
திருக்குறள்உரையாசிரியர்கள்,
மணிவாசகர் பதிப்பகம்,சென்னை. முதற்பதிப்பு, 1996.

7. சாரங்கபாணி. இரா, முனைவர்,
வள்ளுவர் வகுத்த காமம்,
அண்ணாமலை பதிப்பகம், சிதம்பரம், 1994.

8. சிதம்பரனார்.சாமி,
வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்,
பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை. முதற்பதிப்பு. 2000.

9. சிற்பி பாலசுப்பிரமணியம், (உ.ஆ),
திருக்குறள்
புதுமலர் பதிப்பகம், கோவை. முதற்பதிப்பு. 2001.

10. சிவலிங்கனார்.ஆ.
தமிழ் இலக்கணஉணர்வுகள்,
கபிலன் பதிப்பகம், புதுச்சேரி, முதற்பதிப்பு, 2005.

11. சுப்பிரமணியன்.ச.வே.சு, முனைவர்,
தொல்காப்பியம் தெளிவுரை,
மணிவாசகர் பதிப்பகம்,சென்னை. முதற்பதிப்பு, 1998

12. சுப்புரெட்டியார்.ந. டாக்டர்
தொல்காப்பிய வாழ்க்கை,
பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. 4ஆம் பதிப்பு, 2002.

13. செங்குட்டுவன்.மா.முனைவர்
திருக்குறள் வாழ்வியல் நெறியும் ஆன்மிகமும்
-உளவியல் அணுகுமுறை
தி.பார்க்கர், சென்னை முதற்பதிப்பு, 2006.

14. தமிழண்ணல்,
தொல்காப்பியரின் இலக்கியக்கொள்கைகள்மெய்ப்பாடு,
மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதற்பதிப்பு, 1986.

15. தமிழண்ணல்,
திருவள்ளுவர் அருளிய திருக்குறள் நுண்பொருள் உரை,
மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, முதற்பதிப்பு. 1999.

16. தமிழண்ணல்,
திருக்குறள் உணர்த்தும் தமிழர் சமயம்,
மீனாட்சி புத்தகநிலையம், மதுரை.

17. தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை,
அருள்நெறி பதிப்பகம், குன்றக்குடி, முதற்பதிப்பு, 2005.

18. திருக்குறள் உரைக்கொத்து, அறத்துப்பால்,
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள், 1960.

19.. திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால்,
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள், 1969.

20. திருக்குறள் உரைக்கொத்து, காமத்துப்பால்,
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள், 1961.

21. துரைஅரங்கசாமி.மொ.அ.டாக்டர்,
காமத்துப்பாலா? இன்பத்துப்பாலா?
மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. முதற்பதிப்பு, 1988.

22 தொல்காப்பியம், பொருளதிகாரம். பேராசிரியம்,
கழக வெளியீடு, சென்னை. மறுபதிப்பு, 1975.

23. பவணந்தியார்
பவணந்தியாரர் தமிழ்ச் சொல்லகராதி
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.3ஆம் பதிப்பு2007

24. பழனியப்பன்.மு. முனைவர்,
பெண்ணிய வாசிப்பு,
காவ்யா வெளியீடு, சென்னை. முதற்பதிப்பு, 2003.

25. பாரதியார்,
மகாகவி பாரதியார் கவிதைகள்,
ஸ்ரீசெண்பகாபதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, 2006.

26. புலியூர்க்கேசிகன்,
தொல்காப்பியம் தெளிவுரை,
பாரி புத்தக நிலையம், சென்னை. 8ஆம் பதிப்பு, 1993.

27. புலியூர்க்கேசிகன் (ப.ஆ)
திருக்குறள் பரிமேலழகர் உரை,
பூம்புகார் பதிப்பகம், சென்னை. 7ஆம் பதிப்பு, 1998.

28. புறநானூறு (தொகுதி 1-2)
வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு 1998

29. பொன்னம்பல அடிகளார் தவத்திரு, (ப.ஆ)
குன்றக்குடிஅடிகளார் நூல் வரிசை, தொகுதி -1,
மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1999.

30. பொன்னம்பல அடிகளார் தவத்திரு, (ப.ஆ)
குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை,தொகுதி-2,
மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2000.

31. பொன்னம்பல அடிகளார் தவத்திரு, (ப.ஆ)
குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை, தொகுதி-3,
மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2001.

32. பொன்னம்பல அடிகளார். தவத்திரு,
தமிழ்ப்பண்பாடு,
அருள்நெறிப்பதிப்பகம், குன்றக்குடி, முதற்பதிப்பு, 2009.

33. மங்கையர்க்கரசி.கு.முனைவர்,
திருக்குறள் திறவுகோல்,
புத்தா பப்ளிகேஷன்ஸ், சென்னை. முதற்பதிப்பு, 2003.

34. மாணிக்கம்.வ.சுப.மூதறிஞர்,
திருக்குறட்சுடர்,
மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2ஆம் பதிப்பு, 1989.

35. மாணிக்கம்.வ.சுப.மூதறிஞர்,
தொல்காப்பியக் கடல்,
மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, 1989.

36. மாணிக்கம்.வ.சுப.மூதறிஞர்,
தொல்காப்பியப் புதுமை,
மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, 1988.

37. விசுவநாதன்.சீனி (தொ.ஆ)
காலவரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொ-1
புவனேஸ்வரி நிலையம், சென்னை. முதற்பதிப்பு,2000

38. விமலானந்தம்.மது.ச,
தமிழ் இலக்கிய வரலாறு,
அபிராமி பதிப்பகம், சென்னை. 2002.

39. வெங்கடாஜலபதி. மு.டாக்டர்,
சாமிசிதம்பரனாரின்இலக்கியச் சோலை,
ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை.முதற்பதிப்பு, 2000.

40. ஜகந்நாதன்.கி.வா., (ப.ஆ)
திருக்குறள் ஆராய்ச்சிப்பதிப்பு, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோவை. முதற்பதிப்பு, மார்ச்.1963.

ஆங்கில நூல்கள்

1. Thavathiru Kundrakkudi Adigalar,
Tirukkural a world literature,
kalaivani puthakalayam, Chennai, First Edition, 1991

2. **Tirukkural the Holy Scripture,**
International Tamil Language Foundation, U.S.A
First Edition, 2000


இதழ்கள்

1. **கல்பனா** மாத இதழ்கள் -ஏப்ரல்,1980,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

2. நியூ செஞ்சுரியின் **உங்கள் நூலகம்**, மாத இதழ்,
நியூ செஞ்சுரி வாசகர் சங்கம், சென்னை. டிசம்பர் 2009

3. **மக்கள் சிந்தனை** மாத இதழ்
குன்றக்குடி ஆதீன இதழ், குன்றக்குடி

* * *



Code No : 0844

பாவை பப்ளிகேஷன்ஸ்
#16 (142) ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28482441, 28482973.
e-mail : pavai123@yahoo.com

ISBN 81-7735-841-3

விலை. ரூ. 100/-